



தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරි






2024 செப்டெம்பர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை    September 15 Sunday, 2024


# நாட்டைப் பின்னோக்கித் தள்ள முடியாது

# தாய் நாட்டின் மீதான ஆபத்து இன்னும் கடந்து விடவில்லை



## பங்களாதேஷ்

### இன்னும் ஸ்திர நிலைக்குத் திரும்பவில்லை

**போராட்டக்காரர்களின் பிடியில் சிக்கிய பங்களாதேஷ், முன்னெப்போதும் இல்லாதவாறு மோசமான வீழ்ச்சிக்கு முகங்கொடுத்துள்ளதாக வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொருளாதாரம் மோசமான பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள பங்களாதேசின் இந்த நிலைமை நீண்டகால ரீதியாக அந்நாட்டு பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என உலகப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.**

அவ்வாறே கடந்த காலத்தில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் இருண்ட நிழல்கள் இன்னமும் அந்த சமூகத்தில் காணப்படுவதுடன், அவை பங்களாதேசின் சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணி மீது தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. வலுவான பொருளாதாரத்துடன் பிராந்தியத்தில் முன்னேற்றகரமான நாடாக அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பங்களாதேஷ் இந்த நிலையின் முன் நிலைகுலைந்து போவது கவலைக்குரிய விடயம் என திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இற்றைக்கு சில வருடங்களுக்கு முன் இலங்கைக்குக் கடனுதவி வழங்கும் அளவுக்கு வலிமையான பொருளாதார ஸ்திரத் தன்மையுடன் காணப்பட்ட பங்களாதேஷ் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அந்நாட்டு ஆடைக் கைத்தொழில் இன்று பாரதூரமான பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது.




## 2022 - 2024 காலப்பகுதியில்

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைந்த விதம்

# ரணிலோடு தேசமும் வெல்லும்




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் கடன் வட்டி வீதம் குறைந்துள்ளது.




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளன.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் பெற்றோலின் விலை குறைந்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் அரச வருமானம் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் பணவீக்க வீதம் குறைந்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் குறைந்தபட்ச பஸ் கட்டணம் குறைந்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் வெளிநாட்டில் தொழில் புரிபவர்களின் பண அனுப்பல்கள் அதிகரித்துள்ளன.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் வீட்டுப் பாவனைக்கான கேஸ் சிலிண்டரின் விலை குறைந்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் அந்நிய செலாவணி இருப்பு அதிகரித்துள்ளது.

| | 2022 செப். | 2024 செப். |
|---|---|---|
| உருளைக் கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது) 1Kg | ரூ. 300 | ரூ. 200 |
| கோதுமை மாவு 1Kg | ரூ. 420 | ரூ. 160 |
| செத்தல் மிளகாய் 1Kg | ரூ. 1750 | ரூ. 850 |
| டின் மீன் 1Kg | ரூ. 630 | ரூ. 330 |
| சிவப்புப் பருப்பு 1Kg | ரூ. 430 | ரூ. 290 |
| வெள்ளைச் சீனி 1Kg | ரூ. 280 | ரூ. 270 |
| பால் மா 1Kg | ரூ. 1240 | ரூ. 950 |
| வெள்ளை முட்டை 01 | ரூ. 49 | ரூ. 42.50 |
| கோழி இறைச்சி (தோல் நீக்கியது) 1Kg | ரூ. 1506 | ரூ. 1050-1300 |
| நெத்தலி 1Kg | ரூ. 1700 | ரூ. 900 |

கட்டணம் செலுத்தப்பட்ட பிரசாரப் பிரசுரம் / விளம்பரம்

# யாழ். நாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டுகோள்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

இலங்கையின் தேசிய வீரர்களுள் ஒருவராக போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பிறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் கோரிக்கைக்கு அமைவாக 1972 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1985 இல் கட்டட வேலைகள் பூர்த்தியாகிய போதிலும் நீண்டகாலமாக யாழ்ப்பாண மாநகர சபையின் பராமரிப்பில் இருந்துவந்தது.

ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டதன் நோக்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானை என்றும் நினைவில் கொள்ளும் வகையிலும் ஓர் ஆன்மிக மையமாக அவர் தம் கொள்கைகளை பேணும் நினைவாலயமாக விளங்குவதன் பொருட்டுமாகும். நாவலர் கலாசார மண்டபம் என்ற பெயரைக் கொண்டிருந்தாலும் சைவசமய ஆசார அனுட்டானங்களைப் பேணும் ஆன்மிக நிலையமே இக்கலாசார மண்டபமாகும்.

பொதுச்செயற்பாடுகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டுவந்த போதிலும் அதன் புனிதத் தன்மையைப் பேண வேண்டும் என்ற விடயம் கவனத்திற்கொள்ளப்படவில்லை. நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம், அங்கு புனிதம் பேண வேண்டிய கட்டாயம். ஆன்மிக நிலையமாக அம்மண்டபம் போற்றப்பட வேண்டிய தன்மை மற்றும் ஆசாரங்கள் பேணப்பட வேண்டியதன் அவசியம் முதலான இன்னோரன்ன காரணங்களால் கடந்த காலத்து கோரிக்கைகளிற்கு அமைவாக கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் இந்த மண்டபத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், இம்மண்டபமும் வாக்குச் சாவடியாக பயன்படுத்த உத்தேசித்துள்ளமை, அதன் புனிதத்தையும் நடைமுறைகளையும் பாதிக்கச் செய்யும் என்பதால் தயவுசெய்து இந்த மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலாவும், பொதுச்செயலாளர் டாக்டர் கி. பிரதாபனும் கையொப்பமிட்டு இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சிறப்பாக நடந்தேறிய பழனி முருகன் மாநாடு



தமிழக இந்து அறநிலையத் துறை மற்றும் ஆதீன முதல்வர்கள், முருகன் மாநாட்டு சிறப்பு குழுவினர் வழிகாட்டலிலும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் நல்லாசியுடன், இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபுவின் அயராத முயற்சியில் தமிழக வரலாற்றில் முதன்முதலாக இந்து அறநெறித்துறை முத்தமிழுக்கும் அதன் முதல்வன் முருகனுக்கும் சேர்த்து அறுபடையில் மூன்றாம் படையான பழனியில், குறிப்பாக அதன் ஆளுகைக்குட்பட்ட பழனி யாண்டவர் கலைக்கல்லூரி வளாகத்தில் 24, 25ஆம் திகதிகளில் பெரும் விழாவாக முருகன் மாநாடு நடத்தப்பட்டது. முத்தமிழின் செழுமையை, பெருமையை உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் பல நாடுகளில் இருந்து மாநாட்டிற்கு பேராளர்கள், ஆராய்ச்சி கட்டுரையாளர்கள், முருக அடியாளர்கள் என்று பல நூறு அடியார்கள், உள்ளூர் அறிஞர்கள், பல முன்னணி கலைஞர்கள், பேச்சாளர்கள், மூத்த தமிழக அமைச்சர்கள் என மண்டபம் நிறைந்த பேராளர்களுடன் மாநாடு 24ம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் ஆரம்பமாகியது. 100 அடி கொடிக் கம்பத்தில் இம் மாநாட்டிற்காக உருவாக்கப்பட்ட வேலும், சேவலும் நடுவில் வேலுடன் கூடிய மாநாட்டுக் கொடியை ஏற்றி இரண்டு நாள் விழா கோலாகலமாக மங்கள வாத்தியங்கள் முழங்க இதற்காக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பேராளர் மாநாட்டு மண்டபம், அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளை சமர்பிக்க சிறப்பு மண்டபங்கள், அறுபடை திருத்தலங்களின் சிறப்புகளை விபரிக்கும் வகையில் கண்காட்சி மையம் மற்றும் விஞ்ஞானத்தின் மூலம் மெய்யானத்தை மக்களுக்கு காட்சிப்படுத்தும் நோக்கில் இரண்டு கலைக்கூடங்கள் இதில் 3D மூலம் சிறப்பாக கண்டு களிக்கவும் மற்றையது சிறப்பாக அமைக்கப்பட்ட Virtual Video காணொளி என விஞ்ஞான உத்திகள் மூலம் சிறப்பாக பல முறை பார்க்க தூண்டும் முறையிலும் அமைக்கப்பட்ட கலைக்கூடத்தில் பல இளைஞர், யுவதிகள் மற்றும் பெண்கள் என பல்லாயிரக்கணக்கான மக்கள் அலைமோதிக் கொண்டிருந்தார்கள்.

முதல்நாள் விழாவை தமிழக முதலமைச்சர் காணொளி வாயிலாக தொடக்கி வைத்து, தமது ஆட்சியில் இந்து அறநெறித்துறையினூடாக செயற்படுத்தப்பட்ட திட்டங்கள், குடமுழுக்கு, ஆலய பராமரிப்புகள், சொத்துக்கள் பாதுகாப்பு என பல கோடித் திட்டங்களையும் இந்த மாநாட்டு நோக்கங்களையும் பட்டியல் இட்டு மாநாடு வெற்றியடைய வாழ்த்தினார். தொடர்ந்து ஆதீனங்களின் ஆசிகள், பிரதம அழைப்பாளர்களின் ஆசிச்செய்திகளும் அதனைத் தொடர்ந்து மாநாட்டு சிறப்பு மலர் மற்றும் “கதிர்காமக் கந்தன்” நூலும் வெளியிட அதனை இலங்கை மூத்த பத்திரிகை மற்றும் அமைச்சுகளின் செய்தித் தொடர்பாடல் ஆலோசகர் ஹென்றி விக்கிரமசிங்க பெற்றுக் கொண்டார்.

மாநாட்டில் இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் மற்றும் மலேசிய பத்துமலை ஆலய நிறுவனர் டத்தோ ஸ்ரீ நடராஜாவும், பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ சரவணனும் சிறப்புரை ஆற்றியிருந்தார்கள்.

இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து வந்த ஆன்மிக பேச்சாளர் கலாநிதி ஆறு திருமுருகன், கதிர்காமக் கந்தன் மற்றும் இலங்கையில் முருக வழிபாடு, எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி சிறப்புரை ஆற்றினார். அதுபோல் இங்கிலாந்தில் இருந்து வருகை புரிந்த சிறப்பு அழைப்பாளர் பரமலிங்கம் விவேகானந்தா உரையாற்றுகையில், இங்கிலாந்தில் உள்ள 55 ஆலயங்களில் முதன் முதலாக 1973 உயர்வாசற் குன்று முருகன் ஆலயமும் தொடர்ந்து 1974 ஆண்டு இலண்டன் முருகன் ஆலயமும் உருவாகியது. மேலும் வேல்ஸ் பிரதேசத்தில் அந்நாட்டு வெள்ளை இனத்தவர்களால் முருகன் ஆலயம் நடைபெறுவதையும், பாராயணங்களை தமிழில் பாடுவதையும், மேலும் High Wigham முருகன் ஆலயத்தில் செந்தமிழால் பூசைகள் நடைபெறுவதையும் சுட்டிக் காட்டி, பழனி முருகன் நவபாஷாணத்தால் செய்யப்பட்டது. அதன் தாற்பரியங்களை விளக்க சித்த ஆராய்ச்சி பீடம் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை வெளியிட்டிருந்தார்.

அதனை இந்து அறநிலையத் துறை அமைச்சர் மாநாட்டின் முடிவில் தீர்மானங்களில் ஒன்றாக அறிவித்திருந்தார்.

மேலும் இலங்கை மறவன்புலவு க. சச்சிதானந்தனின் செந்தமிழ்ச் சேவையைப் பாராட்டி “முருகம்மையார்” விருதும், பொற்பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் 19000 பக்கங்களில் 12 திருமுறையை அச்சிட்டு பதிப்பித்தவரும் 4800 பக்கங்கள் கொண்ட 12 பகுதிகளான முருகன் பாடல் தொகுப்பை அச்சிட்டு பதிப்பித்த தொண்டரும் ஆவார்.

மாநாட்டில் ஆய்வரங்கில் அவுஸ்ரேலியாவில், குறிப்பாக சிட்னி முருகன் ஆலய உருவாக்கம், வளர்ச்சி பற்றி யாழ் செந்தமிழ் ஆகம மட நிறுவனர் கு. பார்த்தீபன் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து பாராட்டு பத்திரமும் பெற்றுக் கொண்டார். அதுபோல் சுவிற்சர்லாந்தில் இருந்து கலந்து கொண்ட பேர்ண் முருக ஆலய ஸ்தாபகர் முருகசிரோன்மணி கணேசகுமார் ஆலய உருவாக்கம் பற்றி தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

மாநாட்டில் 21 தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. குறிப்பாக வெளிநாட்டு அடியவர்களுக்கு சிறப்பு செயலி மற்றும் சுற்றுலா ஒழுங்குகள், ஆலய அபிவிருத்திக்கு கூடிய நிதி, ஆலய விரிவாக்கம், இலவச தரிசனம் என்று பல்வேறு முன் மொழிவுகள் மாநாட்டில் பங்குபற்றிய இரண்டு இலட்சத்திற்கு அதிகமான பங்காளர்களுக்கு பழனி திருவருட் பிரசாதம், பஞ்சாமிர்தம், பைகள் என்று வரலாற்றில் போற்றி பாதுகாக்க கூடிய நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த மாநாட்டை முன்னின்று இறுதிவரை வழி நடத்திய இந்து அறநிலைய துறை அமைச்சர் செயல் வீரர் பி.கே. சேகர்பாபு மற்றும் துறை முதன்மை செயலாளர் Dr. சந்திரமோகன், ஆணையாளர் பி.என். ஸ்ரீதர், துணை ஆணையாளர்கள்: Dr. இரா சுகுமார், ந. திருமகள், வான்மதி, Dr. அ. பிரதீப், சி. ஹரிப்பிரியா, மா. கவிதா மற்றும் துறைசார் அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் என்று பலரது உழைப்பும் பாராட்டத்தக்கது.

பரம் நந்தா (லண்டன்)




# மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் மாநாடு



மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக இளைஞர் முன்னணி என்பன இணைந்து ஏற்பாடு செய்த இளைஞர் மாநாடு நேற்று சனிக்கிழமை (14.09.2024) ஹட்டன் டி.கே. டபிள்யு மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மலையக இளைஞர் முன்னணியின் தலைவருமான இராதாகிருஷ்ணன் ராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் டாக்டர் அப்துல் கலாம் குடும்பத்தின் பேரனும் சர்வதேச அப்துல் கலாம் அறக்கட்டளையின் ஸ்தாபக இணைத் தலைவருமான டாக்டர் ஏ.பி. ஜே.எம்.ஜே சேக் சலீம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டதுடன் இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து வெளிவருகின்ற இதயக்கனி சஞ்சிகையின் வெளியீட்டாளரும் பிரதம ஆசிரியருமான இதயக்கனி எஸ்.விஜயன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன் மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் பொருளாளர் தாழமுத்து சுதாகரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் பெருந்திரளான இளைஞர்களும் கலந்து கொண்டனர்.




# மீலாத் சிறப்பு கவிதா சாகரம்

மீலாத் சிறப்பு கவிதா சாகரம் நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு பிறை ரீவியில் ஒளிபரப்பாகவுள்ளது

Pirai Television

அண்ணல் நபிகள் நாயகம் ஸல் அவர்கள் இந்தப் பூமிக்கோர் அருட்கொடையாகவே வந்து சேர்ந்தார்கள். உலகம் முழுவதையும் ஆற்றுப்படுத்துகின்ற ஆசிரிய வாய்மை அன்னார் கொண்டிருந்த பேராற்றலாகும். ஆசிரியம் என்பது இக்ரஹ்' என்கிற போதனையின் தொடர் வடிவம். அண்ணலார் அன்பைப் போதிப்பதில், அறிவையூட்டுவதில், பண்பாட்டை விதைப்பதில், நற்பண்புகளை வளர்ப்பதில், போதனை செய்வதில், சொல்வதில், செய்வதில், அங்கீகரிப்பதில் என்றெல்லாம் ஒரு முன்மாதிரி முழு மனிதராக தன் வாழ்வை நெறிப்படுத்தியவர்.

மானுட நேசகரான கண்மணி நாயகம் ஸல் அவர்களது ஆசிரிய வகிபாகத்தைப் பாடு பொருளாகக் கொண்ட கவிதை வாசிப்புக் களம், பிறை ரீவியின் பிறை வெளி நிகழ்ச்சியின் மீலாத் சிறப்பு கவிதா சாகரமாக அமைகிறது.

# நேத்ரா அலைவரிசையில் சர்வ சமய கவியரங்கம்



நேத்ரா அலைவரிசையின் விசேட மீலாத் நிகழ்ச்சியில் சர்வ சமய கவியரங்கம் நாளை 16ஆம் திகதி திங்கட்கிழமை ரூபவாஹினி நேத்ரா அலைவரிசையில் காலை 8:30 மணிக்கு இடம்பெறும். நபி பெருமானார் பிறந்த மீலாத்தின விசேட ஒளிபரப்பில் இம்முறை கஸீதா, விவரணப் படம், உரையாடல் போன்ற பல நிகழ்ச்சிகளோடு விசேட நிகழ்ச்சியாக சர்வ சமயக் கவியரங்கம் இடம்பெறுகிறது. தமிழ் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெறும் இம் மீலாது கவியரங்கில் மேமன் கவி, ஹேமச்சந்திர பத்திரன, பிரேம்ராஜ், மன்னார் அமுதன் ஆகிய கவிஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

# அகில இலங்கை சமாதான நீதவான்



மோனிங்டன் கீழ் பிரிவு, வெவர்லி குருப், அக்கரபத்தனையைச் சேர்ந்த நவரட்ணம் ஜெயதேவி தம்பதியினரின் புதல்வன் நவரட்ணம் சிவலிங்கம் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியபிரமாணம் செய்து கொண்டுள்ளார். இவர் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையில் முகாமைத்து உதவியாளராக கொழும்பு பிரதான காரியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

32 பக்கங்கள் | 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2024 செப்டெம்பர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை September 15 Sunday, 2024

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA



10

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் பங்களாதேஷ்!









06

எவராவது பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது

13

மக்கள் விடுதலை முன்னணி இன்று முதலாளிகளின் பொக்கற்றுக்குள்



### வடக்கு மக்களின் எதிர்பார்ப்புகள் விரைவில் நிறைவேறும்

# அரசியல் பிரச்சினைக்கும் அபிவிருத்திக்கும் தீர்வு

யாழ். முற்றவெளியில் EPDP ஏற்பாடு செய்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

விரிவான செய்தி || பக்கம்



### ரூ. 3,000 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட

# வடக்கு ரயில் சேவைகள் நேற்று முதல் வழமைக்கு

நாட்டில் வழமையான மற்றும் வினைத்திறன்மிக்க போக்குவரத்து சேவையை நிறுவும் நோக்கில், 3,000 கோடி ரூபா (92 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவில் புனரமைக்கப்பட்ட அநுராதபுரம் மஹவ ரயில் பாதை, கடந்த 12 ஆம் திகதி ரயில்வே திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ், நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கு ரயில்வேயின் புனரமைப்பு பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டதோடு, அனுராதபுரம் - ஓமந்தை, அனுராதபுரம் - மிஹிந்தலை மற்றும் அனுராதபுரம் - மஹவ என அபிவிருத்தி செய்யப்பட்டதாகவும் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள அனுராதபுரம் மஹவ பகுதியை கையளித்துள்ளதாகவும் திட்டப்பணிப்பாளர் சிந்தக ஜயசேகர தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில், அனுராதபுரம் மஹவ பகுதியின் நிர்மாணப் பணிகள் இவ்வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.



இந்த ஒரு தடத்தை II

# வாகன இறக்குமதி மீதான தடைநீக்கம்

### 03 கட்டங்களாக அமுல்படுத்த திட்டம்



வாகனங்கள் மற்றும் இயந்திரம் சாரா வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி மீதான தற்காலிக தடையை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் கூடிய நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் வேலைத் திட்டத்தின் கீழ் II

### வரி செலுத்துவோருக்கு நிவாரணம்

# தனிநபர் வருமான வரியை குறைக்க தீர்மானம்

TAX

### உழைக்கும் போது செலுத்தும் வரியை குறைக்கும் பிரேரணை
### 2025 வரவு – செலவு திட்டத்தில் உள்ளடக்க அமைச்சரவை அனுமதி

வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், தனிநபர் வருமான வரி (Personal Income Tax ) கட்டமைப்பில் திருத்தங்களைச் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச் II

### சீருடை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ரூ.7,500

### 2025 முதல் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு, 2025 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் சீருடைக்கென 7,500 ரூபாவை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புத்தசாசன, மத விவகார, கலாசார அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவை கருத்திற்கொண்டு, அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அறநெறிப் II

## எங்கள் கருத்து...

# மக்கள் வழங்கும் ஜனநாயகத் தீர்ப்பு!

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஆறு தினங்களே உள்ளன. எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலையில் வாக்களிப்பு ஆரம்பமாகின்றது. இத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் இறுதிக்கட்டப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்பது தேர்தல்கள் ஆணையத்தின் உத்தரவு ஆகும்.

கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களைப் போல் அல்லாமல் இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் விறுவிறுப்பாக உள்ளது. முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு பெருமளவு வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுவதால் தேர்தல் களம் மிகுந்த பரபரப்பாகவே உள்ளது.

வேட்பாளர்கள் தத்தமது எதிர்த்தரப்பினரைத் தாக்குவதும், வாக்குறுதிகளை அள்ளிவீசுவதுமான சூடான செய்திகளுடன் ஊடகங்களும் பரபரப்பாகவே காணப்படுகின்றன. எதிர்த்தரப்பினர் வழங்குகின்ற வாக்குறுதிகளைப் பார்க்கின்ற போது இவ்வாக்குறுதிகளெல்லாம் நிறைவேற்றப்படுவது சாத்தியமாகுமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது. II

### வாக்களிப்பு நிலையங்களுக்கு

# கையடக்கத் தொலைபேசி எடுத்துச் செல்வது தடை



ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் வாக்காளர்கள் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச்செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக II

### வாக்காளர் அட்டை கிடைக்காதோர்

# 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை தபால் அலுவலகத்தில் பெறமுடியும்

ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்காதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை முதல் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரையான காலப்பகுதியில், அருகாமையிலுள்ள தபால் அலுவலகங்களில் ஆள் அடையாளத்தை II



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று

### 2,849 நிலையங்களில் ஏற்பாடு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறுகிறது. 2,849 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சையில், 323,879 பரீட்சார்த்திகள் II

# நாட்டின் வறுமை நிலையை நீக்க புதிய வறுமை ஒழிப்பு திட்டங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும்



நாட்டின் வறுமையை போக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் அடித்தளம் இடுவோம் எனவும் "ஜனசவிய", அஸ்வெசும", "கெமிதிரிய", "சமுர்த்தி" போன்ற வேலைத்திட்டங்களில் காணப்படுகின்ற சிறந்த விடயங்களை உள்ளடக்கி குறைபாடுகளை நிவர்த்தி செய்வோம் II

# தேசிய மக்கள் சக்தி கட்சியினால் மாயாஜாலங்கள் செய்ய முடியாது

### அனுரகுமார திஸாநாயக்க



தேசிய மக்கள் சக்தியினால் மாயாஜாலங்களையோ அதிசயங்களையோ செய்ய முடியாதென ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

மொனராகலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்த நாட்டை II

### புலம்பெயர் மக்களது விருப்பத்துக்கிணங்க

# தமிழரசு கட்சியின் UK கிளை பொது வேட்பாளருக்கு ஆதரவு



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளருக்கு, இலங்கைத் தமிழரசு கட்சியின் பிரித்தானியாவுக்கான கிளை (ITAK UK Forum) தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

பிரித்தானிய கிளை வெளியிட்டுள்ள ஊடக II

உங்கள் நிலையான வைப்பிற்கு
அதிக வருமானம்
ரூ.500,000 அல்லது அதற்கு அதிக தொகையில்
உங்கள் முதலீட்டை ஆரம்பியுங்கள்.

9% வருடாந்த வட்டி (வ.வி.வீ. - 9.27%) 4 மாதங்கள்
9.5% வருடாந்த வட்டி (வ.வி.வீ. - 9.70%) 200 நாட்கள்
9% வருடாந்த வட்டி (வ.வி.வீ. - 9.07%) 300 நாட்கள்

நீங்கள் பின்வருவன ஊடாக முதலீடு செய்யும்போது விசேட வட்டி வீதம்
COMBANK DIGITAL மற்றும் flash

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது | +94 112 353 353 | www.combank.lk
இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு நிறுவனம் | Fitch Rating A (lka)

கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரிக்கப்படும் விளம்பரமாகும்





# நாம் எமது குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் தேசத்தின் எதிர்காலத்திற்காகவும் சஜித் பிரேமதாச உடன் தோளுக்கு தோளாய் நிற்கின்றோம்"

சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

"தேசத்தின் பொதுமக்களுக்கு,

தேசத்தின் விரிவுரையாளர்களும் கற்றல் வழிகாட்டிகளுமாகிய நாம், தேசத்தின் எதிர்கால இளைஞர்களை பாதுகாத்தல் நிமித்தம் ஒன்றிணைந்து கைகோர்க்க உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எமது பல்கலைக்கழகங்கள் அரசியலுக்கான நாடகமேடையாக அமைந்துவிடக்கூடாது. எமது கொள்கைகளையும் கற்றல் நெறிகளையும் அனர்த்தங்களை நோக்கி இட்டுசெல்பவர்களின் கைகளுக்கு அதிகாரத்தினை பெற்றுக்கொடுக்க இடமளியாதீர்கள். ஒழுக்க-விழுமியம், கற்றல் மற்றும் வளர்ச்சியின் பக்கம் மார்நிமிர்த்தி நிற்கும் தலைவனுக்கு உங்கள் வாக்குகளை பெற்றுக்கொடுங்கள்."

எமரிட்டஸ் பேராசிரியர் G.L. பீரிஸ், கொழும்புப் பல்கலைக்கழகம்.

எமரிட்டஸ் பேராசிரியர் S.B. ஹெட்டியாராச்சி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

எமரிட்டஸ் பேராசிரியர் K. சமரசிங்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் உப்புள் B. திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர். கென்னடி D. குணவர்தன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர். அனுர உதுமங்கே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் நயனி மெலேகொட, கொழும்புப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் நதாலகமுவே தம்மதின்ன, களனி பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் K.K.I.U. அருண குமார, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் W.M. D. தேசப்பிரிய குணசேன, களனி பல்கலைக்கழகம்.

ஓய்வுபெற்ற மூத்த பேராசிரியர். தயா அமரசேகர, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் கமலா லியநகே, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் H.M. நவரத்ன பண்டா, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் J.M. ஆனந்த ஜயவிக்ரம, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் உப்புள் அபேரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் B.W.R. தமயந்தி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.G. அமரசிங்க, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் T. M.L. தம்மிக்கா சுபாஷிணி, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் P. ஐங்கரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.M. ∴பாஸில், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. சப்ராஸ் நவாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.H. தவ்∴பீக், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A. ஜ∴பர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.A.S.F. சாதியா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M. C. A. நஸார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.L.A. றௌவு∴ப், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.I.M. ஹிலால், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.K.D. கீர்த்திரத்ன, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் C.R. வித்தானாச்சி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சுமனசிரி வாவ்வகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அலெக்சாண்டர் கப்புகொட்டுவ, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.A. அசீஸ், கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.C.P. குமார, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் கீத்தானி புலங்குலம, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தம்மிக திசானாயக்க, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் மோஜித் ஆரியரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சஞ்சீவி மந்திரீரத்ன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.M.M.P.S. பண்டார, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R.M.M. சந்திரரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ரோஹித்த தசநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.S.M. சலீம், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. விஜயசந்திரன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் D.M.L. திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.V. சந்திரசிரி, உறுகுணை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. ஸ்பீர் நவாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A. ஜ∴பர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் P.D. பிரேமசிரி, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. பிரிஷாந்தன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அத்தம்பவா சர்ஜூன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.K.L. ஐங்கரனி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ப்ரேமா பொடிமெனிக்கே, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வீரசேனா, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R.P.I.R. ப்ரசன்னா, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் டிக்கிரி ஹேரத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் பிரதீப் வீரசிங்க, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் காமினி ரத்னசிரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.A. கலன்சூரிய, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் விஷாகா சூரியபண்டார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.Z.M. ந∴பீல், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் துனேஷ் குணதிலக்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஷாந்தா கம்லத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தமயந்தி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.M.N.W. மெண்டிஸ், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.M. கருணாதாச, கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் சந்திரசிரி தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் K.A.S. தம்மிக்கா, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தம்மிக்க திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. சம்பத் ராஜபக்ஷ, களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி. S. பாஸ்கரன், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. சமிந்த G. கமகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.V. C. சந்திரசிரி, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. திலக் விஜேசுந்தர, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. ஒஷான் வெத்தகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.I.M. ரியாத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. ரஹீலா சியாத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.B.M. அம்ஜத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. A. இல்முதீன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. R.A.N.M. ஜயசிங்க, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

கலாநிதி. சுரஞ்சித் குணசேகர, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. S. R. தீவீர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. சனத் முதலிகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. ஸ்ரீயானி குணரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. R. ரமேஷ், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. C.C. ஜயசுந்தர (நூலகர்), களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி. மாஹிம் மெண்டிஸ், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி. சமன் இலங்கரத்ன, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

கலாநிதி. ஷான் பண்டார, SDTI பல்கலைக்கழகம்

கலாநிதி. S.D. காமினி ஜயசூரிய, இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.

கலாநிதி. விந்தியா வீரவர்தன, களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி. விமலதம்ம தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. தம்மசிரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. G.C.L. கமகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. அத்துலசிரி சமரக்கோன், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி. P. சரவண குமார், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. S.R. தௌவீர், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. S. சுதர்ஷன், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.M. ∴பிரோஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. ரணில் அபேசிங்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் தம்பர அமில தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. R.M.G. கருணாரத்ன, களனி பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. D.D.R. டி சில்வா, களனி பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. ∴பாத்திமா ரஷீதா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. M.I. ∴பாத்திமா நிஹ்லா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. H.M. நிஜாம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. A.L.M.A. ஷமீம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.M.M. சிராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. H.G.K.M. பண்டார, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. T.G.D. உதயகாந்தி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. W.A.N.D. விஜேசிங்க, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.D. பண்டார, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. நிஷாந்த ஹரிஸ்சந்திர, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. E.H.M. ஹீன்பண்டா, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. P. காயத்திரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. N.M.P. நெத்தாசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. D.L. ரணகல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. H.A.S.U. கீதாஞ்சலி, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.M. இஹ்ஜாஸ், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.L.M. ஹனீ∴பா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.A.M. யசீர், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் சனத் குணவர்தன,

மூத்த விரிவுரையாளர் திரு. C. குமார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. N.M.A. ஜயசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. C. குமார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. சிவகாந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. T. திலீபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. ஜீவசுதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. V. ஸ்ரீதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.A.M. யசீர், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. P. கலேஷீ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.L.M. ஹனீ∴பா, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. A. யோகராஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M. பிரகாசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. V. கமலசிரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. லும்னா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M.B. ச∴ப்னா சக்கி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. S. சந்திரகுமார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. ∴பர்விஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.J.M. ஹஸ்மி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M.A. சுஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. அப்துல் ரசக், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M. ஷஹான், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. N. சுபராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. T.L. சக்கீர் ஹுஸைன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.R.M. அன்சார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M.M. மனோஜ் ஜயமால், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. சரத் பத்திராஜா, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. அரவிந்த பண்டார, கொழும்புப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. தில்ஹார லக்ஷானி, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. J.M.S.B. செனவிரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.M.C.H. அத்தனாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A. ரிஸ்னா, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. N. சிவக்குமார, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. G. ஜயதீஸ்வரன், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.S. விஹாரகெதர, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M.M. ரிக்காஸ், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. S.M. தமீம், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A.A. பானு, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. J. வலீத் அஹமத், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S.S. ஹேவாவாசம், ரஜரட்டை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.B. ∴பாத்திமா சஞ்சீத்தா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. B.N.G. பெரேரா, உறுகுணை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. O.A.Y. சமத்யா, உறுகுணை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.D.W. கமலசிரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. G.K. விதாபத்திரன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A.B.S. மெதகெதர, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. V.M. ரில்வான், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.M. ஷஹன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. R.M.W. குலத்துங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. J.M.R.D. லக்மால், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ஹர்ஷாணி செவ்வந்தி ஹந்தெல்ல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. R.K. திசாநாயக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ரசிக்கா ஜயசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.H.M.P. மதுசங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் D. உபாலி தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ரஞ்சனா கீதாலங்கார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.G. மதுஷானி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் U. குணாநந்தன தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் K. பண்ணலோக்க தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் E. தீப்பா நந்த தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் M. நந்தலோக்க தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் E. மஹிந்த தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S.U.B. ஹேவாகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. K.K.T. உதயங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. D.L. ரணகல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S. ப்ருந்தா, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. ஹரிச்சந்திர, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவவரையாளர் பிரசன்ன பெரேரா, பேராதனைப் பல்கலைக்கழகம்.

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa



சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

# வெறுப்பை தோற்கடித்து எழுவோம்

அச்சம், வெறுப்பு மற்றும் கோவம் என்பவற்றின் ஊடாக தேசத்தை கட்டியெழுப்பும் கட்டுக்கதைகள் உங்கள் முன்னால் விதைக்கப்பட்டு வருகிறது. உண்மை என்னவெனில் இருண்ட யுகத்திலிருந்து வெளிப்பட்ட எதுவும் பிரகாசிக்காது என்பதேயாகும். இலங்கையை கட்டியெழுப்பும் ஒரே வழி ஐக்கியமாக திகழ்வது மாத்திரமே. ஒரே குறிக்கோளை நோக்கி பயணிப்போம். அனைவருக்கும் ஒரே வெற்றியை பெற்றுக்கொடுப்பதனூடாக வலிமையான இலங்கையை கட்டியெழுப்புவோம்.

சிலரின் வெற்றி, அநேகரின் தோல்வி. அனைவருக்கும் வெற்றி என்பதே முழு தேசத்தினதும் வெற்றியாகும்.

எம் தேசத்தை வெற்றி பெற செய்வோம்!

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa

www.sajith.lk



# எவராவது பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது

## இதுவே இறுதிச் சந்தர்ப்பம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற உள்ளது. இரண்டு கோடியே 31 இலட்சத்து 3 ஆயிரத்து 500 மக்கள் தொகையைக் கொண்ட இந்நாட்டில் ஒரு கோடியே 71 இலட்சத்து 80 பேர் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதோடு 39 பேர் அபேட்சகர்களாகவும் களமிறங்கியுள்ளனர். தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுவரும் சூழலில் இத்தேர்தலில் சுயேட்சை அபேட்சகராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'தினகரன் வாரமஞ்சரி'க்கென விஷேட பேட்டியொன்றை அளித்துள்ளார்.

**கேள்வி: இம்முறை ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் உங்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டுமெனக் கருதுகிறீர்கள்?**

பதில்: நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்தவும் உறுதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவும் வேண்டும் எனில் எனக்குத்தான் வாக்களிக்க வேண்டும். நாம் பொருளாதாரத்தில் ஸ்தீரநிலையை அடைந்துள்ளோம். அதனை உறுதிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் பழைய நிலைக்கு பின்னோக்கி செல்ல நேரிடும்.

தேசிய மக்களின் சக்தியின் (மாலிமாவ) யோசனைகளுக்கு அமைய அடுத்தாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்குமாறு நிபுணர் ஒருவரிடம் கூறியிருந்தேன். அதற்கமைய தயாரித்த வரவு செலவுத்திட்டத்தில் வருமானத்திற்கும் செலவுக்குமான இடைவெளி 4000 பில்லியன் ரூபாவாக உள்ளது. அது மொத்த தேசிய உற்பத்தியில் 11.9 சதவீதமாகும். ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ.எம்.எப்) இணக்கப்பாட்டின்படி துண்டுவிழும் தொகை 5 சதவீதமாக இருக்க வேண்டும். அப்போது தான் எம்மால் கடன் பெறலாம். அதற்கேற்பவே நாம் வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இல்லாவிடில் டொலரின் பெறுமதி ரூ. 400425 வரை கூட செல்லலாம்.

துண்டுவிழும் தொகை 11.9 சதவீதமாகக் காணப்படுமாயின் ஐ.எம்.எப். வும் ஏனைய 18 நாடுகளும் எங்களுக்கு அளிக்கும் ஒத்துழைப்பை நிறுத்தும். அப்போது டொலரின் பெறுமதி ரூ 500.00 வரை கூட அதிகரிக்கலாம். எமக்கு பணம் தேவை என்பதற்காக 5 சதவீதத்தை விடவும் அதிகமாகக் கடன் பெற்றால் மொத்த தேசிய உற்பத்தியில் தனியார் துறையினரிடம் உள்ள நிதி இல்லாமல் போகும். அச்சந்தர்ப்பத்தில் வட்டி 25 சதவீதம் வரை அதிகரிக்கும். அதனால் நாம் முன்னோக்கிச் செல்வதற்கு ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு செல்ல வேண்டும். இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்தோடு வாழ்க்கை சுமையை இன்னும் இலகுபடுத்த வேண்டும்.

**கேள்வி: நீங்கள் அடிக்கடி 'எனது நண்பர் அநுர' என அழைக்கிறீர்கள். உண்மையில் அநுர குமார திஸாநாயக்க உங்கள் நண்பரா?**

பதில்: பாராளுமன்றத்தில் அவரை விளிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறே விழிக்கிறேன். அவர் அவ்வாறு விழிக்க வேண்டாம் என்கிறார். அவர்களது அரசியல் பீடத்தில் அது தொடர்பில் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனால் அவரை முன்னாள் விவசாய அமைச்சர் என்று தான் விளிக்க வேண்டியுள்ளது. அவ்வாறும் அழைக்க வேண்டாமென இப்போது கூறுகிறார். ஏனெனில் அவ்வாறு அழைத்தால் அவரும் அரசாங்கத்தின் பங்காளராக இருந்திருப்பது தெரிகிறதே.

**கேள்வி: நீங்கள் ஐக்கிய மக்கள் சக்தியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் கொள்கைப் பிடகடனங்களை படித்துள்ளீர்களா?**

பதில்: ஆம். இரண்டையும் படித்துள்ளேன்.

**கேள்வி: அப்படியென்றால் உங்களது பொருளாதார வேலைத்திட்டங்களின் படி அவ்விரு கொள்கைப் பிரகடனங்களிலும் காணப்படும் குறைபாடுகள் மற்றும் மாற்றங்களாக எவற்றைக் காணுகிறீர்கள்?**

பதில்: ஐ.ம.சக்திக்கு இரண்டு விஞ்ஞாபனங்கள் உள்ளன. ஒன்று சகலருக்கும் வெற்றி. மற்றையது Economic Blue Print 3. அவற்றில் அவர்களது வேலைத்திட்டங்கள் அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் செல்லும் இடங்களிலும் இலவசமாக தருவதாக எதையாவது வாக்குறுதியாக வழங்குகிறார். இல்லாவிட்டால் பொருட்களின் விலைகளை மேலும் குறைப்பேன் என்கிறார்.

நான் அவர்களது அணியினருடன் கதைத்து கேட்டால், அவர் இன்று என்ன வாக்குறுதி வழங்கினார் என்பதை நாங்கள் அறியாதுள்ளோம் என்கின்றனர். அதனால் இவரது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமென நான் நினைக்கவில்லை.

இவர்களது கொள்கையில் விவசாயிகளுக்கு கடனுதவி, நிவாரண உதவி தருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த கொள்கைப் பிரகடனத்தில் அது இல்லை.

உல்லாசப் பயணத்துறை குறித்து பரஸ்பரம் முரண்பாடான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை சுட்டிக்காட்டினால் அவர் சென்று மேலும் வாக்குறுதிகள் வழங்குகிறார்.

தற்போது இராணுவ திணைக்களமொன்றை உருவாக்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இவர் குறிப்பிடும் அனைத்தும் புதிய செலவுகளாகும்.

மாலிமாவவின் கொள்கை பிரகடனம் 232 பக்கங்களைக் கொண்டுள்ளது. அதனைப்படிக்கவே ஒரு இரவே செலவானது. அதில் பொருளாதார திட்டங்கள் குறித்து தெளிவில்லை.

ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு செல்வதா? இல்லையா என்பது தொடர்பில் பெரிய பிரச்சினை உள்ளது.

முன்னாள் விவசாய அமைச்சரான அநுர குமார, களனியில் ஏற்றுமதிப் பொருளாதாரம் என்றார். ஆனால் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இரத்து செய்யப்படும் என இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு செல்ல முடியாது.

அதேநேரம் சுனில் ஹந்துன்நெத்தி, பொருளாதார பரிமாற்ற வரைவு அரசியலமைப்புக்கு முரண் எனக் குறிப்பிட்டு ஏற்றுமதி பொருளாதாரமும் அரசியலமைப்புக்கு முரணானது என்கிறார். அத்தோடு டொக்டர் சூரிய பெருமவும் பொருளாதார மாற்ற வரைவுக்கு எதிராகக் குறிப்பிட்டிருந்தார். அதனால் இவர்களுக்கு மத்தியில் பரஸ்பர முரண்பாடுகள் உள்ளன. மேலும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களை நோக்கினால் ஐ.எம்.எப். இன் இலக்குகள் அனைத்தும் மாற்றமடையும். அதனால் அவ்வேலைத்திட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து குறிப்பிட வேண்டும். இப்படி சென்றால் பணம் அச்சிட வேண்டிவரும்.

அதனால் தான் அநுர திஸாநாயக்கவை விவாதத்துக்கு அழைக்கிறேன். ஏற்றுமதி பொருளாதாரமா? இறக்குமதி பொருளாதாரமா? அவரது பொருளாதார கொள்கை என்பதைக் குறிப்பிட வேண்டும். அப்போது ஐ.எம்.எப் உடன் எம்மால் பேச்சுவார்த்தை நடாத்த முடியும். இப்போதே குறிப்பிட்டால் ஐ.எம்.எப். க்கு பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். அதன் பின்னர் விவாதம் நடாத்த முடியும்.

**கேள்வி: வெளிநாட்டு கடனை கடந்த காலத்தில் செலுத்தாததன் பயனாகவே பொருளாதார நெருக்கடியை வெற்றி பெற முடிந்தது என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றனரே?**

பதில்: நாம் வெளிநாட்டு கடன்களின் வட்டியை கடந்த ஒவ்வொரு வருடமும் ரூபாவில் செலுத்தியுள்ளோம். ஆனால் ஐ.எம்.எப். இன் ஊடாக வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த எமக்கு கால அவகாசம் கிடைக்கப்பெற்றுள்ளது. அது சிறிய தொகையாகும். எமது கடன்களின் நிலைபேறுதன்மை இரண்டு காரணிகளில் அமைந்துள்ளது. அவற்றில் ஒன்று செலவுக்கு பணம் இருக்க வேண்டும். மற்றையது தங்களது கடன்களை செலுத்த பணம் இருக்க வேண்டும். நாம் நிலைபேறு தன்மையை நோக்கி செல்வதை ஐ.எம்.எப். ஏற்றுக்கொண்டுள்ளது.

நாம் மீண்டும் வங்குரோத்து அடைய மாட்டோம் என்ற நிலையை நோக்கி பயணிக்கிறோம். இதன் ஊடாக எமக்கு மேலும் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறும். அப்போது வாகன இறக்குமதிக்கும் அனுமதி வழங்க முடியும். நாம் நாட்டுக்குத் தேவையான நிதியை திரட்டியுள்ளோம். அவை நாட்டின் வருமானம் மூலமும் கடன்கள் மூலமும் ஈட்டப்பட்டுள்ளன. எம்மால் கடன்களை செலுத்த முடியும். ஆனால் அன்று இவர்கள் இந்நாடு கிரேக்கம் போன்றாகும் எனக் குறிப்பிட்டு இதனைப் பொறுப்பெடுக்காது பின்வாங்கி ஓடினர்.

**கேள்வி: உங்களால் இத்தேர்தலில் வெற்றி பெற முடியுமா?**

பதில்: இல்லாவிட்டால் நான் போட்டியிட மாட்டேனே.

**கேள்வி: இத்தேர்தலில் ஏனைய அபேட்சகர் எவராவது வெற்றி பெற்று நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள்ளானால் அச்சந்தர்ப்பத்தில் நாட்டை கட்டியெழுப்ப நீங்கள் மீண்டும் முன்வருவீர்களா?**

பதில்: அவ்வாறு நிகழ வாய்ப்பில்லை. எவராவது இந்நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சிக்கு உட்படுத்தினால் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. இதுவே இறுதி சந்தர்ப்பம்.

**கேள்வி: வடக்கு, கிழக்கில் அரசியல் பிரச்சினை உள்ளது. அப்பிரச்சினையைத் தீர்க்க நீங்கள் முன்வைக்கும் யோசனைகள்?**

பதில்: இந்நாட்டில் பல ஜனாதிபதித் தேர்தல்கள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன. அவற்றில் முதற்தடவையாக இத்தேர்தலில் தான் இன, மத ரீதியிலான பிரச்சினைகள் இல்லாதுள்ளது.

உண்மையில் வடக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து நாம் பல தடவைகள் கலந்துரையாடியுள்ளோம். அவற்றில் 13 ஆவது திருத்தம் குறித்தும் பேசியுள்ளோம். இப்போது அவற்றை முன்கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

வடக்கு மாத்திரமல்லாமல் ஒன்பது மாகாணங்களும் பாரிய அபிவிருத்திக்கான முக்கிய ஆயுதங்களாகத் திகழ வேண்டும். அபிவிருத்தி நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும். காணிப் பிரச்சினைக்கு நாம் தீர்வுகளை வழங்கி வருகிறோம். அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் ரி.ஆர்.சியை நாங்கள் உருவாக்குவோம். நவாஸ் ஆணைக்குழு செயற்படுகிறது. அவை பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குகிறது. அவற்றைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். அத்தோடு காணாமல் போயுள்ளவர்களின் பிரச்சினைக்கு அடுத்துவரும் மூன்று வருடங்களுக்குள் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கநடவடிக்கைஎடுத்துள்ளோம்.

அதேபோன்று முஸ்லிம்களுக்கு அவர்கள் மரணமடைந்த பின்னர் பூதவுடல்களை அடக்கம் செய்வதா? அல்லது எரிப்பதா? என்பது முக்கிய பிரச்சினையாக இருந்தது. அது தொடர்பிலும் நாம் சட்ட வரைவொன்றை முன்வைத்துள்ளோம். அதனால் இந்தப் பிரச்சினையும் இனி இல்லை.

**கேள்வி: நீங்களும் உங்கள் அணியினரும் எங்களைத் தவிர வேறு யாரும் நாட்டை ஏற்றால் பொருளாதார வேலைத்திட்டங்கள் சிதைவடைந்துவிடும் என்று கூறிவருகிறீர்கள். அப்படியென்றால் நீங்கள் இல்லாவிட்டால் பொருளாதாரம் வீழ்ச்சியடையக்கூடிய வகையிலா திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன?**

பதில்: அப்படி இல்லை. நாம் தயாரித்து முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களை எவரும் முன்னெடுக்கலாம். ஆனால் அத்திட்டங்களுக்கு அவர்கள் விருப்பமில்லை. தேசிய மக்கள் சக்தி அத்திட்டங்களுக்கு வெளியில் செல்ல முயற்சிக்கிறது. அப்படியானால் அத்திட்டங்கள் வீழ்ச்சியடையும். எவரும் பயணிக்கக்கூடிய சரியான பாதையை நாம் காட்டியுள்ளோம். அப்பாதையில் பயணிக்க வேண்டும்.

**கேள்வி: நீங்கள் அரச நிதியையும் அரச வளங்களையும் தேர்தலுக்காகப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறதே?**

பதில்: நான் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுத்ததற்காகவே அவ்வாறு கூறப்படுகிறது. அது ஒரு குற்றச்செயலா? எனது பொக்கற்றில் போட்டுக்கொள்வதற்காக நான் அவ்வாறு செய்யவில்லை. சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு பகுதியினர் எனக்கு வாக்களிக்கவும் மாட்டார்கள். தங்களால் முடியாததை அடுத்தவர்கள் செய்யவும் இவர்கள் விடுவதாக இல்லை.

**கேள்வி: இற்றைக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிய போது, சம்பள உயர்வு வழங்குவதாயின் வற் வரியை அதிகரிக்க வேண்டும் என்று நிதியமைச்சு செயலாளர் குறிப்பிட்டார். அப்படியாயின் இப்போது சம்பள உயர்வு வழங்க நிதி உள்ளதா?**

பதில்: சம்பளம் தொடர்பான உதய செனவிரத்னவின் அறிக்கை 2025, 2026 இல் தான் நடைமுறைக்குவரும். இவ்வருடம் சம்பள உயர்வு வழங்க பணம் இல்லை. இருந்திருந்தால் அதிகரித்திருப்பேன். பொருளாதாரத்தை சரியான முறையில் கையாளுவதன் பயனாக அடுத்தாண்டில் சம்பள உயர்வுக்கு பணம் உள்ளது. இவ்வருடம் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தான் எம்மால் வழங்க முடிந்தது.

**கேள்வி: உங்களுக்கு சவால் சஜித்தா? அநுரவா?**

பதில்: இருவர்கள் மாத்திரமல்லாமல் நாமல் உள்ளிட்ட எவரும் எனக்கு சவால் இல்லை. நாட்டில் நடைமுறைப்படுத்த முடியாதவை அவர்களது கொள்கைகள். அது தான் பாரிய சவால்.

எமது அயல்நாடான மாலைதீவு இப்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் செல்கிறது. பங்களாதேசத்தில் நிர்வாகமே இல்லாமலால் போயுள்ளது. நாம் அத்தகைய இடத்துக்கு செல்ல வேண்டுமா? அல்லது இதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டுமா? சஜித்தும் அநுரவும் இதற்கு பதிலளிப்பதாக இல்லை. அவர்கள் பழைய அரசியல் முறைமையில் செல்கின்றனர்.

நான் புதிய அரசியல் பாதையில் பயணிக்கிறேன். புதிய முறைமையை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது இலக்கு. அது புரட்சிகரமானது. அவர்களிடம் அத்தகைய திட்டங்கள் எதுவும் இல்லை.

**கேள்வி: நீங்கள் அரகல போராட்டத்தின் பங்காளர் என்றும் அந்த போராட்டத்தை ஒழித்துக்கட்டவே உங்களுக்கு வாய்ப்பளித்ததாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகிறாரே?**

பதில்: நாட்டின் அரசியல் முறைமையையும் சமூக முறைமையையும் மாற்றுவதற்கு நான் எதிர்ப்பில்லை.

அம்முயற்சியை வன்முறையாக மேற்கொள்வதற்கே நான் எதிர்ப்பு. அதனால்தான் பதவிக்கு வந்ததும் போராட்டத்தைக் கட்டுப்படுத்தினேன்.

இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார முறைமைகளை மாற்ற வேண்டுமாயின் ஏற்றுமதி பொருளாதாரத்தைக் கொண்டு வர வேண்டும். அதன் மூலம் மாற்றங்களை நான் மேற்கொள்வேன்.

(07ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி கண்டவர்: மர்லின் மரிக்கார்

முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினையாக இருந்த பூதவுடல்களை எரிப்பதா? அடக்கம் செய்வதா? என்பதைத் தீர்த்து வைக்கவென சட்ட வரைவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இனி அந்தப் பிரச்சினை இல்லை

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் இன்னும் ஆட்களை எடுக்க வேண்டிய தேவையில்லை. நாம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைப்போம்.

காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினை அடுத்துவரும் மூன்று வருடங்களுக்குள் தீர்த்து வைக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் பலவீனமே அநுர குமார திஸாநாயக்க உருவாகக் காரணம்

மாலிமாவ கொள்கை பிரகடனத்தில் பொருளாதார திட்டங்கள் குறித்து தெளிவில்லை.

காணாமல் போனவர்களின் பிரச்சினைக்கு அடுத்துவரும் மூன்று வருடங்களுக்குள் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும்.



வெளிநாட்டு கடன்களின் வட்டியை கடந்த ஒவ்வொரு வருடமும் நாம் ரூபாவில் செலுத்தியுள்ளோம். ஆனால் ஐ.எம்.எப். இன் ஊடாக வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த எமக்கு கால அவகாசம் கிடைக்கப்பெற்றுள்ளது. எமது கடன்களின் நிலைபேறுதன்மை இரண்டு காரணிகளில் அமைந்துள்ளது. அவற்றில் ஒன்று செலவுக்கு பணம் இருக்க வேண்டும். மற்றையது தங்களது கடன்களை செலுத்த பணம் இருக்க வேண்டும். நாம் நிலைபேறு தன்மையை நோக்கி செல்வதை ஐ.எம்.எப். ஏற்றுக்கொண்டுள்ளது .

லயன் அறைகளில் உள்ள முதியவர்களுக்கு அஸ்வெசும வழங்கப்படும்.

லயன் அறை முறையை நீக்கி கிராம முறைமை அறிமுகப்படுத்தப்படும். அதற்கு காணி வழங்கப்படும்.

# எவராவது பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய... (06 ஆம் பக்கத் தொடர்)

**கேள்வி: அண்மையில் இடம்பெற்ற அரசியல் கூட்டமொன்றில் எதிர்க்கட்சி தலைவர் சஜித்தின் பலவீனத்தின் விளைவாக அநுர குமார திஸாநாயக்க உருவானார். முன்னைய காலங்களில் அவ்வாறு இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டிருந்தீர்களே?**

பதில்: பொதுவாக எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் இரண்டு பிரதான அரசியல் முகாம்கள் இருக்கும். ஒரு சில நாடுகளில் மாத்திரம் மூன்று அணிகள் உள்ளன. அந்தவகையில் இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் இரண்டு பிரதான அரசியல் முகாம்கள் தான் இருந்து வந்தன. அதாவது ஜனாதிபதி அல்லது பிரதமர் ஒரு முகாமிலும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றொரு முகாமிலும் இருப்பர். 60 களில் மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது மறைந்த டட்லி சேனநாயக்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதேபோன்று டல்லி பிரதமராக இருந்த போது ஸ்ரீமாவோ எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். ஸ்ரீமாவோ பிரதமராக இருந்தபோது ஜே.ஆர் ஜயவர்தன எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இதேநிலை தான் சஜித் எதிர்க்கட்சித் தலைவராகும் வரை தொடர்ந்தது. மூன்றாம் நபர் ஒருவர் உருவாக இடமளிக்கப்படவில்லை. ஆனால் சஜித்தின் பலவீனம்,

திறமையின்மையின் காரணமாகவே அநுர குமார திஸாநாயக்கா உருவாகி சஜித்தை விடவும் முன்னுக்கு சென்றுள்ளார்.

**கேள்வி: உங்களது கொள்கைப் பிரகடனத்தில் தேரவாத வர்த்தக பொருளாதார முறைமை என்று பெயரிடப்பட்டுள்ளது. இற்றைவரையும் லிபரல்வாத முறை, திறந்த பொருளாதார முறை குறித்து கூறினீர்கள். அப்படியெனில் தேரவாத பொருளாதார முறை, திறந்த பொருளாதார முறை மற்றும் லிபரல்வாத முறைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?**

பதில்: தேரவாத நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ளன. இலங்கையின் அநுராதபுரத்தின் ரஜரட்ட யுகத்தில் தான் அப்பொருளாதார முறைமை அறிமுகமானது. அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் பாரிய சந்தைப் பொருளாதார முறைமை காணப்பட்டது. மேற்கு, கிழக்கு பிரதேசங்களின் வர்த்தக பரிமாற்ற நடவடிக்கைகளுக்கான இடங்களாக அவை விளங்கின.

அத்தோடு உணவு வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. தேரவாத பௌத்தத்தின் செல்வாக்கு காரணமாகவே அந்நிலை ஏற்பட்டது. மியன்மாரிலும் இந்நிலை காணப்பட்டது. சந்தைப் பொருளாதாரத்தை ஒவ்வொரு விதமாக மேற்கொள்ளலாம். அந்தப் பின்புலத்தில் தான் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பௌத்த மதத்திற்கும் வர்த்தகத்திற்கும் இடையில் தொடர்பு உள்ளது. பௌத்த மதம் தொடர்பில் எனது கொள்கைப் பிரகடனத்தில் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**கேள்வி: இத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களின் வாக்குகள் தான் தீர்மானகர வாக்குகளாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறதே?**

பதில்: அந்த மக்கள் எனக்கு வாக்களிக்கத் தீர்மானித்து தயாராகியுள்ளனர். அதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

**கேள்வி: மக்கள் தேர்தலில் புதிதாகப் பரீட்சித்துப் பார்க்கவும் புதிய மாற்றத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்ப்பதில் உள்ள தவறுகள் என்ன?**

பதில்: நாம் எப்போதும் இந்நாட்டில் பரீட்சித்து பார்த்துள்ளோமே. அதன் விளைவாகவே ஒரு போதும் முன்னேற்றமடையாதுள்ளோம். இருப்பதை விடவும் அடுத்தது நல்லதெனக் கருதி செல்கிறோம்.

அந்த அடிப்படையில் தான் இப்போது பரீட்சித்து பார்க்கவென தேசிய மக்கள் சக்திக்கு வழங்க எதிர்பார்க்கின்றனர். அப்படியென்றால் ஒரு டொலரின் விலை 500 ரூபாவுக்கு செல்வது பரவாயில்லையா? மீண்டும் அத்தகைய இடத்துக்கு செல்ல வேண்டுமா? ஏற்கனவே தெளிவான அனுபவம் உள்ளது.

மக்களிடம் வருமானமும் சொத்துக்களும் குறைவடைந்துள்ளன. அவற்றை அதிகரிக்க வேண்டும். அதனால் தான் உறுமய வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினேன். அதன் ஊடாக 20 இலட்சம் பேருக்கு இற்றை வரையும் இல்லாத காணிக்கான உரித்து கிடைக்கப்பெறும். சாதாரண மக்களின் மூலதனத்துடன் இந்த 20 இலட்சம் உரித்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**கேள்வி: பெருந்தோட்ட மக்களின் சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு நீங்கள் முன்வைத்துள்ள தீர்வுகள்?**

பதில்: பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளக் கொடுப்பனவுடன் தான் ரூ. 1700.00 ஆக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளுடன் தான் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்தும் முன்னெடுப்போம். லயன் அறைகளில் உள்ள முதியவர்களுக்கு அஸ்வெசும வழங்கப்படும். லயன் அறை முறையை நீக்கி கிராம முறைமை அறிமுகப்படுத்தப்படும். அதற்கு காணி வழங்கப்படும். பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கு பதிலாக விவசாய பொருளாதாரம் அங்கு ஆரம்பிக்கப்படும்.

**கேள்வி: 2028 இல் கடனை செலுத்தத் தொடங்கும் போது நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்படுமென பெரும்பாலான புத்திஜீவிகள் கூறுகின்றனரே?**

பதில்: 2022 இல் எமது மொத்த தேசிய உற்பத்தி 76 பில்லியன் டொலர்களாகும். அது 2023 இல் 84 டொலர்காக உயர்ந்துள்ளது. தற்போது அதைவிடவும் அதிகரித்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கும் போது கடனை செலுத்த வேண்டியது தான். அதேநேரம் நாம் எப்போதும் கையேந்துபவர்களாக இருக்க முடியாது. எம்மவர்கள் அதிக திறமை கொண்டவர்கள். வேலையில் இறங்கினால் திறமையை வெளிப்படுத்துவார்கள். இதனை வெளிநாட்டவர்கள் கூட ஒப்புக் கொண்டுள்ளனர்.

**கேள்வி: ஐ.எம்.எப். உடன் பணியாற்றும் போது ஏனையவர்களை விடவும் நீங்கள் முக்கியத்துவம் பெறுவது தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

பதில்: தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது நான் ஐ.எம்.எப். க்கு சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களாகும். அது தொடர்பில் ஐ.எம்.எப். உடன் உடன்படிக்கை கைச்சார்த்திடப்பட்டிருக்கிறது. ஆனால் ஏனையவர்கள் தற்போது நடைமுறையில் உள்ள வேலைத்திட்டங்களை மாற்றுவதாகக் குறிப்பிடுகின்றனர். உடன்படிக்கையில் இருந்து வெளியேறினால் நிதியுதவி வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுவிடும். அடுத்த காலாண்டுக்கு நாம் 300 மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுவது தொடர்பில் திருப்தியடைந்தால் தான் அந்நிதி கிடைக்கப்பெறும். தற்போதைய வேலைத்திட்டங்களை மாற்றுவதாகக் குறிப்பிட்டால் இந்நிதியை வழங்க முடியாது என்பர். அதனால் புதிதாகப் பேச்சுவார்த்தை நடாத்தி இணக்கப்பாட்டை எட்ட வேண்டும். அதற்காக ஆறு முதல் ஒரு வருடம் வரை காலம் செல்லலாம். அப்படியென்றால் இக்காலப்பகுதிக்கு நாட்டுக்கு தேவையான பணத்தை எங்கிருந்து பெறுவது என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

**கேள்வி: ஏனைய அபேட்சகர்கள் வரிகளைக் குறைப்பதாகக் குறிப்பிடுகின்றனர். வரிகள் தொடர்பில் உங்களது வேலைத்திட்டங்கள்?**

பதில்: வரி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படுமாயின் பிரச்சினைகள் ஏற்படும். வரிகளை ஒரு பகுதியில் குறைத்தால் மறுபகுதியில் அதிகரிக்க வேண்டிவரும். வற் வரியைக் குறைத்தால் பல வரிகளை அதிகரிக்க வேண்டும். வருமானத்தை அதிகரிக்காது வரியை குறைக்க முடியுமாயின் ஐ.எம்.எப். உடன் பேசலாம்.

உதாரணமாக அடுத்தாண்டு நாம் 5117 பில்லியன் ரூபாவை வருமானமாகத் திரட்ட எதிர்பார்த்துள்ளோம். எமது வரவு செலவுத்திட்டத்தில் 1700 பில்லியன் ரூபா வித்தியாசமுள்ளது. அதனால் சந்தையில் எங்களால் கடன் பெறலாம். மாலிமாவ வரியை குறைப்பதன் விளைவாக 4900 பில்லியன் ரூபா வித்தியாசம் ஏற்படும். வரிகளைக் குறைக்கும் போது வருமானத்திற்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கும். ஆனால் அடுத்த வருடத்திற்கு வேறு வழியில்லை. வரிகளைக் குறைத்து எதுவும் செய்ய முடியாது. மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதே இதற்கு ஒரே வழியாகும். அதனால் எங்களது ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டும்.

**கேள்வி: காணாமல் போனவர்கள் அலுவலக சட்டத்தின் ஊடாக அரசாங்கம் இராணுவத்தை காட்டிக் கொடுப்பதாக சிலர் குறிப்பிடுகின்றனரே?**

பதில்: நாம் உண்மை கண்டறியும் ஆணைக் குழுவை அமைத்துள்ளோம். அங்கு காட்டிக் கொடுக்க முடியாது. சாட்சியங்கள் இருந்தால் வழக்கு தாக்கல் செய்ய முடியும். நாம் காரணங்களைத் தேடுவதற்காக பல ஆணைக்குழுக்களை அமைத்துள்ளோம். 2009இல் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்றைய ஐ.நா. செயலாளர் நாயகம் பங்கிமூனுடன் இணக்கம் கண்ட உடன்படிக்கையையே நான் நடைமுறைப்படுத்தினேன்.

**கேள்வி: இலங்கையில் அண்மையில் ஏற்பட்டது போன்ற அரகலய போராட்டம் பங்களாதேசத்திலும் ஏற்பட்டு இன்னும் தொடர்கிறது. உலக அங்கீகாரம் பெற்ற பொருளாதார நிபுணர் பங்களாதேசத்தின் ஆட்சியைப் பொறுப்பெடுத்துள்ளார். என்றாலும் இவ்விடயத்தில் இலங்கைக்கும் பங்களாதேசத்துக்கும் இடையில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றனவே?**

பதில்: நான் பிரதமர் பதவியை ஏற்று பதில் ஜனாதிபதியாக வேலைத்திட்டங்களை முன்னெடுத்தேன். பாராளுமன்றம் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வற்கு முன்னரான வாரத்திலேயே நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்தினேன்.

ஆனால் பங்களாதேசத்தில் பிரதமர் வெளியேறிய பின்னர் தேர்தல் நடாத்த வேண்டும் என்று கோரினர். அதனால் பாராளுமன்றத்தைக் கலைத்தனர். இன்று தேர்தலை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் பாரிய நெருக்கடிக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பங்களாதேசத்தைப் போன்று இங்கும் சஜித் பிரேமதாச போன்றோர் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடாத்தும்படி கோரினர். அப்படி நடாத்தி இருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை இப்போது புரிந்து கொள்ளுங்கள்.

முன்னாள் பிரதமர் ஹசீனா வெளியேறியதும் வேறு எவராவது ஆட்சியைப் பொறுப்பேற்று அதன் பின்னர் மாற்றங்களை செய்திருக்கலாம். அதனை அவர்கள் செய்யவில்லை. அதன் விளைவாக படுகொலைகள், தீவைத்தல்கள் இடம்பெறுகின்றன. இந்நிலை நீடிக்குமாயின் முதலீட்டாளர்களும் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்படும். இவ்வாறான நிலை ஏற்படுவதையே அன்று நான் தவிர்த்தேன். அதற்காக என்னை தூற்றுகிறார்கள் போலும். ஆனால் நான் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தேன்.

**கேள்வி: தமிழரசு கட்சியின் தீர்மானமும் வடக்கின் பொதுவேட்பாளரும் உங்களுக்கு சவால் எனக் கருதுகிறீர்களா?**

பதில்: இல்லை. அவர் எனக்கு சவால் இல்லை. அத்தோடு வேறு எவருக்கும் அவர் சவால் இல்லை என்றே நான் கருதுகிறேன்.

**கேள்வி: எதிர்க்கட்சியில் இருந்து உங்களது அணிக்கு சேர்க்கப்படுகின்றவர்களுக்கு மதுபானக்கடை அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்) வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறதே?**

பதில்: நான் எவருக்கும் அத்தகைய லைசன்ஸ் வழங்கவில்லை. எமது அமைச்சு மதுக்கடைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை 10,00050,000 மில்லியன் ரூபாக்களுக்கு விற்பனை செய்கின்றது.

இதனை அடுத்தவருடம் மேலும் அதிகரிக்க உள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வரும் பாராளுமன்ற உறுப்பினர்களை மேலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. நாம் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைப்போம்.

**கேள்வி: தேசிய மக்கள் சக்தியினர் குறிப்பிடுவது போன்று திருடர்களைப் பிடிப்பது ஒன்று, திருடப்பட்டவற்றை மீண்டும் அறவிட்டுக் கொள்வது மற்றொன்று. இவற்றை மேற்கொண்டு வெளிநாடுகளில் தொழில்புரிபவர்கள் மூலம் கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணியையும் பயன்படுத்தி வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை நீக்க முடியாதா?**

பதில்: அவர்கள் எந்த உலகில் இருக்கிறார்கள். அரச நிதியை சட்டத்துக்கும் ஒழுங்குமுறைக்கும் அப்பால் பெற்றுள்ளவர்களை அடையாளம் கண்டு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு போட்டால் மாத்திரம் போதாது. புதிய சட்டத்தின் கீழ் செயற்பட வேண்டும்.

இவ்வாறான நிதியை மீளப்பெறுவதற்கு எந்தவொரு நாட்டிலும் குறைந்தது எட்டு, பத்து வருடங்களாவது செல்லும். அது வரைக்கும் காத்திருக்க முடியுமா? அடுத்தது எவ்வளவு நிதி என்பதைப் பார்க்க வேண்டும். நிதியின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

மேலும் வெளிநாடுகளில் 20 இலட்சம் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்கள் ஊடாக அப்படி எவ்வளவு தான் கிடைக்கப்பெறப் போகிறது.

மாதத்திற்கு 100 டொலர்கள் கூட அனுப்ப முடியாதவர்கள் தான் அதிகளவில் உள்ளனர். அப்படியானவர்கள் 10 டொலர்களையே அவர்கள் அனுப்புவர்.

திருடர்களைப் பிடிக்கவென ஆனந்த விஜயபாலவை நியமித்தார்கள். கோவைகள் 400 இருந்தும் 15 வழக்குகள் தான் தாக்கல் செய்யப்பட்டன. எத்தனை பேர் சிறைத்தண்டனை பெற்றார்கள் என்பதை நானறியேன். அவ்வாறான பணிக்கு சட்டத்தரணியற்ற ஒருவரை எந்தவொரு நாடும் நியமிக்குமா? இல்லவே இல்லை.

**கேள்வி: புதிய அரசியமைப்பு குறித்து கலந்துரையாடப்படுவது தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

பதில்: புதிய பாராளுமன்றத்தில் ஒரு வருடத்திற்குள் அரசிலமைப்பு நிறைவேற்றப்படும் என்று நான் குறிப்பிட்டுளேன். தற்போதைய அரசியலமைப்பில் குறைபாடுகள் இருந்தாலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லலாம். இது எமக்கு முக்கிய பிரச்சினை அல்ல.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே முக்கிய விடயமாகும். மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன ஒய்வு பெற்ற பின்னர் இந்த ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகக்கூறி ஜனாதிபதியான எவரும் இம்முறைமையை நீக்கவில்லை.

**கேள்வி: முன்னர் நீங்களும் சஜித்தும் ஒரே அணியில் இருந்தீர்கள். தற்போது சஜித்துடன் இணைய முடியாதது ஏன்?**

பதில்: அன்று முதல் அவருக்கு அழைப்பு விடுத்தேன். வரவில்லை. தற்போது அவருக்கு ஜி.எல். பீரிஸ், நாலக்க கொடஹேவா போன்றோர் உள்ளனர். அனைத்தும் மாற்றமடைந்துள்ளது. இது புதிய அணி.

**கேள்வி: இதற்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்ட போது கைப்பட்டி தருவதாகவும் கார்களில் பயணிக்க வாய்ப்பு கிடைக்கும் என்றும் குறிப்பிட்ட நீங்கள், இத்தேர்தலில் தோல்விற்றால் சமையல் எரிவாயு கிடைக்காது போகும் என்கிறீர்களே?**

பதில்: அன்று நான் கூறியவற்றை செய்யாததன் விளைவாகவே பொருளாதாரம் இந்நிலையை அடைந்தது. நான் கூறியவற்றை மேற்கொண்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிராது. அன்று முதல் நாம் ஏற்றுமதி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி: உங்களுக்கும் அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையில் ஒப்பந்தம் (டீல்) இருப்பதாக சஜித் கூறுகிறாரே?**

பதில்: அவ்வாறு கூறுகின்ற ஒருவரை ஜனாதிபதியாக்க முடியுமா? இத்தேர்தலைக் கேலிக்குரியதாகக் கருதுவதாயின் ஏன் தேர்தலை நடாத்த வேண்டும்.

**கேள்வி: உங்களுக்கு சஜித்துடன் தனிப்பட்ட கோபம் உள்ளதா?**

பதில்: நான் தான் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவை நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இருந்து பாதுகாத்தேன். அவர் படுகொலை செய்யப்பட்ட சமயம் கூட அந்த இடத்தில் இருந்தேன். நான் எப்போதும் அவரைப் பாதுகாத்தேன். ஆனால் மகன் (சஜித்) தந்தையிடம் கற்றுக்கொள்ளவில்லை.

# இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரானவர்கள் யார்?

இலங்கையில் மத்திய அரசாங்கத்தின் அதிகார பகிர்வை முன்நிலைப்படுத்திய மாகாண சபை நிருவாகம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு 37 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

வடக்கு, கிழக்கில் உரிமைக்காக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் பிரதிபலனாக மாகாண சபை நிருவாக முறை 13ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில், ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களின் போராட்டம் மழுங்கடிக்கப்பட்ட போதும், தமிழர்களின் உரிமைக்கான குரல்கள் அரசியல் ரீதியாக தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

அதன் ஒரு வடிவம்தான் தற்போதைய தமிழ் பொது வேட்பாளர், இருந்தும் இலங்கைத் தமிழர்களின் விசேடமாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைக்கும் சமத்துவ நிலைக்கும் நீதிகோரி, போராடும் தமிழ்த் தரப்பு இன்னும் அதன் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இதற்குக் காரணம் தொலைநோக்கில்லாத தமிழ் பேசும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளேயாகும் என சிலர் குறை கூறுகின்றனர். உண்மையிலேயே இந்த யதார்த்த நிலையை புரிந்து கொள்வது முக்கியமாகும்.

தமிழ்த் தரப்பு இன்றும் போராடுவதாக ஒரு தரப்பினர் கூறுகின்றனர். உலக நாடுகளில் தயவைப் பெறுவதற்கான போராட்டக் குரல் இது என்று சிலர் கூறுகின்றனர். இது உண்மையா? இதற்காகவே தற்பொழுது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் களத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் , அதன் மூலம் உலகுக்கு இலங்கைத் தமிழர்களின் நிலையை எடுத்துக் கூறப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தம் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்டதாகும். 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி அப்போதைய இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி இதற்காக இலங்கை வந்தார். நாட்டின் ஜனாதிபதியாக அப்போது ஜே.ஆர். ஜயவர்தன இருந்தார். இந்த இரு தலைவர்களுக்கும் இடையில் இலங்கை இந்திய சமாதான (IndoSri Lanka Peace Accord) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்த உடன்படிக்கை (13 வது திருத்தம்) 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.



உடன்படிக்கை கைச்சாத்திட்ட சமயத்தில் குறிப்பிடத்தக்க சர்வதேசத்தின் கவனத்திற்கு உள்ளான சம்பவம் இடம்பெற்றதை மறந்துவிட முடியாது. கொழும்புக்கு வருகை தந்திருந்த ரஜீவ் காந்திக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு அரச அணிவகுப்பு இடம்பெற்றது.

இதன்போது அணிவகுப்பில் இடம்பெற்றிருந்த கடற்படை வீரரான விஜித்த ரோஹண டீ சில்வா என்பவர் ரஜீவ் காந்தி மீது துப்பாக்கியால் தாக்கினார். இந்த கடற்படை வீரரின் உடல் அசைவை ரஜீவ் காந்தி அவதானித்து அதற்கமைவாக செயல்பட்டார்.

இதனால் அவரது தலையில் விழவிருந்த தாக்குதல், மாறி தோளில் விழுந்தது. உடனடியாக குறிப்பிட்ட கடற்பரை வீரர் பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டார். இவர் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில் தாம் திட்டமிட்டபடி ரஜீவ் காந்தியை கொல்ல நினைத்திருந்தால் அவரின் தலையின் மீதே துப்பாக்கியால் தாக்கியிருப்பேன் என்று விசாரணையின் போது தெரிவித்தார்.

முழு அளவிலான தாக்குதலை கட்டுப்படுத்தி அவரின் தலைக்கு பதிலாக தோளில் தாக்குதல் நடத்தியதை விசாரணையின் போது நியாயப்படுத்தினார். இதனைத் தொடரந்து 6 வருட கால சிறைத்தண்டனை இவருக்கு விதிக்கப்பட்டது.

நாட்டுப்பற்று மிக்க அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாச இந்த சிறைத்தண்டனையை இரண்டு வருடங்களுக்கு மட்டுப்படுத்தி ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அவரை விடுவித்தார்.

பின்னர் இவர் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிங்கள உறுமய கட்சியின் கீழ் போட்டியிட்டார். இவருக்கு மறைமுகமான ஆதரவை ரணசிங்க பிரேமதாச வழங்கியதான குற்றச்சாட்டும் உண்டு. தேர்தலில் வெற்றிபெறத் தவறியபோதிலும் ஜோதிடக் கணிப்பில் வல்லவராக இவர் திகழ முயன்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரமேதாசவின் ஆதரவு இந்த உடன்படிக்கைக்கு எப்படி அமைந்திருந்தது என்பதை உணர்ந்துகொள்ள முடியும். இதுமாத்திரமன்றி, சமாதான உடன்படிக்கையையடுத்து இந்திய சமாதானப்படை வடக்கில் வந்திறங்கியது.

இந்த படையை வெளியேற்றுவதில் ஜனாதிபதி ரணசிங்க பிரமேதாச முக்கிய பங்கு வகித்தார். இவரது பங்களிப்பு இதில் எந்தளவுக்கு அமைந்திருந்தது என்பதை அந்தக் காலப்பகுதியில் இலங்கையின் இந்தியத் தூதுவராக இருந்த Lakhan Mehrotra நன்கறிவார்.

இவர் எழுதிய My day in Sri Lanka என்ற நூலில் குறிப்பிட்டுள்ள விடயத்தையும் கவனத்தில் கொள்வது சிறந்தது. இந்தியப் படை இங்கிருந்து வெளியேறாவிட்டால் தாம் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக தெரிவித்தாக அவர் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பிரேமதாசவின் பலவந்தத்திற்கு அமைவாக, இந்திய சமாதானப்படை 1989ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளியேற ஆரம்பித்தது.

இவ்வாறான பின்னணியின் கீழ் தான் மாகாண சபை இலங்கை பாராளுமன்றத்தில் 1987ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி சட்டமாக்கப்பட்டது. 13ஆம் திருத்த சட்டத்தின் கீழ் தமிழும் சிங்களமும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டன. ஆங்கிலத்திற்கு இணை மொழி அந்தஸ்தும் வழங்கப்பட்டது.

முதலாவது வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கான தேர்தல் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது.

இதில் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி 41 இடங்களையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 17 இடங்களையும் கைப்பற்றியது.

இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு தனியான வரலாறு உண்டு. கடும் இந்திய எதிர்ப்புக்கு மத்தியிலேயே இதை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன கைச்சாத்திட்டார்.

இந்திய பிரதமர் ரஜீவ்காந்தி உடன்படிக்கைக்காக இலங்கை வரப்போகின்றார் என்ற செய்தியைக் கேட்டு தலைநகர் கொழும்பில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்தியா தமிழர்களை இந்த உடன்படிக்கை மூலம் வஞ்சித்துவிட்டதாகவே பலரும் கருத்துத் தெரிவித்தனர். இந்த கருத்து நியாயமானதாகவே அப்பொழுது கருதப்பட்டது.

உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் பல்வேறு சுமைகளை வடக்கு – கிழக்கு மக்கள் அனுபவித்தனர். வடக்குப் பகுதியில் இந்தியா உணவுப் பொதிகளை விமானம் மூலம் போட்டதையும் குறிப்பிட வேண்டும்.

தொடர்ச்சியாக பேரினவாத சக்திகளின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த மலையக மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பேரினவாத சக்திகளை திருப்பித் தாக்கிய சம்பவமும் அன்று தான் இடம்பெற்றது.

ஹட்டனில் மலையக மக்களுக்கும் பேரினவாத சக்திகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றது. தம்மை தாக்கிய பேரினவாதிகளை இவர்கள் திருப்பி தாக்கினார்கள். இந்த காலப்பகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் இளைஞர் அணி தலைவராக மறைந்த முன்னாள் அமைச்சர் எஸ்.சந்திரசேகர் இருந்தார்.

தாக்குதல் உச்ச கட்டத்தை எட்டியதும் ஊடரங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அப்போதைய அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான சௌமியமூர்த்தி தொண்டமான் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டார்.

இரவு பகலாக அவர் செயற்பட்டதை என்னால் ஊகிக்க முடிந்தது. சம்பவம் நடந்த மறுதினம் நள்ளிரவு 12 மணியளவில் பேரினவாதிகளினால் தாக்குதல் நடைபெறுவதாக கிடைத்த தகவலையடுத்து செய்திக்காக அவரிடம் தொடர்பு கொண்டேன். அதற்கான உடனடி நடவடிக்கையை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவூடாக மேற்கொண்டதையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சௌமியமூர்த்தி தொண்டமான் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமான இராஜதந்திர அரசியல்வாதியாக செயல்பட்டவர். அவர் தமது மக்களுக்காக முன்னெடுத்த பல நடவடிக்கைகளை இன்றும் நினைவுகூரத்தக்கது.

பேரினவாத அரசியல் கட்சிகள் அவர்களின் போக்கு தன்மைகளை நன்கு அறிந்தவர் அவர். இவரிடம் இலங்கை – இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் ஏற்பட்ட மாகாண சபை தொடர்பாக ஒருமுறை அவரிடம் கருத்துக் கேட்டேன்.

'சிங்கள அரசியல்வாதிகள் வழங்க முன்வருவதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது எதிர்பார்ப்பு 10 ரூபாவாக இருக்கலாம். ஆனால் அதற்கு பதிலாக 5 ரூபாவை அவர்கள் கொடுத்தால். அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலிருந்து தான் படிப்படியாக தமது இலட்சியத்தை அல்லது தேவையை அணுக வேண்டும். பத்து ரூபாவை தா என்று அடம்பிடித்தால் அவர்களிடமிருந்து ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது.இவ்வாறு தான் மலையக மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடிந்ததையும் அவர் கூறினார்.

அதனால் தான் மாகாண சபையை ஏற்றுக் கொண்டு படிப்படியாக நமது இலக்கை நோக்கி முன்னேறுவதே சிறந்தது என்பது எனது கருத்தாகும் என்று சௌமியமூர்த்தி தொண்டமான் என்னிடம் அப்போது சுட்டிக்காட்டினார்.

சௌமியமூர்த்தி தொண்டமான் இலங்கையின் வரலாற்றில் அரசியல் ரீதியில் அவரும் அவர் சார்ந்த மக்களும் அனுபவித்த சிரமங்கள் பல. 1913ஆம் ஆண்டு பிறந்தவர் தொண்டமான். 1999ஆம் ஆண்டுவரையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவராக இருந்தது மாத்திரமல்ல 21 வருடங்கள் அமைச்சராகவும் இருந்தார். இந்தியாவின் புதுக்கோட்டையில் செல்வாக்குமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்.

பெற்றோரின் வருகையினால் இலங்கையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்திய வம்சாவளி மக்களும் இலங்கை அரசாங்கங்களினால் சோல்பரி, டோனமூர் போன்ற ஆணைக்குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரஜாவுரிமை அந்தஸ்த்தை இலங்கை அரசாங்கம் இல்லாது செய்தது.

(தொடரும்...)

ஏ.கே.எம்.பிள்ளை



மக்கள் நம்பும் வகையில் தெளிவான, பிரச்சினைகளற்ற, நடைமுறைக் கொள்கைத் திட்டத்தையும் தொலைநோக்குப் பார்வையையும் முன்வைத்த ஒரே கூட்டணி எங்கள் கூட்டணி மாத்திரமேயாகும்

சர்வதேச நாணய நிதியத்துடன் உடனடி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்.

# மிகவும் பரந்தளவிலான கூட்டணி எங்களுடையது

## ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுடன் மேற்கொண்ட நேர்காணல்.

**இம்மாதம் 22ம் திகதி இந்நாட்டின் புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நீங்களா?**

ஆம். இந்த தேர்தலில் நான் அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெறுவேன் என்பது மிகத் தெளிவான விடயமாகும். இலங்கை முழுவதிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் ஒன்று திரண்டிருக்கின்றார்கள். இன அடிப்படையில் எடுத்துக் கொண்டால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும், மத அடிப்படையில் எடுத்துக் கொண்டால் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாம், கிறித்தவர்கள் என இந்நாட்டில் வாழும் பன்முகத்தன்மை கொண்ட மக்களின் பொதுவான ஆதரவு எனக்கே உள்ளது. வேறு எந்த வேட்பாளருக்கும் இவ்வாறான மிகப் பிரமாண்டமான ஆதரவு நாடு முழுவதையும் உள்ளடக்கியவாறு கிடைக்கவில்லை.

அதேபோன்று எனது தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணியே இந்த ஜனாதிபதித் தேர்தலில் பரந்தளவிலான ஜனநாயகக் கூட்டணியாகும். மற்ற இடங்களில் புனிதமற்ற கூட்டணிகள் அல்லது சர்வாதிகாரக் கூட்டணிகளையே காண்கிறோம். அதேபோன்று மக்கள் நம்பும் வகையில் தெளிவான, பிரச்சினைகளற்ற, நடைமுறைக் கொள்கைத் திட்டத்தையும் தொலைநோக்குப் பார்வையையும் முன்வைத்த ஒரே கூட்டணி எங்கள் கூட்டணி மாத்திரமேயாகும். இந்த அனைத்து விடயங்களுக்கும் அமைய வெற்றிக்கான வாய்ப்பு ஏற்கனவே எங்களுக்கு நிச்சயமாகியுள்ளது.

**தற்போது தேர்தல் களத்தில் வெற்றி பெற முடியும் என்று எந்தளவான நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள்?**

எனது வெற்றி தொடர்பில் எந்த சந்தேகமும் இல்லை. 100 சதவீதம் நம்பிக்கை உள்ளது. எங்களின் பிரசாரக் கூட்டங்களுக்கே அதிகமான மக்கள் வருகின்றார்கள். அதேபோன்று, இதுவரை மற்ற கட்சிகளுக்கு வாக்களித்த பொது மக்கள் தற்போது முழு கிராமமாக எங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். தீவிரவாதத்துக்கும், ஊழல் அரசியலுக்கும் பலியாகாத, நாட்டின் நல்லிணக்கத்தையும், அமைதியையும், ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய ஒரு தலைவருக்காக நம் நாட்டின் மீது அக்கறை கொண்ட சர்வதேச சமூகமும் காத்திருப்பதைக் காண்கிறேன். இந்த அனைத்து உண்மைகளின்படி, எங்கள் நம்பிக்கை அதிகரித்துள்ளது.

**ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு சில தினங்களே உள்ளன. 22ஆம் திகதியின் பின்னர் மக்களை வெற்றிபெறச் செய்யும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் நீங்கள் எவ்வாறு அந்தப் பொறுப்பைச் செய்யப் போகிறீர்கள்?**

முதலில் எனது வெற்றியின் பின்னர் தற்போது நிலையற்ற நிலையிலுள்ள நாட்டை நிலையானதாக ஆக்குவதற்கு நான் நடவடிக்கை மேற்கொள்வேன். எந்தவித வன்முறைகளுக்கோ, அரசியல் பழிவாங்கல்களுக்கோ இடமளிக்க மாட்டேன். தேசிய பாதுகாப்பை கூடியளவில் உறுதிப்படுத்துவேன். எனக்குக் கிடைத்துள்ள மக்கள் ஆணை பாராளுமன்றத்தினுள்ளும் இருக்க வேண்டும். எனவே நான் உடனடியாகவே இப்போதைய பாராளுமன்றத்தைக் கலைப்பேன். அதுவரைக்கும் தற்காலிய காபந்து அரசாங்கத்தை அமைப்பேன்.

எமது அரசாங்கம் முதலில் மேற்கொள்வது தற்போது கடன் சுமைகளாலும், வரிச் சுமைகளாலும் வாழ்க்கைச் சுமைகளாலும் நசுங்கிப் போயுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதேயாகும். அதேபோன்று எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்களைச் செயற்படுத்துவதற்காக அரசியல் மற்றும் நிருவாகக் குழுக்களை நான் உடனடியாகவே நியமிப்பேன்.

தற்போது சிதைவடைந்து போயுள்ள சர்வதேச உறவுகளைத் துரிதமாக மீளக் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொள்வேன். சர்வதேச நாணய நிதியத்துடன் உடனடி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்.

**உங்களைச் சுற்றி பலமான குழுவினர் உள்ளதாக நீங்கள் கூறுகின்றீர்கள். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தக் குழுவினால் முடியுமா?**

ஆம். எமது குழு நிபுணத்துவமிக்க குழுவாகும். அதேபோன்று திறமையான மற்றும் நடைமுறைக் குழுவாகும். ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாத குழு. மற்றும் கடந்த காலத்தில் பணியாற்றிக் காட்டிய குழுவாகும். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் நான் அமைச்சுப் பொறுப்புக்களை வழங்குவேன். எரிசக்தி, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், நிதி, பொது நிர்வாகம், பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் துறை, வெளியுறவுக் கொள்கை போன்ற அனைத்து துறைகளையும் வழிநடத்தக் கூடிய இந்த நாடும் உலகமும் நம்பக்கூடிய ஒரு குழு என்னிடம் உள்ளது. இவர்கள் சலுகைகளுக்காக நற் பெயரைக் காட்டிக் கொடுத்தவர்கள் அல்ல. அத்தகைய குழுவின் தலைவராக இருப்பதில் நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன்.

எந்தவித வன்முறைகளுக்கோ, அரசியல் பழிவாங்கல்களுக்கோ இடமளிக்க மாட்டேன்.

**ரணில், சஜித் இணைவது தொடர்பில் பேசப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அல்லது பின்னர் ரணில் சஜித் இணைவைக் காண முடியுமா?**

இந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஒரு தீர்க்கமான காரணி அல்ல என்பதை ரணில் விக்கிரமசிங்க இப்போது உணர்ந்துள்ளார். அதனால்தான், எங்களால் வெற்றி பெற முடியாது, அதனால்தான் இரண்டு தரப்பும் ஒன்று சேர வேண்டும் என்று பிரசாரம் செய்கிறார்கள். நாங்கள் வெற்றி பெறுகிறோம் என்றே நான் சொல்கிறேன். எனவே, வெற்றிபெறும் எங்களுடன் இணையுமாறு கேட்டுக்கொள்கிறோம். நாளுக்கு நாள் பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் எங்களுடைய பயணத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

**ரணில், சஜித் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதே சிறந்த விடயம் என அண்மையில் கட்சியில் இருந்து விலகிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் கூட தெரிவித்திருந்தாரே?**

**அந்த வாய்ப்பை நானா இல்லாமல் செய்தேன்? ரணில் விக்கிரமசிங்க எத்தனை ஜனாதிபதி தேர்தல்களில் தோல்வியடைந்தார்? எத்தனை ஜனாதிபதி தேர்தல்களிலிருந்து ஒதுங்கினார்?** அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியினர் வேறு ஒரு தலைவரைத் தேடினர்கள். தேர்தலில் வெல்லக்கூடிய தலைவரைத் தேடினார்கள். அவ்வேளையில் ரணில் விக்கிரமசிங்க செய்தது, ஜனாதிபதித் தேர்தலில் கட்சியைச் சேர்ந்த வேறு எவரும் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பை தடுத்ததேயாகும். ரணில் விக்கிரமசிங்க ஒரு உண்மையான ஜனநாயகத் தலைவராக இருந்திருந்தால் கட்சியின் அடுத்த இரண்டாவது அணியை உருவாக்கியிருக்க முடியும். புதிய தலைவர்கள் உருவாகும்போது அவர்களுக்கு கைகொடுக்க வேண்டும். இப்போது சஜித் பிரேமதாசவுக்கு எதிராக அவர் செய்யக்கூடிய அனைத்து மோசமான செயல்களையும் செய்ய அவர் முன்வந்துள்ளார்.

**நீங்கள் வெற்றி பெற்றால் புதிய ஆட்சி அமைக்க மற்றைய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுமா?**

தற்போதே எங்கள் கூட்டணியை சுற்றி பல கட்சிகள் இணைந்திருக்கின்றன. எங்களின் தேர்தல் பிரகடனத்தை ஏற்கும் எவருக்கும் நாங்கள் கதவுகளை மூட மாட்டோம். எவ்வாறாயினும் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்த நாட்டு மக்கள் நல்லவர்களை, புத்திசாலிகளை, திறமையானவர்களை, ஊழல் செய்யாதவர்களை என அனைத்துக் கட்சிகளிலிருந்தும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்பவார்கள் என்று நான் நம்புகிறேன். அப்போது அவ்வாறான சிறந்தவர்களைத் தெரிவு செய்து வலுவான ஆட்சி அமைக்க நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

**அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உங்கள் அரசு ஆட்சிக்கு வந்தால் சம்பளப் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வை வழங்குவீர்கள்?**

அரசாங்கம் சம்பள அதிகரிப்பு குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அது மிகத் தெளிவான ஒரு தேர்தல் இலஞ்சமாகும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றும் வேலையையே இப்போது செய்திருகின்றார்.

தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வசதிகள் மற்றும் சலுகைகள் எதனையும் நாம் குறைக்க மாட்டோம்.

எனவே, அரசின் முன்மொழிவுகளை நாம் பெரிதாகக் கருதவில்லை. அரசு ஊழியர்கள் உட்பட அனைத்து ஊதியம் பெறுபவர்களின் வருமானத்தை மிக அதிகமாக உயர்த்துவோம் என நாம் உறுதியளித்துள்ளோம். இதைச் செய்ய பணம் எங்கே என்று பலர் கேட்கிறார்கள். தேசிய வருமானத்தை அதிகரிக்க சில புரட்சிகரமான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

இதுவரை மற்ற கட்சிகளுக்கு வாக்களித்த பொதுமக்கள் தற்போது முழு கிராமமாக எங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

**தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் நீங்கள் மக்களுக்கு வழங்கும் நிவாரணங்கள் என்ன?**

தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வசதிகள் மற்றும் சலுகைகள் எதனையும் நாம் குறைக்க மாட்டோம். அதேபோன்று உடனடியாக எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம் போன்றவற்றைக் குறைத்து, அரசாங்கத்தின் ஆரம்பத்திலேயே மக்களுக்கு நிறைய நிவாரணங்களை வழங்குவோம். உற்பத்திப் பொருளாதாரத்திற்கு மக்களின் பங்களிப்பை அதிகளவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**வீழ்ந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணி வரவிருக்கும் அரசாங்கத்திற்கு உள்ளது. உங்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தை கூறுங்களேன்?**

நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல், கடன் மறுசீரமைப்பு திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வோம்.

ஆனால் கடன் சுமையை பொதுமக்கள் மீது சுமத்துவதற்கு நாம் விரும்பவில்லை. நாட்டின் தேசிய வருமானத்தை மூன்று மடங்காக உயர்த்தி டிஜிட்டல் புரட்சியை ஆரம்பிப்போம்.

ஒவ்வொரு பிரதேச செயலகத்தையும் இலக்கு வைத்து அபிவிருத்தி வலயங்களை உருவாக்குவோம். அனைத்து துறைகளிலும் காணப்படும் ஊழல், மோசடி, இலஞ்சம் ஆகியவற்றை முழுமையாக ஒழிக்க நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். உழைக்கும் நாட்டை உருவாக்குவோம். செய்த வேலைகளின் சமூக பொருளாதார பலன்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறும் நாடு.

**இன்னமும் கடனைச் செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. 2028ஆம் ஆண்டு கடனைச் செலுத்தத் தொடங்கிய பின்னர் இதனை விட சிரமங்களை அனுபவிக்க நேரிடும் என எதிர்க்கட்சிகள் எப்போதும் கூறி வந்தன. உங்கள் அரசாங்கத்தின் கீழ் இதை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப் போகிறீர்கள்?**

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, நாங்கள் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வோம். மக்களைச் சிரமங்களுக்குள் உள்ளாக்காமல் சிக்கனம் போன்ற பொருளாதார உத்திகளை கடைப்பிடிப்பது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம். இலங்கையின் பொருளாதாரத்தை கடனைச் செலுத்தும் வாய்ப்புடைய பொருளாதாரமாக துரிதமாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். 2028ஆம் ஆண்டில், நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு இடமளிக்காமல் இந்தக் கடன் தவணைகளை செலுத்தும் திறனைப் பெற்றுக் கொள்வோம்.

**மக்கள் மீது சுமையில்லாத வகையில் இதை எவ்வாறு செய்ய முடியும்?**

தேசியக் கடனின் சுமை முழுவதுமாக மக்கள் மீது சுமத்தப்பட்டு, ஆட்சியாளர்கள் பொறுப்பில் இருந்து விடுபடுவதுதான் இப்போது செய்யப்படுகின்றது. வரிச் சுமை மற்றும் கடன் சுமையால் மக்கள் பாதிக்கப்பட்டது போதும். எமது அரச வருவாய்த் திட்டம் சமூக ஜனநாயகப் பொருளாதாரத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்

எங்களின் தேர்தல் பிரகடனத்தை ஏற்கும் எவருக்கும் நாங்கள் கதவுகளை மூட மாட்டோம்.

**வரிச்சுமையைக் குறைக்க நிவாரணங்களை வழங்க தயாரா?**

ஆம், எமது தேசிய வருமானத் திட்டம் முற்றிலும் நியாயமான வரிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. நியாயமற்ற வரிகளை விதித்து மக்களின் கழுத்தை நெரிக்க நாங்கள் தயாராக இல்லை.

நியாயமற்ற வரிகளை விதித்து மக்களின் கழுத்தை நெரிக்க நாங்கள் தயாராக இல்லை.

**சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்ந்தாலும் அதன் விதிமுறைகளை மாற்ற உங்கள் அரசாங்கம் தயார். சர்வதேச நிபந்தனைகளை மாற்றுவது நாட்டையே பின்னோக்கி திரும்பச் செய்வதுதானே?**

சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்கவில்லை. வருமானத்துக்குக் குறைவாகச் செலவுகளை வைத்துக் கொள்ளுங்கள் என்றே அவர்கள் கூறுகின்றார்கள். அது ஒரு மோசமான விடயம் அல்ல. ஆனால் தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் சொல்லியுள்ளதாகக் கூறி ஐ.எம்.எப் கூறாத பல விடயங்களை செயல்படுத்தியுள்ளது. இந்த குழப்பம் தீர்க்கப்பட வேண்டும்.

**தேசிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்டுள்ள விஞ்ஞாபனத்திற்கு அமைய செயற்பட்டால் தற்போதுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் முற்றாக பாதிக்கப்படும் என கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

தேசிய மக்கள் சக்தியானது எவ்வித நடைமுறை முக்கியத்துவம் இல்லாத பல திட்டங்களை முன் வைத்துள்ளது. எனவே அதைப் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை.

**தற்போது, தேசிய மக்கள் சக்தி தேர்தல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அவர்கள் உங்கள் தேர்தல் பணிகளுக்குச் சவாலா?**

அவ ர்கள் எனக்கு சவாலாக இ ல்லை. அவர்கள் 3 சதவீத கட்சியில் இருந்து சிறிதளவு வளர்ந்துள்ளனர். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் பலத்தை ஒரு அங்குலம் கூட நெருங்குவதற்கான வாய்ப்பு அவர்களிடம் இல்லை.

**தேசிய மக்கள் சக்தி அமைச்சர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைக்க உள்ளதாம். இதை நடைமுறையில் செய்ய முடியுமா? உங்கள் அரசின் இதன் எண்ணிக்கை எவ்வாறு இருக்கும்?**

அமைச்சரவை அமைக்க தேசிய மக்கள் சக்தி முதலில் ஆட்சிக்கு வர வேண்டும். அதற்கான எந்த சாத்தியமும் இல்லை. எனவே, அவர்களின் அமைச்சரவை பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. ஆனால் ஒரு நாட்டின் அமைச்சரவை பெரிதாய் இருக்க வேண்டியதில்லை. நாங்கள் ஒரு சிறிய அமைச்சரவையை உருவாக்குவோம். அந்த அமைச்சரவை அறிவியல் அடிப்படையில் அமைச்சுக்களை பிரித்து உருவாக்கப்படும்.

**கடைசியாக மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

நாங்கள் வெற்றி பெறுவோம். நம்பிக்கையோடு எம்மோடு இணைந்து கொள்ளுங்கள் என அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கிறேன்.



*எம். எஸ். முஸப்பிர்*

# ரணில்; மிஸ்டர் க்ளீனா ?



நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களில் அதிக காலம் அரசாங்கப் பொறுப்புகளை வகித்த அனுபவமிக்க அரசியல்வாதியாக ரணில் விக்கிரமசிங்க கருதப்படுகிறார். நாட்டின் அரசியலின் தன்மையை இனங்கண்டு கொள்வதற்கும், அரசியலினுள் வெற்றியைப் போன்று தோல்வியும், எவ்வாறு அரசியலின் வடிவத்தை வடிவமைக்க உதவுகிறது. மற்றும் பிரசாரம், ஊடகங்கள் மற்றும் வதந்திகள் ஒவ்வொரு நபர்கள் தொடர்பில் மக்களின் மனோநிலை தீர்மானிக்கப்படுவதற்கு தாக்கங்களைச் செலுத்தும் முறைகளை இனங்கண்டு கொள்வதற்கும் மிகவும் தகுதியான நபர் ரணில் விக்கிரமசிங்க என்பவரே என கருதுகின்றேன். இலங்கை அரசியலின் போக்கைப் பாதிக்கும் காரணிகளைத் தீர்மானிக்க இவ்வளவு பொருத்தமான பாத்திரம் வேறில்லை என்றே நான் நினைக்கிறேன்.

அவரது தந்தை, எஸ்மண்ட் விக்கிரமசிங்க, மிக இளம் வயதிலேயே நாட்டின் அரசியலில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்த ஒரு பிரபலமாகும். நாட்டின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா 1952இல் காலமானபோது, எஸ்மண்டுக்கு 32 வயதாகும். அவ்வாறு இருந்தபோதிலும், பிரதமர் பதவிக்கு உரிமை கோரிய ஜோன் கொத்தலாவலக்குப் பதிலாக டி.எஸ்ஸின் மகன் டட்லியை அந்தப் பதவிக்குக் கொண்டுவரும் பிரசாரத்தில் எஸ்மண்ட் டட்லியுடன் இணைந்து செயற்பட்டார். அவர் இந்த விவகாரத்தில் முக்கிய பங்காற்றியதாக ஜோன் கொத்தலாவல எழுதிய "பிரதமர் கொள்ளை" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரணிலின் தாயார் நளினி விஜேவர்தனவாகும். அவர் இலங்கை பத்திரிகைத் துறையின் ஜாம்பவானாகக் கருதப்படும் டி.ஆர். விஜேவர்தனவின் மகளாகும். களனி விகாரையின் மீள் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக இருந்த திருமதி ஹெலேனா விஜேவர்தனவின் மகளாக அவரும் களனி விகாரையின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியுள்ளார்.

ரணில், கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வி கற்றவராகும். அந்தக் காலத்தில் நாட்டின் உயர் மட்ட குடும்பங்களின் பிள்ளைகள் பல்கலைக்கழக கல்விக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற போதும், ரணில் தனது உயர் கல்வியைக் கற்றது கொழும்பு பல்கலைக்கழகத்திலாகும். இதன்மூலம், இலங்கையின் பிரதமராக பதவியேற்கும் முதல் இலங்கை பல்கலைக்கழக பட்டதாரி என்ற பெருமையை அவர் பெற்றார். அந்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவே இலங்கையின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவியை வகிக்கும் முதல் மற்றும் ஒரே இலங்கை பல்கலைக்கழக பட்டதாரி ஆவார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் கூட்டமைப்பான ஐக்கிய தேசியக் கட்சியின் அகில இலங்கை இளைஞர் முன்னணியின் செயற்குழு உறுப்பினராகவே ரணிலின் அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகியது. கம்பஹா மாவட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட பியகம தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டு 1977 பொதுத் தேர்தலில் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது அவர் ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கத்தில் வெளிவிவகார பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் ஜே.ஆர் அரசாங்கத்தின் அமைச்சரவையில் பல்வேறு பதவிகளை வகித்து, பிரேமதாசாவின் அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சர், சபையின் சபாநாயகர் மற்றும் ஊடகப் பேச்சாளர் ஆகிய பதவிகளையும் வகித்தார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் கீழ் இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான இரண்டு சந்தர்ப்பங்களில் தலைமைப் பொறுப்பை நிறைவேற்றும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. முதலாவது வாய்ப்பு 1991ஆம் ஆண்டில் ஜனாதிபதி பிரேமதாச குற்றப் பிரேரணைக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பமாகும். அப்போது ரணில் தலைமைத்துவத்துடன் நேராக நின்றார். அந்தக் குற்றப் பிரேரணையிலிருந்து பிரேமதாசாவைக் காப்பாற்றுவதற்கு ரணில் அதிகூடிய பலத்துடன் செயற்பட்டார். இரண்டாவது சந்தர்ப்பம் ஜனாதிபதி பிரேமதாச குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பமாகும். நாடு அராஜக நிலைக்குச் செல்வதைத் தடுப்பதற்காக அரசியலமைப்பிற்கு அமைய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர் முன்னின்று செயற்பட்டார். அந்நேரம் மக்கள் கூடியிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தை இரத்துச் செய்து அமைதியான முறையில் டி. பி. விஜேதுங்கவை ஜனாதிபதி பதவிக்கு நியமித்து அரசியலமைப்பிற்கு அமைவாக அரச நிருவாகத்தை நிலையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

பல்வேறு வகையான அரசியல் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஆயத்தமாக வேண்டிய காலமாக அந்த யுகம் இருந்தது. டி.பி.விஜேதுங்க 1994ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்தார். ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்தது. 17 வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்தது. ரணில் விக்கிரமசிங்க தோல்வியை அறிந்து கொண்ட உடனேயே தனது உடமைகள் அடங்கிய பொதிகளை எடுத்துக் கொண்டு பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து அலரி மாளிகையிலிருந்து தனது வீட்டுக்குச் சென்றார். அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை நியமிப்பதற்காக இடம்பெற்ற வாக்கெடுப்பில் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்று மீண்டும் வந்த சேர்ந்து கொண்ட காமினி திசாநாயக்க ஒரு மேலதிக வாக்கினைப் பெற்றுக் கொண்டதால் ரணிலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி இல்லாமல் போனது.

1994 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸாநாயக்க கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் படுகொலை செய்யப்பட்ட போது, கட்சியின் செயற்குழு திருமதி காமினி திஸாநாயக்கவை வேட்பாளராக முன்னிறுத்த தீர்மானித்தது. அதன் பின்னர் விஜேதுங்கவின் ஜனாதிபதி பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், அதிக தலைவர்கள் கொலை செய்யப்பட்டு, ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து, செயலிழந்த ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பை அவர் ஏற்க வேண்டியதாயிற்று.

1999ம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்டு விடுதலைப் புலிகள் ரணில் ஜனாதிபதியாவதைத் தடுத்தனர். 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ரணில் சந்திரிக்காவைத் தோற்கடித்து ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். அப்படியிருந்த போதிலும் சந்திரிக்கா அமைச்சர்களை நீக்கி அமைச்சுப் பொறுப்புக்களைத் தம்வசப்படுத்திக் கொண்டு ஏற்படுத்திய தடைகளைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டிலும் விடுதலைப் புலிகள் தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பதைத் தடுத்து அவர் ஜனாதிபதியாவதை இரண்டாவது தடவையாகவும் தடுத்தார்கள். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்ட போது அவர் யுத்த முடிவின் வீரனாக இருந்தார். அப்படியிருந்தும் 2015ஆம் ஆண்டில் அந்த அரசாங்கத்தைத் தோற்கடித்து புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கும், அதற்கடுத்த பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கும் அவரால் முடிந்தது. என்றாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டை ஆட்சி செய்தது ரணிலுக்கு இடைஞ்சலை கொடுத்துக் கொண்டேயாகும்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொது மக்கள் அவருக்கு ஒரேயொரு தேசியப்பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டுமே வழங்கியிருந்தனர். 2022 கொவிட், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்க முன்வந்தது அந்த ஒரேயொரு தேசியப்பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு வந்த ரணில் விக்கிரமசிங்க மாத்திரமேயாகும்.

பாராளுமன்றத்தினால் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் கடந்த இரண்டு வருடங்களினுள் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய பணிகளை இவ்வாறானதொரு ஒரு சிறு கட்டுரையில் உள்ளடக்கிவிட முடியாது. 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து மீண்டும் ஒரு முறை ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தியதிலிருந்து அவர் அறிமுகப்படுத்திய சட்ட மறுசீரமைப்புக்கள் ஏராளமானவையாகும். ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றியமை, தேர்தல் செலவினக் கட்டுப்பாடு சட்டத்தை நிறைவேற்றியமை, மத்திய வங்கி சுயாதீனச் சட்டம் போன்ற சட்டங்களோடு ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலையும் அறிமுகப்படுத்துவதற்கு அவரால் முடிந்திருக்கின்றது.

எரிவாயு வரிசை, எரிபொருள் வரிசை, எரிபொருளை ஏற்றி வந்த கப்பல்களுக்குரிய நிதியைச் செலுத்த முடியாமல் துறைமுகத்தில் சிக்கி நின்றமை, மின் வெட்டு, மருந்துகளுக்கான வரிசைகள் தொடர்பில் இன்று வாழும் அனைவருக்கும் தமக்கேயுரிய அனுபவங்கள் இருக்கும் என நினைக்கிறேன். எனவே அவற்றை நினைவூட்டத் தேவையில்லை. அவர் அவை அனைத்தையும் தீர்த்தார். பணம் கொடுத்தாலும் அவற்றை வாங்க முடியாது எனக் கூறப்பட்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். அடுத்தது பொருட்களின் விலைகள் தாங்கிக் கொள்ள முடியாதளவில் உயர்ந்து சென்ற யுகமாகும். இலங்கைக்கு ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்காது எனக் கூறப்பட்ட யுகத்தில் அவர் ஐ.எம்.எப்பிடமிருந்து கடனைப் பெற்றுக் கொண்டார். பண நோட்டுக்களை அச்சிடுவதையும், கடனுக்குப் பெறுவதையும் ஐ. எம். எப் தடை செய்த பின்னர் பணத்தைத் தேடிக் கொள்வதற்காக வரிகளை அதிகரிக்க வேண்டியேற்பட்டது.

இன்று அவை அனைத்தினதும் பெறுபேறுகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. நாடு பொருளாதார ரீதியில் நிலையான தன்மையினை அடைந்திருக்கின்றது. பொருட்களின் விலைகள் குறைந்து கொண்டு வருகின்றது. சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வீழ்ச்சியடைந்த தொழிற்சாலைகள் வியாபாரங்கள் மீண்டும் உயிர்பெற்று வருகின்றன. சுற்றுலாப் பயணிகளின் வருகையும், அந்நியச் செலாவணியின் கையிருப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. பொருளாதார ரீதியில் படுபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை, வங்குரோத்தடைந்த நாட்டை இந்தளவு குறுகிய காலத்தில் மீட்டெடுக்க முடிந்த உலக தலைவர் அவராகும். தற்போது ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் இந்தப் பதவியைக் கேட்டு நிற்கின்றனர். தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் தப்பி ஓடிய தலைவர்களைக் கொண்ட நாட்டுக்கு பதிலாக 39 பேர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நாட்டை உருவாக்க அவரால் முடிந்துள்ளது.

இப்போது ஜனாதிபதித் தேர்தலில் அவருக்குப் பதிலாக வேறு தலைவர் ஒருவர் ஏன் தெரிவு செய்யப்பட வேண்டும்? எதிர்க்கட்சிகள் தற்போது பல்வேறு கதைகளைக் கூறி வருகின்றன. அவர் இல்லாமல் தென்னம் மட்டை ஜனாதிபதியாக பதவியேற்றாலும் இப்பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும், ஜனாதிபதி பதவியை நிராகரித்தபோது அந்தத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அடங்கிய வீடியோக்கள் வெளியே வந்ததோடு அந்தக் கதைகள் நின்று போயுள்ளது.

அவர் அரச நிறுவனங்கள், உள்ளூர் வளங்களை விற்பனை செய்வதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர். அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட வர்த்தக நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பனை செய்வதை முதலில் ஆரம்பித்தது சஜித் பிரேமதாசாவின் தந்தையான ரணசிங்க பிரேமதாசாவாகும். அதன் பின்னர் அதிகமான நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டன. அது மக்கள் விடுதலை முன்னணியின் ஒத்துழைப்போடு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிக்கா பண்டாரநாயக்காவினால் மேற்கொள்ளப்பட்டதாகும். சீனத் தலைவர் டெங் சியாவோ பிங் அரசு நிறுவனங்களை விற்று சோசலிசத்தின் மூலம் முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கட்டமைத்தார். ரஷ்யாவில், புடின் நாட்டில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களையும் விற்று ரஷ்ய பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பினார். ரணிலுக்கு மீதமிருப்பது சோசலிசத்தின் முன்னணித் தோழர்களும் இலங்கையின் புரட்சிகர ஜனாதிபதிகளும் கடைப்பிடித்த நடைமுறைகளே தவிர வேறு எதுவுமில்லை. மத்திய வங்கி கொள்ளையுடன் அவருக்கும் தொடர்புள்ளது என்பதே அவர் மீதுள்ள மற்றொரு குற்றச்சாட்டாகும். எனினும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான பாராளுமன்றக் குழுவினாலோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த ஒரு ஆணைக்குழுவினாலோ அவர் குற்றவாளியாக்கப்படவுமில்லை, அவர் அதற்கு உடந்தையாக இருந்ததாக எங்கும் குறிப்பிடப்படவுமில்லை. அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட மற்றொரு குற்றச்சாட்டாக இருப்பது பட்டலந்த இராணுவ முகாமில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசாங்க எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுக்குத் தண்டனை வழங்கும் நிலையத்திற்கு அவர் ஒத்துழைப்பு வழங்கினார் என்பதாகும். சந்திரிகா பண்டாரநாயக்க பட்டலந்த ஆணைக்குழுவினை நியமித்தார்.

அந்த ஆணைக்குழு அவரை நிரபராதியாக விடுதலை செய்தது. எந்த நீதிமன்றத்திலும் அவருக்கு எதிராக எந்தவொரு முறைப்பாடுகளோ அல்லது உடந்தையாக இருந்தமை மற்றும் ஒத்துழைப்பு வழங்கியதாகவோ எந்த ஒரு வாக்கு மூலமோ அல்லது எழுத்து பூர்வ குற்றச்சாட்டுகளோ முன்வைக்கப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு முக்கிய விடயங்களாக இருப்பது மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுகளாகும். எனினும் அவர் அரச நிதியினைத் துஷ்பிரயோகம் செய்து தனது சொத்துக்களை அதிகப்படுத்திக் கொண்டதாகவோ அல்லது அரச சொத்துக்களையோ ஏனைய உடமைகளையோ முறைகேடாக அபகரித்ததாகவோ எவரும் குற்றம் சாட்டவில்லை. இலஞ்சம் அல்லது ஊழல்கள் மூலம் அவர் பணம் சம்பாதித்ததாக எவருமே அவர் மீது குற்றம் சுமத்தவில்லை. ரணில் மிஸ்டர் கிளீனானார். இன்றும் அவர் மிஸ்டர் கிளீன்தான்.

**மக்கள் நேசன்**

# கீதாவுக்கும் தலதாவுக்கும் வஜிர தொடுத்த விடுகதை

**ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஆறு நாட்களே**

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஆறு நாட்களே இருக்கின்றன. தேர்தல் களம் மிகவும் சூடு பிடித்திருக்கும் இந்நிலையில் ஜனாதிபதி ரணில் தனது வழமையான நிதானத்துடனும், எவ்வித குழப்பமும் இன்றி இருப்பதைக் கண்டு அவருக்கருகில் இருந்த அமைச்சர்கள் ஆச்சரியமடைந்தனர்.

ஜனாதிபதி ரணில் தனது அன்றாட பணிமிகுந்த வாரத்தை ஆரம்பித்தது பத்தரமுல்லை தியத உயன வெளியரங்க பீடத்தில் இடம்பெற்ற இளைஞர் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாகும். ஜனாதிபதி அங்கு சென்றது எந்தவித முன்னறிவிப்பும் இன்றியாகும். அங்கு சிறிது நேரம் இளைஞர் யுவதிகளோடு நட்புறவுடன் உறவாடியவாறு இசை நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ரணில், "உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய நாட்டை உருவாக்குவேன்" என்ற வாக்குறுதியை அளித்துவிட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

**ஆதரவளிப்பதற்காக வந்த ரிஷாத் பதியுத்தீன் தரப்பு**

கடந்த திங்கட்கிழமை (9) காலை கொழும்பு பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதியின் அரசியல் அலுவலகத்திற்கு ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதற்காக ரிஷாத் பதியுத்தீன் தரப்பைச் சேர்ந்த குழுவொன்று வந்தது. சில அழுத்தங்கள் காரணமாக ரிஷாத், சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளித்தாலும், கட்சியின் பெரும்பான்மையானவர்கள் ரணிலுடன் இருப்பதாக அந்த குழுவினர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தனர்.

தினமும் மூன்று அல்லது நான்கு தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்ளும் ரணில், கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில் இருக்கும் நேரத்தை அறிந்து ஐக்கிய தேசிய கட்சி தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் சிலர் அடுத்த கட்ட அரசியல் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சென்றனர்.

"சேர், நிறைய புதிய வாய்ப்புகள் தோன்றியுள்ளனவல்லவா...?" என அங்கிருந்த எல்லோர் மனதிலும் ஆர்வத்தை உருவாக்கி கதையை ஆரம்பித்தார் வஜிர.

"அப்படியா! என்ன அது?" எனக்கேட்டார் ஜனாதிபதி.

"ஏன் கீதாவைக் கொடுத்துவிட்டு தலதாவைப் பெற்றுக் கொண்டதைப் போல" என வஜிர கூறியது ஜனாதிபதியின் முகத்திலும் புன்னகையை வரவழைத்தது.

ஏன் "அண்ணன் நோய் வாய்ப்பட்டு, தாத்தா இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறார்" என்றும் பேச்சு உலவுகின்றதுதானே? என்றவாறு ஷெஹானும் இந்த உரையாலோடு இணைந்து கொண்டார். இந்தக் கதைகளை ஜனாதிபதி சிரித்தவாறே கேட்டுக் கொண்டிருந்தாரே தவிர, எதுவும் பேசவில்லை.



"சேருக்கு இப்போது பேஸ்புக்கில் இளைஞர் யுவதிகளின் பெரும் வரவேற்பு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. வர வர எமது நிலை நல்ல திசையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது" என்றார் ருவன்.

"பெரும்பான்மையான இளம் தலைமுறையினருக்கு நன்கு சிந்திக்கும் ஆற்றல் உள்ளது. மௌனமாக இருந்தாலும் என்ன செய்ய வேண்டும் என்று பலருக்கு தெரியும். இளம் தலைமுறையினர் அரசியல் கூட்டங்களில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை" என்றவாறு ஜனாதிபதி ருவனின் கருத்துக்கு பதிலளித்தார்.

**வடக்கு கிழக்கு வாக்குகள் அனைத்தும் எனது கைகளில் - ஜனாதிபதி**

கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஞாயிறு நாளிதழ்களுக்கு வழங்கிய நேர்காணலின்போது, ஊடகவியலாளர் ஒருவர் "ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து உங்கள் பக்கம் வேறொருவரும் வரவில்லையா?" என ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, வேறு எவரும் எனக்குத் தேவையில்லை. நாங்கள் வெல்வோம். வடக்கு, கிழக்கு வாக்குகள் அனைத்தும் என் கைகளிலேயே உள்ளன. பெருந்தோட்டத்துறையிலுள்ள பெரும்பாலான வாக்குகளும் எனது கைகளிலேயே உள்ளன. நாங்கள் வெற்றிபெற்று புதிய அரசாங்கத்தை நிறுவுவோம் என மிகவும் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

**அரச ஊழியர்களின் சம்பளம்**

"அரசு ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கவில்லை என்றவாறு கதை பகிரப்படுகின்றது. நாம் அதை சரி செய்ய வேண்டும் அல்லவா?" என்றார் ஷெஹான்.

"என்ன ஒரு பொய் இது? அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதே. மற்றது நான் முடியுமான விடயங்களை மாத்திரமே சொல்கிறேன். முடியாதவற்றை முடியாது என நேரடியாகச் சொல்கிறேன். எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களைக் கூட பொய்யான வாக்குறுதிகளை வழங்கி எனது பக்கத்திற்கு அழைத்திருக்கலாம். நான் அப்படிச் செய்தேனா?" என்றவாறு ஜனாதிபதி கூறியதைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் தலையசைத்து அங்கீகரித்தார்கள்.

**தொப்பி கிடைத்த கதை**

செவ்வாய்க்கிழமை (10) ஜனாதிபதி கிளிநொச்சி, மதவாச்சி மற்றும் பண்டுவஸ்நுவர ஆகிய பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டார். மதவாச்சியில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி மேடையில் ஏறியது தொழிலாளர்கள் அணியும் தொப்பி ஒன்றை தலையில் அணிந்தவாறாகும். அந்த தொப்பி தொடர்பில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எழுந்த கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி, தனக்கு அந்த தொப்பி எப்படி கிடைத்தது என்று விளக்கினார். "நான் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசாரக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது வயது முதிர்ந்த தமிழ் தாய் ஒருவர் அவரது பரிசாக இந்த தொப்பியை எனக்கு வழங்கினார். நீங்கள் எங்களுக்கு உணவு வழங்கினீர்கள், மருந்துகளை வழங்கினீர்கள், உரம் வழங்கினீர்கள், எம்மை வாழ வைத்தீர்கள். எனவே எனது இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள் என அந்த பெண்மணி என்னிடம் கூறினார். எனவே எனக்கு அந்தத் தொப்பி ஒரு இலட்சம் ரூபாவைவிட பெறுமதிமிக்கது" என கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் வகையில் ஜனாதிபதி கூறினார்.

அன்றைய தினம் மாலை குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வர்த்தகர்கள் மற்றும் கல்வியலாளர்களின் ஒன்றுகூடலில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி வருகை தந்த போது சற்று தாமதமாகியிருந்தது. இந்நிகழ்வில் குருநாகலைச் சேர்ந்த வர்த்தகர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

"திசைகாட்டி தொடர்பில் என்ன கூற வேண்டியிருக்கின்றது?" என அங்கிருந்த ஒருவர் ஜனாதிபதியிடம் வினவினார்.

"திசைகாட்டியின் மூலம் திசையைத் தேட காந்தம் அவசியமாகும். காந்தம் தவறினால் தவறான திசையே திசைகாட்டி காட்டும். இப்போது அதுதான் நடந்திருக்கின்றது" என்று ஜனாதிபதி கூறினார்.

**யுவதிகளின் கிரஷ்**

நகரங்களில் இடம்பெறும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக வாகனத்திலிருந்து இறங்கி மேடைக்கருகில் செல்லும் வேளையில் அங்கிருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு அருகில் சென்று அங்கு பணியாற்றும் பணியாளர்களிடம் குதூகலமாக உரையாடுவதை ஜனாதிபதி இந்நாட்களில் வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். விசேடமாக அங்கிருக்கும் இளைஞர்களான பணியாளர்கள் வந்து ஜனாதிபதியுடன் செல்ஃபி புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கு ஆர்வம் காட்டும் நிகழ்வுகளைக் காணக்கூடியதாக உள்ளது.

"இந்நாட்களில் யுவதிகளின் கிரஷ் இது" . சேருடன் இணைந்து இளைஞர் யுவதிகள் எடுக்கும் செல்ஃபிக்கள் முகநூலில் வலம் வருகின்றன என சாமர சம்பத் கூட்டத்தில் நடுவே ஜனாதிபதியின் காதில் கூறியபோது ஜனாதிபதிக்கும் சிரிப்பு வந்தது.

"சேர், அநுர விவாதத்திற்கு அழைத்துள்ளார் தானே?" என ஜனாதிபதியுடனான தொலைபேசி உரையாடலுக்கு மத்தியில் வினவினார் அகில.

"ஆமாம். அநுரவோடு விவாதிப்பதற்கு நான் தயார். ஆனால் முதலில் அவர்களது கொள்கை ஏற்றுமதிப் பொருளாதாரமா? அல்லது இறக்குமதிப் பொருளாதாரமா? என கட்சியினுள் விவாதித்து இணக்கப்பாட்டிற்கு வரச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு சர்வதேச நாணய நிதியம் தொடர்பிலும் பேசி, தேவையென்றால் சஜித்தையும் அழைத்துக் கொண்டு விவாதம் செய்வோம்" என்றார் ஜனாதிபதி.

"சேர், நான் 17ஆம் திகதி குளியாப்பிட்டிய பிரசாரக் கூட்டத்திற்கு பதினையாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கூட்டத்தைக் கொண்டு வருவேன். அன்றைய தினம் குளியாப்பிட்டியவில் வாகனங்களைப் பொருத்தும் தொழிற்சாலையின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன" என ஜனாதிபதியிடம் கூறினார் அகில.

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச ஊடகங்கள் மற்றும் ஏனைய ஊடகங்களினது பக்கச் சார்பற்ற தன்மை தொடர்பில் அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்னவிடம் ஜனாதிபதி விளக்கம் கோரினார்.

"தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து, ஊடக நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை நாம் அமைத்துள்ளோம். அரசாங்க தகவல் திணைக்களமும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் இணைந்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் தெளிவு படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன" எனக் கூறினார் தினித்.

தேர்தலுடன் தொடர்புடைய தரப்பினருக்குத் தெளிவூட்டும் வேலைத்திட்டம் அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றதோடு, இதில் அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன, தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க, அதன் பணிப்பாளர் சன்ன பீ.டி.சில்வா உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர்.

வியாழக்கிழமை (12) காலை ஜனாதிபதி ஞாயிறு பத்திரிகைக்காக நேர்காணல் ஒன்றை வழங்கினார். இதன் போது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இன்னும் எவராவது உங்களோடு இணைந்து கொள்வார்களா என ஊடகவியலாளர் ஒரு ஜனாதிபதியிடம் வினா எழுப்பினார்.

"இனி யாரும் தேவையில்லை. நாம் வெற்றி பெறுவோம். கிழக்கு, தோட்டப் புறங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான வாக்குகள் இப்போது எனது கைகளில். நாம் வெற்றி பெற்று அடுத்த அரசாங்கத்தை அமைப்போம்" என ஜனாதிபதி மிகுந்த நம்பிக்கையுடன் கூறினார்.

"நான் விஜய குறூப் நிறுவனத்தின் நிகழ்வொன்றிற்குச் செல்ல வேண்டியுள்ளது" எனக் கூறிவிட்டே ஜனாதிபதி அந்த ஊடகச் சந்திப்பிலிருந்து விடைபெற்றுச் சென்றார்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் மூன்றுடன் இணைந்து ஆரம்பிக்கும் "Times School of Higher Education" என்ற உயர் கல்வி நிறுவனத்தின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

**எம். எஸ். முஸப்பிர்**





# மிகமோசமான பொருளாதார நெருக்கடியில் பங்களாதேஷ்!

**வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஆற்றலுள்ள தலைவர் அவசியமென பொருளாதார நிபுணர்கள் கருத்து!**

பங்களாதேஷின் இன்றைய நிலைமை அவலத்தில் உள்ளது. ஒருபுறம் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் அன்றாட சீவியத்துக்கே அல்லல்படுகின்றனர். மறுபுறம் மின்சாரம் இல்லாமல் அந்நாட்டின் பெரும்பகுதி இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

இருவருடங்களுக்கு முன்னர் இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியை நினைவூட்டும் விதத்தில் பங்களாதேஷின் இன்றைய நிலைமை உள்ளது.

வங்கதேசத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிரான மாணவர்கள் போராட்டத்தால் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இராஜினாமா செய்து இந்தியாவில் தஞ்சமடைந்த பின்னர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கூட பல இடங்களில் தற்போதும் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது.

இந்நிலையில் வங்கதேசம் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. பணவீக்கம் அதிகரித்துள்ளதோடு, அந்நிய செலாவணி கையிருப்பு சரிவடைந்துள்ளது. அந்நாடு விரைவில் 'திவால்' ஆகிவிடும் ஆபத்து உள்ளது. இடைக்கால அரசுக்கு தலைவராக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார். ஆனாலும் கூட தொடர்ந்து அந்நாட்டில் போராட்டம் நடந்து வருகிறது. சிறுபான்மையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

வங்கதேசத்தின் நிலைமை இன்னுமே கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இந்நிலையில் தொடர் போராட்டங்களுக்கு மத்தியில் வங்கதேசம் கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது.

இது வங்கதேசத்துக்கு கூடுதல் பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளது. ஏனென்றால் அந்நிய செலாவணி போதிய அளவில் கையில் இருந்ததால் பிறநாடுகளில் இருந்து தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலையில் அந்நாடு உள்ளது.

மக்கள் தங்களின் வங்கிக் கணக்கில் இருந்து அதிக பட்ச பணத்தை எடுக்க முடியது. ஒரு நேரத்தில் குறித்த தொகை பணத்தை மட்டுமே எடுக்க முடியும். இதனால் நாட்டின் வணிகத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இடைக்கால அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இடைக்கால அரசின் தலைவராக உள்ள முகம்மது யூனுஸ் நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கலை தீர்த்துவைக்க முடியாமல் திண்டாடுகின்றார். அந்நாட்டின் தற்போதைய நிலை நீண்டகாலம் தொடரும் பட்சத்தில் அந்த நாடு பொருளாதாரத்தில் அதலபாதாளத்துக்குச் சென்று விடுமென்று அஞ்சப்படுகின்றது.

பொருளாதாரத்தை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுப்பதற்குப் பொருத்தமான தலைவர் ஒருவரே அந்நாட்டுக்கு தற்போது அவசியமென்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

வங்கதேசத்தை பொறுத்தவரை அத்தியாவசிய பொருட்களில் முக்கியமானவை இந்தியா உட்பட பல நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.





**சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அவசரமாக 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை கோருகிறது இடைக்கால அரசு!**

ஆனால் தற்போதைய ஸ்திரமற்ற நிலைமையினால் ஏனைய நாடுகளில் இருந்து பங்களாதேஷுக்கு பொருட்கள் செல்வது குறைந்து விட்டது. இதனால் வங்கதேசம் தற்போது இக்கட்டான சூழலில் சிக்கி உள்ளது.

அரசாங்கத்தின் கையிருப்பில் போதிய நிதி இல்லாததால் பங்களாதேஷ் முழுவதும் இருளில் மூழ்கும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. பங்களாதேஷுக்கு மின்சாரத்தை வழங்கும் அதானி நிறுவனத்திற்கு பெருந்தொகை டொலர்களை நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளது. இதேவேளை ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் கீழ் பங்களாதேஷ் அரசாங்கம் செயற்பட்டு வந்தது.

நெருக்கடியான நிலையில் அவசரமாக 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச நாணய நிதியத்திடம் பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கம் கோரியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கியிருந்து போது, இலங்கைக்கு பங்களாதேஷ் கடனுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது பங்களாதேஷின் நிலைமை பரிதாபமாக உள்ளது.

இந்நிலையில் பங்களாதேஷ் முழுவதும் இருளில் மூழ்கும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமக்குச் செலுத்த வேண்டிய சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்துவதில் பங்களாதேஸின் இடைக்கால நிர்வாகம் தாமதம் காட்டி வருவதால் மின்சாரம் வழங்குவதில் இந்திய நிறுவனமான அதானி குழுமம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.





**மின்சாரம் விநியோகிப்பதில் சிக்கல்; அநேக இடங்கள் இருளில் மூழ்கின!**

எஸ்.சாரங்கன்...

காரைக்கவியின்

## 'சீத்துவக்கேடு நூல் வெளியீட்டு விழா

**இன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில்**







காரைக்கவியின் 'சீத்துவக் கேடு, துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று செப்டெம்பர் 15ஆம் திகதி மாலை 4.31 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரையை பேராசிரியர் தை.தனராஜும், முகப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும், நயவுரையை வைத்தியர் செல்வரஞ்சனி சுப்ரமணியமும், ஆய்வுரையை பேராசிரியர் வ.சிவலோகதாசனும், நோக்குரையை கலாநிதி க.ரகுபரனும், மகிழுரையை சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும், ஏற்று நன்றியுரையை நூலாசிரியரும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், சாகித்தியரத்னா தி.ஞானசேகரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இ.சிவராஜா, புற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் ந.ஜெயகுமாரன், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மேனாள் ஆசிரியர் க.குகப்பிரியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்முனை சாஹிரா மாணவன்

## ஜே.எம். ஆதிப் தங்கப்பதக்கம் பெற்று சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி2024 இல் கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஜே.எம். ஆதிப் 16 வயது ஆண்கள் பிரிவில் 400 M அஞ்சலோட்ட போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனையை நிலைநாட்டி, பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளதோடு, தேசியமட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளார்.

இவ் வெற்றிக்காக உறுதுணையாய் இருந்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் (SLEAS) மற்றும் பிரதி, உதவி அதிபர்கள், மாணவர்களை வழிநடத்தி, பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.அப்ராஜ் றிழா, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான எம். யூ.ஏ. சம்லி, ஏ.எம்.ஜப்ரான் ஆகியோருக்கும் போட்டியில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டி, வெற்றி பெற்ற மாணவனுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, போட்டிகளில் பங்கேற்க தேவையான உதவிகளை மேற்கொண்ட பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழு (SDEC) மற்றும் பழைய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.





## மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில்

# மீண்டும் பயணத்தை ஆரம்பித்தது வடக்கு ரயில்சேவை

கடந்த 9 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மாஹோ சந்திக்கும் அனுராதபுரத்திற்கும் இடையிலான புகையிரத சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆரம்பமானது ரஜரட்டவிற்கும் தலைநகருக்கும் இடையிலான உறவுகளை உறுதிப்படுத்துவதுடன் வடக்கு மற்றும் தெற்கையும் இணைப்பதாகவும் அமைந்துள்ளது.

வடக்கையும் தெற்கையும் இணைத்த யாழ்தேவியின் பெயர் வரலாற்றில் இருந்து என்றும் அழியாது. அந்தளவுக்கு யாழ்தேவி மக்களின் இதயங்களில் ஆழமாய் பதிந்துள்ளது.

1894ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி ஆங்கிலேயர்களால் வடக்கு ரயில் பாதையின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அது காதலர் தினத்தன்றாகும். 1905/1906ம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பாதையில் பயணிகள் புகையிரதம் சேவையைத் தொடங்கியது. அவ்வாறு தொடங்கப்பட்டது இரவு அஞ்சல் ரயில் சேவையாகும். சுமார் 12 மணிநேரத்தைக் கொண்ட இரவு அஞ்சல் புகையிரதத்திற்கு மேலதிகமாக பகல் நேர ரயில் தேவை என்பதால், யாழ்தேவி புகையிரதம் 1956 ஏப்ரல் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்தேவி 1956இல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 7 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் எடுத்தது. இது கொழும்பு திட்டத்தின் கீழ் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட M2 வகை என்ஜினைப் பயன்படுத்தியாகும். அதன் பிறகு, 1975இல் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட M4 வகுப்பு என்ஜின்கள் பயன்படுத்தப்பட்ட பிறகு அதன் வேகம் அதிகரித்தது.

அதன்பிரகாரம், காலை 5.45 மணிக்கு பயணத்தை தொடங்கிய யாழ்தேவி, காலை 9.35 மணிக்கு அனுராதபுரத்தைச் சென்றடைந்து, மதியம் 1 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தது.

பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக யாழ்தேவியின் பயணம் 1986ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறுத்தப்பட்டது. வவுனியா வரையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த யாழ்தேவி 1989ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 1990ஆம் ஆண்டு முதல் 24 வருடங்கள் தடைப்பட்டிருந்தது.

2014 அக்டோபர் 13ஆம் திகதி மீண்டும் இப்புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது இந்தியன் இர்கான் நிறுவனத்தால் புகையிரதப் பாதை முழுமையாக புனரமைக்கப்பட்டதன் பின்னராகும். ஓமந்தைக்குப் பிறகு, காங்கேசந்துறை வரையிலான அனைத்து ரயில் நிலையங்களும் நாட்டின் முக்கிய வங்கிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டன.

அந்த பங்களிப்பு அவ்வாறு இருந்த போதிலும், மாஹோ தொடக்கம் ஓமந்தை வரையிலான புகையிரதப் பாதையில் தற்காலிகமான ப்ளாஸ்டர்களே போடப்பட்ட போதிலும், அதற்கான நிரந்தரத் தீர்வு வழங்கப்படவில்லை.

அப்போது கொழும்பிலிருந்து காங்கேசந்துறை வரை பயணிப்பதற்கு யாழ்தேவி விரைவு புகையிரதத்திற்கு 8 மணி நேரமும், நகரங்களுக்கு இடையேயான விரைவு புகையிரதத்திற்கு ஆறரை மணி நேரமும் எடுத்தது. கால அட்டவணையில் இவ்வாறு இருந்தபோதிலும், வீதியின் மோசமான நிலை காரணமாக பயணத்திற்கு மேலதிகமாக 45 நிமிடங்களுக்கு மேல் எடுத்தது.

இது தொடர்பில், இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் மாஹோ சந்திக்கும் ஓமந்தைக்கும் இடையிலான புகையிரதப் பாதையின் முழுமையான புனரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, அது தொடர்பான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்ட போதிலும், அது படிப்படியாக தடைப்பட்டு போனதோடு கொவிட் 19 தொற்றுநோய் காலத்தின் பின்னர், இது அத்தியாவசிய காரணிகளின் பட்டியலில் மேலும் கீழே தள்ளப்பட்டுப் போனது.

2014ஆம் ஆண்டு வடக்கு ரயில்வே பாதை நிர்மாணிக்கப்பட்ட பின்னர், இந்திய கடன் திட்டத்துடன் தொடர்புடைய மாஹோ ஓமந்தை புகையிரத வீதியின் நவீனமயமாக்கல் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதற்கான விலைமனு 2019ஆம் ஆண்டில் கோரப்பட்டது. அதன்படி, மாஹோவிலிருந்து ஓமந்தை வரையிலான 128 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட புகையிரதப் பாதையின் நிர்மாணப் பணியையும் வடக்கு ரயில் பாதையை நிர்மாணித்த இந்திய அரச நிறுவனமான இர்கோனுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு இந்த வீதியை புனரமைப்பதற்கான பணிகள் ஒப்படைக்கப்பட்டாலும் இப்பணிகள் 2019ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்படவில்லை.





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் தலையீட்டின் மூலம், அப்போது இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்த கோபால் பாக்லே, இந்திய கடனுதவியின் கீழ் உடனடியாக இவ் வீதியின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்தார்.



இதற்கமைய, இந்தியன் இர்கோன் நிறுவனத்தின் தலைமையில் மாஹோ முதல் ஓமந்தை வரையிலான 128 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட புகையிரதப் பாதையை இரண்டு கட்டங்களாக முழுமையாக புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாஹோ தொடக்கம் ஓமந்தை வரையிலான (128 கி.மீ.) புகையிரதப் பாதையின் புனரமைப்பு பணிகள் சம்பிரதாயபூர்வமாக மதவாச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இந்த முழுத் திட்டமும் 91.27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் முதலாம் கட்டம் தொடர்பாக, ஜனவரி 7, 2023 அன்று, அனுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான 61.6 கி.மீ நீளமான ரயில் பாதை முற்றாக மூடப்பட்டு ரயில் பாதையின் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் முதலாம் கட்டத்திற்குரிய அனுராதபுரம் முதல் ஓமந்தை வரையான 61.6 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட புகையிரத வீதி முழுமையாக மூடப்பட்டு ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் கீழ் அனுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான பரசங்கஸ்வெவ, மதவாச்சி, வவுனியா வரையான 3 புகையிரத நிலையங்களும், மிஹிந்தலை சந்தி, சாலியபுர, மெதகம, புனேவ, இரட்டைபெரியகுளம், தாண்டிக்குளம் ஆகிய சகல உப நிலையங்களும் நவீனமயப்படுத்தப்பட்டன.

சுமார் 6 மாதங்களுக்குப் பிறகு, சோதனைப் பயணம் மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்ததோடு, அதன் பின்னர் மீண்டும் கொழும்பிலிருந்து வடக்குக்கான புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் நவீனமயப்படுத்தப்பட்ட யாழ்தேவியின் பயண நேரத்தை சுமார் ஏழரை மணிநேரமாகக் குறைக்க முடிந்துள்ளது. அனுராதபுரத்திலிருந்து காங்கேசந்துறை வரை மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியதாக இருந்த போதிலும், மாஹோவிலிருந்து அனுராதபுரம் வரையான புகையிரதத்தின் வேகம் மணிக்கு 5 கிலோமீற்றர் முதல் 32 கிலோமீற்றர் வரையிலான மோசமான நிலையில் இருந்தது. எனவே, அனுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை முழுமையாக திருத்தியமைத்ததன் மூலம் அடைந்த முன்னேற்றத்தின் உண்மையான பெறுபேறுகளை அடைய முடியவில்லை. எனவே வடக்கு – தெற்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்களின் பின்னர் 2ஆம் கட்டமாக மாஹோ முதல் அனுராதபுரம் வரையிலான புகையிரதப் பாதைக்கான பணிகள் இந்த வருடம் ஜனவரி 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த செயற்பாடுகளை ஆரம்பித்து மக்கள் பயன்பெறும் நோக்கில் புகையிரத திணைக்களம் ஸ்ரீ மஹா போதிக்கு முன்பாக தர்ம போதனை நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் வழிகாட்டுதலிலும் முயற்சியிலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஜனவரி 7ஆம் திகதி மாஹோ – அனுராதபுரம் ரயில் பாதையை மேம்படுத்தும் பணிகள் கல்கமுவ நிலையத்தில் உத்தியோகபூர்வமாக அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலாநிதி பந்துல குணவர்தன, மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மை செயலாளர் இரினா தாக்கூர், ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, அப்போதைய ரயில்வே பொது முகாமையாளர் பதவியை வகித்த எச். எம். கே. டபிள்யூ. பண்டார, ரயில்வே உயர் அதிகாரிகள் மற்றும் இந்திய இர்கான் நிறுவனத்தின்

## பாதுகாப்பானதும் மலிவானதுமான ரயில் சேவை

பிரதிநிதிகள் உட்பட ஏராளமான அரசு அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கல்கமுவ புகையிரத நிலையத்தில் அனைத்து முக்கிய பிரமுகர்களின் பங்குபற்றலுடன் மாஹோ – அனுராதபுரம் புகையிரத பாதை திறந்து வைக்கப்பட்டதுடன் பாரம்பரிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

66.4 கிலோமீற்றர் நீளம் கொண்ட இந்த நவீனமயமாக்கலின் கீழ், அம்பன்பொல, கல்கமுவ, செனரத்கம, தம்புத்தேகம, தலாவ மற்றும் ஷ்ரவஸ்திரிபுர புகையிரத நிலையங்கள் மற்றும் ரந்தேனிகம, அனுராதபுரம் புதிய நகர உப நிலையங்களும் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளன. அம்பன்பொல, தம்புத்தேகம மற்றும் தலாவ ஆகிய நிலையங்களில் இதுவரை ஒரே ஒரு ப்ளாட்போம் மட்டுமே இருந்த நிலையில் 2ஆவது தளமும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ரயில் பாதையின் நீளமும் அதிகரிக்கப்பட்டு, 20 பெட்டிகள் கொண்ட புகையிரதமும் கூட அந்த பாதையில் நிறுத்தப்படும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட 100 கிலோ மீற்றர் வேகத்தில் ரயிலை இயக்க முடியும் என்றாலும், படிப்படியாக வேகத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறே ஆலோசனை வழங்கியுள்ளோம். கடவுப்பாதைகளைப் பயன்படுத்தும் மக்களுக்கும், புகையிரத பாதை முழுமையாக நவீனப்படுத்தப்பட்டிருப்பதால், அங்கீகரிக்கப்பட்ட வேகத்தை ஒரேயடியாக அடைய வேண்டாம் என்றே ஆலோசனைகளை வழங்கியுள்ளோம். கடந்த வாரம், சோதனைப் பயணத்தை இந்தப் பாதையில் மணிக்கு 102 கிலோ மீற்றர் வரை பயணம் செய்தோம். எந்தப் பிரச்சினையும் இல்லை"

இந்த ரயிலில் முழுமையான வர்ண சமிக்ஞைகள் இல்லாததால், தற்போது மாஹோ சந்தியில் இருந்து செனரத்கம மற்றும் செனரத்கமவில் இருந்து அனுராதபுரம் வரை இரண்டு பிரிவுகளின் கீழ் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. அதனடிப்படையில், மாஹோவிலிருந்து ஒரு புகையிரதம் புறப்பட்டதன் பின்னர், செனரத்கமவிலிருந்து மற்றொரு புகையிரதம் முன்னோக்கிப் பயணிக்காது. செனரத்கமவிலிருந்து அனுராதபுரத்திற்கு புகையிரதம் ஒன்று புறப்பட்டதன் பின்னர், அனுராதபுரத்திலிருந்து ரயில் இயக்கப்படாது. இது ஒரு தற்காலிக பாதுகாப்பு அமைப்பு என்பதோடு, சமிக்ஞை அமைப்பு முழுமையாக அமைக்கப்பட்டதன் பின்னர், இந்த இரண்டு பிரிவுகளுக்குப் பதிலாக இரண்டு முக்கிய நிலையங்களுக்கு இடையில் புகையிரதங்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியும்.

இங்கு மாஹோ முதல் அனுராதபுரம் வரையிலான ரயில் பாதை முழு வர்ண சமிக்ஞைகளுடன் பொருத்தப்படும். அதே நேரத்தில், அந்த வீதியில் பயன்படுத்தப்பட்ட சமிக்ஞை அமைப்பு (Samapho signal tablet system) முற்றிலும் அகற்றப்படும். மேலும், இந்த வீதியில் நிறுவப்படும்



வர்ண சமிக்ஞை அமைப்பு, தற்போது இந்த நாட்டில் பயன்பாட்டில் உள்ள அனைத்து வர்ண சமிக்ஞை அமைப்புகளையும் விட தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டதாகும்.

புதிய சமிக்ஞை முறைகளுக்கு அமைய, புகையிரதம் ஒன்று இருக்கும் இடத்தை எளிதாகக் கண்டு கொள்ள முடியும் என்பதோடு, எக்ஸ்பிரஸ் ரயில்கள் நிறுத்தப்படாத நிலையங்களில், 'டேப்லெட்' சமிக்ஞையினைப் பெற்றுக் கொள்வதற்கு ரயிலின் வேகத்தை இனி பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.

புகையிரத வர்ண சமிக்ஞை அமைப்பை முழுமையாக நவீனப்படுத்துவதற்காக இந்திய கடன் உதவியின் கீழ் ஏற்கனவே 450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நவீனமயமாக்களின் காரணமாக கொழும்பில் இருந்து அனுராதபுரத்திற்கு 3 மணித்தியாலங்களுக்குள் பயணிக்க முடியும். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை இயங்கும் நகரங்களுக்கு இடையேயான விரைவு ரயிலின் பயண நேரம் ஒன்றரை மணியினாலும், யாழ்தேவி உள்ளிட்ட ஏனைய விரைவு ரயில்களின் பயண நேரம் சுமார் 2 மணிநேரத்தினாலும் குறைக்கப்படும். ரயில்வே வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் இயங்கும் மிகச்சிறந்த திறன் கொண்ட புகையிரத சேவை என்ற பெருமையை இது பதிவு செய்யும்.

வடக்கையும், தெற்கையும் இணைக்கும் பாதுகாப்பானதும், மலிவானதுமான பயணமாக இருப்பது இந்த புகையிரத சேவையாகும்.

எம். எஸ். முஸப்பிர்





யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவில்

# தயாரிப்பாளர் கிரிஷ் காசரவல்லிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது





புகழ்பெற்ற கன்னடத் திரைப் படத் தயாரிப்பாளரும், இந்திய சமகால சினிமாவின் முன்னோடியுமான பத்மஸ்ரீ கிரிஷ் காசரவல்லி, 10ஆவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். விழா ஏற்பாட்டாளர் அனோமா ராஜகருணா இவ்விருதை வழங்கி கௌரவித்தார். விருது வழங்கும் விழா செப்டெம்பர் 09 ஆம் திகதி யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இடம்பெற்றது. காசரவல்லி, தனது பணிக்காக சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார், கடாஷ் ரத்தா (1977), தபரனா கதே (1986), தாயி சாஹேபா (1997) மற்றும் த்வீபா (2002) ஆகிய நான்கு திரைப் படங்களுக்காக சிறந்த திரைப்பட விருதுகள் உட்பட பதினான்கு தேசிய திரைப்பட விருதுகளை வென்றுள்ளார். 2011 இல், இந்தியாவின் நான்காவது மிக உயர்ந்த விருதான பத்மஸ்ரீ விருது அவருக்கு வழங்கப்பட்டது.

விருதைப் பெற்றதும், காசரவல்லி உலகெங்கிலும் உள்ள இளம் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். "ஒரு பேராசை கொண்ட சக்தியின் தீங்கான நோக்கங்களை கூட்டு நடவடிக்கையால் மட்டுமே எதிர்க்க முடியும் என்பதால், திரைப்படத்தைப் பாதுகாப்பதில் ஒன்றுபட வேண்டும்" என்று வலியுறுத்தினார். விழாவின் போது, கன்னடத் திரையுலகில் தனது ஐந்து தசாப்த கால வாழ்க்கை யைப் பிரதிபலிக்கும் வகையில், உரையாற்றினார்

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார மையம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியவை 2023ஆம் ஆண்டு முதல் இவ்விழாவில் பங்காளிகளாக இருந்து வருகின்றன, ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான இந்திய திரைப்பட தயாரிப்பாளர்கள் இதில் பங்கேற்கின்றனர். 2024 ஆம் ஆண்டில், 18 நாடுகளைச் சேர்ந்த சுமார் 60 படங்கள் இந்த விழாவில் திரையிடப்பட்டன, அவற்றில் பெரும்பாலானவை இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வெளிவந்த படங்கள்.

# சோழன் உலக சாதனை படைத்த சிறுமி





மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியில் வசித்து வரும் பொறியாளர் சுப்ரமணியம் மற்றும் மருத்துவர் ஹிசாந்தினி ஆகியோரின் மகள் ஐந்து வயதும் பத்து மாதங்களுமான பள்ளி மாணவி காவ்யஸ்ரீ. இவர் மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வரிசைகளைக் கொண்ட 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கு 6 நிமிடங்கள் 50 செக்கன்களில் விடையளித்து சோழன் உலக சாதனை படைத்தார்.

இந் நிகழ்வானது மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள கிரீன் கார்டன் ஹோட்டலில் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.இதன் போது தனக்கு வழங்கப்பட்டிருந்த 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கான சரியான பதிலை 6 நிமிடங்கள் 50 செக்கன்களில் எழுதி சோழன் உலக சாதனை படைத்தார் சிறுமி காவ்ய ஸ்ரீ. இந்த நிகழ்வை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம், பீபல்ஸ் ஹெல்பிங் பீபல்ஸ் பவுண்டேஷன் மற்றம் கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவனம் போன்ற அமைப்புகள் இணைந்து நடத்தியிருந்தன.

# தேசிய சூரா சபையின் பதில் தலைவராக அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் நியமனம்

(அஜ்வாத் பாஸி)



தேசிய ஷூரா சபையின் தலைவர் சட்டத்தரணி அஸூர், தனது தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி) எம்.ஏ சபையின் நிறைவேற்றுக் குழுவின் ஏகமானதான தீர்மானத்தின் படி பதில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தான் ஜனாதிபதி தேர்தலின் போது செயற்பாட்டு அரசியலில் சம்பந்தப்பட இருப்பதனால் தொடர்ந்தும் ஷூரா சபையின் தலைமைப் பதவியில் இருக்க முடியாது என்று அஸூர் தனது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல், ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டதாரி, அதன் சிரேஷ்ட விரிவுரையாளர், பீடாதிபதி ஆவார். தேசிய ஷூரா சபையின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவராகவும் அது ஸ்தாபிக்கப்பட்டது முதற்கொண்டு இதுவரை சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவராகவும் அவர் செயற்பட்டிருக்கிறார்.

முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களை கலந்தாலோசனை, துறைசார்நிபுணத்துவ அறிவு, ஆய்வு போன்றவற்றின் அடிப்படையை அணுகி சமூகத்தின் இலக்குகளை வரையறுப்பது, அதிமுக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை முதன்மைப்படுத்துவது போன்ற பிரதானமான இலக்குகளைக் கொண்டு சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் சபை ஸ்தாபிக்கப் பட்டதுஅதன் பொதுச் சபையில் இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் முன்னணி சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், துறைசார் நிபுணர்கள், உலமாக்கள் போன்றோர் அங்கம் வகிக்கிறார்கள். சுமார் பத்துக்கும் மேற்பட்ட உறுப்பு அமைப்புகளது (Member organisations) குடை நிறுவனமாக தேசிய சூரா சபை இருந்து வருகிறது.

கடந்த காலங்களில் முஸ்லிம்களது அரசியல், பொருளாதாரம், இனங்களுக்கிடையிலான உறவு, சுகாதாரம், கல்வி போன்ற இன்னோரன்ன துறைகளோடு தொடர்பான பல வேலைத் திட்டங்களை ஷூரா சபை மேற்கொண்டு வந்திருக்கிறது.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று, பொருளாதார மந்த நிலை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்கப்பட்ட கெடுபிடிகள், இனவாதம் என்பவற்றைத் தொடர்ந்து ஷூரா சபையின் நடவடிக்கைகளில் ஓரளவு தொய்வு நிலை ஏற்பட்டாலும் அண்மைக் காலங்களில் அது மீண்டும் எழுச்சியடைந்து தனது பயணத்தை உற்சாகமாக ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# IMFஐ நாடுவதை தவிர்த்து வீழ்ச்சியடைந்த நாடுகள்

பேராசிரியர் பிரியங்கா துனுசிங்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவு

உலகப் பொருளாதாரத்தினுள் கடந்த இரண்டு மாதங்களில் அமைதியாக நடந்து வரும் பொருளாதார நெருக்கடி குறித்து பல்வேறு தளங்களில் பலவிதமான பேச்சுக்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்த புதிய நெருக்கடியானது 1980 களில் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆதிக்கம் செலுத்திய கடன் நெருக்கடியைப் போன்ற பல பண்புகளைக் கொண்டுள்ளது. சத்தமில்லாமல் நடந்து வரும் கடுமையான கடன் நெருக்கடிக்கு முக்கிய ஊடகங்கள் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளன. இதற்குக் காரணம் உக்ரைன் ரஷ்யா போர், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் உறுதியற்ற தன்மை மற்றும் வளர்ந்த நாடுகளால் கட்டமைக்கப்பட்ட பணவீக்க நிலைமைகளாகும். இந்த நெருக்கடியில் சொல்லப்படும் ஒரு சிறப்பு உண்மை என்னவென்றால், கடன் நெருக்கடி உலகில் படிப்படியாக தீவிரமடைந்து வருகிறது என்பதாகும். இதன் விளைவாக, இருபத்தெட்டு நாடுகள் ஏற்கனவே கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் அல்லது திருப்பிச் செலுத்த தவறும் நிலையில் உள்ளன.

இந்த நிலைமைக்கு மிகவும் தாக்கத்தைச் செலுத்திய இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று கொரோனா தொற்று. மற்ற விடயம் என்னவென்றால், கடந்த தசாப்தத்தில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது அதிக வட்டி விகிதம் இருந்ததாகும். அதன் காரணமாக, கடன் செலவு வெகுவாக அதிகரித்தது, இதன் காரணமாக, வளரும் நாடுகள் பெற்ற கடன்கள் மற்றும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் கடன்களின் வட்டி விகிதம் அதிகரித்தது. கடன் தரப்படுத்தலில் தரம் தாழ்த்தப்பட்ட நாடுகள் கடன் சந்தைக்குச் சென்ற போது, மிக அதிக வட்டி விகிதத்தில் கடன் வாங்க வேண்டி யிருந்தது. அதன் காரணமாக, அதிக கடன் சுமை உள்ள நாடுகளின் மீதான அழுத்தம் வேகமாக அதிகரித்தது. இந்த விரைவான எழுச்சியின் விளைவாக, நிவாரணம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் பத்து நாடுகள் கடன் நிவாரணப் பட்டியலில் உள்ளன. உதாரணம் இலங்கை, கானா, சாம்பியா மற்றும் லெபனான். மேலும் தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள கொங்கோ, கானா, லாவோஸ், மலாவி, சோமாலியா, சூடான், சிம்பாப்வே, சாம்பியா, மாலைதீவு போன்ற நாடுகள் கடன் நெருக்கடிக்கு மிக அருகில் உள்ளன அல்லது ஏற்கனவே கடன் நெருக்கடியில் விழுந்துள்ளன.

அடிப்படையாக, ஐந்து நாடுகளில் கவனம் செலுத்தினால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றாலும் கடன் நெருக்கடியை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவர முடியாத நான்கு நாடுகள் மீது கவனம் செலுத்துவோம்.

முதலாவது ஆஜர்ன்டீனா. இந்நாடு 1982ஆம் ஆண்டு முதல் தடவையாக நெருக்கடிக்குள் சிக்கியது. இதன் காரணமாக 40 பில்லியன் டொலர் கடன் திருப்பிச் செலுத்தப்படாமல் விடப்பட்டது. இதன் காரணமாக அதிக பணவீக்கம் ஏற்பட்டது.

வரிகளை அதிகரிப்பது, அரச செலவைக் குறைப்பது போன்றவற்றில் தேவையான கவனம் செலுத்தப்படுவதில்லை. இதன் விளைவாக, 2001இல் மீண்டும் நெருக்கடிக்குள் செல்ல நேர்ந்தது. அந்த நேரத்தில், நூறு பில்லியனுக்கும் மேலான கடன் தவணை ஏற்பட்டது. இறையாண்மைக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. அந்தச் சரிவினால் வறுமை நிலை அதிகரித்து அரசியல் நிலையற்ற தன்மை ஏற்பட்டதன் ஊடாக ஆட்சிக்கு வரும் எந்த ஒரு அரசும் மிகக் குறுகிய காலமே ஆட்சியில் இருப்பதோடு குறுகிய காலத்தில் ஆட்சியை இழக்கும். எனவெ பொருளாதார நெருக்கடி பெரிய அரசியல் நெருக்கடியாக மாறி வருகிறது.

அதன் பின்னரான காலப்பகுதியினுள், அர்ஜென்டீனா 2001இல் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ் குறிப்பிடத்தக்க கடனை தள்ளுபடி செய்தது. இருப்பினும்,அர்ஜென்டீனாவினால் அதன் பொருளாதாரத்தை நிலையானதாக கட்டியெழுப்ப முடியாது போனது.

நாணயம் வீழ்ச்சியடைவதால், மீண்டும் ஒரு தடவை பணவீக்கம் மற்றும் கடன் சுமை உயர்ந்தது. புவிசார் அரசியல் காரணங்களும் இதற்கு காரணமாக அமைந்தது. அதேபோன்று அதன் பின்னர், மீண்டும் ஒருமுறை சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டு, முன்னேறிச் சென்றது. நாணயச் சரிவு மற்றும் வங்கித் துறையில் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலை காரணமாக, துருக்கி அதிக அளவிலான கடனைப் பராமரிக்கும் போது கடன் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அதேபோன்று ஈக்வடோர் தொடர்பில் பேசும் போது, 1999இல் பொருளாதார நெருக்கடியைச் சந்தி த்த நாடாகும். ஈக்வடோரின் நிதித் துறை மற்றும் வங்கி கையிருப்பு குறைந்ததே இதற்குக் காரணமாகும். கடன் சுமை அதிகரிப்பால், பொருளாதாரம் டொலர் மயமாக்கப்பட்டது. அதாவது, நாட்டின் நாணயம் டொலருக்கு மாற்றப்பட்டது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதும் வெற்றியடையவில்லை.

அதன்பிரகாரம் மீண்டும் ஒருமுறை பொருளாதார நெருக்கடிக்கு செல்ல வேண்டியேற்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடனையும் செலுத்தாத நிலை ஏற்பட்டது. ஈக்வடோரின் அப்போதைய அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு மூலம் ஓரளவு நிவாரணத்தைப் பெற்றுக் கொண்டது. 2008 வரை இந்த வழியில் முன்னேறிய போதிலும், ஈக்வடோரின் பொருளாதாரம் மீண்டும் சரிந்தது. ஏனைய நாடுகளிடம் இருந்து பெற்ற கடன்கள் தொடர்பாக சட்டவிரோத கடன்கள் பற்றிய யோசனையை நாடு முன்வைத்தது, மேலும் அந்த யோசனை கடன்களை வழங்கிய நாடுகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டன.

ஈக்வடோர் கடன் மறுசீரமைப்பினால் ஓரளவு நிவாரணத்தைக் கண்டது. ஈக்வடோர் 2020இல் IMF மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் திரும்பியது. இதன்போது அந் நாட்டிற்கு 6.5 பில்லியன் டொலர்கள் பொதி வழங்கப்பட்டது. கடன் சுமையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், வாங்கிய கடன்கள் குறித்து குறிப்பிட்ட தரவுகள் இல்லாத தால் கடன் வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டது.

ஈக்வடோர் 2008ஆம் ஆண்டு கடன் மறுசீரமைப்பின் போது சில சலுகைகளை ஏற்படுத்திக் கொண்டது. மீண்டும் ஒரு தடவை கடன் நெருக்கடிக்குள் செல்வதைத் தவிர்ப்பதற்கு இது போதுமானதல்ல.

அதன் பிறகு, ஈக்வடோருக்கு அதிக வட்டியில் இந்தக் கடன் வழங்கப்பட்டது. அதேபோன்று நாட்டிற்கு கடன் வழங்குவதையும் கட்டுப்படுத்தியது.

கேடனை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு புரிந்துணர்வு இல்லையென்றால் உரிய முறையில் சட்டபூர்வமாக நிர்வகிப்பது தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்தும் நோக்கில் கடன்கள் வரையறுக்கப்பட்டன. நாட்டில் பல்வேறு விடயங்களுக்காக கடன் பயன்படுத்துவதன் காரணத்தினால் வட்டி விகிதத்தை அதிகரிப்பதற்கும், மறுபுறத்தில் கடன் வழங்கும் தரப்பினரும் கடனைக் கட்டுப்படுத்துவதற்கும் காரணமாக அமைந்தது.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று சமீபத்தில் முன்னேற்றமடைந்த நாடு என்ற வகையில் ஜமெய்க்கா ஏற்றுக் கொண்டுள்ள உண்மை என்னவெனில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்து அரசியல் கட்சிகள், பொது மக்கள் உள்ளிட்ட அனைவரினதும் பொதுவான கருத்து ஒன்றாக இருப்பது மிகவும் முக்கியமானது என்பதாகும்.

அவர்கள் அந்த பாதையில் பயணிப்பதன் ஊடாக நெருக்கடி மீண்டும் ஏற்படாது என்பதை புரிந்துகொண்டுள்ளார்கள். சர்வதேச சமூகத்தின் முன் தமது நாடு அவமானப்படுத்தப்பட்டுவிடக் கூடாது எனப் பார்த்துக் கொண்டது ஜமெய்க்கா. இதன்போது அனைவருமே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒரே பாதையில் பயணிப்பது மிக முக்கியமாகும். பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவி பெற்றுக் கொண்டு மீண்டும் மீண்டும் நெருக்கடிக்குள் சிக்கும் நாடுகளுக்கு ஜமெய்க்கா ஒரு முன்னுதாரணத்தை வழங்குகிறது.

சுபத்ரா தேசப்ரிய
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்

# விவாத பிரசார அரசியலால் உயரும் கமலா ஹாரிஸின் மவுசு



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

2024ஆம் ஆண்டு சர்வதேச அரசியலில் ஓர் ஜனநாயகத் திருவிழா காலமாகவே அவதானிக்கப்படுகின்றது. நடைமுறை அரசியலில் ஜனநாயகத்தின் பிரதிபலிப்பு என்பது தேர்தல்களை மையப்படுத்தியே கட்டமைக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் 49 சதவீதமான மக்கள், ஆகக் குறைந்தது 62 நாடுகள், இந்த வருடம் தேர்தலை எதிர்கொள்கின்றன. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் என உலகின் பல பகுதிகளும் தேர்தலை ஒட்டிய உரையாடல்களிலும், அரசியல் மாற்றங்களிலும் அதிக கவனத்தை குவித்துள்ளன. இந்த கவனக் குவிப்பில் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலும், 2025ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளவர் தொடர்பிலான தேடலும் முதன்மை பெறுகின்றது. உலகப் பார்வையில் உலக ஒழுங்கு மாற்றம் பல் துருவ உலக ஒழுங்கு பற்றிய வாதங்களும் தேடல்களும் அதிகமாகின்ற போதிலும், அமெரிக்காவின் முதன்மை தொடர்ச்சியானதாகவே அமைகின்றது. இந்த பின்னணியிலேயே அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளில் தாக்கம் செலுத்தக் கூடிய ஜனாதிபதி வேட்பாளர்களின் விவாத பிரசாரம் சர்வதேச அளவில் பின்தொடரப்படுகின்றது. அறிவியல் தளத்திலும் மறுசீரமைப்பு ஜனநாயகமாக ஆய்வுகள் விரிவுபடுத்தப்படுகின்றன. இக்கட்டுரை அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்களான கமலா ஹாரிஸ் மற்றும் ரொனால்ட் ட்ரம்ப் பங்கு பற்றிய விவாத பிரசார அரசியலின் தாக்கத்தை விளைவை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அறுபதாவது ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரொனால்ட் ட்ரம்பிற்கும் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் கமலா ஹாரிஸிற்கும் இடையிலான முதலாவது ஜனாதிபதி வேட்பாளர் விவாத பிரசாரம் செப்டம்பர் 10 அன்று பிலடெல்பியா எனும் இடத்தில் இடம்பெற்றது. 90 நிமிடங்கள் இடம்பெற்ற விவாதம், வழமையான சம்பிரதாய பூர்வமான முறையில் இரு வேட்பாளர்களின் கைகுலுக்கலுடன் ஆரம்பித்து, கொதிநிலையான களத்தை உருவாக்கி இருந்தது. குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரொனால்ட் ட்ரம்ப் ஏற்கனவே 2017-2020 காலப் பகுதியில் அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக இருந்துள்ளார். இந்நிலையில் அவரது கடந்த கால ஆட்சி இயல்பு, அவரது நடத்தை தொடர்பாக அதிக விமர்சனங்களையும் குற்றசாட்டுகளையும் கமலா ஹாரிஸ் தனது வாதத்தில் தொகுத்திருந்தார். மறுமுனையில் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் நடப்பு நிர்வாகத்தில் துணை ஜனாதிபதியாக உள்ளார். இந்நிலையில் சமகால பொருளாதார பலவீனங்கள், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்காவின் வெளியேற்றம் தொடர்பான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் ரொனால்ட் ட்ரம்ப் தொகுத்திருந்தார். ஒப்பிட்டளவில், ரொனால்ட் ட்ரம்ப் முன்வைத்த குற்றச்சாட்டுகளிலிருந்து கமலா ஹாரிஸ் தன்னை தற்பாதுகாத்துக் கொண்டதாகவும், எனினும் கமலா ஹாரிஸ் முன்வைத்த குற்றச்சாட்டுகளிலிருந்து ரொனால்ட் ட்ரம்பால் பாரியளவில் தன்னை தற்பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்பதும் முதலாவது விவாதத்தின் சாரம்சமாக சர்வதேச அரசியல் அவதானிகளால் குறிப்பிடப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் களமிறங்குவது தொடர்பில் உரையாடப்பட்டது. இச்சூழலில் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு பிரேரிக்கப்பட்ட ரொனால்ட் ட்ரம்புக்கு சாதகமான வாய்ப்புகள் சர்வதேச அரசியல் அவதானிகளால் முன்வைக்கப்பட்டன. கருத்துக் கணிப்புகளும், எதிர்பார்ப்புகளும் ரொனால்ட் ட்ரம்பின் வெற்றி சார்ந்தே அமைந்திருந்தது. ரொனால்ட் ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு, அவருக்கு எதிரான தீர்ப்பை வழங்கியிருந்தது. இருந்தபோதிலும் பைடனின் முதுமை மற்றும் நிர்வாகப் பலவீனங்கள் ட்ரம்பிற்கு சாதகமான சூழலை அடையாளப்படுத்தியது. எனினும் பைடனின் திடீர் பின்வாங்கலும், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரேரிக்கப்பட்டமையும் கருத்துக்கணிப்புகளையும் எதிர்பார்ப்புகளையும் முரண்நிலைக்கு தள்ளியது. ஜனநாயக கட்சிக்கு சாதகமான உரையாடல் எழுச்சி பெற்றது. குடியரசு கட்சியின் உறுப்பினர்களிடையே ட்ரம்புக்கு எதிர்ப்பாகவும், கமலா ஹாரிஸிற்கு ஆதரவாகவும் குழுக்கள் உருவாகி உள்ளன. ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜனநாயக கட்சியின் மாநாட்டில், 200க்கும் மேற்பட்ட குடியரசு கட்சியினை சாந்தவர்கள் கமலா ஹாரிஸிற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்கள். இதில் குடியரசுக்கட்சியின் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான சீனியர் புஷ், ஜூனியர் புஷ் மற்றும் குடியரசுக்கட்சியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர்களான செனட்டர் மிட் ரோம்னி, மறைந்த செனட்டர் ஜொன் மெக்கெய்ன் ஆகியோருக்காக பணிபுரிந்தவர்கள் உள்ளனர். இந்நிலையில் கடந்த வாரம் நிகழ்ந்துள்ள முதலாவது விவாதத்தில் கமலா ஹாரிஸின், அவர் சார்ந்த பார்வையை மேலும் உயர்த்தி உள்ளது. இதனை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகிறது.

முதலாவது, முன் அனுபவம் இல்லாத கமலா ஹாரிஸின் விவாத பிரசாரம் அவரது ஆலோசகர் இடையே மிகுந்த ஆர்வத்தினையும் சந்தேகத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. ஜனாதிபதி விவாதத்தில் தொடர்ச்சியாக இரண்டு முறை பங்குபற்றியுள்ள அனுபவம் வாய்ந்த ரொனால்ட் ட்ரம்பை எதிர்கொள்வது, கமலா ஹாரிஸிற்கான வாய்ப்பை குறைவாகவே நோக்கும் சூழலை ஏற்படுத்தியிருந்தது. எனினும் கமலா ஹாரிஸின் ஆக்ரோஷமான பேச்சுக்கள் அவரது அடிமட்ட ஆதரவாளர்களுக்கு உற்சாகமூட்டியுள்ளது. விவாதத்தின் பிறகு அமெரிக்காவின் பிரபல பாடகி ரெய்லர் ஸ்விப்ற் (Taylor Swift) கமலா ஹாரிஸிற்கான தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். இதனை தொடந்து ஜனநாயக கட்சியின் விளம்பர பதாகைகளில் ஸ்விப்றின் படமும் இணைக்கப்பட்டுள்ளது. ரைம்ஸ் ஸ்குவார் (Times Square) எண்கணிய விளம்பர பதாகையில் ஸ்விப்ற் யுக சுற்றுலா என்ற தலைப்பில் ''நாங்கள் எங்கள் கமலா யுகத்தில் இருக்கிறோம்' என்ற சொற்றொடர் இணைக்கப்பட்டுள்ளது. ஸ்விப்ற் ரொனால்ட் ட்ரம்புடன் வர்த்தக உறவை கொண்டிருந்தமையும், கமலா ஹாரிஸிற்கான ஆதரவை தொடர்ந்து அது விலக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது, முதலாவது விவாதத்தின் பின்னர் கமலா ஹாரிஸின் பிரசார அரங்குகளில் கணிசமான ஆதரவு அதிகரித்துள்ளது. குறிப்பாக வடக்கு கரோலின் மாநிலத்தில் 2008ஆம் ஆண்டு பராக் ஒபாமா பெற்ற வெற்றியே, ஜனநாயக கட்சியினரின் இறுதி வெற்றியாக அமைகின்றது. கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்கே ஆதரவளித்து வருகின்றனர் மக்கள். இம்முறை கமலா ஹாரிஸின் வடக்கு கரோலினா பிரசார அரங்கின் திரள் ஜனநாயக கட்சிக்கான சாதக சூழலையே அடையாளப்படுத்துகிறது. விவாத பிரசாரத்திற்கு பிறகு கடந்த வியாழன் வடக்கு கரோலினாவில் வில்க்ஸ்பார் (WilkesBar), கிரீன்ஸ்போரோ (Greensboro) மற்றும் சார்லோட் (Charlotte) ஆகிய நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட கமலா ஹாரிஸின் பிரசாரங்களில் மணிக்கணக்கில் மக்கள் காத்திருந்தனர். பிரசார அரங்கு வழமைக்கு மாறாக அதிகளவில் நிரம்பியிருந்தது. இது முதலாவது விவாதத்தில் கமாலா ஹாரிஸ் தன் நிலையை உயர்த்தியுள்ளமையையே உறுதி செய்கிறது.



மூன்றாவது, விவாதத்திற்கு பின்னரான கருத்துக்கணிப்புகள் ஹாரிஸின் உணர்வை சுட்டிக்காட்டுகின்றன. Reuters/Ipsosஇன் விவாதத்திற்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 47 சதவீதம் முதல் 42 சதவீதம் வரை ஹாரிஸ் முன்னிலை வகிக்கிறார். பதிலளித்தவர்களில் சுமார் 49 சதவீதம் பேர் ஹாரிஸ் "நான் சொல்வதைக் கேட்டு என் கவலைகளைப் புரிந்துகொள்பவர் போல் தோன்றினார்" என்று கூறியுள்ளனர். ட்ரம்பை 18 சதவீதமானவர்களே அவ்வாறு பார்த்துள்ளனர். துணைத் தலைவரைப் பற்றி இன்னும் அதிகம் தெரியாத அல்லது தேர்தலைச் சந்திக்கும் வாக்காளர்களை வற்புறுத்துவதற்கான ஒரு முக்கியமான வழி என்று ஹாரிஸ் பிரச்சாரம் பார்க்கிறது. இந்த வாரம் அவர்களின் அனைத்து செய்திகளிலும், ஹாரிஸ் பிரசாரம் துணை ஜனாதிபதியின் செய்தியை இயக்க முயற்சிக்கிறது. அவரது புதிய விளம்பரம், தனது விவாதத்தின் இறுதி அறிக்கையின் வரிகளைக் கொண்டிருந்தது. அங்கு அவர் ஒரு வழக்கறிஞராக இருந்தபோது, பாதிக்கப்பட்ட ஒருவரையோ அல்லது ஒரு சாட்சியை அவர்கள் குடியரசுக் கட்சியா அல்லது ஜனநாயகவாதியா என்று ஒருபோதும் கேட்கவில்லை என்று பார்வையாளர்களிடம் கூறினார். தன்னை அனைவருக்குமானவராக ஹாரிஸ் விம்பப்படுத்துவது, சாதகமான வாய்ப்பை உருவாக்குகிறது.

எனவே, ரொனால்ட் ட்ரம்ப் எதிர் கமலா ஹாரிஸ் என்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் போட்டி கணிசமாக ஹாரிஸ் பக்கம் திரும்பும் சூழமைவையே, விவாதத்திற்கு பின்னரான நிகழ்வுகளும் செய்திகளும் வெளிப்படுத்துகின்றன. அமெரிக்க ஊடகங்களும் பகுதியளவில் ஹாரிஸிற்கான ஆதரவு சமிக்ஞையை வெளிப்படுத்துவதையே செய்திகள் புலப்படுத்துகின்றன. விவாதம் ஹாரிஸிற்கான நிலையை உயர்த்தியுள்ள போதிலும், சில அரசியல் அவதானிகள் குறைகளையும் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக, ட்ரம்பைத் தாக்குவதில் தீவிரமாகவும் சளைக்காமல் இருப்பதன் மூலமாக, தன்னை அறியாத வாக்காளர்களுக்கு தன்னை இன்னும் முழுமையாக வரையறுத்துக்கொள்வதில் குறைவான கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்க மாண்பை மாற்றுகிறது என்ற விசனமும் அரசியல் விமர்சகர் மத்தியில் முன்வைக்கப்பட்டுள்ளது.

# மக்கள் விடுதலை முன்னணி இன்று முதலாளிகளின் பொக்கற்றுக்குள்

## முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம்

**நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?**

ஜனாதிபதி தேர்தலுடன் அரசியல் சூழல் குறிப்பிடக்கூடிய அளவில் சிக்கலாகியுள்ளது. முக்கிய வேட்பாளர்கள் தாம் வெற்றி பெறுவோம் என ஒவ்வொருவராகக் கூறிவருகின்றனர். கடன் மீளச் செலுத்தல் இன்னமும் ஆரம்பிக்கப்படாத நாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே சிக்கலான நிலைமை உருவாகும். 21ஆம் திகதிக்குப் பிறகு வெற்றிக்கான போராட்டம் ஆரம்பமாகும்.

**அனைத்து முக்கிய வேட்பாளர்களும் தாங்கள் வெற்றி பெறுவோம், எனவே எமக்கு வாக்களியுங்கள் என்று கூறுகின்றார்கள். அரசியல் கோணத்தில் இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

தான் நாட்டை கட்டியெழுப்பியதால், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சக்தியை தனக்கு கொடுங்கள் என ஜனாதிபதி கூறுகின்றார். சிறந்த திறமைசாலிகள் தன்னிடம்தான் உள்ளார்கள், எனவே தனக்கு ஆதரவு தாருங்கள் என சஜித் பிரேமதாச கூறுகிறார், நாட்டில் மாற்றத்தை உருவாக்க தனக்கு ஆதரவு தாருங்கள் என்றும், பழைய மேட்டுக்குடிகளை விரட்டி, அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதற்கான அதிகாரத்தை தமக்கு வழங்குமாறு அநுர குமார திசாநாயக்கா கூறுகின்றார்.

**இந்த வேட்பாளர்களின் கொள்கை அறிக்கைகளை ஆய்வுக் கண்ணோடு பார்த்தால்...?**

சர்வதேச நாணய நிதியத்துடனான இந்தப் பயணத்தைத் தொடரும் வகையில் எல்லோருமே ஒரே வகையிலான உறுதிமொழிகளையே வழங்கியிருக்கின்றார்கள். வரிக் கொள்கையை மாற்றுவதற்கு எவரிடத்திலும் தெளிவான வழிகள் இல்லை. எனவே நாம் நினைக்கிறோம்; மக்கள் தரப்பிலிருந்து, குறிப்பாக இந்திய அரசியலுக்கு, அதேபோன்று அதானி, அம்பானி போன்றவர்கள் இந்த நாட்டில் சக்தியை பெறுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இவர்களிடத்தில் தீர்வுகள் இல்லை. எல்லா அறிக்கைகளிலும் ஒரே விஷயம் வெவ்வேறு வழிகளில் விளக்கப்பட்டுள்ளது.எனவே, வெற்றி பெற மக்கள் வித்தியாசமான பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

**இந்த பதிலை மேலும் விளக்கினால்...?**

ஜனாதிபதி தெளிவாகவே கூறியிருக்கின்றார், இதுவரை பின்பற்றப்பட்ட கொள்கைகளுக்காக தொடர்ந்தும் முன்நிற்பதாக. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, திடீரென பொருளாதாரம் நின்று போனது. அதற்கு மேலதிக சக்கரங்களைப் பொருத்தி ஜனாதிபதி அங்கிருந்து கட்டியெழுப்பினாலும் மக்கள் மீதான சுமைகள் குறையவில்லை. அதனால்தான் மின்சாரக் கட்டணம், எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு நாம்தான் முதலில் கூறினோம் என சஜித் பிரேமதாச கூறுகிறார். அதாவது பெரும் பணக்காரர்களுக்கு சலுகைகள் வழங்கி சாமானியர்களின் மீது சுமையேற்றுவதுதான் இதன் மூலம் இடம்பெறுகின்றது. அவர்களின் திட்டம் இருப்பதும் அதில் தான்.

இன்றைய நிலையில் அநுரகுமார திசாநாயக்கவும் அந்த இடத்திற்கே வந்துள்ளார். அவர்கள் நேரடியாகச் சொல்லாவிட்டாலும், சர்வதேச நாணய நிதியம் மூலம் மக்களை ஒடுக்குவதே இவர்களின் கொள்கை. மக்கள் விடுதலை முன்னணி பழைய மார்க்சிச நிலையில் இருப்பதாக அச்சத்தை ஏற்படுத்த சஜித் பிரேமதாச முயற்சிக்கிறார். ஆனால் அநுரகுமார திஸாநாயக்க கூட தற்போது வர்த்தகர்களிடம் இலவசக் கல்வி, சுகாதாரத்தை தனியார்மயமாக்கப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கின்றார். எந்தவொரு அரசியல் தலைவரும் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பது எப்படி என்று சரியாக கூறவில்லை. சர்வதேச நாணய நிதியம் காட்டிய பாதையில் செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

**தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார நோக்கினை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

பொருளாதாரத்தை சரியான முறையில் கையாள்வது பற்றி ஜேவிபிக்கு தெளிவான பார்வை இல்லை. கடன் மறுசீரமைப்பு பகுப்பாய்வு செய்யப்படும் என்று கூறப்படுகிறது. எப்படி என்று தெரியவில்லை.

அவர்கள் மேல் நடுத்தர வர்க்கத்தினர் மீதே கவனம் செலுத்தியுள்ளனர். நடுத்தர வர்க்கத்தினர் தங்கள் நிலத்தை விற்றாவது தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியைக் கற்றுக் கொடுக்கக் காத்திருக்கின்றனர். வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப எதிர்பார்க்கின்றனர். அதைச் செய்ய முடியுமா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அதைச் செய்யலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜே.வி.பி கொள்கைகளின்படி, இந்த நாட்டில் கடைசியாக நடக்கப்போவது இலவச சுகாதாரம்; இலவசக் கல்வி இரண்டுமே முதலாளிமார்களின் கீழாவதாகும்.

**அதாவது ஜேவிபி கடந்த காலத்தை மறந்துவிட்டதா? அல்லது கடந்த கால வீரர்களை மறந்துவிட்டார்களா?**

உண்மையில் இன்று ஜேவிபி இல்லையே. ஒவ்வொருவராக இணைந்து கொண்ட தேசிய மக்கள் சக்தியே உள்ளது. முன்னாள் ஜேவிபி உறுப்பினர்கள் அந்த வரலாற்றை நேசிப்பார்கள். ஆனால் ஒன்றுமே தெரியாதவர்களும் இருக்கின்றார்கள், பல்வேறு கலாநிதிகள், பேராசிரியர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு இலக்குகள் உள்ளன. ஆனால் ஜேவிபி செங்கொடியைக் கைவிட்டுவிட்டது.

**இந்தப் பயணத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

நாம் மக்களைப் பற்றியே பார்க்கின்றோம். மக்களின் எதிர்காலத்தைப் பற்றியே பார்க்க வேண்டும். இன்று தேசிய மக்கள் சக்தி இருப்பது முதலாளித்துவ வர்க்கத்துடனாகும். பொது மக்களுக்கான வெற்றி கிடைக்க இருக்கும் ஒரே வழி, வேலைத்திட்டத்துடன் குறுகிய கால சீர்திருத்தங்களை நாம் முன்வைத்திருக்கின்றோம். நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல், தேர்தல் முறை திருத்தம், வரி முறை மாற்றம் என 5 வருடங்கள் கடந்தும் மக்கள் பிரதிநிதிகளை மாற்ற முடியாத முறைமையை மாற்றியமைத்து மக்களை ஈடுபடுத்தக்கூடிய முறைமையை முன்வைத்துள்ளோம்.

**இந்த வரிகளை நீக்குவதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், பொருளாதாரத்தில் இருந்து நாடு வீழ்ச்சியடைவதைத் தடுக்கவும் முடியும் என்று நினைக்கிறீர்களா?**

சம்பாதிக்கும் தொகைக்கு ஏற்ப வரிவிதிப்பு முறை இருக்க வேண்டும். ஆனால், இவர்கள் சிறிய தரப்பினரை நசுக்கும் வரிக் கொள்கையை பணக்காரர்களுக்காக இன்னும் உயர்த்த முயற்சிக்கின்றனர். எரிபொருளைப் போலவே, மின் கட்டணத்திற்கும் ஒரு கொள்கை தேவை. இன்று அதிசொகுசு வாகனங்களைப் போன்று முச்சக்கரவண்டிகளுக்கும் அதே விலையில் எரிபொருளும் வழங்கப்படுகிறது.



மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து போன்ற சிறிய வாகனங்களுக்கு சலுகை விலையில் எரிபொருள் வழங்குவதோடு, சொகுசு வாகனங்களுக்கு அதிக விலையில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும்.

மின்கட்டணமும் அதே போன்றுதான். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு முதல் 30 யூனிட் இலவசமாகவும், 60 யூனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கு மானிய விலையும், அதிக நுகர்வோருக்கு குறிப்பிடக்கூடிய கட்டணத்தையும் வசூலிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் சில வேட்பாளர்கள் பில்லியன் கணக்கில் செலவு செய்வதை நாம் அறிவோம்.

அப்படியானால், சில வேட்பாளர்களுக்குப் பாடசாலைகளுக்கு பஸ்களை வழங்குவதற்கும், நட்பு வகுப்பறைகள் அமைத்துக் கொடுப்பதற்கும் எங்கிருந்து பணம் கிடைக்கின்றது? அதேபோன்று, இன்னும் சிலர் இன்று இடதுசாரிகள் என்று தம்மைக் காட்டிக் கொண்டாலும் அவர்கள் முதலாளி வர்க்கத்தைப் பாதுகாப்பவர்களாக ஆகியிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு தேர்தலில் யார் செலவு செய்கிறார்கள் என்பதைத் தேடிப் பார்க்க வேண்டும்.

சமூக ஊடகங்கள் முழுவதும் விளம்பரங்களை வெளியிட பணம் எங்கிருந்து வருகிறது? அந்தச் செல்வத்தை வழங்கும் வணிக வர்க்கம் இல்லாமல் அவர்களால் அரசியல் செய்ய முடியாது. இடதுசாரி முற்போக்காளர்கள் வடிவில், முதலாளித்துவ வர்க்கத்தைப் பாதுகாக்கும் பயணம் நடைபெறுகிறது.

**நீங்கள் முன்வைத்துள்ள வேலைத்திட்டங்கள் எவை?**

நாங்கள் ஒரு சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளோம். இது சோவியத் யூனியன் அல்லது சீனா போன்ற சோசலிச வேலைத்திட்டம் அல்ல. 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவாறான ஒரு வேலைத் திட்டமாகும்.

காலாவதியான சோசலிச கொள்கைகளை நாங்கள் முன்வைக்கவில்லை. ஒரு புதிய தொடக்கத்திற்கு ஒரு புதிய பொருளாதார நோக்கினை முன்வைக்க வேண்டும். ஏழை, பணக்காரன் என அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்கும் திட்டத்தை நாங்கள் முன்வைக்கிறோம்.

**இச்சந்தர்ப்பத்தில் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

21ஆம் திகதி மக்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்று மக்களை எச்சரிக்கிறோம்.

அரசியல் எழுத்தாளர்

# அமைச்சரவை முடிவுகள்




**1. இலங்கையில் வர்த்தக வசதிப்படுத்தலுக்கான பயண வரைடம்**

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டு. அதில் உள்ளடங்கியுள்ள 36 கடப்பாடுகளை அமுல்படுத்துவதற்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்காக தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவை நிறுவுவதற்கு 2016ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்கீழ் 2017–2030 காலப் பகுதியில் வர்த்தக வசதிகளை அமுல்படுத்தும் திட்டத்தை செயற்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. அதற்கமைய அரச மற்றும் தனியார் துறையை சேர்ந்த 200 தரப்பினரின் பங்கேற்புடன் 'இலங்கைக்கான வர்த்தக வசதிப்படுத்தல் பயண வரைபடம்' மற்றும் 'வர்த்தக வசதிப்படுத்தல் செயற்திட்டம் 2025 2028' தயாரிக்கப்பட்டுள்ளது.

**2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் சர்வதேச வர்த்தக நிலையம் ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்திடுதல்.**

சர்வதேச வர்த்தகத்தில் இலங்கைப் பெண்களால் நெறிப்படுத்தப்படும் வியாபாரங்களின் பங்கேற்பு மற்றும் போட்டியை அதிகரிப்பதற்காக சர்வதேச வர்த்தக நிலையத்துடன் நிதிசாரா புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை முன்மொழிந்துள்ளது. அதன் மூலம் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புகள்போன்ற சர்வதேச வர்த்தகம் தொடர்பில் பயிற்சி பெறுதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப உதவியை பெறுவதற்கான இயலுமை கிடைக்கும்.

**3. IFC Colombo 1 மற்றும் Gateway International Campus ஆகியவற்றை மூலோபாய முக்கியத்துவமுள்ள ஆரம்ப வியாபாரங்களாக பெயரிடுதல்.**

ஒரு வியாபாரத்தை மூலோபாய முக்கியத்துவம் உள்ள வியாபாரம் என பெயரிடுதல் மற்றும் மேலே சொல்லப்பட்ட வியாபாரத்துக்கு விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த ஏற்பாடுகளின் கீழ் அதிகாரம் பெற்ற நபர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள IFC Colombo 1 மற்றும் Gateway International Campus ஆகியவற்றை மூலோபாய முக்கியத்துவமுள்ள ஆரம்ப வியாபாரங்களாக பெயரிடுவதற்கும், மேற்குறிப்பட்ட வியாபாரத்துக்கு விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**4. காசநோய்தொற்றுக்குள்ளானோர் மத்தியில் தடுப்பு சிகிச்சைகளை மேம்படுத்துவதற்கான ஆய்வை மேற்கொள்ளுதல்**

இலங்கையில் இரண்டாவது முன்னிலையில் உள்ள தொற்றுநோய் காசநோய் என்பதுடன், தொற்றுநோய் காரணமாக ஏற்படும் மரணங்களுக்கு பிரதான காரணமாகவும் உள்ளது. 2021 ஆம் ஆண்டில் காசநோய் தடுப்பு சிகிச்சை தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ற வகையில் இலங்கைக்கும் வழிகாட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, காசநோய் தடுப்பு மற்றும் மார்பு நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பராமரிப்பு மாதிரியின் வினைத்திறனை அவதானிப்பதற்காக காலி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

**5. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிய இலக்கம் 135, பெரஹறா மாவத்தை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள காணித் துண்டை கலப்பு அபிவிருத்தி கருத்திட்டத்துக்காக 99 ஆண்டு குத்தகைக்கு விடல்.**

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிய பெரஹறா மாவத்தை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள 02 ரூட் 35.95 பேர்ச்சஸ் காணித் துண்டை கலப்பு அபிவிருத்தி கருத்திட்டத்துக்காக 99 ஆண்டு குத்தகைக்கு விட ஆர்வமுள்ள முதலீட்டாளர்களிடம் முன்மொழிவு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய தெரிவு செய்யப்பட்டுள்ள குளோபல் லீசிங் லிமிட்டட்டுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் குறித்த காணித் துண்டை வழங்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபை மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கலந்துரையாடல் கூட்டுக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**6. ஸ்ரீலங்கன் விமான சேவையுடன் தொடர்புடைய தரித்தல் சேவைக்கு இயக்க செயற்பாட்டு முகவரைத் தெரிவு செய்தல்.**

ஸ்ரீலங்கன் விமான சேவையுடன் தொடர்புடைய தரித்தல் சேவைக்கு இயக்க செயற்பாட்டு முகவரைத் தெரிவு செய்வதற்காக தேசிய போட்டி விலைமனு முறைமையைப் பின்பற்றி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கு ஏற்ப விபரங்களுடன் கூடிய பதிலளிப்பை சமர்ப்பித்துள்ள ஒரேயொரு விலைமனுதாரரான Lanka Sportreizen நிறுவனத்துக்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**8. மெஹாவோட் 1 தொடக்கம் 5 வரையான கொள்ளளவு கொண்ட 165 மெஹாவோட் வரையான மொத்த கொள்ளளவு கொண்ட நிலத்தில் நிர்மாணிக்கப்படும் சூரிய சக்தி மின்னழுத்த மின்னுற்பத்தி நிலையத்தை உருவாக்குதல்.**

20 உப நிலையங்களுக்கு 165 மெஹாவோட் கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளது. அனுராதபுரம், காலி மற்றும் தெனியாய உப நிலையங்கள் தவிர ஏனைய இடங்களுக்கு ஒப்பந்தம் வழங்குவதற்கு 2024.09.02 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**9. இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கு உரிய நீர்த்தேக்கங்களின் மேல் மிதக்கும் சூரிய சக்தி கருத்திட்டத்தை அமுல்படுத்துதல்.**

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்காக தற்போதுள்ள நீர்மூலங்களின் மேல் மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது. அதற்கமைய, மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரந்தெனிகல, மொரகஹகந்த மற்றும் கலாவாவி ஆகிய 03 பிரதான நீர்த்தேக்கங்களை மஹாவலி அதிகாரசபை அடையாளம் கண்டுள்ளது.

மேற்குறித்த இடங்கள் தொடர்பாக ஏற்கனவே சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, ரந்தெனிகல, மொரகஹகந்த மற்றும் கலாவாவி ஆகிய நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக போட்டிப் பெறுகை முறைமையின் கீழ் முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு அதிகாரத்தை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. தண்டனைச் சட்டக் கோவை (திருத்த) சட்டம்**

ஏதாவது முறையில் மேற்கொள்ளப்படும் உடல் ரீதியான தண்டனைகளை தடை செய்வதற்காக தண்டனைச் சட்டக் கோவையை திருத்தம் செய்தல் மற்றும் அதற்காக பொருத்தமான சட்டத்தை தயாரிப்பதற்காக 2024.04.29 திகதி அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞர் தயாரித்துள்ள சட்ட வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. மேலே சொல்லப்பட்ட சட்ட வரைபை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதன் பின்னர் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# புதிய தொழில்நுட்பத்தை வழங்கிய விவசாயப் புரட்சி

**உர மானியம்**

விவசாயிகளுக்கு உர மானியமாக 20,000 ரூபாய் வழங்கப்பட்டது. பெரும் போகத்தில் நெல் அறுவடை குறைந்ததன் காரணமாக 2022 ஜனவரி முதல் இலங்கை அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. அரிசியின் விலை மிக விரைவாக உயரும் என மக்கள் எதிர்பார்த்த போதிலும், சிறு போகத்தில் நல்ல விளைச்சல் இருந்ததால், சுமார் 1.8 மில்லியன் சிறந்த நெல் அறுவடையினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதுவரை 8 லட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் 300 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. 2022 பருவத்தின் தொடக்கத்தில், நாட்டிற்கு தேவையான போதுமான யூரியா உரம் கொண்டுவரப்பட்டது. இவற்றைப் பெற விவசாயிகளின் கணக்கில் 20,000 ரூபாய் மானியமாக அரசால் வழங்க முடிந்தது. இந்த வசதியால், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். அதனால், பெரும் போகத்தில் 3.5 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் அறுவடை செய்ய முடிந்தது. இதனால், 2023இல், ஆண்டு முழுவதும் ஒரு அரிசி மூட்டை கூட இறக்குமதி செய்யப்படவில்லை. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி 2023 ஆம் ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்பட்டது.

2023ஆம் ஆண்டு 15,000 ரூபா உர மானியம் வழங்கப்பட்டதோடு, இந்த ஆண்டு பருவ போகத்தில் உரத்தின் விலை 12,000 ரூபாவாக குறைக்கப்பட்டது. இயற்கை சீற்றங்களால் நெல் அறுவடைக்கு இடையூறு ஏற்படவில்லை. 2023 பருவத்திலும் நல்ல நெல் அறுவடையைப் பெற முடிந்தது. அதேபோன்று, முதன்முறையாக குறைந்த விலையில் சேற்று உரத்தை வழங்க முடிந்தது. தற்போது ஒரு மூட்டை யூரியா உரத்தின் விலை 42,000 ரூபாயில் இருந்து 8000 ரூபாயாக குறைந்துள்ளது. 2022ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 5 பயிர் பருவங்களில் உர மானியத்திற்காக மட்டும் 55,000 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தின் போது இடம் பெற்ற விடயங்களாகும்.

**இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி**



அரிசியில் நாடு தன்னிறைவு அடைந்ததால், பால், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியும் உயர்வடைந்தது. 2021இல் உரப் பிரச்சினையால், உள்ளூர் சோளச் செய்கை வீழ்ச்சியடைந்தது. எமது வருடாந்த சோளத் தேவை 6 லட்சம் மெட்ரிக் தொன்களாகும். ஆனால் சராசரி உள்நாட்டு உற்பத்தி 4.5 லட்சம் மெட்ரிக் தொன்களாகும். மீதியானது இறக்குமதி செய்யப்படுகின்றது. ஆனால் உரப் பிரச்சினையால் சோள உற்பத்தியும் 50% குறைந்துள்ளது. எனவே, 400,000 மெற்றிக் தொன்களுக்கு மேல் மீண்டும் இறக்குமதி செய்ய வேண்டியிருந்த போதிலும், இலங்கையில் அப்போது டொலர் பிரச்சினை இருந்தமை இதனை சவாலாக மாற்றியது. இதன் காரணமாக 3000 கோழிப்பண்ணைகள் மூடப்பட்டன. சில பண்ணைகள் கால்நடைகளை இறைச்சிக்காக விற்றன. இதனால் பெரும் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டது. தினசரி முட்டை உற்பத்தி 7 மில்லியனாக இருந்தாலும், அது 3.8 மில்லியனாக குறைந்துள்ளது. முட்டை விலையும் உயரத் தொடங்கியது. இதன் காரணமாக முதன்முறையாக முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. கோழி இறைச்சிக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றாலும் எதிர்காலத்தில் அது நிகழும் அபாயம் இருந்தது. இதன் காரணமாக சோளம் இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட உரிமங்களை ரத்து செய்து கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் பண்ணை தொழிலதிபர்களுக்கு மட்டும் உரிமம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதே சமயம் சோளச் செய்கைக்கும் மானியம் வழங்கப்பட்டதோடு, மூடப்பட்ட பண்ணைகளை மீட்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக இலங்கை தற்போது கோழி இறைச்சி மற்றும் முட்டையில் தன்னிறைவு அடைந்துள்ளது. தினசரி முட்டை உற்பத்தியை 8 மில்லியனாக அதிகரிக்க முடிந்துள்ளது.

மேலும், அதிகரித்துள்ள முட்டை விலையை கணிசமாக குறைக்கவும் முடிந்துள்ளது. கோழி இறைச்சியின் விலை 1750 ரூபாவாக அதிகரித்த போதிலும் அது தற்போது 850–900 ரூபாவாக குறைந்துள்ளது. கோழி இறைச்சியின் தினசரி தேவை 500 மெட்ரிக் தொன்களாகும். இது தற்போது 600 மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

**புதிய தொழில்நுட்பத்தின் மூலம் அதிக பால் உற்பத்தி**

தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கடைப்பிடிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஹைலண்ட் 400 கிராம் பால்மா பொதியின் விலை 75 ரூபாவினாலும், 1 கிலோகிராம் பைக்கற் ஒன்றின் விலை 190 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது. மில்கோ நிறுவனம் தினசரி பால் சேகரிப்பை 2 லட்சம் லிட்டர் வரை உயர்த்தியதால் இந்த குறைப்பு சாத்தியமாகியுள்ளது.

தற்போது மில்கோ நிறுவனத்திற்கு அதிக அளவில் பால் வந்து கொண்டிருப்பதோடு, மேலும் திறன் அதிகரித்ததன் பலன் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றது.

புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தியதன் மூலம் தினசரி பால் உற்பத்தியை அதிகரிக்க முடிந்துள்ளது. மேலும் பசு மாடுகளை அதிக அளவில் அறிமுகப்படுத்த வேண்டும்.

நமது நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற கறவை மாடுகளை பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இந்த இரு நாடுகளும் 2023இல் தங்கள் விலங்குகளை வெளியே விடக்கூடாது என்ற வரம்பை விதித்திருந்தன.

ஆனால் அந்தந்த நாடுகளின் தூதுவர்களுடன் ஜனாதிபதி நடத்திய கலந்துரையாடலின் பலனாக அடுத்த வருடம் இந்தியாவின் சாஹிவால் மாடு இனமும் பாகிஸ்தானின் நுரா மாடு இனத்தையும் இலங்கைக்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த ஆண்டு இந்தியாவில் இருந்து மாடுகள் வரவழைக்கப்படுவதால், பால் உற்பத்தி அதிகரிக்கும். 2025ஆம் ஆண்டை இலங்கையின் பால் உற்பத்தி ஆண்டாக விவசாய அமைச்சு பெயரிட்டுள்ளது.

**சாதனை படைத்த திரப்பனை விவசாயத் தொழில்நுட்பம்**

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அதிக விளைச்சலைப் பெறுவதற்காக புதிய விவசாய தொழில்நுட்பத்தை எமது விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார். தற்போது, எங்கள் அறுவடைக்கான நிலம் வரையறைக்குட்பட்டதாகும். சுமார் 8,12,000 ஹெக்டேயர்களாக உள்ள நெற்செய்கை நிலங்களில் பாரம்பரிய விவசாயத்தின் மூலம் அதிக விளைச்சலையும், வருமானத்தையும் பெற முடியாததால், இருக்கும் நிலத்தில் அதிக விளைச்சலைப் பெற வேண்டும் என்பதால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியமானது. புதிய விவசாய தொழில்நுட்பத்தை நாட்டிற்குள் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், திறப்பனையைச் சேர்ந்த 120 விவசாயிகளுக்கு புதிய விவசாய தொழில்நுட்பங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. உள்ளூர் சந்தையில் தேவைப்படும் பயிர்கள் மீது கவனம் செலுத்தும் நோக்கிலாகும்.



திறப்பனையில் இந்த உபகரணங்களைப் பெற்ற பெரும்பாலான விவசாயிகள் மிளகாய் செய்கையில் ஈடுபட்டனர். அவர்கள் பயன்படுத்தியது High Density Crop System எனப்படும் அதிக அடர்த்தி பயிர் முறையைப் பயன்படுத்தினர். சராசரியாக அரை ஏக்கரில் விளையும் மிளகாய்ச் செடிகளின் எண்ணிக்கை 6000. ஆனால் இந்த அதிக அடர்த்தி சாகுபடி முறையில் அரை ஏக்கரில் 13,000 மிளகாய் செடிகளை வளர்க்கலாம்.

15 ஆம் பக்கம் பார்க்க...

எம். எஸ். முஸப்பிர்

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

வத்தளை, ஹுணுப்பிட்டிய ஜயந்தி மஹால் சந்தி பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் வர்த்தகக் காணி விற்பனைக்கு. 071 4240384, 071-4240383. 059352

**237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்**

அதி நவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக் கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55,000.00 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு - 0112 201 700. 063352

## வேலைவாய்ப்பு

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

அவிசாவளையில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு வாகன உதிரிப் பாகங்கள் பற்றிய ஆர்வம் காட்டுகின்ற கணனி அறிவுடைய பயிற்சி பெற்ற/ பெறாத ஊழியர்கள் தேவை. 077 9081395. 063519

**310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்**

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க்குழாய் கம்பனியான Allied Traing International (pvt) Ltd நிறுவனத்திற்கு ஆங்கில மொழி மற்றும் கணனி அறிவுடைய ஆண்/பெண் இலிகிதர்க ள் தேவை. கொழும்புக்கு அருகில் இரு ப்போர் மட்டும் அழையுங்கள். 070 3598858/ 011 7397777/ 077 77760 95 (இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு -12.) 063291

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

ரைஸ், கொத்து, ரைஸ் அன்ட் கறிக்கு பாஸ் ஒருவர் தே வை. தம்பதிக்கும் தங்குமிடம் உண்டு. கையுதவிக்கு பெண் அல்லது' ஆண் தேவை. 071-6650750. 063264

**325 தொழில்துறை பொது**

கொழும்பு 12 ஆமர் வீதியில் நடத்திச் செல்லப்படும் பிரபல நீர்க்குழாய் கம்பனிக்கு களஞ்சிய உதவியாளர்/ தொழிலாளர்கள் தேவை. வயது 25 இற்குக் கீழ் நாளாந்த சம்பளம் 1500 முதல் அதற்குமேல். கொழும்புக்கு அருகில் உள்ளவர்கள் மட்டும். 076 9973978/ 074 3747920. (இல. 301, பழைய சோனகத்தெரு. கொழும்பு -12.) 062779




## காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

மிகவும் பெறுமதியான காணி பத்தரமுல்ல துட்டுகெமுனு மாவத்தையில் (13.8 பேர்ச்) (150 இலட்சம்) வீட்டுடன் காசுத் தேவைக்காக உடன் விற்பனைக்கு. 075-9608530. 063622

**623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு**

நுவரெலியா நகரம் 35 பேர்ச் விற்பனைக்கு. 3.5 மில்லயன் (ஒரு பேர்ச்) 070 2445566. 062988

**626 வீடு சொத்து பதுளை மாவட்டம் விற்பனைக்கு**

பதுளை நகரில் சகல வசதிகளுடனான இருமாடி வீடு விற்பனைக்கு. 20 மில்லியன். 077 3051865/ 071-0330356. 063797

# தமிழர்களின் ஒற்றுமையை உலகறியச் செய்வோம்






உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் ஜேர்மனியிலிருந்து துரை கணேசலிங்கம் "எமது தாய் மண்ணில் அடக்கப்பட்டு வாழும் ஒரு இனமாகவும் புலம்பெயர் நாடுகளில் ஒரு ஆரோக்கியமான இனமாகவும் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களாகிய நாம் ஒன்று பட்டே உள்ளோம் என்பதையும் எமது வாக்குகளுக்கும் ஒரு பலம் உண்டு என்பதையும் உலகிற்கு காட்டுவதற்காக பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம்.

எனவே எதிர்வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் வாக்கை தமிழ்ப் பொது வேட்பாளர், பா. அரியநேத்திரனுக்கு அளித்து நமது அடையாளத்தை நிரூபிப்போம்!" இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் துரை கணேசலிங்கம் அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளார்.

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராக தற்போது நடா ராஜ்குமார் பணியாற்றி வருகின்றார்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் துரை கணேசலிங்கம், எமக்கு தமிழ் மக்களை ஒன்றுதிரட்டி தமிழ் தேசியத்தின் பலத்தை நிரூபிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிட்டியுள்ளது. எனவே நாம் அதைப் பயன்படுத்துவோம். எமது பொது வேட்பாளரின் வெற்றிக்காக உழைக்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பங்களித்து வருகின்றனர்.

எனவே எமது தாயக மக்களின் நலன்களுக்காகவும் இனத்தின் ஒற்றுமையை காட்டுவதற்காகவும் எதிர் வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் முதலாவது வாக்கை தமிழ்ப்பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எமது அடையாளத்தை நிரூபிப்பர்!" இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் ஜேர்மனியிலிருந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய தொழில்நுட்பத்தை...(14 ஆம் பக்க தொடர்ச்சி)

**இளைஞர்களுக்கான இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள்**

இந்த விஞ்ஞான ரீதியான முறைகளின் கீழ், அந்தந்தப் பகுதிகளுக்குப் பொருத்தமான பயிர்ச்செய்கை முறைகள் கண்டறியப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பல செய்கைகள் உள்ளன. TE JC மாம்பழச் செய்கை பல வறண்ட பிரதேசங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அதிக அடர்த்தி சாகுபடி முறையின் கீழ், ஒரு ஏக்கருக்கு 560 மாங் கன்றுகளை வளர்க்கலாம். பாரம்பரியமான முறையில், அந்த தொகை 84 ஆகும். புளிப்பு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் நோக்கில் மூன்று திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், வெல்லவாய முள் அனோனா, மொனராகலை பெசன் புறூட், அன்னாசி, மாதுளை, நிலக்கடலை போன்ற பல பயிர் வளர்ப்புகள் தற்போதைய ஜனாதிபதியின் காலத்தில் இனங்காணப்பட்டு ஊக்குவிக்கப்பட்டன. ஒரு புதிய வகை ஆனைக் கொய்யா வகையில் உடலுக்கு ஏற்ற வெண்ணெயை உற்பத்தி செய்யப் படுவதோடு, அவை வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஒரு புதிய தூரியன் இனம் ஏற்றுமதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் ஆரஞ்சுக்கான விசேட தேவையை கருத்தில் கொண்டு, ஆரஞ்சு செய்கை வலயம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் இளைஞர்களை ஈடுபடுத்தும் வகையில் இந்த ஆண்டு இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள் தொடங்கப்பட்டன.

**நெல் அறுவடையினை இரட்டிப்பாக்க பாராசூட் தொழில்நுட்பம்**

கடந்த காலங்களில் உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதற்கு மனித உழைப்பைக் குறைக்க ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இதற்காக கமநல சேவை நிலையங்களுக்கு 250 ட்ரோன்கள் வழங்கப்பட்டன. நான்கு மணி நேரத்தில் 100 ஏக்கரில் இதன் மூலம் பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்களைத் தெளிக்கலாம். ஜனாதிபதியின் மற்றுமொரு விசேட நிகழ்ச்சியாக இருப்பது அடுத்த 5 பயிர்ச்செய்கை காலங்களில் இலங்கையில் அரிசி விளைச்சலை இரட்டிப்பாக்குவதாகும். நெல் விதைத்து அதிக அறுவடையினை பெற முடியாது என்பதால் பாராசூட் என்ற புதிய தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் களைக்கட்டுப்பாடு மூலம் உரங்களை குறைவாக பயன்படுத்தி நல்ல விளைச்சலைப் பெறலாம். இந்த பாராசூட் தொழில்நுட்பம் 50% மானியத்தில் வழங்கப்பட்டது. 1 ஹெக்டேருக்கு சுமார் 1000 பாராசூட் டிஸ்க்குகள் தேவை. இந்த தொகையில் நான்கில் ஒரு பங்கை அவர்கள் கொள்வனவு செய்ய வேண்டும். மீதி நான்கில் மூன்று பங்கு அரசாங்கத்தால் வழங்கப்படும். இவ்வாறு அன்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் அம்பாந்தோட்டை மற்றும் உடவளவ பிரதேச விவசாயிகள் இலங்கையில் முதன்முறையாக ஒரு ஹெக்டேருக்கு 13 மெற்றிக் தொன் நெல் அறுவடையை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

**புதிய நெல் வகைகளை அறிமுகப்படுத்தல்**

புதிய இனங்களை அறிமுகப்படுத்தியதால், அரிசி உற்பத்தியில், கடந்த காலங்களில் கீரி சம்பா தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால் தற்போது சந்தையில் போதுமான அளவு கீரி சம்பா உள்ளது. மேலும் அதன் விலையும் குறைந்துள்ளது. இவ்வாறு விலையைக் குறைக்க முடிந்தமைக்கு காரணம் இந்த பருவ பெரும் போகத்தில் மட்டும் 81,000 ஹெக்டேரில் கீரி சம்பா செய்கை பண்ணப்பட்டதாகும். அதேபோன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Ac 378 என்ற அரிசி வகை இலங்கையில் அதிக அறுவடையைத் தரும் அரிசி வகையாக மாறியுள்ளது.இலங்கையின் குளங்கள் பல வருடங்களாக புனரமைக்கப்படவில்லை என்பது மற்றுமொரு பிரச்சினையாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023ஆம் ஆண்டு குளங்களைப் புனரமைப்பதற்காக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு 3000 மில்லியன் ரூபாவை வழங்கினார்.


# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

Servisco THE ULTIMATE SERVICE PROVIDER 077 385 35 40 011 4 367 267
මළ අපද්‍රව්‍ය ප්‍රවාහනය
Domestic & Industrial Sewage/ Waste Water Disposing



LUXURY HOUSE FOR SALE IN KANDY
28.5 Perches, 02 Unit house for sale in Heerassagala, Kandy. 6 bedrooms, 4 bathrooms, Living, Pantry, Maids room, ample Parking with a beautiful Garden



Beautiful Scenic Neighbourhood
QUICK SALE 54.5 Million
Contact: 0772 257 225 / 0777 784 020

Land for Sale @ Kalawana



Bare Land of 2 acre bordering beautiful Kukulegala next to Sinharaja Rain Forest is for immediate sale Ideal for eco tourism project or tea cultivation
Price 5 Million
Call - 0773 856 597

KELANIYA
BRAND NEW LUXURY VILLA TO LET OR LEASE
FACING OLD KANDY ROAD
Two Storeyed 3 Bedrooms, Attached Toilets, Hot Water, A/C, Living, Dining, Kitchen, TV Room, Maid's area, Double Car Porch in Gated Community, 24 hour Security, Gym, Swimming pools, Kid's Play area etc.



NO AGENTS OR BROKERS
0714 701 950, 0722 930 638

02 Blocks of Lands for Sale



02 Blocks of land each 8.4 perches at 1st Wimaladharmasooriya Mawatha at Pallekele 'Gam Udawa' 30 meters away from Mahiyangana - Colombo main road is for Sale.
076 88 63 642

හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මගින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

வணிக கட்டிடம் உடனடி விற்பனைக்கு உண்டு
Panchikawatta Road, Maradana, Colombo - 10.
ஒரு பெரிய கடையும் ஆறு சிறிய கடைகளையும் ஒரு படுக்கை அறையையும் உடைய இரண்டு மாடி கட்டிடம் விற்பனைக்கு உண்டு.
90 மில்லியன் (விலை பேசித்தீர்மானிக்கலாம்)
தொடர்புகளுக்கு :
0775 242 459 (வட்சப்பில் மட்டும் அழைக்கவும்.)

Sun Lanka SANY



Brand New stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

FOR RELIEVING
JOINT PAINS & DIFFICULTIES IN CLIMBING STAIRCASES UP & DOWN, WALKING AND STANDING UP.
100% Natural
MIRACLE REMEDY FOR CURING JOINT DISORDERS INTERNALLY.
DEEGAYU JOINTHEALER PLUS
COMPLETE CURE AFTER 4 WEEKS USE.
ONLY RS.2490.00 TO BE DELIVERED TO YOUR DOORSTEP.
DEEGAYU HELA OSU COMPANY
KANDY ROAD, KALAGEDIHENA
(IN FRONT OF FILLING STATION.)
0117 673 402
0710 397 399 / 0710 397 644
JOIN AILMENT CLINIC - ON EVERY SUNDAY FROM 9.30 A.M. TO 5.00 P.M.



தார் பதித்தல்
காபட் பதித்தல் அனைத்து மூலப்பொருட்களுடன்
- ඉන්ටර්ලොක් ගල් ඇතිරීම
- පෞද්ගලික පාරවල්
- කර්මාන්තශාලා පාරවල්
- ලෑන්ඩ්සේල් පාරවල් කාපට් ඇතිරීම හා තාර යෙදීම
- බොරළු යොදා පාරවල් සකස්කිරීම හා කොන්ක්‍රීට් කිරීම
- කාර් පාර්ක් කොන්ක්‍රීට් කිරීම හා කාපට් කිරීම

உங்களது வீட்டில் அல்லது நிறுவனத்தில் அனைத்து நிர்மாணப் பணிகளும் ஒரே இடத்திலிருந்து
அப்சரா குளோபல் ஹோல்டிங்ஸ்
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ. 0778 383 834
Email - asankasameera417@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

HOKANDARA
MEEGAHAWATTA ROAD
10 PERCH LAND FOR IMMEDIATE SALE
Water & electricity, small house & Slab, 1km to Vidyala Junction, 2km to Hokandara Town, 2.5km to Kottawa & Pannipitiya Town, 75 metres to Kottawa- Malabe Main Road



Rs. 1,450,000/- P. P.
071 870 93 39

BENTOTA
40 PERCHES LAND AND HOUSE FOR SALE
IDEAL FOR TOURISM
- Close Proximity to Taj Hotel/ Avani Hotel
- Bentota Beach - 1km
- Bentota River - 500m
- 15 ft. wide Road Access to the Land
- Electricity & Pipe borne Water Available

077-4 306 289/ 071-0 370 318
0112-160 971

# விளையாட்டு



# ஓவல் வெற்றியுடன் நியூசிலாந்தை எதிர்கொள்ளும் இலங்கை

லண்டன், ஓவல் மைதானத்தில் இலங்கை அணிக்கு இனியும் டெஸ்ட் போட்டி கொடுப்பது பற்றி இங்கிலாந்து அணி ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசிக்கும். 1998 இல் சனத் ஜயசூரியவின் இரட்டைச் சதம் மற்றும் முரளியின் 16 விக்கெட்டுகளுடன் இங்கிலாந்து மண்ணில் இங்கிலாந்தை முதல்முறை டெஸ்ட் போட்டியில் வீழ்த்தியதும் இந்த ஓவல் மைதானத்தில் தான். அதன் பின்னர் ஓவலில் முதல்முறை களமிறங்கிய இலங்கை மீண்டும் ஒருமுறை வெற்றியீட்டி இருக்கிறது.

அதனால் ஓவலில் இலங்கை அணி நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியை பதிவு செய்திருக்கிறது. ஆனால் கடந்த முறையை விடவும் இம்முறை பெற்ற வெற்றி முக்கியம் என்கிறார் இலங்கை இடைக்கால பயிற்சியாளர் சனத் ஜனசூரிய.

'சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்னர் அர்ஜுன (ரணதுங்கவின்) கீழ் நாம் இங்கு வெற்றிபெற்றோம். முரளி 16 விக்கெட்டுகளை வீழ்த்திய தோடு நான் இரட்டைச் சதம் பெற்ற நிலையில் அரவிந்த (டி சில்வா) 150 ஓட்டங்களை பெற்றார்' என்று கடந்த காலத்தை நினைவுகூர்கிறார் சனத்.

'அதனால் நாம் ஓவல் மைதானத்தை ஒருபோதும் மறப்பதில்லை. ஆனால் போட்டிச் சூழலை பார்க்கும்போது இம்முறை முழுமையாக வித்தியாசமாக இருந்தது. புற்கள், காலநிலை என கடினமாக இருந்ததோடு அனைத்துமே மேகமூட்டத்துடன் குளிராக இருந்தது. வீரர்களுக்கே அனைத்துப் பாராட்டும் சேர வேண்டும்' என்கிறார் சனத்.

இங்கிலாந்து அணி அடுத்தடுத்து மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் இலங்கைக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்ற நிலையிலேயே ஓவலில் களமிறங்கியது.

எனினும் இலங்கை அணியின் போட்டித் தந்திரத்தை இங்கிலாந்து எதிர்பார்த்திருக்காது. முதலில் சுழற்பந்து வீச்சாளர் கசுன் ராஜித்தவை இருக்கையில் வைத்துவிட்டு நான்கு வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியது பெரும் திருப்பம்.

மற்றது முதல் இரு டெஸ்டிலும் இலங்கை அணிக்கு தலையிடியாக இருந்த ஜோ ரூட்டை இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஓட்டம் பெறாமல் கட்டுப்படுத்தியது சாதாரணமாகச் செய்திருக்க முடியாது. அவரை கட்டுப்படுத்துவதற்காக போட்டி உத்தியுடன் இலங்கை களமிறங்கி இருப்பது அவருக்கு எதிராக பந்துவீசிய பாணியை பார்த்தாலே புரிந்துவிடும். இதனால் ஜோ ரூட்டினால் இரண்டு இன்னிங்ஸ்களிலும் முறையே 13, 12 ஓட்டங்களையே பெற முடிந்தது.

மற்றொரு முக்கியமான மாற்றம் மூன்றாவது டெஸ்டில் பத்தும் நிசங்கவை ஆரம்ப வீரராக களமிறக்கியது. முதல் இரு டெஸ்டிலும் சோபிக்கத் தவறிய ஆரம்ப வீரர் நிஷான் மதுஷ்கவுக்கு பதில் குசல் மெண்டிஸை அழைத்ததாலேயே பத்துமுக்கு ஆரம்ப வீரராக களமிறங்க முடிந்தது.

போட்டியின் முதல் இன்னிங்ஸில் 64 ஓட்டங்களைப் பெற்ற பத்தும், இலங்கைக்கு 219 வெற்றி இலக்கை நிர்ணயித்தபோது வேகமாக துடுப்பெடுத்தாடி 124 பந்துகளில் 13 பெண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 127 ஓட்டங்களை சேர்த்து வெற்றிக்கு உதவினார்.

பத்தும் நிசங்க டெஸ்ட் கிரிக்கெட்டில் பெற்ற இரண்டாவது சதம் இதுவாகும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் டெஸ்ட் அணிக்கு அழைக்கப்பட்ட அவர் தாம் டி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போன்றே டெஸ்ட் கிரிக்கெட்டிலும் ஒரு தேர்ந்த வீரர் என்பதை நிரூபித்திருக்கிறார்.

ஓவல் டெஸ்ட் வெற்றி இலங்கை அணி இங்கிலாந்துக்கு எதிராக கடந்த பத்து ஆண்டுகளில் பெறும் முதல் வெற்றியாகவும் இருந்தது. என்றாலும் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணியால் ஓவல் டெஸ்டை வென்றதற்கு என்ன தொடரை வெல்ல முடியாமல் போனது.

## தொடர் தோல்வி

இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியில் ஆடுவதென்பது சவாலானது என்றபோதும் முதல் இரு டெஸ்டிலும் இலங்கை அணி தோற்றதற்கு மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதாக முழுமையாக குறைகூற முடியது. போட்டித் தந்திரத்தில் இருந்த ஓட்டைகள், சின்னச் சின்னத் தவறுகள் முழு தொடரையும் இழக்கச் செய்துவிட்டது.

முதலில் அணியில் இருந்த அனுபவ வீரர்கள் சோபிக்கத் தவறியது பெரிய குறை. மற்றது ஆரம்ப வீரர்கள் ஆடுகளத்தில் நின்றுபிடிக்காது இருந்தது முழு துடுப்பாட்ட வரிசையும் சரிவுக்குத் தள்ளிவிட்டது.

மான்செஸ்டரில் நடந்த முதல் டெஸ்டில் பத்தும் நிசங்க அழைக்கப்படாதது பெருத்த கேள்விகளைத் தந்தது. நிஷான் மதுஷ்க ஆரம்ப வீரராக அணியில் சற்று ஸ்திரமான நிலையை தக்கவைத்திருந்ததால் பத்துமுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று எடுத்துக் கொள்ளலாம்.

என்றாலும் முதல் டெஸ்டில் இலங்கை அணியால் கடைசி வரை சரிக்கு சமமாக போட்டியிட முடிந்தது. இரண்டாவது இன்னிஸில் கமிந்து மெண்டிஸின் அபார சதத்தின் மூலம் இலங்கை அணிக்கு 326 ஓட்டங்களைச் சேர்க்க முடிந்தபோதும் இங்கிலாந்து அணிக்கு சலாவான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க முடியாமல்போனது.

லண்டன் லோட்ஸில் நடந்த இரண்டாவது டெஸ்டிலும் இதே நிலைதான் பத்தும் நிசங்க அணிக்கு அழைக்கப்பட்டார். என்றாலும் துடுப்பாட்ட வரிசை தடுமாற்றம் கண்டது. மீண்டும் ஒருமுறை கமிந்து மெண்டிஸ் முதல் இன்னிங்ஸில் தனியே 74 ஓட்டங்களைப் பெற்ற போது அவரைச் சுற்றி வேறு எவரும் இன்னிங்ஸ் ஒன்றை கட்டியெழுப்ப முடியாமல் போனது. இதனால் போட்டி முழுவதும் அதன் தாக்கம் தெரிந்தது.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இலங்கையின் அனுபவ துடுப்பாட்ட வீரர்களான திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தினேஷ் சந்திமால் ஆகிய மூவரும் ஒரு சாதாரண ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தால் கூட போட்டி முடிவை இலங்கைக்கு சாதகமாக்கி இருக்க முடியும்.

தினேஷ் சந்திமால் ஐந்து இன்னிங்ஸ்களில் 2 அரைச்சதங்களுடன் 177 ஓட்டங்களைப் பெற்றதோடு, அஞ்சலோ மத்தியூஸ் 6 இன்னிங்ஸ்களில் ஒரு அரைச் சதத்துடன் 158 ஓட்டங்களையே பெற்றார். திமுத் கருணாரத்னவால் 6 இன்னிங்ஸ்களிலும் 1 அரைச்சதத்துடன் 108 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதனாலேயே அடிக்கும் ஐம்பது ஓட்டங்களால் வீரருக்கும் பயனில்லை, அணிக்கும் பயனில்லை, நாட்டுக்கும் பயனில்லை என்று சனத் ஜயசூரிய கடிந்துகொண்டார்.

என்றாலும் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் கமிந்து மெண்டிஸின் ஆட்டம் குறிப்பிடும்படியாக இருந்தது. இலங்கை அணிக்காக இந்தத் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்றவரான கமிந்து தொடரில் மூன்றாவது அதிகூடிய ஓட்டங்களை பெற்றவராகவும் மாறினார். அவர் தனது 5 இன்னிங்ஸ்களிலும் ஒரு சதம் இரண்டு அரைச்சதங்களுடன் 267 ஓட்டங்களைப் பெற்றார். இதன் ஓட்ட சராசரி 62.97 ஆகும்.





எனினும் அவரது துடுப்பாட்ட வரிசையில் இன்னும் கரிசனை காட்டுவது முக்கியம். அவர் ஏழாவது வரிசையில் துடுப்பெடுத்தாட வரும் போது சில நேரம் பின்வரிசை வீரர்களுடன் தான் ஆட வேண்டி இருக்கும். சில நேரம் அது கால தாமதமானதாக இருக்கவும் கூடும்.

தொடர்ந்து சோபித்து வருவதால் அவரை சற்று முன்னால் களமிறக்கினால் இன்னும் ஓட்டங்களை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. என்றாலும் அவர் தொடர்ந்து மத்திய பின்வரிசையிலேயே களமிறக்கப்படுவதற்கு கூறப்படும் விளக்கங்களும் முழுமையாக பொருந்துவதாக இல்லை.

அதாவது அவர் ஏழாவது வரிசையில் சிறப்பாக ஆடுவதாலேயே அந்த இடத்தில் களமிறக்கப்பவதாக அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இந்தப் பார்வையை மாற்றிக் கொண்டால் எதிர்காலத்தில் அணிக்கு உதவியாக இருக்கும்.

மற்றது இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் அசித்த பெர்னாண்டோ சிறப்பாக செயற்பட்டு இலங்கை டெஸ்ட் அணியில் நம்பிக்கை தரும் வீரராக மாறி இருப்பதோடு மிலான் ரத்னாயக்க பந்துவீச்சில் மாத்திரம் அன்றி துடுப்பாட்டத்திலும் அவசரத்துக்கு உதவுகிறார்.

எனவே, இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் சாதக, பாதகங்களை சரியாக புரிந்துகொண்டாலேயே எதிர்காலத்திற்கு உதவியாக இருக்கும்.

## நியூசிலாந்து டெஸ்ட்

இங்கிலாந்தில் இருந்து நாடு திரும்பிய விரைவிலேயே இலங்கை அணி சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடப்போகிறது. இலங்கையில் ஜனாதிபதி தேர்தலுக்கு மத்தியில் எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி காலியில் ஆரம்பமாகிறது.

செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் இருப்பதால் நவீன டெஸ்ட் கிரிக்கெட்டில் மிக அரிதான நிகழ்வாக அன்றைய தினம் போட்டிக்கு இடையே ஓய்வு நாளாக உள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டியும் காலியில் நடைபெறுவதோடு அந்தப் போட்டி செப்டெம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் பெற்ற உற்சாகத்துடன் இலங்கை அணி இந்தத் தொடரை எதிர்கொள்வது முக்கியம் என்றபோதும் இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியை சந்தித்ததற்கான குறைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதும் முக்கியம்.

இதில் குறிப்பாக டெஸ்ட் அணியில் குசல் மெண்டிஸின் இடம் என்பது நாளுக்கு நாள் கேள்விகளையே அதிகரித்திருக்கிறது. முதல் வரிசை துடுப்பாட்ட வீரராக களமிறங்கும் குசல் மெண்டிஸ் ஒரு பயனுள்ள டெஸ்ட் வீரராக தம்மை காட்டிக் கொள்ள தவறி வருகிறார்.

மான்செஸ்டர் டெஸ்டின் 24 மற்றும் 0 ஓட்டங்களை பெற்ற நிலையில் இரண்டாவது டெஸ்டில் அவர் நீக்கப்பட்டார். என்றாலும் ஓவல் டெஸ்டில் அவர் மீண்டும் அழைக்கப்பட்ட நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

இதற்காக அவரை தொடர்ந்து தக்கவைக்க நினைப்பது தர்க்கரீதியில் சரியாக தெரியவில்லை.

இங்கிலாந்து தொடரில் அணியுடன் சென்று வாய்ப்புக் கிட்டாத சதீர சமரவிக்ரம அதேபோன்று தற்போது தென்னாபிரிக்கா சென்றிருக்கும் இலங்கை ஏ அணிக்காக உத்தியோகபூர்வமற்ற முதல் டெஸ்டில் சதம் பெற்ற ஒஷத பெர்னாண்டோ போன்ற வீரர்களை பயன்படுத்த முடியும்.

இலங்கை அணி தனது சொந்த மண்ணில் ஆடுவதால் நியூசிலாந்துக்கு சவால் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை மண்ணில் ஆடிய 17 டெஸ்ட் போட்டிகளில் 7 இல் வென்று 5 இல் தோற்றிருப்பதோடு 5 போட்டிகள் சமநிலையில் முடிந்துள்ளன.

எனினும் நியூசிலாந்து அணி முழு ஏற்பாட்டுடன் இலங்கை வருவதோடு இலங்கை அடுகளத்திற்கு முகங்கொடுப்பதற்காக இலங்கை முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத்தையும் இந்தத் தொடருக்கு பயிற்சி அளிக்க நியமித்திருக்கிறது.

அதேபோன்று நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்சிப் பட்டியலில் இடம்பெறுவதாலும் இலங்கைக்கு முக்கியமானது.

## உலக டெஸ்ட் சம்பியன்சிப்

உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இன்னும் 12 தொடர்கள் (30 டெஸ்ட்கள்) எஞ்சியுள்ளன. இதன் முதலிடத்தை பிடிப்பதற்கான போட்டி தீவிரம் அடைந்துள்ளது. அதாவது இந்தப் புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகளே அடுத்த ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி லண்டன், லோட்ஸில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

ஓவல் டெஸ்டில் வெற்றியீட்டியதன் மூலம் இலங்கை அணி இந்தப் புள்ளிப்பட்டியலில் 42.83 புள்ளி வீதத்துடன் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியது. இதன் முதலிடத்தில் இந்தியாவும் (68.52), இரண்டவது இடத்தில் அவுஸ்திரேலியாவும் (62.50) இருப்பதோடு மூன்றாவது இடத்தில் நியூசிலாந்து (50.00) காணப்படுகிறது.

எனவே, உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவது என்பது இலங்கையை பொறுத்தவரை இலகுவானதல்ல. இந்தப் பருவத்தில் இலங்கைக்கு நியூசிலாந்துடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளுடன் தென்னாபிரிக்காவுடனும் அவுஸ்திரேலியாவுடனும் தலா இரண்டு டெஸ்ட் போட்டிகள் உள்ளன.

இலங்கை எஞ்சியுள்ள இந்த ஆறு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றியீட்டினால் அது 69.23 புள்ளி வீதத்துடன் இந்தப் பருவத்தை பூர்த்தி செய்ய முடியும்.

இந்தப் புள்ளிகள் இலங்கை அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் செல்ல போதுமானது. ஆனால் தொடர்ந்து ஆறு டெஸ்ட் போட்டிகளை வெல்வதென்பது சாதாரணப்பட்டதல்ல.

ஒருவேளை இலங்கை அணி ஆறில் ஐந்தில் வென்றால் அதன் புள்ளி வீதம் 61.54 ஆக இருக்கும். இதுவும் இறுதிப் போட்டிக்கான எதிர்பார்ப்பை தக்கவைக்க போதுமானது.

இதிலே நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளை இலங்கை அணி சொந்த மண்ணில் ஆடவிருப்பதோடு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டை எதிரணியின் மண்ணில் ஆடவுள்ளது.

எஸ்.பிர்தௌஸ்...



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# படித்ததும் பகர்வதும் 208

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### தவறாமல் வாக்களிப்போம்!

இலங்கையின் இவ்வருட ஜனாதிபதி தேர்தல் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. முழு நாடுமே பரபரப்போடும், ஆர்வத்தோடும் இத்தேர்தலை எதிர்பார்த்து இருப்பது குறிப்பிடத்தக்கது. இம்முறை தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் வெற்றிக்கான போட்டியில் ஒரு சிலரே முன்னணி வகிக்கின்றனர். குறிப்பாக முதல் மூன்று இடங்களுக்கு கடுமையான போட்டி நிலவுகிறது.

மிக முக்கியத்துவம் வாய்ந்த இத்தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்ற அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டியது அவசியமாகும். கவனயீனமாகவோ, பொடுபோக்காகவோ உதாசீனமாகவோ பொறுப்பின்றி வாக்களிக்காமல் இருப்பது மிக மோசமான விடயமென்பதோடு, கட்டாயமாக கண்டிக்கப்பட வேண்டிய தவறுமாகும் என்பதை ஒவ்வொரு வாக்காளரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்..



ஒவ்வொருவரும் தாம் விரும்புகின்ற, தாம் தேர்ந்தெடுக்கின்ற எந்த வேட்பாளருக்கேனும் வாக்களிக்கும் உரிமை பெற்றவராக இருக்கின்றனர். இவ் அரிய உரிமையை எவராலும், மறுக்கவோ, தடுக்கவோ முடியாது. இதனை உணர்ந்து எல்லோரும் தவறாது தமது வாக்குரிமையை பயன்படுத்துவதில் கூடிய ஆர்வமும் கரிசனையும் காட்டுதல் வேண்டும்.

எவருக்கு வாக்களிப்பது என்பதை பொறுத்த மட்டில் அது அவரது எதிர்பார்ப்பு, தேர்வு, விருப்பு சம்மந்தப்பட்டதாகும். அதில் தலையிடும் உரிமை வேறு எவருக்கும் இல்லை. கணவன் மனைவியாக இருந்தாலும், பெற்றோர் பிள்ளைகளாக இருந்தாலும், சகோதர சகோதரிகளாயினும், முதலாளி தொழிலாளிகளாயினும், உயர் அதிகாரிகள் அவர்களின் கீழ் வேலை செய்பவர்கள் என எப்படி இருந்தாலும், யாரும் யாரையும் குறித்த ஒரு வேட்பாளருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தவோ, வற்புறுத்தவோ முடியாது. அப்படி வற்புறுத்தினாலும் கூட அத்தகையவருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்ற கட்டாயமோ, கட்டுப்பாடோ, கடப்பாடோ வாக்களிப்போருக்கு இல்லை. இதனை ஒவ்வொருவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

எது எவ்வாறாயினும் நமக்கு நன்மை செய்யக்கூடியவர், நாட்டுக்கு நல்லது செய்ய உறுதி கொண்டிருப்பவர், மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னின்று உழைப்பவர் சரியான, சிறப்பான பொருளாதார திட்டத்தை முன்வைத்திருப்பவர், சகலரும் சம உரிமையோடு வாழக்கூடிய வகையில் சட்ட ஆட்சியை நிலைநிறுத்தும் உறுதியோடு இருப்பவர், நாளைய சமுதாயம் நன்றாக அமைந்திட நல்ல செயற்திட்டங்களை திட்டமிட்டிருப்பவர், இன, மத, மொழி, கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமான முறையில் சேவையாற்றக் கூடியவர் எனும் முக்கிய விடயங்களில் எந்த வேட்பாளர் கூடுதல் தகுதி பெறுகிறாரோ அவருக்கு வாக்களிப்பதே நமக்கும், நாட்டுக்கும் நல்லதாக அமையும்.

‘வாக்களிப்பது’ என்பதே ஜனநாயகத்தின் அதி உயர்ந்த உரிமை. அதனை பயன்படுத்தாது விட்டு விடுவது அல்லது ஆர்வமின்றி ஒதுங்கியிருப்பது மிகப் பெரிய பொறுப்பற்ற தன்மையாகும். என்பதை சரியாக விளங்கி, இங்கு குறிப்பிட்டுள்ளவற்றை நன்கு உணர்ந்து, நமது வாக்குகளை பெறுமதி மிக்கவையாக ஆக்கிடுவோம். நமது வாக்குகளை வீணாக்கிவிடாமல், தவறாது, சரியாக வாக்களிக்க உறுதி கொள்வோம்.

## சட்டமும் நாமும்

### தேர்தலில் வாக்களிக்க விடுமுறை!

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது பொது (Public), மற்றும் தனியார் துறை (Private) ஊழியர்கள் வாக்களிப்பதற்காக விடுமுறை அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

ஊழியர்களுக்கான உரிய விடுமுறை ஏற்பாடுகள், அவர்களின் ஊதிய இழப்பு, மற்றும் தனிப்பட்ட விடுப்பு ஒதுக்கீடுகளில் பாதிப்பின்றி வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும் வகையில் அமைய வேண்டுமென தேர்தல் ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

வழிகாட்டுதல்களின்படி, பணியாளர்கள் பணியிடத்திலிருந்து அவர்கள் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடிக்கு உள்ள தூரத்தின் அடிப்படையில் பின்வருமாறு விடுமுறை வழங்கப்படும்.

40 கிலோமீட்டர் அல்லது அதற்கும் குறைவான தூரத்திற்கு அரை நாள் லீவு.

40 முதல் 100 கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரு நாள் லீவு.

100 முதல் 150 கிலோமீட்டர் தூரத்திற்கு ஒன்றரை நாட்கள் லீவு.

150 கிலோமீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு இரண்டு நாட்கள் லீவு.

வாக்காளர்கள் தங்களது வாக்குச் சாவடிகளுக்குச் சென்று திரும்ப மூன்று நாட்கள் ஆகும் சந்தர்ப்பங்களில், மூன்று நாள் விடுமுறை அளிக்குமாறு முதலாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

இவ் விசேட விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ள ஊழியர்கள் எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனை செய் மனமே

### தனிமையை நாடினால்...!

ஒரு வைர வியாபாரி வீட்டிலிருந்து எலி ஒன்று, மிகவும் விலை உயர்ந்த ஒரு வைரத்தை விழுங்கிவிட்டது. அதனால் அதிர்ச்சியடைந்த வியாபாரி, ஒரு எலி பிடிப்பவனை அழைத்து வந்தான். அவனைப் பார்த்து எப்படியாவது அந்த எலியை பிடித்து அல்லது சாகடித்து அதன் வயிற்றில் இருக்கும் வைரத்தை எடுக்க உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

எலி பிடிப்பவனும் தன் சிறிய துப்பாக்கியுடன் வந்தான். அந்த எலியை தன் துப்பாக்கியால் சுட முயன்றான். அந்த எலியும் அங்கே இங்கே என்று போக்குக் காட்டி ஓடியது.



இந்த களேபரத்தில் திடீரென்று அங்கே நூற்றுக்கணக்கான சக எலிகள் அந்த எலியோடு ஒன்று கூடிவிட்டன. ஆனால் அந்த நூற்றுக்கணக்கான எலிகளுக்கிடையேயும் அந்த வைரம் விழுங்கிய எலி மட்டும் எலிக் கூட்டத்தோடு சேராமல் தனித்தே ஒதுங்கி ஓடிக்கொன்டிருந்தது .

கூட்டத்தோடு சேராமல், வைரம் விழுங்கிய எலி தனியாக ஓடியமை எலி பிடிப்பவனுக்கு வசதியாகப் போய்விட்டது. சரியாக குறி பார்த்து அந்த எலியை சுட்டான். எலி அங்கேயே சுருண்டு விழுந்தது. வைர வியாபாரி சந்தோஷமாக அந்த எலியின் வயிற்றைக் கிழித்து தனது வைரத்தை எடுத்துக் கொண்டான்..

ஆனால் அவனுக்கு ஆச்சரியம். நூற்றுக்கணக்கான எலிகளுக்கு மத்தியில் அதனை அவன் எவ்வாறு இலகுவாக சுட முடிந்தது? எலி பிடிப்பவனைப் பார்த்து வைர வியாபாரி கேட்டான். "ஆமா. அந்த எலி மாத்திரம் மற்ற எலிகளோடு சேராமல் தனியே தனித்தே இருந்ததே. நீயும் அதை சரியாக அடையாளம் கண்டு இலேசாக சுட்டுவிட்டாயே! என்ன காரணம்?”

அந்த எலி பிடிப்பவன் பதில் சொன்னான், “இப்படித்தான். பலபேர், திடீர் பணக்காரர்கள் ஆனதும் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர் என்ற எண்ணம் கொண்டு மற்றவர்களுடன் சேராமல், தன்னை தனிமைப்படுத்தி மற்றவர்களை தூரத்தில் வைத்துக் கொள்வார்கள். அதுவே அவர்களுக்கு வினையாக அமைந்துவிடுகிறது. அத்துடன் ஆபத்தில் அவர்களுக்கு உதவாமல் போய்விடுகிறது. இந்த எலியின் நிலையும் இதுதான்." என்றான்.

நம் உறவுகளும் இப்படித்தான் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து நடந்துகொள்ள வேண்டும். சிலர் இடையில் வந்து அழிந்து போகும் செல்வத்தை நம்பி கடவுள் கொடுத்த உறவுகளை அசட்டை செய்துவிட்டு விடுகிறார்கள். ஆயிரம் கோடி செல்வம் இருந்தாலும் சொந்த பந்தமும், நல்ல நட்புமுமே கடைசி வரையில் நம்முடன் இருக்கும். வசதியுடன் இருக்கும் போது உறவுகளிடமும், நண்பர்களிடமும் அன்பை காட்டுவோம்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மையல்லவா?

## வாசித்ததில் வசீகரித்தது

### வேற்றுமையில் ஒற்றுமை!

இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் சேர்ந்து வாழ்ந்த தம்பதிகளில் சிறந்த தம்பதியை தேர்ந்தெடுத்து அந்த தம்பதிக்கு ஒரு கார் பரிசு வழங்குவது என்று ஒரு நிறுவனம் முடிவு செய்து விளம்பரம் செய்தது. நூற்றுக்கணக்கான தம்பதிகள் இப்போட்டியில் கலந்து கொண்டார்கள்.

அதில் ஒரு தம்பதியில் மனைவி தன் கணவனிடம்,''அப்படி என்னத்த பெருசா வாழ்ந்து கிழிச்சிட்டோம்னு, நான் சொல்ல சொல்ல கேக்காம இந்த போட்டிக்கு கூட்டிட்டு வர்றீங்க '' என்று சண்டையிட்டு கொண்டே உள்ளே வந்தார்.

கொஞ்ச நேரத்தில் போட்டி தொடங்கியது கணவன் மனைவியைத் தனித்தனியாக அழைத்து நிறைய கேள்விகள் கேட்டார்கள். கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் ஓரளவுக்கு சரியான பதிலை சொன்னார்கள்.



அதில் ஒரு தம்பதி சொன்ன பதில்கள் அரங்கத்தையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. யாரிடமும் இல்லாத அளவிற்கு அவர்களிடத்தில் அவ்வளவு ஒற்றுமையும் பரஸ்பர புரிதலும், விட்டு கொடுத்தலும் நிறைந்திருந்தது. அவர்களுக்கு கிடைத்த மதிப்பெண் 100/100 இருக்கும் என்று எல்லோருமே பேசிக்கொண்டார்கள். அவர்கள் தான் ஜெயிக்கப் போகிறார்கள் என்று பெரும்பாலானோர் முடிவு செய்து விட்டார்கள்.

எல்லோரிடமும் கேள்வி கேட்டு முடித்த பின் அதி கூடிய மதிப்பெண்கள் வாங்கிய அந்த சிறந்த தம்பதியையும், மிக மிகக் குறைவாக மதிப்பெண் வாங்கிய தம்பதியையும் மேடைக்கு அழைத்தார்கள்.

மிகக் குறைவாக மதிப்பெண் வாங்கியது வேறு யாருமல்ல. உள்ளே வரும் போதே சண்டை போட்டுக் கொண்டு வந்தார்களே அவர்கள் தான். இரண்டு தம்பதிகளும் மேடைக்கு வந்தார்கள்.

மிகக் குறைவாக மதிப்பெண் பெற்ற தம்பதியை அழைத்து காதல் திருமணமா என்று கேட்க இல்லை. பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றார்கள். எத்தனை குழந்தைகள் என்றதற்கு ‘நான்கு’ என்றார்கள். திருமணம் ஆகி எவ்வளவு வருடங்கள் ஆகிறது என்றதற்கு ‘35 வருடங்கள்’ என்று சொன்னார்கள். அதைக்கேட்டு எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

‘35 வருடங்களாகியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவில்லையே!’ என்று ஏளனமாய் கேலி பேசினார்கள். அவமானம் தாங்கமுடியாமல் அவர்களுக்கு அழுகை வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்கள்.

போட்டியின் நடுவர் இந்த போட்டியில் கலந்துகொண்ட அனைத்துத் தம்பதிகளிலும் ‘மிகச்சிறந்த தம்பதி இவர்கள்’ தான் என்று அறிவித்து மிகக் குறைவாக மதிப்பெண் பெற்ற அந்தத் தம்பதிக்கு காரை பரிசளித்தார். அதனைப் பார்த்து அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே நடுவர் தனது முடிவுக்கான காரணத்தைக் கூறினார்.

“எல்லாவித மனப்பொருத்தங்களோடும், புரிதல்களோடும் இருபத்தைந்து வருடங்கள் வாழ்வது பெரிய விஷயம் கிடையாது. எந்த ஒரு மன ஒற்றுமையும், புரிதலும் இல்லாவிட்டாலும் 35 வருடங்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சேர்ந்து வாழ்ந்திருக்கிறார்களே! இது தான் உண்மையிலேயே மிகப்பெரிய விஷயம்” என்று பாராட்டினார்.

இருவரும் ஆனந்தக் கண்ணீரோடு கார் சாவியை வாங்கிக் கொண்டு செல்ல, எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி பாராட்டினார்கள்.

## கொஞ்சம் சிரிங்க!

### மனைவியும்! விவாகரத்தும்!!

ஒரு விவாகரத்து வழக்கில் கணவனை நோக்கி நீதிபதி கேட்டார்,

நீதிபதி: "உங்க மனைவியை விவாகரத்து செய்ய காரணம் என்ன?"

கணவன்: "அய்யா! நான் ஏற்கனவே ரொம்ப நொந்து போயிருக்கேன். நீங்களும் வெந்த புண்ணில் வேல பாய்ச்சாதீங்க. எந்த கேள்வியா இருந்தாலும் முதலில் வக்கீலை என் மனைவியிடம் கேக்க சொல்லுங்க. பிறகு நீங்களே விவாகரத்துக்கான காரணத்த புரிஞ்சுப்பீங்க.

சரி! என்று நீதிபதி கூற, அரசாங்க வக்கீல் அவனின் மனைவியை குறுக்கு விசாரணையை செய்ய ஆரம்பித்தார்.

வக்கீல்: அடிப்படையில் உங்களுக்குள் என்ன பிரச்சினை?

பெண்: அடுப்படியில பிரச்சினை எதுவும் இல்லைங்க.

வக்கீல்: அது இல்ல மேடம், உங்களுக்கிடையில் என்ன தகராறு?"

பெண்: எங்க கடையில தகராறு எதுவுமில்லையே, நல்லாத்தானே ஓடுது?

வக்கீல்: அடடா... உங்க தாம்பத்ய உறவில் என்ன சங்கடம் என்று அறிய இந்த நீதிமன்றம் விரும்புகிறது.

பெண்: தாம்பரத்தில எங்களுக்கு உறவுக்காரங்க யாருமில்லைங்க. இருந்தாத்தானே சங்கடம்.

வக்கீல்: உங்கள் கணவர் மீது கருத்து வேறுபாடு ஏதாவது இருக்கா?

பெண்: அவரு கறுப்புதாங்க. நானும் கறுப்புதான். அதனால வேறுபாடு ஏதும் இல்லைங்க.

வக்கீல்: உங்க வீட்டுக்காரரோட என்ன சண்டை?

பெண்: வீட்டுக்காரரோட எதுக்குங்க சண்டை? மாசம் ஒன்னாம் தேதி வீட்டு வாடகையை வாங்கிட்டு அவரு பாட்டுக்கு போயிடறாரு.

வக்கீல்: (கோபத்துடன்) இதோ பாருமா,உனக்கு விவாகரத்து வேணுமா?

பெண்: அய்யோ வேணாங்க. எங்கிட்ட ஏற்கனவே மூணு "விவாஹறா பட்டு" இருக்குங்க. நீங்க வேற வாங்கி தந்தா என் கணவர் சந்தேக படுவாருங்க.

இதற்கு மேல் அந்த வக்கீலால் தாங்க முடியவில்லை. மிகவும் சத்தமாக கோபத்துடன்,

வக்கீல்: “உங்க வீட்டுக்காரர் எதுக்காக விவாகரத்து கேட்கிறார்?"

பெண் : ஓ..அதுவா? என்னோட பேசறப்ப எல்லாம் மாரடைப்பு வந்துடுதாம். நீங்க இப்ப எங்கூட நல்லாத்தான் பேசிகிட்டு இருக்கீங்க. உங்களுக்கென்ன மாரடைப்பா வந்தது இதுக்கு போயி விவாகரத்து கேக்குறாருங்க.

கடைசியில் அந்த வக்கீல் தன் நெஞ்சில் கை வைத்தபடி மாரடைப்பால் கீழே விழுந்தார்.

## நொறுக்குத் தீனி

### அப்படியும்! இப்படியும்!!

- பணம் இல்லாத போது ஹோட்டல்ல வேலை செய்தாலும் வீட்டுக்கு வந்து சாப்பிடுகிறான். ஆனால் பணம் இருக்கும் போது வீட்டுல சமைத்தாலும் ஹோட்டல்ல சாப்பிடுகிறான்.
- பணம் இல்லாத போது வயிற்றை நிரப்ப சைக்கிளில் சுற்றித் திரிகிறான். ஆனால் பணம் இருக்கும் போது தொப்பையைக் குறைக்க சைக்கில் ஓட்டுகிறான்.
- பணம் இல்லாத போது சோற்றுக்காக அலைகிறான். பணம் இருக்கும் போது சொத்து சேர்ப்பதற்காக அலைகிறான்.
- பணம் இல்லாத போது பணக்காரன் போல் நடந்து கொள்கிறான். ஆயினும் பணம் இருக்கும் போது மற்றவரை ஏமாற்றுவதற்காக, போலியாக ஏழையாகக் காட்டிக்கொள்கிறான்.
- நிம்மதியாக இருக்கும் போது பணத்தைத் தேடுகிறான். ஆனால் பணம் இருக்கும் போது நிம்மதியைத் தேடுகிறான்.
- பணமில்லாதபோது பாயில் படுத்தும் நிம்மதியாக தூங்கினான். பணம் நிறைய சேர்ந்த போது பஞ்சணையில் படுத்தும் தூக்கமின்றி தவிக்கிறான்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207


# இலங்கை சுற்றுலா விருது 2024




சுற்றுலா தொழில்துறையில் சேவை வழங்குநர்கள் மற்றும் பங்குதாரர்களின் சிறப்பை பாராட்டும் வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பத்தாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ‘இலங்கை சுற்றுலா விருது வழங்கல்’ இந்த ஆண்டில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான நோக்கங்களாக சுற்றுலா துறை சேவைகளின் தரத்தை மேம்படுத்தல், சிறந்த பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலா துறையில் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் ஆகியவையாகும்.

**உங்களது விண்ணப்பங்களை சமர்ப்பித்து சுற்றுலா துறையில் சிறந்தவர்கள் இடையே இணையுங்கள்!**

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது 2024 செப்டெம்பர் 24ஆம் திகதி வரை திறந்திருக்கும்**

விண்ணப்பப் படிவம் மற்றும் அது சார்ந்த விபரங்களை www.tourismawards.lk என்ற இணையதளத்தில் இருந்து பெறவும்.

## விருது பிரிவுகள்

1. **சாதாரண விருதுகள்**
   - i. சுற்றுலா துறையின் முன்னோடிகளுக்கான விருது
   - ii. சுற்றுலா தொழில்முயற்சி
2. **விசேட ஜூரி விருது**
   **சுற்றுலா துறையில் இளைஞர்கள் பங்களிப்பு**
   - i. மாணவர்கள் (19 வயதுக்கு குறைந்தது)
   - ii. இளைஞர் (20 தொடக்கம் 30 வயது)

## சர்வதேச விருது வென்றோர்

3. **சுற்றுலா தங்குமிடம்**
   **சுற்றுலா ஹோட்டல் (வகைப்படுத்தப்பட்டது)**
   - i. ஐந்து நட்சத்திரம் (நகர்புறம்)
   - ii. ஐந்து நட்சத்திரம் (Resort)
   - iii. நான்கு நட்சத்திரம் (நகர்புறம்)
   - iv. நான்கு நட்சத்திரம் (Resort)
   - v. மூன்று நட்சத்திரம் (நகர்புறம்)
   - vi. மூன்று நட்சத்திரம் (Resort)
   - vii. இரண்டு நட்சத்திரம்
   - viii. ஒரு நட்சத்திரம்
   - ix. வேறு சுற்றுலா ஹோட்டல்கள்
   - x. விருந்தோம்பல் இல்லங்கள் (A தரம்)
   - xi. பாரம்பரிய ஹோட்டல், பங்களா, இல்லம்
   - xii. ஆயுர்வேத ஹோட்டல்

   **விசேட தங்குமிடம்**
   - i. புட்டிக் ஹோட்டல் (Boutique Hotel)
   - ii. புட்டிக் வில்லா (Boutique Villas)

   **மேலதிக சுற்றுலா தங்குமிடம்**
   - i. சுற்றுலா விருந்தோம்பல் இல்லம்
   - ii. சுற்றுலா பங்களா

   **இயற்கை, சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகள்**
   - i. பாரிய தங்குமிட அலகு
   - ii. சிறிய தங்குமிட அலகு (சுற்றுச்சூழல் தங்குமிடங்கள், நிலையான முகாம்கள், தள முகாம்கள், கூடாரங்கள்)
4. **பிரத்தியேக சுற்றுலா சேவைகள்**
   - i. Spa & Wellness Center
   - ii. சுற்றுலா நீர் விளையாட்டு நிலையங்கள்/ சேவை வழங்குநர்கள்
   - iii. சாகச (Adventure) சுற்றுலா மேம்பாடு மற்றும்/ அல்லது வழங்குநர்கள்
   - iv. சமூக அடிப்படையிலான சுற்றுலா திட்டங்கள்
5. **சுற்றுலா சேவைகளில் பேண்தகு பயன்பாடுகள்**
   - i. சுற்றுலா ஹோட்டல்களில் சிறந்த பேண்தகு பயன்பாடுகள்
   - ii. மேலதிக சுற்றுலா சேவைகளின் சிறந்த பேண்தகு பயன்பாடுகள்
   - iii. பிரத்தியேக சுற்றுலா சேவைகளின் சிறந்த பேண்தகு பயன்பாடுகள்
   - iv. சிறிய மற்றும் நடுத்தர அளவான பிரிவுகளின் சிறந்த பேண்தகு பயன்பாடுகள் (தங்குமிடம் அறைகள் 10க்கு குறைவு) (ஊழியர்கள் 10க்குக் குறைவு)
6. **சுற்றுலா உணவகங்கள்**
   - i. தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா உணவகங்கள்
   - ii. உள்நாட்டை அடிப்படையாகக் கொண்ட இலங்கை உணவகங்கள்
7. **சுற்றுலா மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர் சுற்றுலா முகவர் - (Inbound)**
   - i. பெரிய பிரிவு
   - ii. நடுத்தர பிரிவு
   - iii. சிறிய பிரிவு

   நம்பிக்கைக்குரிய பயண உதவியாளர் (வெளிநாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர்)
8. **விசேட அடையாளம் காணப்பட்ட விருதுகள் (நேரடி/ மறைமுகம்)**

   விமான சேவை மூலம் சுற்றுலாத் துறைக்கு ஆற்றும் பங்களிப்பை பாராட்டும் வகையில் வழங்கப்படும் விருது.
   - i. வருடத்தின் பட்டய விமான சேவை செயற்பாட்டாளர்
   - ii. அட்டவணை (Scheduled) விமானசேவை (அங்கீகார விருது)
   - iii. தேசிய விமான சேவை
   - iv. சர்வதேச விமான சேவை
   - v. குறைந்த செலவு கொண்ட விமான சேவை
9. **கப்பல் செயற்பாட்டாளர் (Cruise line)/ வழங்குநர்/ வசதிகள் வழங்குநர்**
10. **MICE சுற்றுலாத் துறை**
    - i. தொழில்முறை MICE ஏற்பாட்டாளர்
    - ii. MICE இடம் - கூட்டம், மாநாடு, கண்காட்சி
11. **டிஜிட்டல் சுற்றுலா மற்றும் சந்தைப்படுத்தல்**
    - i. ஒருங்கிணைந்த டிஜிட்டல் பரப்புரை
    - ii. இலங்கையை விளம்பரப்படுத்தும் சிறந்த வெளிநாட்டு ஊடகவியலாளர் (மின்னணு மற்றும் அச்சு)
    - iii. சுற்றுலாத் துறை தொடர்பான செயலி (Apps)
    - iv. ஷதொழில்முயற்சி முகாமைத்துவ கட்டமைப்பு
    - v. சுற்றுலாத் துறை சார்ந்த பல்வேறு தொழில்நுட்பங்கள்
12. **சுற்றுலா கல்வி மற்றும் பயிற்சி**
    - i. பெரிய பிரிவு
    - ii. சிறிய பிரிவு
      - பயணம் மற்றும் சுற்றுலா சார்ந்த பயிற்சி நிறுவனங்கள்
      - பயணம் மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் தொடர்பான கற்கைகளை நடத்தும் பல்கலைக்கழகங்கள்
      - AITA/PATA போன்ற சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட (accredited) நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.
13. **சேவையின் சிறப்பை அங்கீகரிப்பதற்கான விருது**
    - i. தேசிய சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்
    - ii. ஓட்டுநர் சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்
    - iii. சிறந்து விளங்கும் சமையல் பங்களிப்பு
    - vi. சிறந்த இயற்கை வழிகாட்டி

மேலதிக விபரங்களுக்கு
tourismawards2024@srilanka.travel

# சின்ன தீவில் 300 கோயில்கள்




போர்ட் லூயிஸின் நகர மையத்திலிருந்து முப்பது நிமிட நடையில் வடக்குப் பகுதியில் இருக்கும் கைலாசன் (KAYLASSON) கோயிலுக்குப் போனோம். கோயிலின் பெயர் வித்தியாசமாக இருந்தது. கைலாசம் என்ற பெயரைத் தான் கைலாசன் என்று அழைக்கிறார்களோ என்று நினைத்தேன். கோயிலைப் பார்த்தபோது அது சிவனுக்காகக் கட்டப்பட்ட கோயில் என்பதாலே கைலாசன் என்று அழைப்பது புரிந்தது. ஆனால் கோயிலின் பெயர் மீனாட்சியம்மன் சொக்கலிங்கம் கோயில். சிவனுக்காகத் தமிழர்களால் கட்டப்பட்ட வண்ணமயமான வானளாவும் கோபுரம் கொண்ட கோயில். மொரிசியஸிலேயே மிகப்பழமையான இக்கோயில் இருபத்தேழு தமிழ் வர்த்தகர்கள் இணைந்து நிலம் வாங்கி 1854இல் தொடங்கப்பட்டது, 1912இல் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பதின்மூன்று ஏக்கரில் வானளாவிய கோபுரம், ஞானசம்பந்தர் குளம், பூங்கா முதியோர் இல்லம், திருமண மண்டபம், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் பெயர்களில் கல்வி கற்கும் அறைகள், நூலகம் என விரிந்துள்ளது.



மொரீசியஸில் பாரம்பரியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட இக்கோயிலில் சிவராத்திரி, காவடி உற்சவம் என்பவை ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சமய விழாக்களாகும். சுற்றுலாப் பயணிகளின் பட்டியலில் இடம்பெற்ற இக்கோயில் மொரீசியஸில் புகழ்பெற்ற கோயிலாகும். இக்கோயிலில் பூசகராக இருப்பவர் தமிழகத்தைச் சேர்ந்த சோமாஸ்கந்த குருக்கள். பல ஆண்டுகளாகப் பணிபுரியும் அவரிடம் மக்களின் ஆன்மிகம் குறித்துக் கேட்ட போது, அவர்

''இங்கே பக்தி நிறைய இருக்கிறது. மேற்கத்திய கலாசாரம் இருந்தபோதும் கோயிலை, சடங்குகளை மறக்கவில்லை. இந்தக் கோயிலுக்கு இந்தி, மலையாளம், கன்னடம் பேசுபவர்கள் வருவார்கள். அவர்களோடு இந்தியிலும், கிரியோலிலும் பேசுவேன். பெரும்பான்மையான தமிழர்கள் கிரியோலே பேசுவார்கள். சிலரே தமிழ் பேசுவார்கள். தேவாரம், திருவாசகம் பாடுவார்கள். ஆனால் கிரியோல் அல்லது ஆங்கிலத்தில் எழுதிப் படிப்பார்கள். தீவை ஆண்ட பிரெஞ்சு, ஆங்கிலேயர் பாதிப்பு மக்களிடம் இருக்கிறது. இதுபோன்ற ஆலயங்கள் இருப்பதால் தான் தமிழ் இருக்கிறது. தமிழில் தான் ஆலயத்தில் எல்லாவற்றுக்கும் பெயர் வைக்கப்பட்டுள்ளது...''

அர்ச்சகர் கடைசியாக சொன்னது மிகச்சரியானது. பர்மா, பிஜித்தீவு போன்ற நாடுகளில் கோயில்கள் இருப்பதால் தான் தமிழும் இருக்கிறது. இதேநிலை தான் மொரீசியஸ், ரியூனியன், சிசேல் ஆகிய தீவுகளிலும். 48 வீதமான இந்துக்கள் இருக்கும் மொரீசியஸில் 123 இந்துக் கோயில்கள் இருக்கின்றன. இது 2023இன் கணக்கெடுப்பு. கணக்கெடுப்பில் சேராத கோயில்களும் உண்டு. இருபது வீதமான கத்தோலிக்கர் உட்பட்ட கிறிஸ்தவர்களின் தேவாலயங்கள், 153. 17 விதமான இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் 83. இந்தப் பள்ள வோசல்களில் பெரும்பான்மையானவை போர்ட் லூயிஸிலேயே இருக்கின்றன.



மொரீசியஸில் தமிழர்கள் கோயில் கட்டியதற்கு ஒரு வரலாறு உண்டு. 1727இல் பிரெஞ்ச் கிழக்கிந்தியக் கம்பனியால் கொண்டு வரப்பட்ட பாண்டிச்சேரி தமிழர்களால் தான் முதன் முதல் சிறிய சிறிய குடிசைக் கோயில்கள் கட்டப்பட்டன. பிரான்ஸ் ஆட்சியிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு மாறிய மொரிசீயசில் 1811இலேயே அம்மன் வழிபாட்டைத் தமிழ்த் தொழிலாளர்கள் தொடங்கினார்கள். 1843இல் வி. சின்னத்தம்பி என்ற வர்த்தகர் கோயில் ஒன்றைக் கட்டினார். இக்கோயில் மொரீசியசுக்குக் குடியேறும் தமிழர்களுக்கு தங்கும் இடமாகவும் இருந்தது. இன்று இக்கோயில் சிவத்தம்பி கோயில் என அழைக்கப்பட்டாலும் அதன் உண்மையான பெயர் கிருஷ்ணமூர்த்தி திரௌபதி அம்மன் கோயில்.1850லிருந்து 1900 வரை சிவ. சுப்ரமணியர் கோயில்(1859), ஸ்ரீகைலாசம் கோயில்(1864) ஸ்ரீ காளி அம்மன் கோயில் 1870, ஸ்ரீ சிவசுப்ரமணியர் கோயில் 1869, ஸ்ரீ காளி அம்மன் கோயில் 1870, ஸ்ரீ திரௌபதி அம்மன் கோயில் 1878, இன்னொரு ஸ்ரீ சிவ சுப்ரமணியர் கோயில்1894, ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் 1902. இது 1835இல் பிரிட்டிஷ் ஆட்சியின் போதும் தொடர்ந்தது. காடுகளை அழித்துக் கரும்புத் தோட்டங்களை உருவாக்கிய தமிழர்கள் தங்களின் ஆன்ம திருப்திக்காக குடிசைக் கோயில்களில் வழிபாடு தொடங்கிய போது பிரெஞ்சு ஆட்சியாளர்களால் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. அவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் முயற்சியில் இருந்தார்கள். மத மாற்றங்கள் தொடங்கின. தங்கள் பெயரோடு கிறிஸ்த மதப் பெயர்கள் வைக்க வற்புறுத்தினார்கள். இவற்றையெல்லாம் சமாளித்து தங்கள் சமய வழிபாட்டில் ஈடுபட்ட தமிழர்கள் பிரிட்டிஷ் ஆட்சி வந்த பிறகு எழுச்சி கொண்டு நிரந்தரக் கோயில்களைக் கட்டத் தொடங்கினார்கள்.

கட்டப்பட்ட கோயில்கள் எத்தனை என்பதற்கு மொரிசீயஸில் உள்ள கரும்புத் தோட்ட ஆலையின் உயர்ந்த புகைபோக்கியை எண்ணினாலே போதும். ஒவ்வொரு கரும்பாலை புகைபோக்கிக்கு அருகிலும் தொழிலாளர்களின் கோயில்கள் இருக்கின்றன. இப்போது கரும்புத் தோட்டங்கள் சுருங்கி ஆலைகள் மாறிப் போன பின்னரும் சரித்திரச் சான்றாக கரும்பாலை புகைபோக்கி நிற்பதைப் பார்க்கலாம்.

கரும்புத் தோட்டங்களில் வேலை செய்த தமிழர்கள் தாங்கள் பிறந்த மண்ணில் வழிபாடு செய்த தெய்வங்களின் வழிபாட்டை இங்கும் தொடர்ந்தார்கள். எனவே அங்கு முனியாண்டி, காத்தவராயன், மதுரைவீரன், ஐயனார், வீரபத்திரன் எனப் பல கிராம தெய்வங்களின் சிலைகள் கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்காள மக்கள் காளி தெய்வ வழிபாட்டைக் கொண்டு வந்ததில் காளியின் உருவச்சிலையும் சில கோயில்களில் இருக்கின்றன. அங்கு ஆண்டுதோறும் ஆடு, கோழி என்பன பலி கொடுக்கிற பூஜை நடக்கும். சிவன், முருகன், விநாயகர், அம்மன் ஆகிய கோயில்களில் பலி கொடுப்பது நடக்காது. இக்கோயில்களில் ஆண்டுதோறும் தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, மாசி மகம் என்பன சிறப்பாக நடக்கும். முருகன் கோயில் தைப்பூசக் காவடி பிரசித்தமானது. மொரீசியஸில் இந்தியாவின் வட மாநில இந்து மக்கள் பெரும்பான்மையினராக இருந்த போதும் அவர்கள் கட்டியிருக்கும் கோயில்களைவிட தமிழர்கள் கட்டிய கோயில்களே வண்ணமயமான கோபுரங்களுடன் எழுந்து அழகு சேர்க்கிறது. அக் கோபுரங்களின் அழகு மேலை நாடுகளின் பயணிகளைக் கவர்ந்து சுற்றுலா பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

மொரீசியஸில் சிறியதும் பெரியதுமாக 300 இந்துக் கோயில்கள் இருப்பதாக சிங்கப்பூர் தமிழ் முரசு நாளிதழின் பத்திரிகையாளர் வில்சன் சிலாஸ் டேவிட் (WILSON SILAS DAVID) மொரீசியஸில் இந்தியர்கள் தொழிலாளர்களாக போய் இறங்கி 180 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இரண்டு லட்சம் தமிழர்களைக் கொண்ட சிங்கப்பூரில் 25 இந்து கோயில்களே இருக்கின்றன. ஆனால் சுமார் ஆறு லட்சம் இந்துக்களைக் கொண்ட மொரீசியஸில் 300 இந்துக் கோயில்கள் இருப்பதற்கான காரணமே கரும்புத் தோட்டங்களில் வேலை செய்த தமிழர்கள், தாங்கள் வாழும் பகுதியில் கரும்பு ஆலைக்கருகில் கட்டிய சிறிய சிறிய கோயில்களேயாகும். அவற்றின் வயது 100 ஆண்டுகளாகும். மொரீசியஸில் முந்நூறு கோயில்கள் இருந்தபோதும், மிக முக்கியமான சரித்திரப் பிரசித்தி பெற்ற கோயில்களுக்குப் போக முடிந்தது. அக் கோயில்களில் அங்குள்ள தமிழர்களின் வரலாறு பதிந்திருக்கின்றது. சில கோயில்கள் தனிப்பட்டவர்களால் கட்டப்பட்டுள்ளன. மற்றவை அமைப்புகளால் கட்டப்பட்டவையாகும். பெரிய கோயில்களில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் பேசத் தெரிந்த தமிழ்நாட்டு ஐயர்கள் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். இக்கோயில்களில் சமய நூலகங்களை அமைத்து தமிழ், சமயம் என்பன சொல்லிக் கொடுக்கிற வகுப்புகள் வார விடுமுறையில் நடத்தப்படுகின்றன.

கிரான்ட்பே (GRAND BAY) என்ற சிறு நகரத்தில் முக்கிய வீதியோரமாக இருந்த கோயிலைப் பார்க்கச் சென்ற போது குமரன் செட்டி என்பவரைச் சந்தித்தேன். நடுத்தர வயதான அவரின் பேச்சில் குமுறல் இருந்தது.

''கோயில் அர்ச்சனையில் தமிழ் இல்லை. பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுக்க ஆசிரியர் பற்றாக்குறையாக உள்ளது.

கோயில்களில் சில மட்டுமே தமிழ் வகுப்புகளை நடத்துகின்றன. எல்லாப் பள்ளிகளிலும் இந்தி சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மொரீசியஸ்ஸைக் கட்டியெழுப்பியதில் கணிசமான பங்கு தமிழர்களுக்கு இருந்த போதும் தமிழ், தமிழர்கள் புறக்கணிப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது.

தமிழர்களுக்குத் தனியான மண்டபம் இல்லை. அதற்கான போராட்டம் இன்றும் நடக்கிறது'' என்று அவர் சொன்னார்.

அவர் சொன்னதில் உண்மை இருப்பதை மொரீசியஸ் பயணத்தில் பலரைச் சந்தித்த போது உணர முடிந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் தமிழர் ஒருவர் இருப்பார். ஆனால் அவருக்குத் தமிழ் பேச வராது. தமிழர்களைவிட அதிகமான இந்தி பேசுபவர்கள் இருப்பதால், அரசு ரீதியாக இந்திக்கு கொடுக்கிற ஆதரவு தமிழ், தெலுங்கு பேசுபவர்கள் மத்தியில் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

இந்தியாவின் மத்திய அரசாங்கம் இந்தியைப் பரப்ப மொரீசியஸில் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(இதில் காங்கிரஸ், பி.ஜே.பிக்கும் பங்கு உண்டு) மகாத்மா காந்தி இன்ஸ்டியூட் என்ற நிறுவனத்தின் மூலமே இந்திய அரசு இந்தி கற்க பெரும் உதவிகளைச் செய்து வருகிறது

**தொடர்சி 23 பக்கம்**

## மகோன்னத 125 வருட வரலாற்றைக் காணும் அல்ஹம்றா ஒளிக்கீற்று

*தர்காநகர் அல்ஹம்றா மகா வித்தியாலயம் இலங்கையின் முன்னணி கல்லூரிகளில் ஒன்றாக திகழ்கிறது. தேசிய, சர்வதேச மட்டத்தில் பல ஆளுமைகளைத் தந்த இக்கல்லூரி, தனது 125 வருட நிறைவைக் கொண்டாடி மகிழ்கிறது. இக் கொண்டாட்டத் தொடரில் இக் கல்லூரியின் கடந்த கால மகோன்னத 125 வருட வரலாற்றைக் கூறும் 'அல்ஹம்றாஒளிக்கீற்று' வரலாற்று ஆவணப்படம் அண்மையில் கொழும்பில் Majestic(City) Gold Cinema திரையரங்கில் திரையிடப்பட்டது. வித்தியாலயத்தின் பழைய மாணவியும் பல்கலைக்கழக விரிவுரையாளருமான செல்வி ஸஃபானா ஹக்கீம் இவ் ஆவணப்படத்தை இயக்கியிருக்கிறார். இதன் மூலம் அப்பிரதேச முதல் பெண் ஆவணப்பட இயக்குநராக அறிமுகமாகியிருக்கும் ஸஃபானா ஹக்கீம் இக்கல்லூரி சார்ந்த, சாராத அநேகரது பாராட்டுகளைப் பெற்று வருகிறார். 'Sirahu Nuni Center For Arts and Media' நிறுவனத்தின் இணைத் தயாரிப்பில் அதன் நிறைவேற்றுப்*






*பணிப்பாளர் ஆத்மா ஜாஃபிரின் மேற்பார்வையில் இவ்வரலாற்று ஆவணப்படம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆத்மா ஜாஃபிரின் கடுமையான உழைப்பும், அவரது தயாரிப்பின் உன்னதமும் இத்திரைப்படம் மூலம் புலனாகிறது.*

*அவரது திறமையினையும் இங்கே நினைவுகூர்ந்து பூரிக்கிறோம். அன்றைய திரையிடலில் 1950, 60களில் கற்ற மாணவர்கள் முதல் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அதிபர்கள் அவர்கள் குடும்பத்தினர், ஊடகவியலாளர்கள், பிரபல பிரமுகர்கள் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். இவ்வரிய பங்களிப்புக்கு செல்வி ஸஃபானா ஹக்கீமுக்கு அவரது குடும்பத்தார் வழங்கிய ஊக்குவிப்பு கண்டு பேரானந்தமடைகிறோம். ஸஃபானா ஹக்கீமின் தாயாரின் சகோதரியும், அல்ஹம்றா ம வி, பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளரும், சிரேஷ்ட கலைஞருமான சில்மியா ஹாதியின் பங்களிப்பும் இந்த ஆவணப்பட தயாரிப்பில் இருந்திருப்பதை எண்ணி மகிழ்கிறோம். ஆவணப்பட இயக்குனர் ஸஃபானா ஹக்கீம், தயாரிப்பாளர், ஆத்மா ஜாஃபிர் ஆகியோரின் கூட்டணியில், சமகால இரசனைக் கொப்ப இதுபோன்ற சமூகம் சார்ந்த ஆவணங்கள் திரைப்படங்களாக அடுத்தடுத்த தலைமுறைக்கும், கொண்டு செல்வதற்கான முயற்சிகள் இன்னும் தொடர எங்கள் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.*

**–எம். எஸ். எம். ஜின்னா**

# களு/ அல்–ஹம்றா மகாவித்தியாலயத்தின் காலக்கண்ணாடி "அல்ஹம்றா – ஒளிக்கீற்று

## களுத்துறை மாவட்டத்தின் முதல் முஸ்லிம் பெண் இயக்குனர் ஸஃபானா ஹகீம்.

*கடந்துபோன காலத்தினை ஆவணப்படுத்துதல் மிகவும் கடினமான செயற்பாடு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பேஷன் டிசைனிங் கற்கை விரிவுரையாளராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் ஸஃபானா ஹகீம், இயக்கி சிறகுநுனி பப்ளிகேஷன் தயாரித்த "அல்ஹம்றா – ஒளிக்கீற்று" ஆவணப்படமானது 01.09.2024 அன்று காலை 10 மணிக்கு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள மெஜஸ்டிக் (சிட்டி) கோல்ட் சினிமாவில் வெளியிடப்பட்டு, முதன்முறையாக பார்வையாளர்களுக்காக திரையிடப்பட்டது.*

*களுத்துறை மாவட்டத்தில் தர்காநகரில் அமையப்பெற்றுள்ள களு/அல்ஹம்றா மாகாவித்தியாலயமானது, 1896 ஆம்ஆண்டு களுத்துறை வலயத்தில் அமைக்கப்பட்ட பாடசாலையாகும். தொடக்க காலத்தில் ஆரம்பப் பாடசாலையாக அமைக்கப்பட்டாலும், காலப்போக்கில் உயர்நிலைப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு விஞ்ஞானப் பிரிவு மற்றும் மும்மொழி மூலமான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டதோடு மாத்திரமன்றி முஸ்லிம், தமிழ், சிங்கள மாணவர்களுக்கும் உயர் கல்வியை வழங்கி, பல கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், இலக்கியவாதிகள், விளையாட்டு வீரர்கள் போன்ற பல்துறை வித்தகர்களை உருவாக்கி நாட்டிற்கு வழங்கிய பாடசாலையாகத் திகழ்ந்திருந்தது. கலாசாரம், நற்பழக்கவழக்கங்கள், கலைகளை பயிலும் நோக்கில் அக்காலத்தில் பாடசாலையில் அமைக்கப்பட்ட மாணவர் விடுதியில் வசதியற்ற மாணவர்கள் மாத்திரமன்றி, நகரில் வசதிபடைத்தோரது பிள்ளைகளும் சேர்க்கப்பட்டிருந்தனர்.*

*இதற்குப் பின்னரான காலத்தில் பாடசாலைகள் மீள் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டபோது, இப்பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக தரமிறக்கப்பட்டு, பாடசாலையில் காணப்பட்ட வளங்கள் மற்றும் மாணவர்கள் களு/சாஹிரா கல்லூரிக்கு மாற்றப்பட்டனர்.*

*பல்வேறு அதிபர்களின் விடாமுயற்சியின் பலனாக மாற்றமடைந்து தற்போது மீண்டும் உயர்தரத்தில் கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று 1538 மாணவர்களையும், 59 ஆசிரியர்களையும் உள்ளடக்கி புத்துயிர் பெற்றிருக்கிறது.*

*இவ்வாறான புகழ் பொருந்திய பாடசாலையின் வரலாற்றினை ஆவணப்படுத்துவதாக இந்த ஆவணப்படத்தின் கதை அமையப்பெற்றுள்ளது.*

*முடிவுற்ற நீண்டகால வரலாற்றினை ஆவணப்படுத்துவதற்காக பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களது வரலாற்றுக் குரலாக, இதயம் பேசும் கதையாக கதைசொல்லல் நகர்த்தப்பட்டுள்ளது. களு/அல் ஹம்றா மாகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 125 ஆண்டுகள் பூர்த்தியைக் கொண்டாடும் விதமாக சஞ்சிகை வெளியீடும், பல்வேறு நிகழ்வுகளும் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்த நிலையில் பாடசாலையின் பழைய மாணவி என்ற வகையில் பாடசாலையின் தொலைந்துபோன வரலாற்றினை மீண்டும் கண்டெடுத்து அதனை தற்கால சமூகத்தினருக்கு கடத்துவதற்கு இவ்வாறான காணொளிகளே சிறப்பாக அமையும் என்பதை நோக்கமாகக் கொண்டே இவ்ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.*





*இவ் ஆவணப்படத்தில் அமைவிடத்தினை காண்பிப்பதற்காக பறக்கும் கமெரா அதிக தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு 1 மணித்தியால கால அளவைக் கொண்ட இவ் ஆவணப்படத்தினை செம்மையாக்க கிட்டத்தட்ட 30 நாட்களுக்கும் அதிகமாக பின்தயாரிப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இயக்குனர் தனது சொந்த செலவில் இவ் ஆவணப்படத்தினைத் தயாரித்துள்ளார்.*

*பாடசாலையின் பழமையான வரலாற்றோடு தொடர்புடைய பலர் இப்போது இவ்வுலகில் இல்லை. எனவே தொலைந்துபோன வரலாற்றினை மீளத்தேடுவதற்கு இயக்குனருக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது.*

*அத்தோடு சினிமா மற்றும் ஆவணப்படத்துறை சார்ந்து இது இயக்குனரது முதல் படைப்பு என்பதால் பல்வேறு ஏமாற்றங்கள், குறைகள், மனக்கசப்புக்கள், பின்னடைவுகள் என்பவற்றையும் கடந்தே இப்படைப்பு தயாரிக்கவேண்டிய நிலை காணப்பட்டது.*

*களுத்துறை மாவட்டத்திலும், ஏனைய மாவட்டங்களிலுள்ள இஸ்லாமிய பாடசாலைகளுக்கும் முன்னுதாரணமாகவும், எடுத்துக் காட்டாகவும் ஒரு காலத்தில் திகழ்ந்திருந்த களு/அல்ஹம்றா மகாவித்தியாலயத்தின் வரலாற்றையும், அங்கு சேவையாற்றிய அதிபர்களின் அளப்பரிய சேவையையும் சமூகம் அறிந்து கொண்டு, பாடசாலையின் மீள் புத்துருவாக்கத்திற்கு உதவவேண்டும் என்பதோடு, இன ரீதியாக பிரிவுபட்டிருக்கிற பாடசாலைகள் அனைத்தும் அறிவு ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டு மாணவர்களின் எதிர்காலம் சிறக்க வழி உருவாக வேண்டுமென்றும் எதிர்பார்ப்பினை நிலை நிறுத்தியே இவ் படைப்பு உருப்பெற்றுள்ளது தயாரிக்கப்பட்டுள்ளது.*



*கிரிஜா அருள்பிரகாசம்*
*ஊடகக் கற்கைகள் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*




# வாரபலன்

15.9.2024 — 21.9.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்க இருந்து வந்த தாமதம் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலிடத்திலிருந்து பொறுப்புகள் அதிகமாக வழங்கப்படும். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டிற்கு தேவையான பொருள் வாங்குவதால் செலவு ஏற்படலாம். வீடு, மனை போன்ற முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த செல்வசேர்க்கை உண்டாகும். கலைத்துறையினருக்கு எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய மனக்கவலை உண்டாகும். பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

## இடபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

மனதில் நிம்மதி உண்டாகும். ஆடை, ஆபரணம் வாங்குவதால் செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். எதிலும் ஒரு முறைக்கு மறுமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் யோசனையை கேட்டு நடந்து கொள்வது மனதிற்கு திருப்தியை தரும். கணவன், மனைவிக்கிடையே இருக்கும் அன்பு நீடிக்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள். முன்னோர்களின் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். பெண்களுக்கு நீங்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடைகள் நீங்கும். கலைத்துறையினருக்கு இருந்த போட்டிகள் அகலும். மாணவர்கள் வீண் அலைச்சலை குறைத்துக் கொண்டு கல்வியில் கவனம் செலுத்துவது நன்மை தரும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

தைரியம் உண்டாகும். எதிலும் இலாபத்தை பார்க்க முடியும். எல்லா நன்மையும் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி காண்பார்கள். கலைத்துறையினர் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பர். மாணவர்கள் கல்வியில் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்க பாடுபடுவீர்கள். எதிலும் முன்னேற்றம் உண்டாகும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எந்தக் காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். அதற்கேற்ற பலனும் கிடைக்கப் பெறுவீர்கள். நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாக திறமை பளிச்சிடும். குடும்பத்தில் திடீர் குழப்பங்கள் தலை தூக்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட மற்றவர்கள் வலுக்கட்டாயமாக பேசுவார்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். கலைத்துறையினர் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். மாணவர்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

2024 செப்டெம்பர் 15ஆம் திகதி.

# எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி
# கேள்வி அறிவித்தல்

பின்வரும் மரங்களை விற்பதற்காக கேள்விச் சபையினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| தோட்டம் | உருப்படி | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| Dunsinane Estate, Punduloya. 051 4925001 | Hydropower Alternator<br>Continuous Fermentation Machine<br>Fiber Extractor<br>Michie Shifter | 1<br>1<br>1<br>1 |
| Meddcombra, Watagoda. 051 4925021 | Colour Separator | 2 |
| New Peacock Estate Pussallawa 081 4945056 | 15" Rotorvane<br>ID Fan Unit without the motor<br>Fibromat frame with 06 Jambo Pickers<br>04 CTC Machine Frames with 04 CTC Rollers of<br>13" GEM Drier Main Fan Unit | 1<br>1<br>1<br>1<br>1 |
| Nayapane Estate Pussallawa 081 4945061 | Middleton Shifter<br>Pekoe Cutter | 1<br>1 |
| Katandola Estate 0944943034 | CCC 6-Foot Drier (Parts) | 1 |
| Talgaswella Estate, Talgaswella 0194943025 | Colour Separator - Senvec | 1 |

அனைத்து கேள்விகளும் முத்திரையிடப்பட்ட தபாலுறையில் உள்ளிடப்பட்டு ‘‘இயந்திராதிகளின் விற்பனை’’ என இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு 2024 ஒக்டோபர் 06ஆம் திகதியன்று பி.ப. 4.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பிரதான நிறைவேற்று அலுவலர், எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் 2024 ஒக்டோபர் 06ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் இயைபுடைய தோட்டங்களுக்கு ஒவ்வொரு இயந்திரத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமான 1000.00 ரூபாவையும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாகிய 5,000.00 ரூபாவையும் செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

தோட்டங்களின் பொது முகாமையாளர்/ பிரதிப் பொது முகாமையாளர்/ முகாமையாளருடன் சந்திப்பு முன்னேற்பாட்டுடன் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரையும் உருப்படிகளை பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்களை தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

எவ்வாறாயினும், எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி கொண்டுள்ளது.

**பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி,**
**9 ஆம் மாடி, அய்கென் ஸ்பென்ஸ் கோபுரம் 01,**
**305, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.**
**தொலைபேசி : 011-4693000**

කොළඹ
අඩුම මිලට Flex Printing
වර්ග අඩියක් රු.130 සිට
Lake House Digital Printing Unit



LAKE HOUSE
DIGITAL PRINTING UNIT
අමතන්න 0112 695 677

# இலங்கை இராணுவம்

## விலைமனுக்கோரல்

இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணிப்பாளர் குழுவினால் நிர்வகிக்கப்படும் இராணுவப் பண்ணையில் உருப்படி வகைப்பாட்டின் கீழ் 25 HP நீர் தெளிப்பான் மற்றும் 25 HP நீர் தெளிப்பான்கள் 02 வழங்கல் நிறுவுவதற்குத் தேவையான உயர் குழாய் பொருத்துதல்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கல் நிறுவனங்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்கோரலுக்கான கரந்தெனியவிலுள்ள இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடைப் படையின் டெண்டர் குழு (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலுக்கான கொள்முதல் ஆவணங்கள் **2024.09.18** ஆம் திகதி முதல் **2024.10.09** ஆம் திகதி வரை வார நாட்களில் **0800** மணி முதல் **1600** மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் **2024.10.09** ஆம் திகதி **1100 மணிக்கு இராணுவ காலாட்படை மையம்,** விவசாய மற்றும் கால்நடைப் படை, இராணுவ முகாம், கரந்தெனிய எனும் முகவரியில் திறக்கப்படும்.

குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.promise.lk** என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.

இராணுவ புலனாய்வு காலாட்படை மையம்,
தொலைபேசி இலக்கம் - 091 2252683

கொள்முதல் பிரிவு,
காலாட்படை மையம்,
விவசாய மற்றும் கால்நடைப் படை,
இராணுவ முகாம்,
கரந்தெனிய,
அம்பலாங்கொடை.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

www.adz.lk
it's what you want

# பெறுகை அறிவித்தல் திருத்தம்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசனத் திணைக்களம்
## தேசிய போட்டி கேள்வி கோரல்

**Procurement of Diesel Water Pumps for Gravity Outlet Structure at BR-01 Flood Bund in Matara Division - Galle Range**

டெய்லிநியூஸ் பத்திரிகையில் 2024 ஓகஸ்ட் 23ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகிறோம்.

| Bid No. | Description of Procurement | Qty. (Cube) | Bid shall Vaild up to | Bid Security Amount (Rs.) | Bid Security Shall Vaild up to |
|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/NCB/2024/014 | Procurement of Diesel Water Pumps for Gravity Outlet Structure at BR-01 Flood Bund in Matara Division - Galle Range | 02 | 12th of December 2024 | 300,000.00 | 09th of January 2025 |

விலைமனு ஆவணங்கள் 2024 செப்டெம்பர் 26 பி.ப. 2.00 வரை விநியோகிக்கப்படும். விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 27ம் திகதி மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

மேற்படி விடயம் தவிர்த்து 2024 ஓகஸ்ட் 23ம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய எல்லா விபரங்களும் மாற்றமின்றி காணப்படும்.

**பொறியியலாளர்: அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு -07.**
திகதி: 14.09.2024

Uva Wellassa University

## தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

# பெறுகை அறிவித்தல்

## வாடகைக்கு / குத்தகைக்கு வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களைக் கோருகின்றார்.

| விலைக்கோரலின் பெயர் | விலைக்கோரல் இல. | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) | விலைமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா | விலைமனுக்கள் வழங்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படுதல் |
|---|---|---|---|---|---|
| வாடகைக்கு / குத்தகைக்கு வாகனங்களை பெற்றுக்கொள்ளல் (அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனம்) 03 எண்ணிக்கையான கார்கள் | UWU/GA/05/V/24/04 | 27,000.00 | 2,000.00 | 2024-09-18 முதல் 2024-10-09 வரை | 2024-10-10 பி.ப. 2.00 மணிக்கு |

கேள்விதாரர்கள் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை மேற்கூறிய காலத்தினுள் எந்தவொரு வேலை நாளிலும் (விடுமுறை நாட்கள் தவிர்த்து) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேலே குறிப்பிட்டுள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் அல்லது **இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு** ரொக்கப் பணத்தில் நேரடியாக செலுத்திய பின்னர், இக்கொடுப்பனவிற்கான பணப்பற்றுச்சீட்டுடன் பிரதி பதிவாளர் (பொது நிர்வாகம்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரரும் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். **http://www.uwu.ac.lk/procurement** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்வோர், மீளளிக்கப்படாத கட்டணத்தை “ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின்” பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது **3114820** என்ற கணக்கிலக்கத்தையுடைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவை மேற்கொள்ளலாம் என்பதுடன், பணப்பற்றுச்சீட்டு/பணவைப்புத்துண்டு ஆகியவை விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்களை மேற்கூறிய திகதியில் பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைக் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார். கேள்விகளை முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறையில் உள்ளடக்கி அதன் இடது பக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வி இலக்கம் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் “தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 055-2226470 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிரதிப் பதிவாளர் (பொது நிர்வாகப் பிரிவு) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
2024-09-15.

The Housewives’ companion
Classifieds on
Daily News

# முகங்காட்டாத கண்ணாடி

## மீலாத் விழா சிறப்பு சிறுகதை

அஸர் தொழுகையை முடித்துவிட்டு வந்த நிசார் அமைதியாக குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தான். அப்போது தேநீர் கோப்பையை அவனிடம் நீட்டியவளாய் 'என்னங்க ஏதோ ஒரு கூட்டம் இருக்குன்னு சொன்னீங்களே மறந்துட்டீங்களே போகலயா?' என பேச்சுக் கொடுத்தாள் மனைவி நிசாயா. 'ஆமா நிசாயா மறந்தே போயிட்டன். நல்லவேள நீங்க ஞாபகப் படுத்தினீங்க' எனக் கூறிக் கொண்டே தேநீரை பருகி முடித்த நிசார் அவசரமாக கூட்டத்திற்குச் செல்லத் தயாரானான்.

நிசார் அங்கு வந்ததும் உடனடியாக கூட்டம் ஆரம்பமானது. முதற்கட்டமாக கூட்டத்தை உடனடியாக கூட்டியதன் நோக்கம் பற்றி விளக்கமளிக்கத் தொடங்கினார் சங்கத் தலைவர் தாஹிர் முதலாளி.

'அன்புக்குரிய நண்பர்களே, நாங்கள் இந்தக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டியதற்கான காரணம், உங்க எல்லோருக்கும் தெரியும். அதாவது எங்க நபி (ஸல்) அவங்க பிறந்த பொன்னான நாள நாங்க எல்லாம் எதிர்நோக்கி கொண்டிருக்கோம். அதனால போன முறைய போலில்லாம இந்த தடவ நபி ஜனனதின விழாவை வெகு சிறப்பாக கொண்டாடனும். நாடளாவிய ரீதியில் போட்டிகள் வைக்க வேணும். முக்கிய பிரமுகர்களை எல்லாம் அழைக்கணும். இப்படியாக இந்த முற எங்க மீலாத் விழாவ ஒரு தேசிய விழாவா நடத்த நான் ஆசைப்படுறன். இதற்கு உங்க ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் எனக்கு தேவைப்படுது. இதற்காக உங்களுடைய ஆலோசனைகள இப்ப நீங்க தாராளமா தெரிவிக்கலாம்.' தனது கருத்தை முடித்துக் கொண்டு எதிர்பார்ப்புகளோடு தனது இருக்கையில் அமர்ந்தார் தலைவர். கூட்டத்தில் ஒரே சலசலப்பு. ஒவ்வொருவரும் விதவிதமான ஆலோசனைகளை வழங்கினாலும் அனைவரதும் கருத்தும் மீலாத் விழாவை ஜாம் ஜாம் என்று கொண்டாடுவதிலேயே ஒன்றுபட்டிருந்தது.

ஆனால் நிசார் மட்டும் அதில் வேறுபட்டுக் காணப்பட்டான். எல்லாரும் அவர்கள் கருத்துகளை கூறி முடித்ததும் நிசார் அமைதியாகச் சொன்னான்.

'இந்த விழாவ பெருசா கொண்டாடுறதுல எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்ல. ஆனா கொஞ்சம் நாங்க சிந்திச்சிப் பார்க்கணும்.

இன்னக்கி எங்க சகோதர ஜீவன்கள் உண்ண உணவில்லாம, உடுக்க உடையில்லாம வறுமையில வாடறாங்க. இந்த நிலையில எங்களுக்கு இப்படிப்பட்ட பெரிய விழாக்கள் தேவைத்தானா? இதற்கொரு பெரிய தொகை செலவாகுமே? நம்ம இஸ்லாம் வீண் விரயத்த கண்டிச்சிருக்கு என்கிறது உங்க எல்லாருக்கும் தெரியும் தானே. அதனால விழாவ சிம்பிளா முடிச்சிப்போட்டு இல்லாதவங்களுக்கு ஏதாவது உதவி பண்ணினா நல்லம்னு நான் நெனக்குறன்' நிசார் அமைதியாக தனது கருத்தை சொன்னான். நிசாரின் கருத்தைக் கேட்டவர்கள் அதிர்ந்து போனார்கள். ஒருசில அங்கத்தவர்கள் நிசார் சொல்வது சரிதான் என அதை ஆமோதித்ததும் தலைவரின் முகம் மட்டும் ஏனோ சிவப்பாக மாறியது. அங்கு நிலவிய அமைதியை கலைத்தது தலைவரின் குரல்.

'நிசார் சொல்வது ரொம்ப தப்புன்னு நான் நெனக்கிறன்.

ஏன்னா உலகத்துக்கே ஒளி கொடுத்து சென்ற உத்தமரின் பொறந்த நாள கஞ்சத்தனமா கொண்டாடினா அடுத்த மதத்தவங்க நம்மள மதிப்பாங்களா? என நான் கேட்க விரும்புகிறேன்.' தலைவர் அப்படி வினாத் தொடுக்க வேதனைப்பட்டது நிசாரின் நெஞ்சம். 'முஸ்லிம் என்ற போர்வையில் முற்று முழுதா ரஸீலுல்லாஹ்ட வாழ்க்கைய உதாசீனம் பண்ணிட்டு அவர்களுக்கு பெரிய விழா எடுக்குறதால மட்டும் மத்தவங்க நம்மள மதிப்பாங்களாக்கும்.' எனக் கூற நினைத்த நிசார் அதைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

1 எது உண்மை, எது போலி என்றறியாத இன்னும் சில அங்கத்தவர்கள் தலைவரின் பேச்சுக்கும் ஆமாம் சாமி போட்டனர். எவ்வித சலனமும் இன்றி தலைவர் மீண்டும் உரையைத் தொடர்ந்தார். 'இஞ்ச பாருங்க நாம தேசிய ரீதியில் பெரிசா மீலாத் விழாவ கொண்டாடித்தான் ஆகணும் என்கிறது அனைவரதும் அபிப்பிராயம். என்றாலும் கொண்டாடப் போற விழாவுல ஏழைகளுக்கு உதவுறத ரொம்ப வலியுறுத்தி பேசினா, நிசாருடைய கொள்கைக்கும் ஒத்துப் போகலாம். அதனால உடனே விழாவுக்கான ஏற்பாடுகள செய்தாகனும்.' தலைவர் தனது உரையை முடிக்க அனைத்து அங்கத்தவர்களும் ஏக மனதாக ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நிசார் மட்டும் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். உடனே விழாவுக்கான திகதி குறிக்கப்பட்டது.

விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஒவ்வொருவரும் தம்மால் ஆன முயற்சிகளை செய்யத் தொடங்கினார்கள்.

என்னத்தான் சொன்னாலும் இந்த முடிவு நிசாருக்கு மட்டும் பூஜ்யமாகவே பட்டது. 'போட்டிகளுக்கும் பரிசுகளுக்கும் செலவழிக்கும் பணத்த இன்றைய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இல்லாதவங்களுக்கு கொடுத்து உதவினா அல்லாஹ்வும் சந்தோசப்படுவானே' என்ற ஏக்கம் அவனை வாட்டினாலும் அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. என்றாலும் அடக்கமுடியாத ஆத்திரத்தை மனைவியிடம் சொல்லி ஆறுதல்படுத்திக் கொண்டான். மனைவியோ 'எங்கட சமூகத்த அல்லாஹ்தான் காப்பாத்தனும்' எனப் பெருமூச்சு விட்டுக் கொண்டு கணவனின் கவலையில் பங்கெடுத்துக் கொண்டாள்.

எத்தனையோ நல்ல காரியங்களையும், அல்லாஹ்வின் கட்டளைகளையும் உதறித்தள்ளி விட்டு வருடத்துக்கு ஒரு முறை வள்ளல் நபிக்கு விழா எடுத்துவிட்டால் பூரண முஸ்லிமாகி விடலாம் என்ற ஒரு எண்ணம் நமது சமூகத்தில் தோன்றியிருப்பதை எண்ணி உள்ளூர வருந்தினான் நிசார். அவனுக்கு அழுவதா சிரிப்பதா ஒன்றுமே புரியவில்ல.



'ஏங்க சும்மா யோசிக்கிறதால ஒன்னும் ஆகப்போறதில்ல. உங்க சங்கத் தலைவர் தாஹிர் முதலாளி சொன்னா சொன்னது தானே. அதமாத்த எவருக்கும் தைரியமில்ல. அதனால நடப்பது நடக்கட்டும். கவலைகள மறந்துடுங்க.' மறுபடியும் ஆறுதல் சொன்னாள் மனைவி நிசாயா. நிசார் வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் தாஹிர் முதலாளியின் வீடு. அதனால் நிசாயாவும் அவரைப் பற்றி நன்றாக அறிந்து வைத்திருந்தாள்.

காலச் சக்கரமும் வேகமாகச் சுழன்றது. அனைவரும் ஆவலாய் எதிர்பார்த்திருந்த அந்த நாளும் வந்தது. முன்கூட்டியே போட்டிகள் வைக்கப்பட்டு பரிசுக்குரியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். மேடையேற்றத்தில் ஆண்களும் பெண்களுமாக சனத்திரள் கரைபுரண்டோடியது.

இன்னும் மேடையை முக்கிய பிரமுகர்களும், உலமாக்களும் அலங்கரிக்க தலைவர் உற்சாகத்துடன் தலைமை உரையை நிகழ்த்தத் தொடங்கினார்.

'என் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இந்த பொன்னான விழா கொண்டாட கிடைத்தது மாபெரும் பாக்கியமாகும். நேசத்துக்குரிய அல்லாஹ்வின் அடியார்களே இவ்விழாவைக் கொண்டாடுவது மட்டுமல்ல நமது நோக்கம். எமது வாழ்வை சீர்படுத்தி கொள்வதோடு எமக்குள் சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அந்தவகையில் இந்த பொன்னான நன்நாளிலே எமது சகோதர ஜீவன்களின் நிலைகளை கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது அத்தியாவசிய தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் அல்லல்படும் வறியவர்களை கொஞ்சம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். உண்ணவும், உடுக்கவும் வழியின்றி தவிப்பதோடு மட்டுமல்லாது, தமது பிள்ளைகளின் கல்விச் செலவுகளை ஈடு செய்ய முடியாமல் நம்மில் பலர் சீரழிவதைக் கண்டு உங்கள் குருதி கொதிக்கிறதா என்பதை நீங்கள் இந்த நாளில் சிந்தித்துப் பாருங்கள். இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னே ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சகோதரத்துவ கோட்பாட்டை தெளிவாகப் போதித்துக் காட்டினார்கள்.

அதாவது முஸ்லிம்கள் பரஸ்பர அன்பு, பாசம், கருணை என்பவற்றில் ஒரு உடலைப் போன்றவர்கள் அந்த உடலில் ஒரு பகுதியில் நோயென்றால் முழு உடம்பும் வேதனையால் துடிக்கிறது.

கண்கள் வழிகிறது கைகள் நோயுள்ள இடத்தை தடவுகிறது. இப்படியாக ஒவ்வொரு உறுப்பும் வேதனையில் பங்கேற்கிறது. என்ற அந்த அன்பு நபியின் வார்த்தைகளை மறந்து இன்று நாமோ சுயநலவாதிகளாக கண்மூடி வாழ்கிறோம். அதுமட்டுமா, அன்றைய குரைசியர்களின் தொல்லைகளை சகிக்க முடியாமல் நபியவர்களும், தோழர்களும் மக்காவை விட்டு மதீனாவில் தஞ்சமானார்கள்.

உறவுகளையும், உடமைகளையும், இன்பங்களையும் இழந்து வந்த மக்கா அகதிகளை மதீனாவாசிகள் ஆரத்தழுவினார்கள். தமது சொத்திலும் சுகத்திலும் பாதி கொடுத்து அகதிகளுக்கு ஆறுதல் கொடுத்ததனால்தான் இஸ்லாம் இன்று அகிலமெங்கும் பரவியிருக்கிறது என்பது, வரலாறு கண்ட உண்மையாகும். ஆனால் நாமும் இன்று முஸ்லிம் என்று சொல்லிக் கொள்கிறோம். உத்தம நபியின் உம்மத் என்று பெருமைப்படுகிறோம். இத்தருணம் அவர்கள் பொன்னான வாழ்வை எந்தளவு பின்பற்றுகிறோம் என்றால் அதற்கு விடை பூஜ்யம்தான். எல்லோரும் சமம் என்ற உணர்வு பெருக வேண்டும். ஆகவே நற்குணம் பெருகி எல்லோரும் சகோதரர்களாக வாழ்வதற்கு இந்நன்நாளில் உறுதி பூணுவோமாக என்று கூறி எனது இந்த சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வஸ்ஸலாம்.'

2 எதிர்பார்த்தபடி விழா முடிந்து மறுநாள் விடிகிறது. வீட்டு முற்றத்தில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்து அன்றைய பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தான் நிசார். அப்போது யாரோ ஒருவர் தாஹிர் முதலாளியின் வீட்டுக்கதவைத் தட்டுவது அவன் கண்களில் பட அதையே கொஞ்சம் ஆவலாக உற்று நோக்கத் தொடங்கினான். தாஹிர் முதலாளி கோபத்தோடு வந்து கதவைத் திறக்கிறார். அங்கே நொந்து நூலாய்ப் போன ஒரு மனிதர் 'ஹாஜி நான் பக்கத்து ஊருல இருந்து வாரன். நான் கூலி வேலதான் செய்றன். அஞ்சு புள்ளைகள் இருக்காங்க. எல்லாரும் ஸ்கூல் போறவங்க. இப்ப எனக்கு சரியா வேலயும் இல்ல. சாப்புடறதுக்கே ரொம்ப கஷ்டமா இருக்கு ஹாஜி. நாங்க சரியா சாப்புட்டு மூணு நாளாகுது ஹாஜி. இந்த நிலையில எங்களுக்கு ஏதாச்சும் உதவி பண்ணினா ரொம்ப நல்லாயிருப்பீங்க' வந்தவர் கூனிக்குறுகி, தட்டுத்தடுமாறி கூறி முடிக்க தகுதியான ஒரு இடத்திற்குத்தான் போயிருக்கிறார்; என்று சந்தோசப்பட்டான் நிசார். ஆனால் தொடர்ந்து வந்த தாஹிர் முதலாளியின் குரல் அவனை நிலைகுலைய செய்தது.

'இங்க பாருங்க உங்களுக்கு அள்ளிக் கொடுக்க நாங்க என்ன கட்டி வைச்சுட்டா இருக்கோம்.

இப்ப நீங்க மட்டுமில்ல எல்லாரும் கஷ்டத்துலதான் வாழுறாங்க. போங்க போய் உழச்சி சாப்பிட பாருங்க. காலையிலேயே தொந்தரவு பண்ணாம இங்கிருந்து போயிடுங்க' என கூறியவர் படாரென கதவை சாத்தினார்.

வந்தவர், முகத்தில் அழுகை கொப்பளிக்க அவமான மிகுதியால் நிசார் வீட்டுக்கும் செல்லாமல் வீதியில் இறங்கி நடந்து கொண்டிருந்தார்.

நிசாரின் உள்ளத்தில் ஆத்திரம் கொப்பளித்தது. 'இவங்களெல்லாம் உபதேசிக்கிறாங்க, இவங்களுக்கொரு மேட, அதுல ஒரு பேச்சு' என தனக்குள்ளே நொந்துக் கொண்டவனாய் வீட்டுக்குள் பாய்ந்து சென்று பேனையும், கொப்பியுமாய் மேசையில் அமர்கிறான்.

ஆமாம் தாஹிர் போன்ற முகம் காட்டாத கண்ணாடிகளின் தலைமையின் கீழ் இனியும் பணிபுரிய முடியாது என்ற தீர்மானத்தோடு சங்கத்திற்கு இராஜினாமா கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தான் நிசார்.

**வரக்காமுறையூர் ராசிக்-**

உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள். _ஆர்_

# சின்ன தீவில் 300 கோயில்கள்

18 ஆம் பக்க தொடர்..

ஆறுமுகம் பரசுராமன் அமைச்சராக இருந்த போது, உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மொரீசியஸில் நடந்தது. அதன் பிறகு தமிழ் சம்பந்தமாக சிறிய, பெரிய மாநாடுகள் மொரீசியஸில் நடந்துள்ளன. அம்மாநாடுகளால் தமிழை மேம்படுத்தும் எப்பணிகளும் அங்கு நடக்கவில்லை. தமிழில் மாத இதழ்கள் கூட அங்கில்லை. தமிழ் வானொலிகள் ஒலிக்கவில்லை. குடியேறிய முதல் தமிழ் தலைமுறையினரிடம் இருந்த தமிழ் படிப்படியாகக் குறைந்து இப்போதிருக்கிற தலைமுறையினரிடம், தமிழ் அந்நியமானது போன்ற நிலையே உள்ளது. தமிழ் படிக்கிற மாணவர்களால்கூட தமிழில் சரளமாகப் பேச முடியவில்லை. முதல் தலைமுறை பிரெஞ்ச் ஆதிக்கத்தில் வாழ்ந்தது. அடுத்த தலைமுறை ஆங்கில ஆதிக்கத்தில் வாழ்ந்தது. தற்போது சுதந்திர மொரீசியஸில் வாழ்கிறது. கடந்த காலங்களில் ஆட்சிகளினால் மொழிகள் மாறியதால் கிரியேல் என்ற கலப்பு மொழி மொரீசியர்களிடம் பேச்சு மொழியாகியது. அம்மொழி அங்கு வாழும் எல்லா மொழியினரையும் இணைக்கும் மொழியாகியது. அங்கு கல்வி பயிலும் மாணவன் பிரெஞ்ச், ஆங்கிலம் ஆகிய மொழியில் கற்க வேண்டியதால் தமிழ் ஒரு பாடமாகியது. பேச்சு மொழி கிரியேல் என்பதால் தமிழில் பேச எவரும் இல்லை. மொரீசியசில் பலருக்கு தமிழ் எழுத, படிக்கத் தெரியும். ஆனால் பேச வரவில்லை. ஒரு மொழியைப் பேச வரவில்லையென்றால் அம்மொழி அழிந்து விடும். மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் மலாய் பேச்சு மொழியாக இருந்ததால் தான் இன்று அம்மொழி ரோமன் எழுத்துகளை வரித்துக் கொண்டு ஒரு மொழியாக உயர்ந்திருக்கிறது. மொரீசியசில் பள்ளிகளும், கோயில்களும் தமிழை வளர்க்க பல்வேறு பணிகளைச் செய்த போதும் எதிர்காலத்தில் தமிழ் பேசுவோர் சிறுபான்மையினராக இருப்பார்கள் என்ற அச்சம் இருக்கிறது.

**(தொடரும்)**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:138



திரு/திருமதி.செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

.................... ....................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 138
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 138

**இடமிருந்துவலம்**

1. கள்வன்
4. போதை தரும் பானம்
6. மதிப்புக்கும், கௌரவத்துக்கும் ஏற்படும் குறைவு
8. புகழ்பெற்ற அல்லது பலராலும் அறியப்படும் நிலை (குழம்பியுள்ளது)
10. பறவை (திரும்பியுள்ளது)
11. நிலா (திரும்பியுள்ளது)
12. சூளுரை
15. சரியில்லாத முடிவு. பிழை
17. காய்த்த மரத்துக்குத்தான் இதன் எறி கிடைக்கும் என்று சொல்வார்கள்
18. ஒரு தமிழ் மாதம் (திரும்பியுள்ளது)
20. பிரமுகர்களின் ஊர்வலம் (திரும்பியுள்ளது)
21. லஞ்சம்
22. காலை முதல் பொழுது மறையும் வரையிலான காலப்பகுதி (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இதுவும் ஒரு மூலிகை
2. ஒரு இசைக்கருவி
3. இதுவும் ஒரு பறவைதான் (குழம்பியுள்ளது)
4. புதல்வி
5. கயிறு தயாரிப்புக்குரிய மூலப்பொருள்
7. ஒன்றுக்கு மேற்பட்டவை
9. தானிய வகைகளுள் ஒன்று (குழம்பியுள்ளது)
12. வாரத்தில் ஒருநாள்
13. பிறர் அறியும் வகையில் வெளிப்படுத்தப்படும் செய்தி
14. ஆரவாரம் (குழம்பியுள்ளது)
15. இளைய சகோதரி
16. சிறு போத்தலை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
19. இதுவும் வீட்டின் வளர்ப்புப் பிராணி
20. பழம் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 137

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. ஒற்றுமை
4. பாப்பா
6. ஆகாரம்
8. கிலி
10. புதினம்
12. நாணம்
14. படை
16. உறுதி
17. பாரதம்
19. காத்திரம்
21. புளுகன்
23. உளவு
24. பலம்
25. விதி

**மேலிருந்து கீழ்**

1. ஒல்லி
2. ஆறு
3. மைதானம்
4. பாம்பு
5. பாறை
7. ரதி
9. கிணறு
11. விளம்பரம்
13. நாத்திகம்
15. தடை
16. உப்பு
17. பாதி
18. உதிரம்
20. காலன்
22. பளு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :137

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எம்.பி,. அகிலன்**<br>39, கல்லூரி வீதி,<br>திருகோணமலை | **எம்,ரீ. மிக்டாட் அஹமட்**<br>337, மங்கெதர,<br>துல்ஹிரிய | **என். கே. வேணி,**<br>25/10 சேர்ச் வீதி,<br>பலாங்கொடை |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.சி.என். ஹம்தா** வெலிகம
2. **சிவசீலன்** நீர்வேலி
3. **எம்.எம். சசாத்,** மருதமுனை
4. **எம். ஐ.ஏ லத்தீப்,** அக்கரைப்பற்று
5. **ஏ.சி.ஏ. ரஹுமான்,** ஏறாவூர்
6. **பி. குணசேகரன்** களுதாவளை
7. **ஏ. டபிள்யூ,எம். நியாஸ்** மாவனல்லை
8. **ரஜினி புண்ணியமூர்த்தி** மட்டக்களப்பு
9. **மல்லகாதேவி பத்மநாதன்** பசறை
10. **பிரசாந்த் ஷேஷாந்த்** மட்டக்களப்பு

# இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் Sunshine Tea Private Limited

இலங்கையின் முன்னணி தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களில் ஒன்றான Sunshine Tea Private Limited தனது, செயற்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் களப்பயணம் ஒன்றை அண்மையில் முன்னெடுத்திருந்தது. இதன்போது, நிறுவனத்தின் தொழிற்பாடுகள் குறித்து அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியான சஞ்சீவ சரணபால விளக்கமளிக்கையில், 1967ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், 1987ஆம் ஆண்டு SKS Exports என்ற பெயரில் புதுப்பிக்கப்பட்டு, 2007இல் Sunshine Tea Private Limited என தொழிற்பட்டு வருகின்றது. Sunshine Tea Private Limited நிறுவனத்தின் தாய் நிறுவனம் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் PLC ஆகும்.

இந்நிறுவனத்தில் 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிவதோடு, தொழிற்சாலையில் 25 பெண் தொழிலாளர்களும், 75 ஆண் தொழிலாளர்களும் பணியாற்றுகிறார்கள். ஏற்றுமதி, இறக்குமதி என்ற வகையில் இரு பிரிவுகளாக பணியில் ஈடுபடுகின்றனர். இந்நிறுவனத்தின் ஆண்டு விற்பனை 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாகும்.

இந் நிறுவனத்தின் உற்பத்தி தொகுப்புப் பட்டியலில் முன்னணி வர்த்தக நாமங்களாக Zesta, Watawala, Gordon Frazer, Avan Tea, Teazup போன்றன காணப்படுகின்றன.

அத்தோடு, நிறுவனத்தின் கீழ் தேயிலை பயிரிடப்படவில்லை. தேயிலைத்தூள் ஏற்றுமதி மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்றுமதியில் 70 முதல் 80 வரையான பங்களிப்பு காணப்படுகிறது. நாளாந்தம் 1.5 மில்லியன் கிலோ கிராம் தேயிலை பொதியிடப்படுகின்றன. தேயிலை பதப்படுத்தும் திறனானது ஆண்டுக்கு 11 மில்லியன் கிலோ கிராமிற்கும் அதிகமான தேயிலை பதப்படுத்துவதோடு பொருளாதார ரீதியிலும் முன்னிலை வகிக்கிறது.

இந்நிறுவனம் வேலை வாய்ப்பு மற்றும் நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் நிறுவனமாக காணப்படுகின்றது. வேலை வாய்ப்புகள் வழங்கும் போது பயிற்சி மற்றும் வளர்ச்சிகள் பற்றி அதிக கவனம் செலுத்துகிறது.

அத்தோடு, Great Place to Work (GPTW) Sri Lanka அமைப்பினால் 2024ஆம் ஆண்டு உற்பத்தி, தயாரிப்பிலும் சிறந்த 15 பணியிடங்களில் ஒன்றாக இந்த நிறுவனம் இடம் பிடித்துள்ளது. Sunshine நிறுவனம் நவீன இயந்திரங்கள், தொழிநுட்பத்துடன் கூடிய, நவீன பதப்படுத்தும் தொழிற்சாலை என்ற வகையில் உயர் தர வசதிகள் கொண்டு காணப்படும் வர்த்தக நிலையமாக முன்னிலை வகிக்கின்றது.

அத்தோடு, தேயிலைத்தூள் பல பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட தேயிலையை உரிய முறையில் பிரித்தெடுத்து 05 படிமுறைகளின் கீழ் தேயிலை பிரித்தெடுக்கப்படுகின்றது.

தேயிலையை பதப்படுத்தும்போது, தேயிலையை தூய்மைபடுத்துவது முக்கியமானதாக காணப்படுகிறது.





ஒரு நாளைக்கு குறிப்பிட்ட நேர அளவின் படி 14,855 கிலோ கிராம் தேயிலை பல்வேறு ஒழுங்குபடுத்தலுக்கு அமைய அரைக்கப்படுகின்றது. தேயிலை பதப்படுத்தல் மற்றும் அரைத்தல் போன்றவற்றிற்கு பின்னர் இறுதியாக தேயிலைக்கு வாசனை திரவியங்கள் பயன்படுத்தப்படும். இந்த வாசனை திரவியங்கள் ஜேர்மனியிலிருந்து கொண்டுவரப்படுகின்றது. இதனால் தேநீர் சுவையானதாகவும் புத்துணர்ச்சி அளிப்பதாகவும் இருக்கும். அத்தோடு, தேயிலையில் வாசனை திரவியம் பயன்படுத்துவதனால் உடல் ரீதியாக ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்படுமா? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் ISO 9001 சான்றிதழ், FSSC 22000 சான்றிதழ், GMP (நல்ல உற்பத்தி நடைமுறைகள்) சான்றிதழ், Fair Trade சான்றிதழ் , Rainforest Alliance சான்றிதழ், Organic சான்றிதழ், Halaal சான்றிதழ் மற்றும் SMETA (Sedex Members Ethical Trade Audit) சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் பெற்ற நிறுவனம் என்பதாலும் உரிய முறையில் உற்பத்தியினை மேற்கொள்வதாலும் பக்கவிளைவுகள் ஏற்படாது என்று தெரிவித்தார்.

தேயிலை உற்பத்தி முடிவடைந்து தேயிலையின் தரத்தினை உரிய முறையில் ஆய்வுக்கு உட்படுத்தி தயாரிப்பு திட்டமிடல் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அந்நிறுவனத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு தயாரிப்புக்கள் அனைத்தும் தனித்தனியாக தயாரிக்கப்படுவதோடு, Zesta, Watawala, Gordon Frazer, Avan tea மற்றும் Teazup ஆகிய உள்நாட்டு தயாரிப்புக்களோடு, வெளிநாட்டு தயாரிப்புக்கள் ஈரான், ஈராக், ஐக்கிய அமெரிக்கா, கனடா, இத்தாலி, அவுஸ்திரேலியா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக தெரிவித்தார். நிறுவனத்தின் துணை பொது மேலாளராக பணியாற்றும் சமீர ராஜாபக் ஷ மற்றும் P.A. Management ஆக பணியாற்றும் கபில சம்பத் ஆகியோர் தேயிலை பொதியிடல் பிரிவு பற்றி தெரிவிக்கையில்,

பொதியிடல் பிரிவில் உள்நாடு, ஏற்றுமதி என தனித்தனி பிரிவுகள் உள்ளன. இயந்திர உதவியுடன் சிறு பொதிகள், பரிசு பொருட்களாக தேயிலைத்தூள் பொதிகள் என பல வகைகளில் பொதியிடப்படுகின்றன. பொதியிடும் போது பொதியிடலுக்கு அவசியமான பைகள், label போன்றன வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு அமைவாக பொதி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. அத்தோடு, தேயிலை பைகளில் staple pins பயன்படுத்துவது தவிர்க்கப்படுவதோடு, அதற்கு பதிலாக முடிச்சுக்கள்/ வேறு முறைகள் பயன்படுத்த ப்படுகின்றன.

ஒவ்வொரு தேயிலைத்தூள் கலவைகள் அடங்கிய பொதிகளும் மெருகேற்றப்பட்ட உறைகளில் பொதி செய்யப்படுகின்றன.

Sunshine Tea Private Limited நிறுவனத்தின் முகாமைத்துவ அதிகாரி விரோச்சன மஹாநாம தேநீரின் தரம் பற்றி தெரிவிக்கையில்,

தேயிலை பெற்றுக் கொள்ளும் பிரதேசங்களுக்கு அமைவாக தேயிலையின் தரம் காணப்படுகிறது.

கண்டி, திம்புள்ள, நுவரெலியா, உடப்புஸ்ஸல்லாவை, ஊவா, ருஹுண மற்றும் சப்ரகமுவ போன்ற பிரதேசங்களில் இருந்து தேயிலையை பெற்றுக்கொண்டு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் தற்போது ஊவா பகுதியில் இருந்து பெற்றுக்கொண்ட தேயிலை உற்பத்திக்கு அதிகளவாக பயன்படுத்தப்படுகின்றது. இந்த தேயிலையில் தயாரிக்கப்படும் தேநீர் ஒவ்வொன்றும் வெவ்வேறு சுவையினைக் கொண்டதாக காணப்படும்.

அத்தோடு, L/G OPI, OPA, PEK, FBOP, BOP, BOPE, Dust 1, Dust, Silver Tips, Golden Tips, Zesta, Watawala, Ran Kahata போன்ற தேயிலைத்தூள் தயாரிப்புக்களும் காணப்படுகிறன.

Sunshine Tea Private Limited நிறுவனத்தின் தயாரிப்புக்கள் அனைத்தும் பல்வேறு ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்ட பின்னரே பொதி செய்யப்படுகின்றன. இவை தவிர பல்வேறு வகையான தேயிலை தயாரிப்புக்களையும் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளதோடு, எதிர்காலத்திலும் பல்வேறான உற்பத்திகளை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**றிஸ்வான் சேகு முஹைதீன்**

## மிகவும் விரும்பப்படும் ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம் AIA இன்ஷூரன்ஸ்

AIA இன்ஷூரன்ஸ் இலங்கையில் மிகவும் விரும்பப்படும் ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமங்களில் ஒன்றாக தனது அங்கீகாரத்தை அறிவிப்பதில் மிகவும் பெருமிதம் கொள்கின்றது. இதற்கான கருத்தாய்வினை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட பெபர்கியூப் கென்சல்டன்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிபூரணமான தரவின் அடிப்படையில் AIA இனால் வழங்கப்பட்ட இப்பாராட்டானது AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க முக்கிய மைல்கல்லினை அடையாளப்படுத்துகின்றது.

எங்களின் மிகச்சிறந்த அர்ப்பணிப்பினால் இப்பயணம் வழிகாட்டப்படுவதுடன் எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அசைக்க முடியாத கவனத்தினையும் செலுத்துகின்றது. (பெபர்கியூப் கென்சல்டன்ஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட கருத்தாய்வின் அடிப்படையில் AIA ஆல் தொகுக்கப்பட்ட தரவுகளின்படி) பெருநிறுவன வர்த்தக நாமப் பிரிவில் மிகவும் விரும்பப்படும் காப்புறுதி வழங்குநராக AIA பெயரிடப்பட்டுள்ளதானது இலங்கையர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் அதிகப்படியான அன்பிற்கான சான்றாகவே உள்ளது. எங்கள் காப்புறுதிதாரர்களுக்கு இணையற்ற சேவை மற்றும் ஆதரவை வழங்குவதற்கான எங்கள் முயற்சிகளின் சரிபார்ப்பானது அவர்களின் நிதிப் பாதுகாப்பு மற்றும் மன நிம்மதியினை மிகவும் உறுதி செய்கின்றது.




"இலங்கையில் உள்ள அனைவரும் எங்கள் மீது மிகுந்த அன்பினைப் பொழிவதற்கு நாங்கள் உண்மையிலேயே மிகவும் பாக்கியம் பெற்றவர்களாகவே எங்களைக் கருதுகின்றோம்" என AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி சசித் பம்பரதெனிய கருத்துத் தெரிவித்திருந்திருந்தார்.

## SUNGROW Solar Inverter இலங்கையில் அறிமுகம்

E.B. Creasy & Co., PLC நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க வலு பிரிவான E.B. Creasy Solar, சூரிய வலுத் துறையில் சர்வதேச முன்னோடியான SUNGROW உடன் மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளது. 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதி இந்த மைல்கல்லை பதிவு செய்ததுடன், இந்த கைகோர்ப்பினூடாக, இலங்கையில் SUNGROW Solar Inverterகளின் உத்தியோகபூர்வ விற்பனை மற்றும் சேவை பங்காளராக E.B. Creasy Solar ஐ நியமித்துள்ளது. அதனூடாக, நிலைபேறான எதிர்காலத்துக்கு நவீன சூரிய வலுத் தீர்வுகளை அறிமுகம் செய்து வாடிக்கையாளர் தன்னிறைவை மேம்படுத்த முன்வந்துள்ளது.

சூரிய வலுக் கட்டமைப்புகளின் வினைத்திறனை மேம்படுத்தக்கூடிய வகையில் SUNGROW Inverters வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றிணைக்கப்பட்டுள்ள தொழில்நுட்பங்கள் மற்றும் பாவனையாளருக்கு நட்பான ஆற்றல்கள் போன்ற பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சூரியக் கதிரும் வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதை SUNGROW Inverter உறுதி செய்து, பெருமளவு வலுச் சேமிப்பு மற்றும் பாவனையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வினைத்திறனையும் உறுதி செய்யும். அதன் பிரத்தியேகமான அலங்காரத்தினூடாக தொழில்நுட்பத்தின் பரந்த தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன்,



பாரியளவு வணிக பொருத்துகைகள் அடங்கலாக, பல்வேறு பிரயோகங்களுக்கு பொருத்தமானதாக அமைந்திருக்கச் செய்துள்ளது. அசாதாரண வானிலை மாற்றங்களுக்கு பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த inverter, நீண்ட கால பாவனைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## NDB வங்கி அறிமுகப்படுத்தியுள்ள "NDB Pixel": எண்ணிம கணக்கு

நிதியியல் சுதந்திரத்தை வளர்ப்பதற்கும், நாட்டின் இளைஞர்களிடையே சேமிப்புக் கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, NDB வங்கியானது அதன் சமீபத்திய சலுகையான "NDB Pixel" ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதுமையான எண்ணிம கணக்கானது 13 முதல் 18 வயதுடைய பதின்ம வயதினருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் எதிர்காலத்திற்கான வலுவான நிதியியல் அடித்தளத்தை உருவாக்குவதற்கான வளங்களையும் உதவியையும் இதன் மூலம் அவர்களுக்கு வழங்குகிறது.

NDB Pixel ஆனது அது ஒரு எண்ணிய கணக்கு என்பதற்கும் அப்பாலானதாகும். இது இளம் இலங்கையர்களின் நிதியியல் அறிவை வளர்ப்பதனை நோக்கி ஒரு அடி முன்னோக்கி செல்கின்றது. NDB வங்கியானது வெறுமனே ரூ. 5,000 எனும் ஆரம்ப வைப்புத்தொகையுடன், இளைய தலைமுறையினருக்கு அவர்களின் எதிர்காலக் கல்வித் தேவைகளில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி, சேமிப்பு ஒழுக்கத்தையும் பழக்கத்தையும் ஏற்படுத்த எதிர்பார்க்கிறது. அவர்களின் நிதிகளை பொறுப்புடன் நிர்வகிப்பதற்கான அறிவு மற்றும் வழிமுறைகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், NDB வங்கி அவர்கள் மிகவும் பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கி நகர்வதற்கான வழியை அமைத்துக்கொடுக்கிறது.

NDB Pixel இன் நன்மைகள் பதின்ம வயதினரின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அதே வேளை அவை அதிக வட்டி வீதங்களையும் வழங்குகின்றன.

## 10 பயிலல் நிலையங்களை ஆரம்பித்து புதிய மைல்கல்லை எய்தியுள்ள SSG செயற்றிட்டம்

நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) செயற்றிட்டம், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆறு புதிய பயிலல் நிலையங்களை ஆரம்பித்து மற்றுமொரு முக்கியமான மைல்கல்லை எய்தியுள்ளது. இந்த நிலையங்கள், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள, கம்பஹா மாவட்டத்தின் கட்டுநாயக்க, கொழும்பு மாவட்டத்தின் ராஜகிரிய, மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி மற்றும் அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கனவே நான்கு நிலையங்கள், கண்டி மாவட்டத்தின் செங்கடகல, மாத்தளை மாவட்டத்தின் நாவுல, நுவரெலியா மாவட்டத்தின் மீபிலிமான மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவில பகுதிகளில்



அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த விரிவாக்கத்துடன், இலங்கையில் 10 மாவட்டங்களுக்கு SSG தனது இளைஞர் விருத்தி செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. அதனூடாக, நாட்டில் காணப்படும் மாபெரும் விருந்தோம்பல் கற்கைகள் நிலையங்களில் ஒன்றாக திகழ்கின்றது. குறைந்த வசதிகள் படைத்த இளைஞர்களுக்கு இன, மத, பாலின பாகுபாடின்றி சமமான வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கின்றது. அண்மைய புள்ளிவிவரங்களின் பிரகாரம், 600 க்கும் அதிகமான மாணவர்கள் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளதுடன், தற்போது பயிற்சிகளைப் பெறுகின்றனர். 2024 ஆம் ஆண்டின் இறுதியில் மேலும் 970 மாணவர்களை உள்வாங்கி பயிற்சியளிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில், புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்கான திட்டங்களும் அடங்கியுள்ளன. 2025 ஆம் ஆண்டுக்கான இலக்கானது, சகல 10 நிலையங்களிலும் 1830 மாணவர்களை பதிவு செய்வதாகும்.

## யூரோக்ரிப் டயர் விற்பனையாளர் சாதனைகளை கொண்டாடியது TVS

TVS Lanka (Pvt) Ltd சமீபத்தில் TVS டயர் மற்றும் டியூப் டீலர்களின் சிறப்பான சாதனைகளை Eurogrip Tyres Dealer Gathering 2024 இல் கொண்டாடியது. இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு ஒரு முக்கிய வணிக மைல்கல்லைக் குறித்தது, எங்கள் டீலர்களின் சிறப்பான செயல்திறனை உயர்த்தி, எதிர்கால சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு களம் அமைத்தது. உத்திகளாக அவை அமைந்தன.

எங்கள் சிறப்பு விளம்பரத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலட்சிய இலக்குகளை அடைவதில் எங்கள் டீலர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை இந்த நிகழ்வு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. TVS லங்கா இந்த சிறந்த செயல்திறன் கொண்ட டீலர்களை பாராட்டி வெகுமதி அளித்தது,




இதன் மூலம் ஈடுபாடுடைய வணிகங்கள் தொடர்பான வாதங்கள், மூலோபாய திட்டமிடல் அமர்வுகள் மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகள் பற்றிய அறிவு ஆகியவை அடங்கும். TVS Lanka (Pvt) Ltd இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான கீதல் அன்டனி குறிப்பிடுகையில்: "எங்கள் டீலர்கள் எங்களின் வெற்றியின் முதுகெலும்பாவார்கள்.

## இலங்கையில் ஜூன் 2024 தேர்வு பெறுபேறுகளை அறிவிக்கிறது கேம்பிரிட்ஜ்

Cambridge International Education, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள மாணவர்களுக்கு அதன் மிகப்பெரிய தேர்வுத் தொடரின் பரீட்சை பெறுபேறுகளை இன்று வெளியிட்டது. 140 நாடுகளில் உள்ள 5261 பாடசாலைகளில் 631,000 கேம்பிரிட்ஜ் IGCSE, சாதாரண தரம், சர்வதேச AS மற்றும் உயர் தர மாணவர்கள் ஜூன் 2024 தேர்வுத் தொடரிலிருந்து தங்கள் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டை விட மாணவர் எண்ணிக்கை 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, ஜூன் 2024 தொடரில் மாணவர்கள் 1.6 மில்லியனுக்கும் அதிகமான தேர்வு நுழைவுப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இது கடந்த ஆண்டை விட 9% அதிகம் ஆகும்.

கேம்பிரிட்ஜ் IGCSE, சாதாரண தரம், சர்வதேச AS மற்றும் உயர் தரம் ஆகியவற்றில் அறிவியல் சார் பாடங்கள், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகியவை உலகளவில் மிகவும் பிரபலமான பாடங்களாகத் தொடர்கின்றன.

இலங்கை மாணவர்கள் இந்தப் போக்கைப் பின்பற்றுகின்ற போதிலும், மாணவர்கள் எதிர்காலத்திற்கான பரந்த அளவிலான திறன்களை தேடுவதால் வணிகம் மற்றும் கணினி அறிவியல் ஆகிய பாடங்களும் பிரபலமாக உள்ளன என்பதை தேர்வு நுழைவுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில், கேம்பிரிட்ஜ் சாதாரண தரம் மற்றும் IGCSEஇல் ஆங்கில மொழி, கணிதம், கணினி அறிவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல் ஆகியவை மிகவும் பிரபலமான பாடங்கள் ஆகும்.

கேம்பிரிட்ஜ் சர்வதேச AS மற்றும் உயர் தரத்தில், பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம், உயிரியல் மற்றும் வணிகம் ஆகியவை மிகவும் பிரபலமான பாடங்களாகும்.

# தேசியவாதம் கூட ஒருவகையில் வெறித்தன்மைக்கு இட்டுச்செல்லும்



தலாத்து ஓயா கணேஷ் எனப் பொதுவாகவும் கே. கணேஷ் என நண்பர்கள், உறவுகள் மத்தியிலும் அறியப்பட்ட இவர், மலையகத்தின் முன்னோடி இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர் மட்டுமன்றி இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பின் முன்னோடியாகவும் இவரைக் கருதலாம்.

கண்டி அம்பிட்டியவில் 1920ஆம் ஆண்டு பிறந்த இவரின் இயற்பெயர் சித்திவிநாயகம். வீட்டில் செல்லமாக கணேசன் என்றே இவரை அழைத்ததால், அதுவே அவரது பெயராகி கே. கணேஷ் என்றாகியது. கண்டியில் கல்வியை ஆரம்பித்தவர், பின்னர் மதுரை தமிழ் சங்கத்தில் கல்வி கற்றார். அது சுதந்திரப் போராட்ட காலமானதால் இந்திய சுகந்திரப் போராட்டத்தில் அவர் நாட்டம் திரும்பியதில் ஆச்சரியமில்லை. காங்கிரஸ் கட்சியால் அவர் ஈர்க்கப்பட்டிருந்தாலும் பின்னர் இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்திலும் பரவிய கம்யூனிச முற்போக்குவாதம், அவருடைய இயல்புத் தன்மையோடு ஒத்துப்போனதாலோ என்னவோ முற்றுமுழுதாக சமவுடைமைக் கொள்கைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தன் இலக்கிய வாழ்வில் அவர் ஏழு சிறுகதைகளை எழுதினார். ஆனால் ஏராளமான மொழிபெயர்ப்புக்களில் அவர் ஈடுபட்டார். அவருடைய இரு சிறுகதைகள் மணிக்கொடியில் வெளிவந்தன. கவிஞர்களின் நூல்களைத் தமிழுக்கு கொண்டுவந்த பாரிய பணியை இவர் செய்தார். இவரளவுக்கு மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் பெயர்போன ஒருவரை சமகாலத்தில் காணமுடியாது. 2003ஆம் ஆண்டில் கனேடிய இலக்கியத் தோட்டம் இவருக்கு 'இயல்' விருது வழங்கிக் கௌரவித்தது. இயல் விருது பெற்ற கணேஷை கனடாவில் இருந்து வெளிவரும் 'காலம்' இலக்கிய சஞ்சிகைக்காக பேராசிரியர் நுஃமான் நேர்காணல் செய்தார். 2003ஆம் ஆண்டில் வெளிவந்த அந்நேர்காணல் கணேஷின் நூற்றாண்டு விழாவையொட்டி மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.



***நுஃமான் : வாழ்க்கையில் மதத்தின் பங்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

கணேஷ் : மதம் என்பது சிறு வயதில் இருந்தே பெற்றோர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவது. அதற்கென்று ஒரு வழிமுறை இருக்கு. எந்தச் சமயமாக இருந்தாலும் அது நமக்கு ஒரு நெறிமுறையை வகுத்துக்கொடுக்கிறது. அந்த நெறிமுறையில் எது நல்லது எது கெட்டது என்பதைப் பிற்காலத்தில் குழந்தைகள் வளர்ந்த பிறகு அவர்களால் உணர்ந்துகொள்ள முடிகிறது. எல்லா மதத்தினருக்கும் இறைவன் பொதுவானவன். ஒரு சாராருக்கு மட்டும் உரியவன் அல்ல. இருப்பது ஒரே ஒரு இறைவன்தான். நான் சொல்வது என்னவென்றால். நீங்கள் குல்லாப் போட்டிருக்கிறீகளா? வேட்டிகட்டி இருக்கிறீர்களா? சாறன் கட்டி இருக்கிறீர்களா, நாமம் போட்டிருக்கிறீர்களா என்பது முக்கியமில்லை. இறைவன் எல்லாருக்கும் பொதுவானவன். ஆண்டவனுக்குப் பயந்துகொண்டு இருந்தோம் என்றால், நெறிமுறைகள் அது சட்டமாக இருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் வாழ்க்கை ஒழுங்காக இருக்கும். இல்லையென்று சொன்னால் திக்குத் திசைமாறிப் போகும். தண்டவாளத்தில் இருந்து புரண்ட மாதிரி.

***நுஃமான் : நீங்கள் இறை நம்பிக்கையை மதங்களோடு, ஒரு குறிப்பிட்ட மதத்தோடு சேர்த்துப் பார்க்கவில்லையா?***

கணேஷ் : இல்லை, எல்லா மதங்களையும் நாம் ஆழ்ந்து படிக்கவேண்டும். சைவமோ, வைஷ்ணவமோ எல்லாத்தையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். எல்லா மதங்களுக்கும் நாம் மரியாதை கொடுக்கவேண்டும். மதங்களில் இருந்து நல்லவைகளைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கையையும் ஒழுக்கநெறியில் வைத்திருக்கவேண்டும்.

***நுஃமான் : பொதுவாக மார்க்சியம், இருத்தல், அதாவது வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்று சொல்கிறது.***

கணேஷ் : ஆமாம்

***நுஃமான் : ஆனால் மதம் சிந்தனைதான் வாழ்நிலையைத் தீர்மானிக்கிறது என்று சொல்கிறது. இரண்டுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடு உண்டு.***

கணேஷ் : ஆமாம், ஆமாம், தற்போதுள்ள நிலையில் எல்லாவற்றையும் பொருளாதாரம்தான் பாதிக்கின்றது. ஆனால், என்னைக் கேட்டால் ஆன்மிகம்தான் மனிதனுக்கு அவசியமாகத் தெரிகிறது. இன்றைய அணுகுண்டு யுகத்தில் இது அவசியமாகத் தோன்றுகிறது. கடவுள் இல்லாவிட்டாலும் கடவுள் ஒருத்தனை சிருஷ்டி பண்ணிக் கொள் என்று வால்டேயர் சொன்ன மாதிரி ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் அவசியமாக இருக்கிறது. அதனால், ஒரு குறிப்பிட்ட மதத்தில் வெறிபிடிக்காமல் ஆன்மிக முறையில் போகும் எதையும் நாம் ஆதரிக்க வேண்டும்.

***நுஃமான் : இப்படிச் சொன்னால் என்ன நீங்கள் மார்க்சியத்தின் தத்துவார்த்த அம்சத்தை அதாவது பொருள் முதல்வாதத்தை அவ்வளவு பொருட்படுத்தவில்லை.***

கணேஷ் : தத்துவார்த்த அம்சத்தை இல்லை.

***நுஃமான் : ஆனால், அதன் அரசியல் அம்சத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்என்றுசொல்லலாமா?***

கணேஷ் : ஆம், சில தத்துவங்கள் ஏற்புடையதாக இருக்கின்றன.

***நுஃமான் : அந்த அடிப்படையில்தான் நீங்கள் மார்க்சிய இயக்கங்களுடன் தொடர்பட்டு இருந்தீர்களா?***

கணேஷ் : ஆம், ஏனென்றால், மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்பது போல, இந்தத் தத்துவங்களினால் பொதுமக்களுக்குப் பயன் கிடைக்கும் என்று நினைத்தேன். சோவியத் ரஷ்யாவை ஒரு சொர்க்க பூமியாக நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், எனக்கு அங்கு போக வாய்ப்புக் கிடைத்து, அங்கு சென்று பார்த்தபோது அது சொர்க்க பூமியாக இருக்கவில்லை. ஆனால், ஒரு மாயையிலேதான் ரொம்பப் பேர் மயங்கி இருந்தார்கள். அந்த மாயையை விடுத்து உண்மையை ஊடுருவிப் பார்க்கும்போது பல விசயங்கள் தெரிய வந்தன. உதாரணமாக ஸ்டாலின் கொடுமைகள். அதன் சாயல்தான் பல இடங்களிலும் நடக்கின்றது. இதையெல்லாம் பார்த்தபோது கடைசியில் எனது தீர்மானம் என்னவென்றால் மனிசன் நல்லா இருந்தா உலகமும் நல்ல இருக்கும். உலகம் நல்லா இருக்கிறதுக்கு மனிசன் நல்லா இருக்க வேணும்.

***நுஃமான் : இந்தக் கருத்து உங்களுக்குள் இளமைக் காலத்திலேயே இருந்ததா அல்லது இப்போது உங்களுக்குத் தோன்றுவதா?***

கணேஷ் : இளமையில் அம்மாவிடம் இருந்து நான் பெற்றுக் கொண்ட மதக்கல்விதான் எனது அடிப்படை. அந்த வாய்ப்பு எனக்கு இருந்தது. அதை நான் விரிவுபடுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். ஊடுருவிப் பார்க்கும்போது மதம் மனிதனுக்கு அவசியம். அதாவது ஒரு நெறிமுறை அவசியம். அது எந்த மதமாக இருந்தாலும் சரி. அந்த நெறிமுறையை மீறினால் பாதகம் ஏற்படுகிறது என்பதை நான் உணர்கிறேன்.

***நுஃமான் : ஆரம்பத்தில் இருந்தே உங்களுக்கு இந்தக் கருத்து இருந்தது.***

கணேஷ் : ஆமாம், ஆமாம் இந்தக் கருத்து உள்ளேயே இருந்தது.

***நுஃமான் : ஆனால், பொதுவாக உங்களைப் பற்றிப் பேசும்போது நீங்கள் ஒரு மார்க்சியவாதி – ஒரு இடந்துசாரி கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தவர் என்றே சொல்லுவார்கள். நீங்கள். ஒரு பொருள் முதல்வாதி ஒரு நாஸ்திகர் என்ற கருத்தே பலருக்கும் இருக்கின்றது. இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு முரண்பாட்டை நீங்கள் காணவில்லையா?***

கணேஷ் : வெளியில் உள்ளவர்கள் அப்படித்தான் நினைத்தார்கள். உறவினர்கள் கூட என்னை ஒதுக்கி வைத்தார்கள். கணேசா, அவன் ஏரு கம்யூனிஸ்ட்டு என்று ஒரு பட்டம் எனக்குக் கொடுக்கப்பட்டது. அது அவங்க அவங்களுடைய போக்கு. அதை நாம் குறை சொல்லுவதற்கில்லை. அவர்களுடைய கொள்கைகளும் எண்ணங்களும் அந்த மாதிரி இருந்தது. அவர்களுக்கு ஆழ்ந்து பார்க்கக் கூடிய தன்மை கிடையாது. இன்றைக்கு 'இந்த சமுதாயத்தில் யாருக்குமே இல்லாமல் இருக்கு, நான் ஒரு சம்பவத்தைச் சொல்லலாம். அந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம் ஒன்றுக்கு நான் ஒரு நண்பரை அழைத்துக்கொண்டு போயிருந்தேன். மோகன் குமாரமங்கலம் பேசிக் கொண்டிருந்தார். நான் அழைத்துப் போயிருந்த நண்பர் ஒரு ட்றொட்ஸ்கியவாதி. அவரை ஒரு தீணர்டாதவர் மாதிரி அங்கிருந்தவர்கள் ஒதுக்கிவைத்தார்கள். ட்றொட்ஸ்கி. உண்மையிலேயே ஒரு பெரிய புத்திசாலி. அவர் கொலை செய்யப்பட்டார். எனக்கும் பெரிய தாக்கமாக இருந்தது. பின்னாளில் ட்டெறாட்ஸகியவாதிகளை ஒரு சாதி வகுப்புமாதிரியே தள்ளிவைக்கிற நிலை இருந்தது.

***நுஃமான் : மதங்களில் இருக்கிற "செக்ரேறியனிசம்' மாதிரி.***

கணேஷ் : ஆம். அப்பிடி மதங்களில் இருக்கிற மாதிரி, ஒரு: மதத்தையே அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். கம்யூனிசம் என்பதே ஒரு மதம் ஆகிவிட்டது, சைவம், வைஷ்ணவம், சாக்தம் என்று எப்படிப் பிரிந்ததோ அந்த மாதிரி இவர்களும் பிரிந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் இப்போது கொள்கை வேறுபாட்டில் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், நான் எல்லாவற்றையும் ஊடுருவி என்னுடைய கொள்கையை உருவாக்கிக் கொள்கிறேன். சுதந்திரமாக. அதனால் அவர் அதிலையும் இருக்கமாட்டார், இதிலையும் இருக்கமாட்டார் என்று என்னைப் பற்றி சிலபேர் சொல்வார்கள். இப்படி நம்மில் சில இடதுசாரிகளும் இருந்துள்ளனர். எனக்கும் அதில் ஊடுருவிச் செல்வதற்கு இஷ்டம் இல்லாமல் போய்விட்டது. இதில் தீவிர பங்கு. எடுக்காமல் போனதற்கு இதுவே காரணம்.

சும்மா இருப்பதே சுகம் என்ற சித்தர்கள் வாக்குப்படி. இருப்பது. சும்மா மேடையில் ஏறாமல் இருப்பதற்கும் ஒரு காரணம் இதுதான். ஏனென்றால் மௌனம் என்பது. ஞானம். இது எனக்காக ஒரு சௌகரியத்துக்காக நான் சொல்வது. இது ஒரு *Philosophy* அல்ல. ஆனால் அதுதான் உண்மை, இன்றைக்கு இருக்கிற குத்துவெட்டுக்களைப் பார்க்கும்போது ஒவ்வொருத்தருக்கும் ஒழுக்கம் முக்கியமானதாகக் கருதினேன். அவ்வளவுதான். அந்த ஒழுக்கத்துக்கு வால்டேயர் கூறியது மாதிரி அது அவசியம் என்றுதான் நினைக்கிறேன்.

***நுஃமான் : மத நம்பிக்கை இல்லாமல் ஒருவன் ஒழுக்கமாக: இருக்க முடியாது என்று நினைக்கிறீர்களா?***

கணேஷ் : கஷ்டம் என்றுதான் நினைக்கிறேன். என்ன இருந்தாலும் ஒவ்வொரு சாதாரண மனிதனும். பிறக்கும்போதே மதத்தோடு பிறக்கிறான். அதில் உள்ள பண்பாடுகள், பழக்க வழக்கங்களில் வளர்கிறான். அவர் அவர் தேர்ந்தெடுத்த அந்தப் பண்பாட்டில் நல்லவை கெட்டவை எவை என்று தெரிந்து கொண்டால், நல்லதுதான். ஆனால் இப்பொழுது என்ன நிலை இருக்கிறது. என்பது பிரச்சினைதான். இப்போது பழைய நிலை இல்லை. ஒரு வெறித்தன்மை ஏற்பட்டுப் போகிறது. அது மிகவும் வருந்தத் தக்கது, இதைத்தான் ஃபண்டமென்றலிசம் என்கிறோம்.

இந்தம் ஃபண்டமென்றலிசம் இன்று எல்லா மதங்களிலும் இருக்கிறது. ஒரு மதத்தில் மட்டும் என்று இல்லை. அதே மாதிரித்தான் அரசியல். கொள்கைகளும், ஃபண்டமென்றலிசம் என்றால் ஒரு, உண்மையான நடுவுநிலைப் போக்கோடு ஆண்டவனைப் பார்த்தான். என்றால் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இருக்காது.

***நுஃமான் : தேசியவாதம் கூட ஒருவகையில் அதன் முதிர்ந்த வடிவத்தில் ஒரு வெறித்தன்மைக்கு இட்டுச்செல்வதே. ஜேர்மன் தேசியவாதம், இத்தாலிய தேசியவாதம் எல்லாம் பாஸிசமாக வளர்ந்தது. அப்படிப் பார்க்கும் போது இன்றைய நிலையில் இலங்கையில் தேசியவாதம், இந்தியாவில் வளர்ந்துள்ள இந்து தேசியவாதம் பற்றி என்ன நினைக்கிறர்கள்?***

கணேஷ் : அந்தக் காலத்தில் உண்மையில் ஹிட்லரின். மைன் கேம்ஃப் மூன்றுதரம் வாசித்துள்ளேன். ஹிட்லின் கொள்கையை சிலர் இங்கு அதரிக்கவும் செய்தார்கள். தமிழ் நாட்டிலும் சிலர் ஆதரித்தார்கள் ஹிட்லர் ஜேர்மனியை மேம்படுத்திவிட்டார். இங்கும். அதைப் பின்பற்ற வேண்டும் என்றார்கள். சிலர் ஜப்பானையும் ஆதரித்தார்கள். இந்தமாதிரி தேசியவாதத்தினால்தான் ஒரு நாடு முன்னேற. முடியும் என்றார்கள். உண்மையைச் சொல்லப் போனால் காந்தியந்தான் என்னைக் கவர்ந்தது. இந்திய தேசியவாதத்தில் காந்தியம் இருந்தது. அதனால் எனக்குக் காந்தியக் கொள்கையில் ஈடுபாடு இருந்தது. சுதந்திரத்துக்கும். பிறகு, காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும் என்று கந்தி சொன்னார். ஏனென்றால், அது *institutionalized* ஆகக் கூடாது என்றுதான். அரசியலில் அவ்வாறு நடக்கிறது. மதத்திலும் அவ்வாறு அமைப்பு முறைகள் உருவாகின்றன. இதனால் பல. கோளாறுகள் வரத்தான் செய்யும். அரசியலில் இருந்த மாதிரி மதத்திலும் இது வந்துவிட்டால். அதுதான் பெரிய பிரச்சினையாகிறது. இதுதான். கடைசியில் அடிப்படைவாதமாகிறது. ஏறக்குறைய தேசியவாதமும் அதேநிலையில்தான் இருக்கிறது. மொழி, மதம், அரசியல் எல்லாவற்றிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. வேறுபாடு காட்டுகின்றது.

இவை எல்லாவற்றையும் தாண்டிச் செல்வதற்கு ஒழுக்கம் என்கிற ஒன்று வேணும். ஒவ்வொருத்தரும் ஆத்மாவைச் சுத்தமாக்கிக் கொண்டால்தான் இவற்றை வெல்ல முடியும் என்பது என் கருத்து.

தொடரும்



பேராசிரியர் நுஃமான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைக்குடியில் 1944 இல் மக்புல் ஆலிமுக்கும் சுலைஹா உம்மாவிற்கும் மகனாகப் பிறந்தார். தந்தை ஒரு மதப்பணியாளர், அரபு மொழி ஆசிரியர். ஈழத்து தமிழ் அறிஞர். பேராசிரியர், கவிஞர், எழுத்தாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், ஆய்வாளர், இதழாளர் என பல துறைகளில் செயல்பட்டவர். நவீனத் தமிழ் உரைநடைக்கான இலக்கணத்தை உருவாக்க பணியாற்றியவர்.

பேராசிரியர் நுஃமான் ஆரம்பக் கல்வியைக் கல்முனைக்குடி அரசினர் ஆண்கள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைக் கல்முனை உவெசுலி உயர்தரப் பாடசாலையிலும் படித்தார். பின்னர் 15 ஆண்டுகள் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றினார். அட்டாளைச் சேனை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். இளங்கலை மொழியியல் பாடத்தை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் பயின்றார். அதுபோல் முதுகலைத் தமிழ் இலக்கியப் பாடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வைப் பேராசிரியர் குமாரசாமி இராசாவின் மேற்பார்வையில் மூன்றாண்டுகள் செய்தார்.

பேராசிரியர் நுஃமான் 1969–1970ல் 'கவிஞன்" என்ற பெயரில் காலாண்டு இதழை நடத்தினார்.

# உற்சாகம் தரும் கவி வரிகளால் உள்ளங்களில் தெம்பூட்டும் 'ருவண்டி பிளஸ் 20+'

ருவண்டி பிளஸ் 20+' என்ற பெயரில் 105 பக்கங்களில் அண்மையில் வெளிவந்திருக்கின்றது புத்தளம் பைஸானா என்ற புனைபெயரில் எழுதி வருகின்ற செல்வி பைஸானா பைரூஸ் வழங்கியிருக்கின்ற தமிழ்க் கவிதை நூல்.

இஸ்லாஹியா பெண்கள் கல்லூரியில் கல்வி பயின்று தற்போது தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முதலாம் வருட மாணவியாக கல்விப யிலும் அவரின் முதலாவது நூல் இது.

தன்னம்பிக்கை விதைகளை விதைக்கின்ற, தடைகளைத் தாண்டக் கட்டளையிடுகின்ற, உற்சாக மூட்டுகின்ற, இளமை வரிகளைக் கொண்டதான 55 கவிதைகளை நூல் உள்ளடக்கியிருக்கின்றது. இஸ்லாஹியா பெண்கள் கல்லூரி விரிவுரையாளர் எச். எம். மின்ஹாஜ் இஸ்லாஹி, தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக் ஆகியோர் முறையே அணிந்துரை, வாழ்த்துரைகளை வழங்கியுள்ளனர்.

புதுக் கவிதை என்ற கட்டற்ற கவிதை (Free verse) வழங்கியிருக்கின்ற சுதந்திரத்தில் கருத்துகள் தம்மைத் தாமே ஆளும் வடிவத்தில் வரிகளை அடுக்குகிறார் பைஸானா.

வயதுக்கேற்ற துணிச்சலும் துடிப்பும் அச்சமின்மையும் வரிகளில் பரிணமிக்கின்றன. மானுட நேயம், பெண்மை, சமூக எழுச்சி, நீதி, சமத்துவம், உழைப்பு முதலிய பொருட்பரப்புகளில் இலட்சிய நோக்கில் கவிதைகள் விரிகின்றன.

"அடங்கி யொடுங்கி
அமைதி காத்து
அநியாயத்தையும் அடைகாத்ததால்
பிறந்த தென்னவோ
அநீதி என்கிற அரக்கன் ஒன்றுதான்!
தவறிழைக்க வில்லை
தப்பேதும் செய்யவில்லை
தனவந்தரிடம் தலைகுனிவது மட்டும்
எம்மாத்திரம்..
எதிர்த்துப் பேசு!போராடு!
எதிரிகளின் களத்தில்
உனக்கான நீதி கிடைக்கும் வரை .
கலங்காதே!
கதிகலங்க விடு !
கதைத்துப் பயனில்லை என்றால்
கால்கள் தான் களம் அமைக்க
வேண்டும்"

என்று அநியாயத்திற் கெதிராகக் கொதித்தெழ அழைப்பு விடுக்கிறார் இளையகவி பைஸானா.

புதிய ஆத்திசூடியில் புதுமைக் கவிஞன் பாரதி, "அச்சம் தவிர், ஆண்மை தவறேல், ஏறுபோல் நட" என்று ஆணை இடுவான். அதனை யொத்த சிந்தனைகளை விதைப்பனவாக பலகவிதைகள் இந்நூலில் அமைந்திருக்கின்றன.

"என்னைப் பொறுத்தவரை
எனக்கு நானே வரையறை
வரம்புகள் விரிப்பேன். அதில் நானே
விதைப்பேன்
அதை நானே அறுவடை செய்வேன்
என் தேசத்தில் எனக்கு
நான்தான் ராஜா
நான் எடுப்பது தான் எனக்கு ஆணை
நான் தான் என்னை
வழிப்படுத்துகிறேன்!




நான் பார்ப்பது என் மனசாட்சிக்கு
அது சரியா என்பதை மட்டும் தான்!

என்ற கவிதை, 'நிமிர்ந்து நட, ஏறுபோல் நட' என்று அறிவுரை கூறுவதாகவும், தைரியமூட்டுவதாகவும் அமைந்து வழிகாட்டுகின்றது. ஓர் ஊக்குவிப்புப் பேச்சாளரைப் போல மனங்களோடு பேசுகிறார் அவர்.

"உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீயே நீதிபதி" என்ற கவியரசர் கண்ணதாசனின் கவி வரிகளில் காணப்படும் பொருண்மையை இக் கவிதையிலும் நாம் சுவைக்கலாம் .

"எனக்குச் சிறகுண்டு
என்னால் பறக்க முடியும்
என்னால் சிகரத்தை தொட முடியும்
என்னால் மழைமேகத்தை கிழித்துக்கொண்டு வானத்தை தொடவும் முடியும்
என் பேனா வேண்டுகிறது நீதியை
அது மட்டும்
கதவுகளை திறக்கும் வரை
சிறகடிக்க நான் என்றும்
மறுக்கவே மாட்டேன்" என்று வீரியச் சொற்களில் உரத்துக் குரலெழுப்புகிறார் பைஸானா. ஒரு பெண்ணாக அவர் பாடுகின்ற வரிகள் பெண்களின் எழுச்சி, விழிப்புணர்வு என்பவற்றை எடுத்தியம்புவதாகவும் உரம் சேர்க்கிறது.

**நூலாசிரியருக்கு நமது வாழ்த்துகள்.**

**நூல்: ருவெண்டி பிளஷ் 20/–**

**நூலாசிரியர் : பைஸானா பைரூஸ்**

**வெளியீடு: மூதூர் ஜே. எம். ஐ. வெளியீட்டகம்**

**விலை: ரூபா 500/–**

"புத்தியை தைக்கும் புதுக்கவிதைப் படைப்பாளி நான், புன்முறுவலோடு புதிரவிழ்க்க புனைந்துரைகளைப் புரட்டிப் பார்ப்பவள்!

உன்னத உத்திகள் பலதை
உதட்டளவில் உச்சரித்து
ஊசி முனைகளால் உருக்கி
படைப்புக்களை படைக்கும் படைப்பாளி நான்!"

என்று தனது கவிதைக்கோட்பாட்டை முன்வைக்கிறார் இளைய கவி பைஸானா.

வரிகள் ஒத்திசைப்போடு இயங்குவது கவிதை வாசகர்களுக்கு இன்பம் தருவதாகும். ஆயினும், ஒரே விதமான மொழி நடையிலேயே கவிதைகள் அனைத்தும் சொல்லப்பட்டிருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும். கவிதை வாசிப்பை இன்னும் தூண்டி விடுவதற்கு, வாசகர்களை ஈர்க்கும் வகையில் படிமம், குறியீடு, அங்கதம், முரண் போன்ற உத்திகளைக் கையாள்வது பயனளிக்கும் என்பதை இங்கு சொல்லி வைக்கலாம்.

நூலின் தலைப்பை "ருவண்டி பிளஸ் 20+" என்று ஆங்கிலத்தில் வைக்க வேண்டுமா? என்று மனம் வினாவெழுப்புவதை சொல்லாமலிருக்க முடியவில்லை.

26 ஆம் பக்கம் பார்க்க

பாவேந்தல்
பாலமுனை பாறூக்

# ஜம்மு காஷ்மீர் சட்டமன்ற தேர்தல்; வெற்றி யாருக்கு?

இந்தியா ஒரு நோக்கு

வாராந்த அலசல்



நந்தவனம் சந்திரசேகரன்

இந்தியாவில் ஐந்து மாநிலங்களுக்கு சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது, சத்தீஸ்கர், மத்திய பிரபதசம், ராஜஸ்தான், தெலுங்கானா மற்றும் மிசோரம், ஆகிய ஐந்து மாநிலங்களிலும் நவம்பர் 7 முதல் 30ஆம் திகதிவரையில் பல்வேறு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இவற்றுடன் ஜம்மு – காஷ்மீர் சட்டப்பேரவையிலும் செப்டெம்பர் 18 முதல் அக்டோபர் 1 வரையில் தேர்தல் நடைபெறுகிறது. மற்ற மாநிலங்களை விட ஜம்மு – காஷ்மீர் தேர்தல் அதிக கவனம் பெற்றுள்ளது

ஜம்மு – காஷ்மீரில் 2014ஆம் ஆண்டு கடைசியாக சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது அதன் பிறகு பத்து ஆண்டுகள் கழித்து, தற்போது தேர்தல் நடைபெறுவதால் அதிக கவனம் பெறுகிறது. ஜம்மு – காஷ்மீரில் செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கெடு விதித்ததால் தேர்தல் ஆணையம் அங்கே தேர்தல் நடத்த முன்வந்துள்ளது. ஜம்மு – காஷ்மீர் மாநிலக் கட்சிகளுடன் பா.ஜ.க.வும், காங்கிரசும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

ஜம்மு – காஷ்மீர் தேர்தல் நிலவரத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி வலுவாக இருக்கிறது. பா.ஜ.க கூட்டணியில் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்ற குழப்பம் இருந்த போதும், தங்களால் முடிந்தளவு வேட்பாளர்களை நிறுத்தி வைத்துள்ளனர். பத்தாண்டுகளாக ஜம்மு – காஷ்மீர் தேர்தலை எதிர்பார்த்திருந்த நிலையில், செப்டெம்பர் 18 மற்றும் 25 அக்டோபர் 1 என மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறும். ஜம்மு காஷ்மீரில் மொத்தம் 90 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. 42.6 இலட்சம் பெண் வாக்காளர்கள் உட்பட மொத்தம் 87.09 இலட்சம் வாங்காளர்கள் உள்ளனர் என்றுதேர்தல் ஆணைய புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

ஜம்மு காஷ்மீருக்கு அதிகாரம் வழங்கியிருந்த சட்டப்பிரிவு 370, பா.ஜ.க அரசால் அதிரடியாக நீக்கப் பட்டப் பிறகு, அங்கே அமைதி நிலவுகிறது, பயங்கரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது. சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்திருக்கிறது, என்று பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் மற்ற பா.ஜ.க தலைவர்களும் கூறி வந்தனர்.

ஆனால், ஜம்மு– காஷ்மீரில் அண்மையில் அதிகரித்திருக்கும், பயங்கரவாத நடவடிக்கைகள் காவல் துறையினருக்கும், இராணுவத்தினருக்கும் பெரும் சவாலாக உருவெடுத்திருக்கின்றது. கடந்த சில மாதங்களில் ஜம்மு பகுதியில் பல பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.. பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே பல மோதல் சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. இதில் காவலர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள் உட்பட பலர் கொல்லப்பட்டிருப்பது அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சூழலில் தான் அங்கே சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிறது.

பா.ஜ.க அரசைப் பொறுத்தவரையில் ஜம்மு– காஷ்மீரில் சட்டமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று பெயரளவுக்குச் சொல்லி வந்தாலும், உண்மையில் அங்கு தேர்தல் நடத்துவதில் பா.ஜ.க ஆர்வம் காட்டாமலே



இருந்து வந்தது. ஆனால், பிரிவு 370 நீக்கப்பட்டு, ஜம்மு– காஷ்மீர் இரண்டு யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டதற்கு எதிரான வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தீர்ப்பு வழங்கியது. அதில் செப்டெம்பர் 30ஆம் திகதிக்குள் சட்டமன்றத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று, உறுதிபட உத்தரவை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது. ஆகவே செப்டெம்பர் 30க்குள் அங்கே தேர்தல் நடத்தி முடிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

ஜம்மு – காஷ்மீரில் பிரிவு 370 நீக்கப்பட்டதாலும், யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டதாலும், பா.ஜ.க மீது அங்குள்ள மக்கள் கடும் அதிருப்தியிலும், கோபத்திலும் இருப்பதாக அந்தப் பிரதேசத்தைச்சேர்ந்த பத்திரிகையாளர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் அரசியல்நோக்கர்களும் தொடர்ந்து கூறிவருகின்றனர். இது உண்மைதான் என்பதை நிரூபிக்கும் வகையில், கடந்த மக்களவைத் தேர்தலின் போது காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும் மூன்று மக்களவைத் தொகுதிகளில் பா.ஜ.க தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்தவில்லை என்பதையும் அவதானிக்க வேண்டியுள்ளது.

ஜம்மு – காஷ்மீரில் பா.ஜ.க.விற்கான எதிர்ப்புகள் நிறைய இருக்கும் போது வெற்றி வாய்ப்பும் குறைவாகவே இருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஜம்முவில் தனித்தும், காஷ்மீரில் கூட்டணி அமைத்தும் போட்டியிடப் போவதாக ஜம்மு காஷ்மீர் பா.ஜ.க தலைவர் ரவீந்தர் ரைனா கூறியிருக்கிறார். ஜம்மு – காஷ்மீரில் நிறைய சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். அவர்களை ஒருங்கிணைக்கும் வேலையிலும் பா.ஜ.க முயற்சி செய்கிறது. இது வெற்றி பெற்றால் இந்தத் தேர்தல் முடிவில் பா.ஜ.க மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

ஜம்மு – காஷ்மீரில் 30க்கும் மேற்பட்ட கட்சிகள் இருந்தாலும், பா.ஜ.க, காங்கிரஸ், ஃபரூக் அப்துல்லாவின் ஜம்மு – காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி, மெகபூபா முஃப்தியின் ஜம்மு – காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சி, சஜத் கனிலோனின் ஜம்மு – காஷ்மீர் மக்கள் மாநாட்டுக் கட்சி, குலாம் நபி ஆசாத்தின் ஜனநாயக முற்போக்கு ஆசாத் கட்சி அகியவையே பிரதானக் கட்சிகளாக இருக்கின்றன.

ஜம்மு – காஷ்மீர் சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டனி வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. பா.ஜ.கவுக்கு இருப்பதைப் போல காங்கிரசுக்கு அங்கே பெரிய எதிர்ப்பு எதுவும் இல்லை. தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கும் மக்கள் நலத்திட்டங்களை காங்கிரஸ் ஜம்மு காஷ்மீர் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. குடும்பத் தலைவிகளுக்கு ரூ.3000, வேலை வாய்ப்பில் ஒரு இலட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும், ரூ 25 இலட்சம் வரையில் மருத்துவ காப்பீடு, ஒவ்வொருவருக்கும் தலா 11 கிலோ அரிசி, பெண்களுக்கு 5 இலட்சம் வரையில் வட்டியில்லா கடன் போன்ற கவர்ச்சியான திட்டங்களை அறிவித்துள்ளது. இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் ஏற்படுத்தியுள்ளது

ஜம்மு – காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் பரப்புரையில் ராகுல் காந்தி பேசும் போது பா.ஜ.க வால் சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக, மாநிலத்தின் அந்தஸ்து பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு யூனியன் பிரதேசம் மாநிலமாக மாற்றப்படும் போது அந்த பகுதியில் ஜனநாயகம் வேரூன்றும். அதுவே ஒரு மாநிலம் யூனியன் பிரதேசமாக மாற்றப்படும் போது, அதன் உரிமைகள் யாவும் அபகரிக்கப்படும், இத்தகைய அநீதிதான் ஜம்மு – காஷ்மீருக்கு இழைக்கப்பட்டுள்ளது.

ஜம்மு – காஷ்மீரில் அடுத்த மாதம் இந்தியா கூட்டணி அரசு ஆட்சியமைக்க உள்ளது.

நீதிக்கான போராட்டத்தில், மாநில அந்தஸ்து கோரிக்கையை, முழு பலத்துடன் தெருக்களிலிருந்து சட்டமன்றம் வரையில் எழுப்புவோம், நான் உறுதியான உத்திரவாதம், அளிக்கிறேன். பா.ஜ.க என்ன சொன்னாலும் இந்தியா கூட்டணி உங்களுக்கு மாநில உரிமையை மீட்டுத் தரும், மாநில உரிமை மீட்கப்படும் வரை மத்திய அரசுக்கு. இந்தியா கூட்டணி அழுத்தம் கொடுக்கும் என்று கூறியிருக்கிறார். காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி மீது மக்களும் நம்பிக்கை வந்திருப்பதாகவே அரசியல் நோக்கர்களும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் பா.ஜ.க சார்பில் பரப்புரையில் ஈடுபட்ட உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசும்போது 370ஆவது பிரிவு என்பது வரலாறாகி விட்டது.

அது ஒருபோதும் மீண்டும் அமுலுக்கு வராது. அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்.

இதை மக்கள் ஏற்க மறுக்கிறார்கள் என்ற நிலைப்பாடே இந்தியா கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பை அதிகரிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மக்களவைத் தேர்தலில் 400 இடங்களை வெற்றி பெறுவோம் என்று நம்பிய பா.ஜ.க.வுக்கு தனித்து ஆட்சியமைக்கக் கூட வாய்ப்புக் கிடைக்காது, தோல்வியின் பாதிப்பு ஜம்மு – காஷ்மீரிலும் ஏற்படலாம் என்று கருத்துக்கணிப்பும் தெரிவிக்கிறது

# மலேசியாவில் 523 தமிழ்ப் பாடசாலைகள்

தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 49

மாநாட்டில் பங்கேற்ற பலரின் அறிமுகங்கள் கிட்டின. குறிப்பாக மலேசிய வாழ் தமிழர்கள் அன்பு கலந்த உபசரிப்பில் சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். வழமையாக எம்மை அழைத்து செல்லும் வாகனம் சில சமயங்களில் எம்மை விட்டுச் செல்கின்ற நிலையில் அவ் இடத்திற்கு வருகின்றவர்கள் எம்மை அன்போடு விசாரித்த நெகிழ்வான சம்பவங்களும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நாம் தங்கியிருந்த விடுதிக்கே எம்மை அழைத்து சென்று விடுவார்கள். பொதுவாக மலேசியாவில் வாழும் தமிழர்களுடைய வாகனங்களில் வாகன இயக்கத்திலுள்ள ஒலிப் பதிவுகள் தமிழ் மொழியிலேயே இயக்கப்படும் வழக்கம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி மீது அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்திலும், தமிழர்கள் மீது கொண்டுள்ள பாச உணர்விலும் ஓர் முன்மாதிரியை அவர்களில் உணர முடிந்தமை கவனிக்கத்தக்கது. பொதுவாக நிகழ்வில் பங்கேற்ற மலேசியத் தமிழர்கள் வெளிநாடுகளில் இருந்து பங்கேற்ற பேராளர்களை காணும் எல்லா சந்தர்ப்பங்களிலும் தேநீர் குடித்தீர்களா? உணவு உண்டீர்களா? என அன்பாக வினவும் போக்கை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் போது எம் அணியினரோடு அறிமுகமானவராக ஆசிரியர் சிவகுமார் விளங்கினார். முதல் நாளில் ஏற்பட்ட அறிமுகம் அடுத்தடுத்த நாட்களில் எம்மை பல்கலைக்கழக வளாகத்திற்கு வந்தவுடன் தேடும் அளவிற்கு நட்பு வளர்ந்திருந்தது. மாநாட்டு இடைவேளைகளின் போது அருகிலுள்ள நகரத்திற்கு செல்வதற்கு தனது காரிலேயே எம்மை அழைத்துச் செல்வார். இவ்வாறு அழைத்து சென்ற இடங்களில் கூடுதல் அவதானத்தைப் பெற்ற இடமாக "லிட்டில் இந்தியா" சிறப்பிடம் பெறுகிறது. பொதுவாக கோலாலம்பூரில் நகர வீதிகளின் இருமருங்கிலும் அமைந்துள்ள வியாபார தாபனங்கள், நிறுவனங்கள் மலாய் மொழிப் பிரயோகத்தில் ஆங்கில எழுத்துக்களின் உதவியுடனேயே எழுதப்பட்டிருக்கும். "லிட்டில் இந்தியா" வளாகத்தினுள் நுழைகின்ற போது முற்றிலும் வேறுபட்ட மனநிலையை உணர முடியும். மதுரையில், சென்னையில் காணப்படும் அங்காடித் தெருவில் நடமாடும் உணர்வை ஏற்படுத்தியது. கடைகளின் பெயர்கள் தமிழிலும் எழுதப்பட்டிருக்கும். கோலாலம்பூரில் அமையப்பெற்றுள்ள "லிட்டில் இந்தியா" வை ஒத்த வகையில் சில இடங்களில் கடைத் தெருக்கள் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக தென்கிழக்காசிய நாடுகளில் இந்திய கடைகளுக்கு பெரிதும் கேள்வி நிகழ்கின்றமை கவனிக்கத்தக்கது.

2017ஆம் ஆண்டு கம்போடியாவில் இடம் பெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்ற போதும் அங்குள்ள உணவுகளைப் பார்த்து சிரமப்பட்ட விடயம் ஞாபகத்துக்கு வந்தது. பெரும்பாலும் பாம்பு போன்ற நகருயிர்களும், இன்செக்டா இன உயிரினங்களுமே கம்போடிய மக்களால் விரும்பி உண்ணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ் உணவுகளையும் அவற்றின் வாசனையையும் நுகர்ந்த போது குமட்டல்தான் ஏற்பட்டது. சுற்றுலாத் தளங்களில் பட்டினியாகவே பொழுதை கழித்து பிரதான நகரங்களில் அமையப்பெற்ற இந்திய உணவகங்களிலேயே பசியைப் போக்கிக்கொண்டோம். கம்போடியாவில் "நைட் பஜார்" "சைனா டவுன்" ஆகிய தளங்கள் எல்லாம் தமிழர் பண்பாட்டிற்கு முரணான களங்களாகவே திகழ்ந்தன. மலேசியாவிலும் சீனாவின் செல்வாக்கு நிலையும் உள்நுழைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. "லிட்டில் இந்தியா" வளாகத்தைப் போலவே "சைனா டவுன்" வளாகமும் கோலாலம்பூர் மாநகரத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

லிட்டில் இந்தியா வளாகம் மாலை வேளையிலேயே களை கட்ட ஆரம்பித்தது. கடைகளை அண்மித்த சாலை ஓரங்களில் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கொட்டில்களை அமைத்தார்கள். உடைகள், தமிழர்களின் பலகார பட்சனங்கள், விளையாட்டுப் பொருட்கள் போன்றன அக் கொட்டில்களில் குவிந்தன. பொதுவாக இவ்வாறு அமைக்கப்பெற்ற கொட்டில்களில் தமிழ் பெண்களே வியாபாரத்தை பார்த்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. விற்பனை செய்யப்பட்ட ஆடைகளில் தமிழ் மொழி குறித்து சிறப்புகளை வெளிப்படுத்தும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. நாம் பார்வையிட சென்றிருந்த சமயம் மாநாட்டிற்கு வருகை தந்தவர்களில் பெரும்பாலானோர் லிட்டில் இந்தியாவை பார்வையிட வருகை தந்திருந்தார்கள். ஆங்காங்கே தமிழ் பாடல்கள் சத்தமாக ஒலித்துக்கொண்டிருந்தன. இவ்வாறு இவ் வளாகம் இருபத்து நான்கு மணித்தியாலமும் பரப்பரப்பாகவே காணப்படுகின்றமையை அறிய முடிகிறது. "லிட்டில் இந்தியா பிரிக்பீல்ட்ஸ்" எனவும் அழைக்கப்ப



டுகின்ற இச்சாலை இந்தியத் தமிழர்களின் வாழ்வியலில் பெரிதும் தாக்கத்தை செலுத்தியதுடன் சம்பந்தன் சாலை என பெயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் வளாகம் சீரமைக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குடன் இணைந்து மலேசியாவின் பிரதமர் நஜீப் துன் ரசாக் இவ் வளாகத்தை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. இவ் வளாகத்தில் ஆன்மிக வழிபாட்டிடங்கள் பல காணப்படுவதால் "இறைநிலையின் இருப்பிடம்" எனவும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

நண்பர் சிவகுமார் ஆரம்பக் கல்வி ஆசிரியராக தொழில் புரிகிறார். மலேசியாவில் அவரை சந்தித்து பழகிய காலம் தொடக்கம் தொலைபேசி மூலமாக அவர் தொடர்பினை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவருடன் மாநாட்டு களங்களில் மற்றும் தொடரும் தொலைபேசி தொடர்புகள் மூலமாக மலேசிய நாட்டின் தமிழ்க் கல்வியின் நிலைகள் பற்றிய புரிதல் ஏற்படுகிறது. மலேசிய நாட்டிற்கும் தமிழர்களுக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட காலத் தொடர்பு நிலவுகிறது. காலனித்துவ ஆட்சியின் போது தென்னிந்திய தமிழர்களின் புலம்பெயர்வின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட தமிழ்க் கல்வி குறித்த அவதானம் முனைப்புப் பெறுகிறது. 1816இல் மலாயா, பினாங்கு மாநிலத்தில் "ஃபிரி ஸ்கூல்" எனும் பெயரில் முதன் முதலாக ஆங்கிலப் பள்ளி தொடங்கப்பெற்றிருக்கிறது. 1821 தொடக்கம் அப் பள்ளியில் இலவச தமிழ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் தமிழ் மக்களின் பங்கேற்பு குறைந்தமையால் தமிழ் மொழிமூல வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பின்னர் 1834ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்பட்ட "சிங்கப்பூர் ஃபிரி ஸ்கூல்" கல்லூரியில் தமிழ் மொழி மூல வகுப்புகளும் தொடங்கப்பெற்றுள்ளன. அதன் பின்னர் 1850இல் பினாங்கில் தொடங்கப்பெற்ற தமிழ், ஆங்கில் இரு மொழிமூல பாடசாலை தொடங்கப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. 1870களுக்கு பின்னர் தமிழ் பள்ளிகள் கணிசமாக தொடங்கப்பெற்றுள்ளன. இந்தியத் தமிழர்கள் வாழ்ந்த கரும்பு, காப்பி, இறப்பர், தோட்டங்களில் பல தமிழ் பாடசாலைகள் உருவாக்கப்பெற்றுள்ளன. இத்திருப்திகரமான மாற்றங்களின் போதுதான் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தமிழ், சீன மொழிகள் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு பெரிதும் சவாலான தீர்மானங்களை பிரிடிஷ் அரசாங்கம் மேற்கொள்கிறது,

தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்களை மலாயாவிலேயே வைத்துக்கொள்வதில் தமிழ் மொழிமூல பாடசாலைகளை தகர்க்கும் செயற்பாடுகள் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஒரு கட்டத்தில் பிரித்தானிய அரசாங்கம் உணர்கிறது. அதன் விளைவாக சில பாடசாலைகளை தொடங்குவதில் அக்கறை செலுத்துகிறார்கள். தொழிலாளர்களுக்கு சாதகமான தொழிற் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. 07 வயது முதல் 14 வயது வரை பத்து பிள்ளைகள் இருந்தால் கட்டாயம் ஒரு தமிழ் பாடசாலை தொடங்கி ஒரு ஆசிரியர் நியமிக்க வேண்டும் என்ற சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பல தமிழ் பாடசாலைகள் மலேசிய மண்ணில் ஆரம்பிக்கப்படுகிறது. 1900இன் தொடக்கத்தில் நகர்ப்புறங்களிலும் பாடசாலைகள் தொடங்கப்பெறுகின்றன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் தம்புசாமி பிள்ளை தமிழ் பாடசாலை, விவேகானந்தா தமிழ் பள்ளி ஆகிய பாடசாலைகள் குறிப்பிடத்தக்கவைகளாகும். பத்துமலை முருகன் ஆலயத்திற்கு அருகில் உள்ள பத்துமலை தமிழ் பள்ளியை இவ் ஆலய விஜயத்தின் போது பார்வையிட வாய்ப்புக் கிட்டியது.

மலாயா நாட்டின் தமிழ்க்கல்வி வளர்ச்சியின் முக்கிய கட்டமாக முப்பதுகளை குறிப்பிடுவார்கள். இக் காலக்கட்டத்தில் கணிசமான தமிழ்ப் பள்ளிகள் உருவாகின்றன. ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி வழங்கும் நடைமுறைகள் குறித்த கவனமும் இக் காலக்கட்டத்திலேயே ஏற்படுகின்றது. தோட்டப்புறங்களில் அமைந்த பல பாடசாலைகளில் கங்காணிகளும் பூசாரிகளும் ஆசிரியர்களாக பணியாற்றியுள்ளார்கள். பொதுவாக மேற்குறித்த இருசாராரும் தோட்டப்பகுதிகளில் ஆளுமைகளாக திகழ்ந்தவர்கள். இந்த சமூகங்களுக்கு தலைமைத்துவங்களை வழங்கி வழிப்படுத்தியவர்கள் என்ற வகையில் கங்காணிகளுக்கு முக்கிய இடங்கள் உள்ளன. இவர்களின் வழிப்படுத்தலில் உள்ள பலவீன அம்சங்கள் அமைந்தாலும் அவர்களது தலைமைத்துவ பண்பு குறிப்பிட்ட ஆளுமைக்குரியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே பூசாரிகளின் வழிப்படுத்தலை பலவீன நிலையில் பார்த்தாலும் உளவியல் சார்ந்த இவர்களது அணுகுமுறை குறிப்பிடத்தக்க வகிபங்கிற்குரியவையாகும். முறையான ஆசிரியர் பயிற்சியின் போது தோட்டப் பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபட்ட இவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந் நிலையில் 1942ஆம்ஆண்டு ஜப்பானியர்கள் மலாயா மீது படையெடுத்தமை தமிழ்க் கல்வி வளர்ச்சியில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 1945இல் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிய பிரித்தானியர்கள் 1938இல் கைவிடப்பட்ட ஆசிரியர் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக நியமனம் பெறுகிறார்கள். போர்ச்சூழலின் பின்னர் ஆசிரியர்களக நியமனம் பெற்றவர்களை "குண்டு பாஸ்" எனவும் அழைக்கப்பட்ட அனுபவமும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணியிலேயே மலேசியாவில் தமிழ்க் கல்வியின் வளர்ச்சி அளவிடப்படுகிறது. தற்போதைய நிலையில் 523 தமிழ்ப் பாடசாலைகளில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழ்மொழி மூலக் கல்வியைப் பெற்று வருகிறார்கள். இவ்வாறான கல்வித்துறை பற்றிய தகவல்களை ஆசிரியர் சிவகுமாருடனான கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந் நிலையில் இலங்கையில் மலையகக் கல்வி பற்றிய அவதானமும் கவனத்திற்குரியதாகும். இலங்கையில் இலவசக் கல்வி அனைத்து சமூகங்களுக்கு கிடைத்த நிலையில் பல வருடங்களுக்கு பின்னரே மலையகத்திற்கு சாத்தியமாகியமை குறிப்பிடத்தக்கது.

1988இன் பின்னரே மலையக சமூகம் தேசிய கல்வி நீரோட்டத்தில் இணைக்கப்படுகிறது. பெருந்தோட்டங்களின் நிர்வாகத்தில் இருந்த பாடசாலைகளை இக் கால கட்டங்களில் அரசு பெறுப்பேற்றது. அவ்வாறு பொறுப்பேற்ற பாடசாலைகளில் விடுபட்ட பாடசாலைகள் கடும் பிரயத்தனத்துடனேயே மீள இத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டன. அவ்வாறான பாடசாலைகளில் நாவலப்பிட்டி, கிறீன்வூட் தமிழ் வித்தியாலயத்தின் வரலாறு முக்கியத்துவம் பெறுகிறது.

அக் காலக்கட்டத்தில் அப் பாடசாலையில் கல்வி கற்ற எனது மாணவனும் உறவினருமான தம்பி ரூப்பஸ் செல்வநாயகம் தற்போது மலேசியாவில் கிறிஸ்தவ மத போதகராக பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் நான் இருப்பதை அறிந்து என்னுடன் தொடர்பு கொண்டார். குடும்ப சகிதம் நாம் தங்கியிருந்த விடுதிக்கு வருகை தந்து சந்தித்தார்கள். அவர்களோடு செலவிட்ட மூன்று மணித்தியாலமும் மிகுந்த மகிழ்வைத் தருவதாக அமைந்தது. தனது பாரியாருக்கும் பிள்ளைகளுக்கும் என்னை அறிமுகம் செய்தார்.

அருகிலுள்ள சீன உணவகத்தில் இரவு விருந்தையும் ஏற்பாடு செய்தார். சிறு வயது அனுபவங்களை தம்பி ரூப்பஸின் குடும்பத்தோடு பகிர்ந்து மகிழ்வடைந்தோம்.

பயணம் தொடரும்...

# புறக்கோட்டை 1ஆம் குறுக்குத் தெரு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்

புறக்கோட்டை சமூக பொலிஸ் பிரிவும், புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு சுயதொழிலாளர்கள் சங்கமும் இணைந்து மூன்றாவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள எல். டபிள்யூ.பெரேரா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கட் போட்டிகள் இம்மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை சந்திரா சில்வா மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெறவுள்ளன. அணிக்கு எட்டுப் பேர் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியானது 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.

இம்முறை மொத்தமாக 12 அணிகள் நான்கு குழுக்களின் கீழ் போட்டியிடுவதுடன் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நொக் அவுட் முறையில் அனைத்து ஆட்டங்களும் இடம்பெறும்.





சம்பியன் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு எல்.டபிள்யூ.பெரேரா ஞாபகார்த்த கிண்ணமும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு கிண்ணமும் வழங்கப்படவுள்ளதுடன் ஏனைய சிறப்பு பரிசுகள் பலவும் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

## உற்சாகம் தரும் கவி...

(25 ஆம் பக்க தொடர்ச்சி)

தமிழ் செம்மொழி. சொல் வளம் நிறைந்த மொழி. மேலும், மொழியின் நாகரிகம் கவிதை என்று சொல்லப்படுவதுண்டு. அவ்வாறான, தமிழ் மொழியில் அமைந்த கவிதை நூலுக்கு ஆங்கிலத்தில் தலைப்பு ஏன் என்று கேட்பதற்கு இடமுண்டு. கவிஞர் 20+ க்கு முக்கியத்து வமளிக்க வேண்டும் என்று கருதியிருந்தால் இலக்கத்தில் மாத்திரம் 20+ என்று தலைப்பிட்டிருக்கலாம் என்று சொல்ல மனம் விரும்புகிறது. கவிதைத் துறைக்குள் காலடி வைத்துள்ள இளைய கவி பைசானாவின் கவிதைகள் உன்னத பொருட்பரப்பைப் கொண்டுள்ளன.

இலக்கியத் தேடல்களாலும், வாசிப்பின் தீவிரத்தாலும் கவித்துவ நுட்பங்களைப் புரிந்து கொண்டு இன்னும்பல நூல்களை அவர் தர வேண்டுமென்பதே நமது பிரார்த்தனையாகும்.

ஒப்பு நோக்கல், செம்மைப்படுத்தல் என்பவற்றில் கரிசனை செலுத்தும் போது, எழுத்துப்பிழைகள், அச்சுப்பிழைகள் என்பவற்றையும் எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

# சிறுவர் உலகம்

சுகந்தி



**அருளுடைமை: அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்**

**தெளிவுரை :**

*அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.*

# இவ்வார மழலை



FATHIMA REZA SHIYAM

# நுளம்பு கற்றுக் கொடுத்த பாடம்



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு படித்துக் கொண்டிருந்தான் சுமன். படிக்க விடாமல் கடித்து தொந்தரவு தந்த நுளம்மை விரட்டினான்.

மீண்டும் கடிக்க வந்தபோது அடிக்க முயன்றவனிடம், 'என்னைக் கொல்லாதே...' என்றது நுளம்பு.

"படிக்க விடாமல் தொந்தரவு செய்கிறாயே..."

"நானாக இங்கு வரவில்லையே... நீ தான் வரவழைத்தாய். என்னை குற்றம் சொல்லாதே..."

"நாங்களா அழைத்தோம்..."

வியப்பு மேலிட கேட்டான் சுமன்.

"ஆமாம்... சுற்றிலும் பார்... நீர் நிறைந்த சிரட்டைகள் மற்றும் கழிவுகள்... வீட்டை சுத்தமாக பராமரிக்கவில்லை. அறைகளை சூரிய வெளிச்சம், காற்று வரும்படி திறந்து வைத்திருக்கவில்லை.

சுற்றி, கழிவுநீர் தேங்கியுள்ளது.

"தோட்டத்தில் செடிகளை பராமரிக்கவில்லை. பிளாஸ்டிக் பொருட்கள் குப்பையாக தேங்கி உள்ளது. இவற்றை நீக்கினால், நாங்கள் வரமாட்டோம். நோய்கள் பரவாது. இப்போது புரிந்ததா..."

இறக்கையை ஆட்டி பறந்து போனது நுளம்பு.

காலநிலை மாற்றத்தால் மழை பெய்யும் போது நுளம்புகள் பெருகுவதால், டெங்கு நோய் அபாயம் ஆரம்பித்துள்ளது.

வீட்டின் சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், காற்றோட்டமாகவும் வைத்தால் நோயின்றி மகிழ்ச்சியுடன் வாழலாம் என்பது சுமனுக்கு புரிந்தது.

நுளம்பு கற்றுக் கொடுத்த பாடத்தை மனதில் பதிய வைத்தான்.

நாம் வாழும் சூழலை சுத்தமாக பராமரிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

# சிறுவர் சித்திரங்கள்





**எம்.ஆர். ஹம்னா ரீஹா**
தரம் 4A, கு/அல் - இர்பான் மத்திய கல்லூரி, பொல்கஹவெல.



**மொஹமட் அய்யாஸ்**
தரம் - 8L, அல் - மஹ்மூத் மகா வித்தியாலயம், உலஹிட்டிவல, மள்வானை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 131

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | ■ |
| 05 | ■ | 06 | 07 | 08 | 09 |
| 10 | ■ | 11 | ■ | 12 | 13 |
| ■ | 14 | ■ | 15 | 16 | ■ |
| ■ | 17 | 18 | 19 | ■ | 20 |
| 21 | 22 | ■ | ■ | 23 | 24 |

பெயர் ..............................................................
வகுப்பு ..............................................................
தொலைபேசி இல ..............................................................
பாடசாலை பெயர் ..............................................................
வதிவிட முகவரி ..............................................................
..............................................................
.............................. ..............................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) கதிரவனையும், வாரத்திலுள்ள ஒரு தினத்தையும் குறிக்கும் சொல்.
(6) வீடுகள் மற்றும் கட்டடங்களில் காற்றோட்டத்துக்காகவும், வெளிச்சம் வருவதற்காகவும் வைக்கப்படுவது இது.
(12) வானத்தை இச்சொல்லாலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(15) இச்சொல்லின் ஒத்தபொருள் சொற்களாக இடர், அல்லல், துன்பம் போன்றவற்றைக் கூறலாம். (தலைகீழான சொல்)
(17) உலகின் பெரும்பாலான நாடுகளில் மக்களால் பயன்படுத்தப்படுகின்ற தானியம் இது. நாம் அன்றாடம் உண்ணுகின்ற மாப்பொருள் பண்டங்கள் இத்தானியத்திலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. (தலைகீழான சொல்)
(21) நாம் அன்றாடம் பயணம் செய்கின்ற பாதை இது.
(23) கிளியைப் போன்று இப்பறவையின் தொனிமரபும் 'பேசும்' என்பதாகும். இப்பறவையின் சரியான தமிழ்ப்பதம் நாகணவாய் என்பதாகும்.

**மேலிருந்து கீழ்**

(1) உலகம், உலகு, புவி, பூமி, வையகம், வையம், தரணி என்றெல்லாம் ஒத்தபொருளில் கூறக்கூடிய சொல்.
(3) நாம் பயன்படுத்துகின்ற அவரைக் குடும்பத் தானியங்களில் ஒன்று இது. (தலைகீழான சொல்)
(4) ஆகாயத்தில் தோன்றுகின்ற இயற்கை அனர்த்தம் இது. கணநேரத்தில் தோன்றும் இந்த ஒளிக்கீற்று புவியை வந்தடைந்தால் மனித உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதுண்டு. (தலைகீழான சொல்)
(9) பாலூட்டி பிராணிகள் பலவற்றில் காணக்கூடிய நீளமான உடலங்கம் இது. பெரும்பாலும் அவற்றின் உடலின் பின்பகுதியில் இதனைக் காணலாம். (தலைகீழான சொல்)
(14) யுத்தங்கள், விவாதங்கள், கோபதாபங்கள் எல்லாம் இன்றி உலகில் இது நிலவுமானால் மக்களுக்கு நிம்மதி.
(15) இலட்சத்தின் நூறு மடங்கு. (தலைகீழான சொல்)
(20) ஆழ்ந்த உறக்கத்தின் போது வருவது. உறக்கம் கலைந்ததும் இது கலைந்து விடும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 130

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. எரிமலை 08. கணை 10. நாம் 12. தேன்
16. ஆறு 18. அத்தை 22. திகதி 25. பாதை

**மேலிருந்து கீழ்**

01. எறும்பு 03. மனை 05. அணை 08. கணை
15. கத்தி 17. ஆந்தை 18, கதை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 129

### பாராட்டு பெறுவோர்

**1. ஹிமா மர்யம் முஜாஹித்,**
தரம் 07, தாருல் உலூம் மு.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரீமலுவ, ரம்புக்கன.

**2. சாரான் அப்துல் றகீம்**
தரம் 06, அல் - அமான் மு.ம. வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**3. க. துவாரகன்**
தரம் 05E, கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

**4. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**5. இப்திகார் ஸெய்னப்**
தரம் 09, கே/மா/ சாஹிரா தேசிய கல்லூரி,
மாவனல்ல.

**6. எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/சாஹிரா தேசியக் கல்லூரி,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**5. துவிசாலினி**
தரம் 05, இராமகிருஷ்ணா பெண்கள் பாடசாலை,
திருமால்முக வீதி, காரைதீவு 07.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 131
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# நாடுகளுக்கு எவ்வாறு பெயர் வந்தது

*புவியியல் அம்சங்கள், வரலாற்று நிகழ்வுகள், கலாசாரப் பண்புகளை வைத்து நாடுகளுக்குப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. சில நாடுகளுக்குப் பட்டப் பெயர்களும் உண்டு.*

**ஜப்பான் (சூரியனின் நிலம்):**
*சீனாவில் இருந்து பார்க்கும்போது, சூரியன் ஜப்பானில் உதிப்பதுபோன்று தோன்றும். இதனால் ஜப்பான் "உதய சூரியனின் நாடு" என்று அழைக்கப்படுகிறது. ஜப்பானின் பெயர் 'நிப்பான்' என்று அர்த்தம். இதற்கு "சூரியனின் ஆதாரம்" என்பதாகும்.*

**பின்லாந்து (ஆயிரம் ஏரிகளின் நிலம்):**
*பின்லாந்து நாட்டின் நிலப் பரப்பின் முக்கிய அம்சமே ஏராளமான ஏரிகள்தான். "ஆயிரம் ஏரிகளின் நிலம்" என்பதற்காக, இவ்வாறு சொல்கிறார்கள்.*

**தாய்லாந்து (புன்னகையின் நிலம்):**
*தாய்லாந்து மக்கள் நட்பு, விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றவர்கள். இதனால் "புன்னகையின் நிலம்" என்கின்றனர்.*

**அயர்லாந்து (எமரல்ட் தீவு):**
*அயர்லாந்து நாட்டின் பசுமையான கிராமப்புறங்கள், மரகதத்தின் செலிப்பை வெளிப்படுத்துகின்றன.*

**ஐஸ்லாந்து (தீ, பனி நிலம்):**
*தீயைக் கக்கும் எரிமலைகள், பனிப்பாறைகளைக் கொண்ட தனித்துவமான நாடு. ஆகவே, "தீ, பனி நிலம்" என்று அழைக்கின்றனர்.*

**தென்ஆப்பிரிக்கா (ரெயின்போ நேஷன்)**
*இந் நாடு பல கலாசாரப் பன்முகத் தன்மைக் கொண்டதால், 'ரெயின்போ நேஷன்' என்று அழைக்கப்படுகிறது.*

**எகிப்து (பார்வோன்களின் நிலம்)**
*பண்டைய நாகரிகம், அதன் புகழ் பெற்ற ஆட்சியாளர்களை குறிக்கிறது.*

**சீனா (சிவப்பு டிராகன்)**
*சீன கலாசாரங்களில் மற்றும் புராணங்களில் முக்கியமான சின்னங்களாக டிராகனைப் பார்க்கலாம். அதனால் இதற்கு இப்படி பெயர்.*

**பிரான்ஸ் (அறுகோணம்):**
*வரைபடத்தில் பிரான்ஸின் எல்லைகளை நோக்கினால் அவை அறுகோண அமைப்பில் இருக்கும்.*

## பூவின் ஏழு பருவங்கள்

1. அரும்பு நிலையில் அரும்பு.
2. மொட்டு நிலையில் மொட்டு.
3. முகிழ்க்கும் நிலையில் முகை.
4. மலரும் நிலையில் மலர்.
5. மலர்ந்த நிலையில் அலர்.
6. வாடும் நிலையில் வீ.
7. வதங்கும் நிலையில் செம்மல்.



## அதிக நேரம் உறங்கும் பூனைகள்



பூனைகள் ஒரு நாளில் 16 - 18 மணி நேரம் உறங்குமாம். இதனால் அவை எப்போதும் உற்சாகமாக இருக்கின்றன. பூனைகள் இரவு நேர விலங்குகள் (nocturnal) என்பதால், அதிக நேரம் உறங்குவது அவற்றின் இயல்பு.

## அறிஞர்கள் கூறிய 16 செல்வங்கள்

1. உபயோகப்படும் கல்வி
2. நீண்ட ஆயுள்
3. தேவையான செல்வம்
4. நம்பிக்கைக்குரிய நண்பர்கள்
5. உழைப்பிற்கேற்ற ஊதியம்
6. நோயற்ற வாழ்வு
7. எதற்கும் கலங்காத மன வலிமை
8. அன்புள்ள கணவன், மனைவி
9. பண்புள்ள குழந்தைகள்
10. மென்மேலும் வளரும் புகழ்
11. மாறாத வார்த்தை
12. குறைந்த செலவு, நிறைந்த சேமிப்பு
13. சிறந்த குடும்ப நிர்வாகம்
14. உதவி செய்வோரின் தொடர்பு
15. தடங்கலில்லாத வாழ்க்கை
16. பிற உயிர்களிடம் அன்பு

**என். மொஹமட் லாபீர்- பதுளை..**

## உணவின்றி உயிர் வாழும் உயிரினங்கள்



உயிரினங்கள் தங்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைப் பெறுவதற்கு உணவு அவசியமானது. தாவர உண்ணிகள் தாவரங்களில் இருந்து, மாமிச உண்ணிகள் பிற உயிரினங்களில் இருந்து, ஒட்டுண்ணிகள் மற்றும் சாறுண்ணிகள் பிற உயிரினங்களின் சிதைவுப் பொருட்களிலிருந்து ஊட்டச்சத்துகளைப் பெறுகின்றன. ஆனால், சில உயிரினங்கள் உணவின்றி நீண்ட காலம் உயிர் வாழும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

பென்குயின்கள் சில வாரங்கள் உணவு உண்ணாமல் தங்கள் கொழுப்பு சேமிப்பை எரிபொருளாகப் பயன்படுத்தி உயிர்வாழுகின்றன.

நீர்க்கரடிகளால் (Tardigrades), மிகக் கடுமையான சூழலிலும் 30 ஆண்டுகள் வரை உணவின்றி செயலற்ற நிலையில் (cryptobiosis) உயிர் வாழ முடியும்.

சில பாம்புகள் தங்கள் நீண்ட உறக்க காலத்தில் பல மாதங்கள் உணவு எடுக்காமல் வாழ்கின்றன.

இவ்வுயிரினங்கள் தங்கள் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்ப தங்களைத் தக்க வைத்துக்கொள்வதன் மூலம் உயிர்வாழும் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.



# தமிழ் இலக்கிய உலகில் உச்சம் 'கல்கி'



காலம், பன்முகத்தன்மை கொண்ட சிலரை ஒரு விதத்தில் மட்டும் அடையாளப்படுத்தி நிகரற்ற உச்சத்தில் ஏற்றி வைத்து விடுவதுண்டு. அப்படித் தமிழ் இலக்கிய உலகில் உச்சம் பெற்றிருப்பவர் 'கல்கி' என்று அனைவராலும் அறியப்பட்ட இரா. கிருஷ்ணமூர்த்தி.

இலக்கியம் படித்தவர்களிடம் மட்டுமே இருந்த தமிழ் இலக்கியத்தை சிறுகதை, புதினம், கட்டுரைகள் என வெகுஜன இலக்கியமாக எளிய மக்களிடமும் கொண்டு சென்ற பெருமை கல்கி கிருஷ்ணமூர்த்திக்கு உண்டு.

சுதந்திரப் போராட்ட வீரர், பத்திரிகையாளர், எழுத்தாளர், பாடலாசிரியர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். தற்போது அவரது புகழ் மிக்க புதினமான 'பொன்னியின் செல்வன்' இன்றைய தலைமுறையினருக்கு அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது. 'பொன்னியின் செல்வன்' புதினம் இன்றும் இலக்கிய வாசிப்பில் முதலிடத்தில் இருக்கிறது.

ஆனால், ஒரு புதினம் மட்டுமில்லை, 15 புதினங்களை, ஏறத்தாழ 75 சிறுகதைகளை எழுதியிருக்கிறார். எண்ணற்ற கட்டுரைகளைப் பயண இலக்கியமாக, விமர்சனமாக, சிந்தனையைத் தூண்டுவதாக அளித்துள்ளார்.

வரலாற்றைத் தனது கற்பனையோடு கலந்து தந்திருக்கும் கதைகள், அதற்கென அவர் உருவாக்கி அளித்துள்ள பாத்திரங்கள், புதின இலக்கியத்தின் இலக்கணமாக எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியும் உயர் தரத்தை இலட்சியப்படுத்தியும் நிற்கின்றன. வரலாறு தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை வாசிப்பவர்களுக்கு ஏற்படுத்துவதில் இவரின் வரலாற்றுப் புதினங்கள் பெருவெற்றி பெற்றுள்ளன.

வி. கல்யாணசுந்தரனாரின் 'நவசக்தி'யில் 1923ஆம் ஆண்டு உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். 'அகஸ்தியர்' என்ற புனைபெயர் வைத்துக் கொண்டார். 'யங் இந்தியா' பத்திரிகையில் மகாத்மா காந்தியின் சுயசரிதை தொடராக வெளிவந்தபோது, 'நவசக்தி'யில் கல்கியின் மொழிபெயர்ப்பில் தமிழில் தொடராக வெளிவந்தது. முதன்முதலில் இந்த உன்னதப் பணியைத் தமிழகத்தில் மேற்கொண்ட பெருமை இவருக்கே உண்டு.

அதே சமயத்தில், எஸ்.எஸ். வாசன், 'ஆனந்த விகடன்' பத்திரிகையை வாங்கி ஜனரஞ்சகமாக நடத்துவதில் முனைந்திருந்தார். ஆனந்த விகடனுக்குக் கட்டுரைகள் அனுப்பி வந்தார் கல்கி. 'ஏட்டிக்குப் போட்டி' என்ற கட்டுரை அமோக வரவேற்பைப் பெற்றது. அந்தக் கட்டுரைதான் முதன் முதலில் 'கல்கி' என்ற புனைபெயரில் வெளியானது. புகழோடு புனைபெயரும் நிரந்தரமாகிவிட்டது.

ஆனந்த விகடன் இதழில் 1931இல் பணிக்குச் சேர்ந்தார். எழுத்துலகில் தன்னிகரற்றவராக இந்தக் காலகட்டம் அவரை உருவாக்கியது. கதைகள், கட்டுரைகள் என எழுதிக் குவித்தார். 'கள்வனின் காதலி' விகடனில் தொடராக வெளிவந்து மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றது. இலங்கைக்குப் பயணம் செய்து 12 வாரங்களுக்கு பயணக் கட்டுரைகள் எழுதினார். இனிமையாக, 'குழந்தைகள் மாநாடு' போன்ற நகைச்சுவையோடு உண்மையை அழுத்தமாகப் பேசிய கல்கி, விமர்சனக் கட்டுரைகளில் கடுமை காட்டவும் தயங்கியதில்லை.

சத்யாகிரக போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்றாம் முறையாக சிறை சென்று மீண்டதும் 1940 ஆம் ஆண்டில் டி.சதாசிவத்துடன் இணைந்து 'கல்கி' பத்திரிகையைத் துவங்கி ஆசிரியரானார். 1941இல் மாதமிருமுறை பத்திரிகையாகத் துவங்கப்பட்டு 1944இல் வாரப் பத்திரிகையாகவும் இந்தியாவின் முன்னணி பத்திரிகைகளில் ஒன்றாகவும் உருவெடுத்தது.

அதற்கு கல்கியின் தொடர்கள் காரணமாக அமைந்தன. பத்திரிகை துவங்கியதும் 'பார்த்திபன் கனவு' தொடரும் ஆரம்பமாயிற்று. இதற்குப் பிறகு 'சிவகாமியின் சபதம்' தொடராக வெளியானது. 1954ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி அவர் காலமானது வரை தனது எழுத்துப் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்தார்.




# நல்லிணக்கம்

அன்பாய் அனைவரும்
ஒன்றாய் வாழ்வோம்..!
மதங்கள் கடந்து
மனிதனாய் வாழ்வோம்..!
ஏழை எளியோர்க்கு
கொடுத்துதவுவோம்..!
ஏணியாய் இருந்து
அனைவர் வாழ்வையும்
ஏற்றிடுவோம்...!

பொறாமை களைந்து
சமத்துவமாய் வாழ்ந்திடுவோம்..!
ஒன்றே உலகம்
ஒன்றே நாம் என
ஒற்றுமையை இங்கு
வளர்த்திடுவோம்..!

பேதங்கள் ஒழிய
போதனைகள் செய்திடுவோம்..!
நல்லது தீயது எதுவென
நாம் தெளிவாய் கற்றே
வாழ்ந்திடுவோம்..!

கருப்பு வெள்ளையென
நிறத்தினை பாராது
அகத்தினை பார்த்தே
பழகிடுவோம்...!
வன்முறை முரண்பாடின்றி
முழுதாய் வாழ்வை
வாழ்ந்திடுவோம்...!

பொருளாதாரம் சீராக
வாழ்வாதாரம் செழிப்பாக
மக்கள் நாம் செயற்படுவோம்..!
அனைவரின் கைகளும்
ஒன்றாய் கோர்த்து
உலகை வெல்ல
முயன்றிடுவோம்..!

நல்லது நிலைக்க
தீயதை ஒழிக்க
நல்லிணக்கத்தோடு
புறப்படுவோம்..!
இன,மத, பேதமின்றி
நாட்டை வளப்படுத்த இன்றே
ஒற்றுமையை
உருவாக்குவோம்...!

**மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி



# காசேதான் கடவுளடா

பணம் பத்தல்ல பல நூறும் செய்யும்
பாதாளத்தில் கிடந்தவனையும்
ஆகாயத்தில் பறக்க வைக்கும்
சிரிக்க வைக்கும் பணமேதான்
சிலவேளை பதறவும் வைக்கும்

நெருங்கிய உறவுகளைக்கூட
நெருங்க விடாமல் செய்யும்
நொறுங்கின உள்ளங்களை
கண்டும் காணாமல் நகரும்

கருவறை முதல் கல்லறை வரை
சில்லறைகளே ஆட்சி செய்யும்
கருப்பையின் ஆரோக்கியமும்
இருப்பைக் கொண்டே
அளவிடப்படும்

கறைபடியா கைகளையும்
காலடியில் விழவைக்கும்
நேர்மை நியாயத்தை
நிர்க்கதியாய் நிக்கவைக்கும்

தரிசனம் என்பதும்
விலை போகும்
நிதர்சனம் தான் இப்புவியிலே
காசிருந்தால் கருவறைக்குப்
பக்கத்தில்
இல்லையேல் கடைசிப்
படிக்கட்டில்

கல்லாப் பெட்டி
நிறைந்திருந்தால்
பொல்லாப்பென்பது
இருக்காது
கேட்கும்போது கொடுக்க
மறுத்தால்
கேடு நினைப்பர் மறக்காதே

ரோட்டோரம்
கிடந்தவனையும்
கோட்டையிலே
வாழ வைக்கும்
கொடிகட்டிப் பறந்தவனை
தலை குப்புற வீழ்த்திவிடும்

ஏற்றத் தாழ்வை
ஏற்படுத்தும் பணம்
ஏழைகளுக்கு எட்டாக்கனி

பலபேர் எச்சில் பட்டாலும்
தீட்டு என்று ஒதுக்கப்
படாதது பணம்

தேர்தல் என்று வந்து விட்டால்
தோல்வியிலிருந்து தப்பிக்கொள்ள
மக்கள் பிரதிநிதிகளும்
விலை போகும் பண்டங்கள்தான்



பை நிறைய பணம் இருந்தால்
பட்டமரம் பூ பூக்கும்
பாறையிலும் நீர் சுரக்கும்
எட்ட நின்ற உறவுகளும்
ஒட்டி ஒட்டி உறவாடும்

கட்டு கட்டாய் பணம் இருந்தால்
பகட்டான திருடனையும்
கெட்டிக்காரன் என்றுதான்
பட்டம் தீட்டி கொண்டாடும்

குப்பைத் தொட்டியை கண்டிராத
ஒற்றைக் காகிதம் பணம்
பணத்தை தேடி
பசியை மறந்தவனும் உண்டு
பாதியிலேயே
உயிரை விட்டவனும் உண்டு

காசுக்கு இருக்கும் மவுசுதான்
காசினியை வாழவைக்குது
காசேதான் கடவுள் அப்பா
கடவுளுக்கும் இது தெரியுமப்பா.

**கம்மல்துறை இக்பால்**

# முடியும் இராப் பேயாக மடியும் மனிதர் வாழ்வில்

இருண்ட நாளில்
இறந்த மனிதர்
உயிரும் வரும் பார்
பேயாகி பெயரோடு

ஏழை வாழ்வு வாழ்ந்த
புலவனும் வாழ்வான்
இறந்த பின்னர்தான்
ஏட்டின் வழியே பாட்டாக

காடு வளர்ந்து வாழ
வளர்ந்தவர் சொல்வார்
மரமரிந்து பணம் சேர்த்து
மாளிகையில் வாழ்ந்தபடி

ஏட்டிக்குபோட்டி போட்டு
சொந்தம் தொலைத்து விட்டு
சொல்ல வருவார் உனக்கு
உறவின் உன்னதம் கேளடா

பாதை மாறாத பாரில்
உனக்கென ஆக்கு பாதை
வாழும் வழி கண்டு நீ
வாழ்ந்து விட்டு போடா

நொடிக்கு நொடி இருக்கு
நொண்டிச் சாட்டு இங்கே
சகட்டு மேனிக்கு சாய்ந்து
காரியம் பெறுவார் நல்லபடி

இயற்கை தந்த அறிவு
தேடிப் பார் இருக்கு
பாரில் விளைந்த உணவு
உனக்கென ஆனது போல்

உடைந்த காலோடு
கால்நடையும் திரியும்
புல்லை மேய்ந்து பாலை
கறக்க இசைந்து நிற்கும்

துன்பம் கொண்ட போதும்
நன்மை மட்டும் செய்யும்
கற்று வாழ காட்டுவார் நீ
நம்பி விட்டால் போச்சு

விம்மி அழுது நின்றாலும்
சொல்லால் கொல்வார்
வஞ்சம் எல்லாம் செய்து
உன்னை விஞ்சியதாய் தான்

மீண்டும் வந்து நான்
சொல்வேன் கேள் நீ
வாழும் வழியை தெரிந்திட
அடிபட்ட வலியால் தேடு

என் பேச்சை கேட்டாலும்
உன் புத்திக்கு சொல்லு
புரிந்தபடி நடந்திட துணிந்து
குனிந்த காலம் எறிந்து வாழ

முடியும் இராப் பேயாக
மடியும் மனிதர் வாழ்வில்
இன்பம் கண்டு வாழும்
நல்ல வழிகளை தேட

**அன்புடன் நதுநசி**

# அசுர வளர்ச்சி

துலாவில் தண்ணீர்
அள்ளி எடுத்து தனது
துயரங்களை எல்லாம்
மறைத்துக்கொண்டு

சாம்பல் போட்டு தமது
சமையலுக்கான
சட்டி பானைகளை
சுத்தம் செய்கிறாள்

சுமைதாங்கியாக தனது
குடும்பத்தை நாளும்
பராமரிக்கும்

வாடிவதங்கிய
அந்த ஏழை
தாயொருத்தி

பூமிதனில் நாம்காணும்
விஞ்ஞானத்தின்
அசுர வளர்ச்சி
அவள் போன்ற
ஏழைகளுக்கு
எப்படி எட்டும்

**குப்பிளான் குமரன்**



# முற்றுப்புள்ளி

முற்றுப்புள்ளியில்லா உறவுகளும்
முடிவுரைக்காய் முற்றுப்பெற
முற்றுப்புள்ளிகளை( .) நாடுது....
கேள்விக்குறிகளாய்(?) சில உறவுகள்...
அடைப்புக்குறிக்குள் ( ) சில உறவுகள்...
வியப்புக்குறியாய் ( ! ) சில உறவுகள்...
கால் புள்ளியாய் ( ,)
அரைப்புள்ளியாய்( ;)
முக்கால் புள்ளியாய் (:) சில உறவுகள்...
உணர்ச்சிக்குறியாய் (!)சில உறவுகள்..
இணைப்புக் கோடாய் ( )
இடைக்கோடாய் ()
சாய்கோடாய் (/) இன்னும் சில உறவுகள்...

வாழும் வாழ்வில் எத்துனை உறவுகள்...
நிறுத்தற் குறி கோலங்களாய்..

பிறை அடைப்புக் குறியாய்( )
அடைத்து வைத்தாலும்
பிரிந்துபோக நினைக்கும் உறவுகளே
அதிகம்..

பிடிக்காவிட்டால் பிரிந்து போகட்டும்...
கால்புள்ளியாய் ( ,) கை கோர்த்து
கரைசேர மனமில்லையானால்...
முற்றுப்பெறா முற்றுப் புள்ளிகளாய் (.......)
முடிவுரை எழுதாமல்
முற்றுப்புள்ளியிட்டு ( .) முடிவு தேடுவதே
முன்நகர முதலுதவியான முடிவு.

**நுஸ்ரத் மஹ்ரூப்**
மாதம்பை

# நினைவுகளில் நீங்காதவளே....

அசைவுகளை ஒவ்வொன்றாக இரசித்தேன்
குறும்புக்கார குழந்தை அவள்.

கண்ணாடி வளையலணிந்து சமைக்கையில்
அவ்வோசையும் இசையென இரசித்தேன்.

ஒலி எழுப்பாத மெல்லிய சலங்கை
கால்களிலணிந்தவள்
நடக்கையில் தென்றலின்
ஓசையை இரசித்தேன்.

மை பூசா அவள்
கருவிழிகள் காண்கையில்
கார்மேகம் சூழ்கையில் வரும் தென்றல்போல்
இன்பத்தை உணர்கையில்
வியப்பில் இரசித்தேன்

காற்றில் அசையும் உன் கூந்தல்
சில நேரம் எனக்கு தலைதுவட்ட
வருவதை ரசித்தேன்.

எனக்காக நீ அழுகையில்
உன் கன்னத்தில் படும் கண்ணீர் துளிகளை
இரசிப்பதாயென்றறியாமல் இரசித்தேன்.

விடைதேடிய பயணத்தில்
மேலுமொரு வினாவாக வந்தவள் நீ.

பார்வையில் இருந்து விலகியே
இரு பதில் கூற மறுத்த காரணத்தால்.......

தீராக்காதலன்
**பர்ஷாத் மஹ்தி**
பொத்துவில்



# மெழுகு ஒளியில் ஒரு குடும்பம் வெளிநாட்டு வாழ்க்கை

(மாவனல்லை பாத்திமா சில்மியா எழுதிய கவிதைக்கு ஆறுதல் வரிகள்)

எண்ணெய் வரிசை போக்கு காட்ட
எண்ணெய் தேசத்தில் நாம்

தலையணையில் முகம் மூடி
விழிநீரில் நனைந்தாலும்
இப்போ இங்கு வரிசை
யுகமில்லை என்ற சேதி
வாப்பா சொல்ல இனிக்கும்!

நாங்கள் அனுப்பும் ரியால்
டொலரின் தாக்கத்தை
தூக்கி வீசியதால்
பெற்ற குழந்தைக்கு
பால் வாங்க முடிகிறதாய்
உம்மா சொல்லுவாங்க

வரிசையில் படுத்து
பாண் வாங்குவதை விட
ஏஸி குளிர் வெட்கம் கெட்ட
விடயமல்ல சில்மியா கவி
கடவுளின் கட்டளைகள்
பிறந்த நதிக்கரைக்கு
வந்தவர்கள் புனிதமானார்கள்

அந்தரத்தில் தொங்கி
கல் உடைப்பதும்
ஆழ்கடலில் அயல்நாட்டில்
மீன் பிடிப்பதும்

மார்க்கத்துக்கு மறைவாய்
எரிந்து சாவதும்
விலக்கத்தானே இங்கு
பாவை புழுதியில்
சுவாசிக்கிறோம்

மாதக் கடைசியல்லவா
போகும்போது
குருணாகலை ஹாஜி
கொடுத்த காசில்
வீடு மீட்கப்பட்டதும்,

ஆறு மாத சேமிப்பில்
உம்மாட அட்டியல்
திரும்ப வந்த இரகசியங்கள்
ஏன் சொல்ல மறந்தாய்?

வாப்பாவுட்டு சீனிக்கு
கால்போன நேரம்
சக்கர வண்டி
கொண்டு வரவும்
துணை நிற்பவளே
மெழுகு வர்த்தியின்
வெளிச்சம்
கருணையாகும்!

கலாபூஷணம்
**பூனாகலை நித்தியஜோதி**

## சித்திவரும் செல்வங்களே

புலமை பரீட்சை வந்துவிட்டது
புதுமை செய்ய வேண்டும் என்று
நினைப்பது தவறில்லை பெற்றோர்களே
பூப்போன்ற மனதில் கல்வி பொங்க
பொய் பூசாரிகளை நம்பி
போகவேண்டாம் மாந்திரீகத்துக்கு
ஆசான்கள் கற்பித்த அருமையான
ஆக்கங்களை ஆசையுடன்
தேவையான நேரத்தில்
தெம்பாக படித்தால்
சித்திவரும் செல்வங்களே

**கே. தருமர், இரக்குவானை**

# உண்மையின் ஒரு பக்கம்

அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான்...
நாம் பொறுமையோடு இருக்கின்றோம்....
பொறுமையும் ஒரு சோதனைதான்...
அக்கிரமக்காரர்களின்
அழிவு வெகு தூரத்தில் இல்லை...
சாந்தியும் சமாதானமும்
கருணையும் இரக்கமும்
அவர்கள் உள்ளத்தில்
செத்துப் போய்விட்டது....

பாலைவனத்திலும் புல் முளைக்கும்...
இருண்டுபோன உள்ளங்களில்
வரண்டுபோனது ஈவிரக்கம்...
சிதறி கிடக்கும் உடல்களையும்
கை கால்களையும்
நான் கண்களால் கண்டேன்..
என் கண்கள் கூட ஒளி இழந்தன...
சிதறிய உடல் துண்டுகள்
நாளை மறுமையில் ஒளிக்கீற்றுகளாக...
கஸ்தூரி வாடை வீசும் சுவர்க்கவாசிகளாக....

நான் ஒரு கனவு கண்டேன்..
கனவில் தெரிந்தது புதிய உதயம்...
உதயத்தின் வெளிச்சத்தில்
பலஸ்தீன் மண்ணிலே பூத்துக் குலுங்கும்
சமாதான வெள்ளை மலர்கள்....
பலஸ்தீன் மறுபடியும்
பீனிக்ஸ் பறவை போல எழுந்து நிற்கும்...
எமக்கு இது பிரார்த்தனை காலங்கள்...
எம் பிராத்தனைகள் யாவும்
வெற்றியின் கோலங்கள்...

அல்லாஹ் எம்மை கைவிடமாட்டான்...
அல்லாஹ் எம்மை கைவிடமாட்டான்...
துணிந்து நிற்போம்!!

கவிதாயினி
**மாஜிதா தவ்பீக்**
மருதமுனை

# பரவாயில்லை!!!

நான் கல்லாக
இருந்தாலும் பரவாயில்லை
பிறர் விரும்பும் சிற்பமாய்
இருக்க விரும்புகின்றேன்

நான் மண்ணுக்குள்
மறைந்திருந்தாலும் பரவாயில்லை
ஜொலிக்கும் வைரமாக
இருக்க விரும்புகின்றேன்

நான் விதையாக
இருந்தாலும் பரவாயில்லை
வளரும் விருட்சமாய்
இருக்க விரும்புகின்றேன்

நான் மண்ணாக
இருந்தாலும் பரவாயில்லை
மரங்களுக்கு உரமாக
இருக்க விரும்புகின்றேன்

நான் கண்காணா
காற்றாக இருந்தாலும்
பரவாயில்லை
சுவாசிக்கும் ஒக்சிஜனாக
இருக்க விரும்புகின்றேன்

நான் தொலைதூர வானமாக
இருந்தாலும் பரவாயில்லை
விண்மீன்கள் விளையாடும்
விரிப்பாக
இருக்க விரும்புகின்றேன்

நான் இருளாக
இருந்தாலும் பரவாயில்லை
இராத் தூக்கத்தின் தொட்டிலாக
இருக்க விரும்புகின்றேன்

நான் இமையாக
இருந்தாலும் பரவாயில்லை
இருகண்களையும் காக்கும்
கவசமாக இருக்க
விரும்புகின்றேன்

நான் துளியாக
இருந்தாலும் பரவாயில்லை
பசுமை துளிரும்
மழைத்துளியாக
இருக்க விரும்புகின்றேன்

நான் ஜடமாக
இருந்தாலும் பரவாயில்லை
பிறருக்கு வழிகாட்டும் ஜோதியாக
இருக்க விரும்புகின்றேன்

நான் மனிதனாக
இருந்தாலும் பரவாயில்லை
மனிதம் காத்த புனிதனாக
மரணிக்க விரும்புகின்றேன்

**ஷஹாமா ஸனீர்**
சீனன்கோட்டை

# காதல்

காதல் என்னும்
தீயை விதைத்து
கண்ணீர் துளிகளால்
நனைத்து
பிரிவு என்னும்
கிளையை வளர்த்து
யாரோ ஒருவரோடு
இலையுதிர்ந்து
செல்கின்றாள்
மௌனமாக!
நான் என்ன செய்வேன்
சொல் அன்பே !

**என்.பாரத்**
மானிப்பாய்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மனிதருள் மாணிக்கம் முஹம்மத் நபி (ஸல்)



'நபி (ஸல்) அவர்கள் அறையின் விரிப்பை விலக்கினார்கள். நின்ற நிலையிலே எம்மைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவரது முகம் குர்ஆனின் ஒரு தாளைப் போன்று (மென்மையாகவும் அழகாகவும் தூய்மையாகவும், பிரகாசமாகவும், மகத்தானதாகவும், புனிதமானதாகவும்) இருந்தது. பின்னர் அவர் புன்னகைத்தார், சிரித்தார்'. (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இது ஹிஜ்ரி 11 ரபீஉல் அவ்வல் மாதம் சரியாக கி.பி 632 ஜூன் மாதம் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அதிகாலைத் தொழுகையின் போது நடைபெற்ற நிகழ்வு. நபி (ஸல்) அவர்களது இறுதிப் புன்னகை இதுவேயாகும். இப்புன்னகையின் கருத்து என்னவாக இருக்கும்? தான் உருவாக்கிய மாணவர் பரம்பரை அதிகாலைத் தொழுகைக்காக திருப்தியோடு ஒன்றுகூடியுள்ள சந்தர்ப்பம் அது. அபூபக்கர் (ரழி) அவர்கள் தலைமையேற்று தொழுகையை நடாத்த முனைகிறார். தான் பின்வாங்கி நபியின் வருகையை எதிர்பார்க்கின்றார். நபியின் சைக்கினையை புரிந்து கொண்ட அவர் மீண்டும் முன்னால் சென்று தொழுகையை நடத்துகிறார்.

இறுதி நேர வலிகளை சகித்துக் கொண்டு மலர்ந்த முகத்துடன்கூடிய ஒரு பிரியாவிடைப் பார்வை அது. தனது தோழர்களை நினைத்து பூரிப்படைந்திருப்பாரா? தான் சுமந்திருந்த ரிஸாலத் என்ற செய்தியை எத்தி வைத்து விட்டேன் என்று திருப்தியடைந்திருப்பாரா? மனித குலத்துக்கு அவர்கள் செல்ல வேண்டிய பாதையை காட்டி விட்டேன் என்று கருதியிருப்பாரா? எனது தோழர்கள் இதனைப் பரம்பரை பரம்பரையாக தொடர்வார்கள் என்று நினைத்திருப்பாரா? அல்லாஹ் தான் அறிந்தவன். பல வருடங்கள் ஒன்றாக இணைந்தும் பிணைந்தும் இருந்து விட்டு ஒரு ஆசிரியர் தனது மாணவர்களுக்கு, ஒரு தலைவர் தன்னைப் பின்பற்றியவர்களுக்கு தனது நேசர்களுக்கு விடை கொடுக்கிறார்.

நபி(ஸல்) அவர்கள் வபாத்தாகி சில வருடங்கள் தான் சென்றன. முஸ்லிம்கள் பெரியதொரு நாகரிகத்தையே கட்டியெழுப்பி விட்டார்கள். கிழக்கு ஆசியாவில் சீனாவின் எல்லைப்புறத்திலுள்ள ஹிமாலயா மலைத்தொடரிலிருந்து மேற்கு ஐரோப்பாவின் பிரான்ஸ், சைபீரியத் தீவுகள் உள்ளடங்கலாக பிரான்ஸ் மலைத்தொடர் வரை இது பரவிக் காணப்பட்டது. பல இனங்களைச் சார்ந்தவர்கள், பல மொழிகளைப் பேசக்கூடியவர்கள், பல தேசியங்களை கொண்டவர்கள் மகிழ்ச்சியாக அங்கிருந்தார்கள்.

ஈராக்கின் 'பக்தாத்' நகரங்களின் முத்தாக இலங்கிக் கொண்டிருந்தது. இருண்ட ஐரோப்பாவின் இருள் நீக்கி ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது' குர்துபா'. ஆபிரிக்காவின் பெரும் பாலைநிலங்களை அறிவாலும் வியாபாரத்தாலும் உயிர்ப்பித்துக் கொண்டிருந்தது 'தும்புக்து' நகரம். இஸ்லாத்தின் நீதியும் சகிப்புத்தன்மையும் உலகமெங்கும் பரவியது. இதுவெல்லாம் எப்படி நிகழ்ந்தது. நபி (ஸல்) அவர்களின் வாழ்வியலைப் பார்த்தால் அதன் இரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

நபி (ஸல்) அவர்கள் சிறியவர்கள், பெரியவர்கள், குடும்பத்தவர்கள், முஸ்லிம் அல்லாதவர்கள், மொத்தமாக அனைத்து மனிதர்களுடன் மாத்திரமல்லாமல் ஏனைய படைப்புக்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொண்டார்கள். இதுவே அவரது மாபெரும் வெற்றியின் இரகசியமாகும். அன்னார் தனது குடும்பத்தவரோடு அன்பாக நடந்து கொள்வது போன்று நான் யாரையும் காணவில்லை' என்று நபி (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்த அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் அறிவித்திருக்கிறார்.

(ஆதாரம்: முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களைப் போன்று தோற்றத்திலும் நடைமுறையிலும் பண்புகளிலும் (இன்னொரு அறிவிப்பில் பேச்சிலும்) மகள் பாத்திமா (ரழி) அவர்களுக்கு ஒப்பான ஒருவரை நான் காணவில்லை என நபிகளாரின் மனைவியான ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பாத்திமா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களது இல்லம் வந்து விட்டால் தந்தையாரை நோக்கி எழும்பிச் சென்று விடுவார்கள். அவர்களது கையைப் பிடிப்பார்கள். முத்தமிடுவார்கள். தான் அமரும் இடத்தில் அவரை அமர்த்திக் கொள்வார். அதேபோன்று நபியவர்கள் மகள் பாத்திமா (ரழி) அவர்களின் வீட்டுக்குச் சென்றால் அவரும் தனது தந்தையோடு அப்படியே நடந்து கொள்வார்கள்.

(ஆதாரம்: தக்ரீஜு மிஷ்காதில் மஸாபீஹ்)

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஹஸன் (ரழி) அவர்களை முத்தமிட்டபோது அருகில் அக்ரஃ இப்னு ஹாபிஸ் அத் தமீமி (ரழி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். இதனைக் கண்ணுற்ற அவர் 'எனக்கு பத்து பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் எவரையும் நான் முத்தமிட்டது கிடையாது' என்றார்கள். அதற்கு நபியவர்கள் 'யார் அன்பு காட்டவில்லையோ அவர் அன்பு காட்டப்பட மாட்டார்' என்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் சிறியவர்களுக்கு பெரிய முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள். 'சிறியோருக்கு அன்பு காட்டாதவர்களும் பெரியவர்களின் கண்ணியத்தை அறிந்து கொள்ளாதவர்களும் என்னைச் சார்ந்தவர்கள் அல்லர்' என்றார்கள்.

(ஆதாரம்: திர்மிதி, அபூ தாவுத், அஹ்மத்)

நாட்டின் தலைவர் என்ற பல பொறுப்புகளும் சுமைகளும் அவரது தலையில் இருந்த போதிலும் சிறுவர்களோடு சுவாரசியமாகக் கதைப்பதற்கும் விளையாடுவதற்கும் அவர்களது சிறிய முயற்சிகளிலே பங்கேற்பதற்கும் நபியவர்கள் தவறவில்லை. அவர்களது அறிவையும் உணர்வுகளையும் மதித்தார்கள். அவர்களைத் தட்டிவிடாது தட்டிக்கொடுத்தார்கள். அவர்களைத் தடைக்கற்களாக நோக்காது படிக்கற்களை அமைத்துக் கொடுத்தார்கள். பண்பாட்டையும் அடிப்படைகளையும் பதிப்பதற்கான முதலாவது இடம் என்பதை தெளிவாக புரிந்து வைத்திருந்தார்கள்.

'நபி (ஸல்) அவர்கள் மனிதர்களிலே சிறந்த பண்பாடு உள்ளவராக இருந்தார்கள்.

அபூ உமைர் என்று எனக்கொரு சகோதரன் இருந்தான். நபி (ஸல்) அவர்கள் வந்துவிட்டால் 'அபூ உமைரே உமது சிறிய குருவுக்கு என்ன நடந்து விட்டது? என்று கேட்பார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

நாட்டின் தலைவர், ஆன்மிகத் தலைவர், குடும்பத் தலைவர், மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு இந்த சிறுவனை மனதில் இருத்திக் கொண்டு காணும் போதெல்லாம் அதுபற்றி விசாரிப்பதென்பது எவ்வளவு ஆச்சரியமான விடயம். இது நபியின் பறவைகள் மீதான நேசத்தையும் காட்டக்கூடியதாக உள்ளது.

நான் சிறுவனாக இருந்தபோது சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு வந்த நபியவர்கள் எமக்கு ஸலாம் சொன்னார்கள்.

(ஆதாரம்: தபரானி)

சிறுவர்களுக்கு ஸலாம் சொன்னது மாத்திரமல்லாது அவர்களுடன் விளையாடியுள்ளார்கள். அவர்களை பெரியவர்களோடு சமமாக அமரச் செய்தார்கள். அதுமட்டுமல்லாது நாட்டுத் தலைவர் தனக்கு வந்த பானத்தை பெரியவர்களுக்கு வழங்க அனுமதி கேட்டார்கள். அவர்கள் அதற்கு அனுமதிக்காத போது திட்டித் தீர்க்கவுமில்லை. கோபப்படவுமில்லை. சிறுவர்களின் கருத்துக்களை மதித்தார்கள். அவர்களுக்குப் பெறுமதி கொடுத்தார்கள். பண்பாடான முறையில் தமது கருத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுத்தார்கள். அவர்களுக்கு துணிவைப் பழக்கினார்கள். தமது உரிமையை அறிந்து கொள்ளவும் அதனைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும் அனுமதித்தார்கள். சிறுவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்க முனைந்தார்கள். அவர்களது தனித்துவமான சுதந்திர செயற்பாட்டுக்கு அனுமதித்தார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

பலர் வியாபாரங்களில் முதலீடு செய்யும் போது, நபியவர்கள் மனிதர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தினார்கள். எதிர்கால சவால்களை முறியடிக்கக்கூடிய அறிவும் ஆளுமையுமுள்ள பலம் வாய்ந்த ஒரு சமூகத்தைக் கனவு கண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த பாதையை மிக நீண்ட காலத்துக்கு கொண்டு சென்றவர்கள் அவர்கள் தான். எதிர்காலத் தலைமைகளை நன்றாக புடம்போட வேண்டும் என்பதை நபியவர்கள் நன்றாக புரிந்திருந்தார்கள்.

அன்னார் நற்பண்புகளின் சிகரமாகவும் மனிதருள் மாணிக்கமாகவும் திகழ்ந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

**அஷ் ஷெய்க் யூ.கே. ரமீஸ் எம்.ஏ (சமூகவியல்)**

# கைவிட்டு விட்டா போனீர்கள்!



கடும் கவலையாக இருக்கிறது காக்கா
எங்களை கை விட்டு விட்டா போனீர்கள்
நீங்கள் போய்
பதினேழு வருடங்கள் கடந்து விட்டன

ஆனால்
காலமெல்லாம் உங்களைத்தான் நினைக்கிறார்கள்
செப்டெம்பர் வந்தால்
உங்கள் தலைவரைப் போல
உங்களையும் நினைக்கிறார்கள்
கிட்டக்கிட்டத் தானே
நீங்கள் இருவரும் போனீர்கள்
தலைவர் போனவுடன்
முஸ்லிம் அரசியலுக்கு கண்பட்ட மாதிரி
நீங்க போனதும் நௌஸாத்தும் மன்சூர் காக்காவும்
மடித்துக் கட்டிக் கொண்டு நின்றார்கள்
என்ன செய்ய அவர்களால்
தொடர முடியாமல் போய் விட்டது

அன்புள்ள அன்வர் இஸ்மாயீல்
நீங்கள் போனவுடன்
நாங்கள் அநாதையாய் விட்டோம்
ஒன்றுக்கும் இயலாதவராய் ஆகிவிட்டோம்
பள்ளிகளும் பல நிறுவனங்களும்
உங்கள் பணிகளைச் செய்ய
முயன்று வருகிறார்கள்
முடியாமல் முட்டிக் குனிகிறார்கள்
உங்கள் அருட்டுணர்வில்
என்னையும் தேடி வருகிறார்கள்
இந்தச் சனியன்
நமக்கு சரி வராது காக்கா
இப்பவும் ஒரு தேர்தல் வந்துள்ளது
மக்கள் எல்லாம் முழுசுகிறார்கள்
நீங்கள் இருந்தால்..என்று
கதை பேசி கனவு காண்கிறார்கள்
அந்த பக்கம் பொடியனுகள் எல்லாம் சினிமாக் கவர்ச்சி போல்
அள்ளுண்டு போகிறார்கள்.....
ஆன காரியம் யாதுமில்லை

இனி,
ஊரின் எம்பிக்கும்
வழி என்ன என்று எதுவும் தெரியவில்லை
உங்கள் வீட்டு வாசலில்
இரவுதான் நானும் றிபாட்டும்
இந்த தேர்தல் காலத்தில்
இவ்விடம் எப்படி பிஸியாய் இருக்கும்
எனப் பேசிக் கொண்டோம்

உண்மைதான்
உங்கள் உதவியாளன் நபீஸும்
சும்மா பொழுது போக்குகின்றான்
எவ்வளவு பிஸியான காலம் இது
அரசியல் செய்ய
நமக்கு ஒரு ஆள் வேண்டும் காக்கா
என்ன செய்யலாம்
நமக்கு வியூகங்கள் வகுக்க
நீங்கள் வரவேண்டும்

வாருங்கள் காக்கா... இல்லை
எங்களை கைவிட்டுத் தான் போனீர்களா?
நீங்கள் சென்ற இடம்
உங்களுக்கு சிறப்பாய் அமையட்டும்
நாங்கள் கைவிடப்பட்டுத்தான் போனோம்

இனி
ஆகும் காரியத்தைப் பார்ப்போம் இன்ஸா அல்லாஹ்

**றமீஸ் அப்துல்லாஹ்**

# பத்திரிகைத்துறை வித்தகர் கலாசூரி இ.சிவகுருநாதன்




இ.சிவகுருநாதன்; யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் 07 –10 –1931 அன்று பிறந்தவர். இவரது தந்தை இரத்தினதுரை. சிவகுருநாதன் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்துக்கல்லூரியில் பெற்றவர். பின்னர் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்று உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டதாரியானார்.

1950களில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கல்விகற்கும்போது அங்கு தமிழ்ச்சங்கச் செயலாளராக இருந்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலுங்காலை அங்கு தமிழ்ச்சங்க இதழான 'இளங்கதிர்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் இந்துமாணவர் சங்கத்தின் இதழான 'இந்துதர்மம்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியுள்ளார்.

1956இல் 'தினகரன்' பிரதான நிருபராக ஊடகத் துறையில் காலூன்றிய ஆர். சிவகுருநாதன், பாராளுமன்ற நிகழ்வுகளை பத்திரிகைமூலம் கொண்டுவர வழிவகுத்தார். 1957ஆம் ஆண்டுமுதல் தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியரானார். அப்போது பேராசிரியர் கைலாசபதி தினகரன் பிரதம ஆசிரியராக இருந்தார்.

அவர் 1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராகச் சென்றபின் சிவகுருநாதன் ஆசிரியரானார். லேக் ஹவுஸ் நிறுவனம் 1971இல் அரசுடமை ஆக்கப்பட்டதன் பின்னரும் பல்வேறு அரசியல் தலைவர்களின்கீழ் தனது பத்திரிகைப் பணியைத் திறம்படத் தொடர்ந்து 1995வரை 34 வருடங்கள் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்து வரலாறு படைத்தார்.




இன்று பத்திரிகை உலகில் பெரிதும் பேசப்படும் பல எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்தது டன் அவர்களது படைப்புகளையும் வாரவெளியீடுகள் மூலம் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தியவர் சிவகுருநாதன்.

சிங்களக் கிராமங்களில் வாழ்ந்துவந்த பல பிரதேசத்து இளம் முஸ்லிம் படைப்பாளிகளை இனங்கண்டு, ஊக்குவித்து தமிழ் இலக்கிய உலகிற்கு அவர்களைப் பிரபலப்படுத்தியதில் ஆசிரியர் சிவகுருநாதனுக்கு கணிசமான பங்குண்டு.

தமது ஆசிரியப்பணியினூடே அவர் சட்டக் கல்லூரிக்குச் சென்று சட்டமும் படித்து 1973இல் சட்டத்தரணியானார். பின்னர் அங்கு விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் செயற்படும் இதழியல்துறை கற்கைநெறியின் விரிவுரையாளராகவும் திறந்த பல்கலைக்கழகம், இதழியற்கல்லூரி ஆகியவற்றின் விரிவுரையாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

இ.சிவகுருநாதன் ஒரு சிறந்த நாடக நடிகராகவும் விளங்கியவர். பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையின் 'உடையார் மிடுக்கு'(1953), 'தவறான எண்ணம்'(1964) ஆகிய நாடகங்களில் நடித்துள்ளார்.

இதழியல் துறை, சட்டத்துறை ஆகியவற்றில் இவருக்கு இருந்த திறமை காரணமாக இவரைப் பல பதவிகள் தேடிவந்தன. அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பிரசுர வெளியீடுகளுக்கான குழுவின் தலைவராகவும் இலங்கை கலைக் கழகத்தின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக பெரும்பான்மையினச் சிங்கள ஊடகவியலாளர்களின் அமோக ஆதரவுடன் இரண்டுமுறை பணிபுரிந்துள்ளார்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவராகப் பலகாலம் சேவையாற்றியுள்ளார்.

"சிவகுருநாதனுக்கு கிடைத்த சமூக ஏற்புக் கௌரவங்களில் மிகமுக்கியமானது, கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைமைப் பதவியாகும்" எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். 'இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி' என்ற சிவகுருநாதனின் ஆய்வுநூலை கொழும்புத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டது.

இந்நூல் கலை இலக்கிய, ஊடகத்துறை ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுள்ளது.

சிவகுருநாதன் தமிழ்ப்பத்திரிகை உலகத்திற்கு விட்டுச்சென்றுள்ள சிறந்த ஆவணம் இந்தநூல். இந்நூல் இரண்டு பதிப்புகளைக் கண்டுள்ளது. இவர் 'தினகரனும் இலங்கைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியும்' என்ற நூலையும் எழுதியுள்ளார். சிவகுருநாதன் கனமும் காத்திரமும் நிறைந்த கருத்துக்களைப் புதைத்து நகைச்சுவை அணி சேர்த்து உரையாற்றுவதில் வல்லவர்.

இவர் இலங்கை நீதி அமைச்சினால் இலங்கை முழுவதற்குமான சமாதான நிதவானாக நியமனம் பெற்றார்.




சிறந்த பத்திரிகையாளர் சேவைக்கான விருது, 'சமூக மாமதி', 'தமிழ் மணி' ஆகிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இவரது பணிகளைப் பாராட்டி இலங்கை அரசு அதியுயர் விருதான 'கலாசூரி' பட்டம் வழங்கிக் கௌரவித்தது என்பது குறிப்பிடத்தக்கது. சிவகுருநாதன் 2003 ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி கொழும்பில் அமரரானார்.

### வடக்கு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு விரைவில் தீர்வு

# அரசியல் பிரச்சினைக்கும் அபிவிருத்திக்கும் தீர்வு

### யாழ். முற்றவெளியில் EPDP ஏற்பாடு செய்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கின் விடயங்களை அரசியல் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அப்பிரதேசத்துக்கு அபிவிருத்தியும் அவசியம். இல்லையெனில் ஏனைய மாகாணங்கள் முன்னேறுகையில் வடக்கு பின்தங்கிவிடுமெனவும் வடக்கின் அபிவிருத்தியை போன்றே அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நேற்று (14) நடைபெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், மாகாண சபைகளை வலுப்படுத்தி அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக எனது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்துக்கு உதவும் வகையில் 09 மாகாண சிற்றரசுகளின் கீழ் அபிவிருத்தி வேலைத்திட்டம் துரிதப்படுத்தப்படும்.

அத்துடன், தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு (TRC) ஸ்தாபிக்கப்படும். நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக எதிர்வரும் 05 வருடங்களில் காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்னாள் விவசாய அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க, தென்னிலங்கையில் மாகாண சபைகளுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

இன்று யாழ்ப்பாணம் வந்து மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் மக்களுக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களும் நம்பிக்கை இழந்திருந்த நிலையில், அவர்களுக்கு நம்பிக்கையை வழங்குவதற்காக நாம் பாடுபட்டோம். "இயலும் ஸ்ரீலங்கா" திட்டத்தின் மூலம் நாட்டின் எதிர்காலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டின் பொருளாதார வாயில்கள் திறந்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை வலுவாக தொடராவிடின் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்திள்ளது. நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

இன்னும் 03 வருடங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் எவராலும் உடைக்க முடியாது.

வடக்கை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமொன்று வடக்குக்கு அவசியம் எனவும் சஜித் பிரேமதாசவிடமோ அநுரகுமாரவிடமோ அதற்கான தீர்வு இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க குறிப்பிட்டார்.

### வடக்கு மாகாணத்துக்கு சென்று

# வாக்கு கேட்கும் உரிமை அநுரவுக்கு கிடையாது

### ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி.



இலங்கை – இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாணசபை முறைமைக்கு எதிராக அன்று போர்க் கொடிதூக்கிய ஜே.வி.பியினருக்கு வட மாகாணத்துக்குச் சென்று வாக்கு கேட்பதற்குரிய உரிமை கிடையாது எனவும், அதற்குரிய உரிமை தமக்கே உள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியென கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன், அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்கும் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி என கட்சி என அவர் மேலும் குறிப்பிட்டார்

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த ரஞ்சித் மத்தும பண்டார,

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கெதிராக மக்களைக் கொன்ற கட்சியே ஜே.வி.பி. மாகாசபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களையும் ஜே.வி.பி. கொன்றது. இந்திய மருத்துகளைக் கொண்டு வந்த அதிகாரிகளையும் இந்தக் கட்சி கொலைசெய்தது. இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்குமாறு அழைப்பும் விடுத்தது. எனவே, இந்தக் கட்சியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்கு கேட்கும் உரிமை கிடைக்காது.

வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்திகளைச் செய்யக்கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸ மட்டுமே என்பதை அப் பகுதி மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வடக்கிலுள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர்.

அதேபோன்று, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களும், சஜித் பிரேமதாஸவுக்கு பேராதரவு வழங்குவதுடன், அப்பகுதிகளுக்குச் சென்றபோது சஜித்துக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல் பிரசார நடவடிக்கைகள் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவு

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு




ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன் பின்னர், எந்தவொரு தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது..

அரச அல்லது தனியார் வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டுபிரசுரங்கள் போன்றவற்றை அகற்றுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரமுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளுக்கு 06 வார கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும், எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், 48 மணிநேரத்துக்குள் அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

### தனிநபர் வருமான வரியை...

சீர்திருத்தங்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அதேவேளையில், நிதிப் பொறுப்பைப் பேணுவதே இந்த வரி கட்டமைப்பு மாற்றங்களின் நோக்கமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, தனிநபர் வருமான வரிக் கட்டமைப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், அமைச்சரவைப் பத்திரம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி சீர்திருத்தங்கள், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில், அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான ஒரு பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே வரி அறிவிடுவது கையாளப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் (EFF) வேலைத் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த தேசிய உற்பத்தியில் 2.3 வீதமான முதன்மை வரவு செலவுத் திட்ட மேலதிகத்தை அடைவதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு 2025 ஆம் ஆண்டளவில் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 14 சதவீதமாக உயர்த்த கணிசமான வரி வருவானம் தேவைப்படும்.

அடிப்படை சீர்திருத்தங்களில் ஆண்டுக்கு தலா 1.2 மில்லியன் ரூபா வரி இல்லாத வரம்பு, தலா 500,000 ரூபா வரி இடைவெளி மற்றும் வரி விகிதம் குறைந்தபட்சம் 6 சதவீதமாகவும் அதிகபட்சம் 36 சதவீதமாகவும் இருக்கும். எவ்வாறாயினும், குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கை தனது நிதி இலக்குகளை அடையத் தொடங்கிய 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அரசாங்கம் முடிவு செய்தது.

அதன்படி, வரி அளவை 500,000 ரூபாவிலிருந்து 720,000 ரூபாவாக உயர்த்தவும், வரி இல்லாத வரம்பை 1.2 மில்லியனாக வைத்திருக்கவும், அதிகபட்ச வரி விகிதம் 36 சதவீதம் உட்பட அனைத்து மட்டங்களிலும் விளிம்பு வரி விகிதங்களைப் பராமரிக்கவும் அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ததைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புதிய வரி அமுலாக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதிக வரிச்சுமையைக் கொண்ட வரி வரம்புகளுக்கு மத்தியிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த வரிச் சீர்திருத்தத்தின் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மாதத்துக்கு 150,000 ரூபா வருமானம் பெறும் ஒரு நபரின் வரியில் 14% குறைப்பைப் பெறுவார். அதே சமயம் அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு இன்னும் வரையறுக்கப்பட்ட நிவாரணம் கிடைக்கும். இந்த சீர்செய்தலினூடாக இந்நாட்டின் மொத்த வருமானத்தில் ஏற்படும் தாக்கம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.07% என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதனூடாக கிடைக்கும் வருமானத்தைக் கருத்திற்கொண்டு இந்த நிவாரணம் வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த உத்தேச திருத்தங்கள் நிதி ஒழுக்கத்தை பேணுவதற்கான தேவையையும், குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான மக்களின் கோரிக்கையையும் நிறைவேற்றும் என நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

### வாகன இறக்குமதி...

மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மீட்பு செயல்முறைக்கு இணங்க, நிதி அமைச்சின் பரிந்துரைகளுக்குட்பட்டு, எதிர்வரும் ஒக்டோபர் 01 முதல் மூன்று கட்டங்களாக இந்தத் தடை நீக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு மீது ஏற்பட்டிருந்த அழுத்தத்தை முகாமைத்துவம் செய்யவதற்காக கடந்த 2020 ஆம் அண்டு மார்ச் மாதம் முதன் முதலில் விதிக்கப்பட்ட இந்தத் தடை மூலம், மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை நிர்வகிப்பதற்காக, அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், பொருளாதார மீட்சி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தடையை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி, 304 HS குறியீடின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரம் சாரா வாகன உதிரிபாகங்களை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் மூன்று கட்டங்களில் செய்யப்படும். முதற்கட்டமாக பொதுப் போக்குவரத்துக்காக பாவிக்கப்படும் வாகனங்கள், விசேட கருமங்களுக்காக பாவிக்கப்படும் வாகனங்கள் மற்றும் ஏனைய மோட்டார் பாவிக்கப்படாத பொருட்களை ஒக்டோபர் 01 திகதி முதல் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. இரண்டாவது கட்டமாக டிசம்பர் 01 திகதி தொடக்கம், வர்த்தக ரீதியான அல்லது பொருட்களை ஏற்றிச்செல்லும் கருமங்களுக்காக பாவிக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக தனிப்பட்ட பாவனைக்காக பாவிக்கப்படும் கார், வேன், ஸ்போட் யூட்டிலிற்றி வாகனங்கள், பிக்கப் வாகனங்கள் போன்றவை அடுத்தாண்டு 2025 பெப்ரவரி மாதம் 01 திகதி தொடக்கம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க அமைச்சவை அனுமதி வழங்கியுள்ளது.

விதிக்கப்பட்ட தடையை படிப்படியாக நீக்குவது மூலம், இந்நாட்டின் வாகன தொழிற்றுதுறைக்கு புத்துயிர் அளிப்பதோடு, பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கவும் பழைய வாகனங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எரிபொருள் செயற்றிறனின்மையைக் குறைத்தல் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க இது உதவும் எனவும் அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டதன் காரணமாக, இலங்கையில் தற்போது அதிகளவான பழைய வாகனங்கள் எஞ்சியிருப்பதுடன், எரிபொருள் செயற்றிறனின்மை காரணமாக வீதி பாதுகாப்பு மற்றும் அதன் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பான பிரச்சினைகளும் எழுந்துள்ளன. வாகன இறக்குமதி சம்பிரதாயமாக முக்கிய வருமான ஆதாரமாக இருப்பதனால், புதிய வாகன இறக்குமதியை அனுமதிப்பதனூடாக பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அரச வருமானத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வாகன இறக்குமதியானது நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அந்த நிலைமையை முகாமைத்துவம் செய்ய வாகன இறக்குமதிக்கு மேலதிக சுங்க வரி விதித்தல் போன்ற நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையும் கையெழுத்திட்டுள்ள பெரிஸ் சாசனத்தில் உள்ளடங்கிய 'தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs)' பூர்த்தி செய்வதற்கான தற்போதைய அர்ப்பணிப்பும், 2050 ஆம் ஆண்டுக்குள் 'பூஜ்ஜிய உமிழ்வு நிலையை' அடைவதற்கான தற்போதைய இலக்கும், இந்த முடிவை எடுப்பதில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. புதிய வாகன இறக்குமதிக் கொள்கையின் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, Euro 4 முதல் Euro 6 வரையிலான தரநிலைக்கு மாறுவதன் மூலம் வாயு உமிழ்வு தரநிலைகளுக்கு இணங்குவதும் அவசியமாகும்.

இதன்மூலம் மின்சக்தி வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2029 ஆம் ஆண்டளவில், பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்வதை தடை செய்து, தற்போதுள்ள வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்றுவதும் ஊக்குவிக்கப்படும். நாட்டில், ஒவ்வொரு வருடமும் சராசரியாக 30,087 வீதி விபத்துக்கள் (முதன்மையாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள்) ஏற்படுவதுடன், அவற்றைக் குறைக்கும் முயற்சியில் அரசாங்கத்தின் வாகன இறக்குமதிக் கொள்கைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படுள்ளது.

இந்த புதிய கட்டமைப்பின் கீழ், வாகன இறக்குமதி புதிய மாதிரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதாவது, உற்பத்தி செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு குறைந்த மற்றும் விளையாட்டு சார்ந்த வாகனங்கள் (SUVs) போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு குறைந்த பொதுப் போக்குவரத்து மற்றும் வர்த்தக செயற்பாட்டு வாகனங்களுக்கான தடை நீக்கப்படும். சிறப்பு செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் 10 ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கலாம். மேலும், இறக்குமதியாளர்கள் இந்த வாகனங்களை இறக்குமதி செய்த 90 நாட்களுக்குள் பதிவு செய்து விற்பனை செய்ய வேண்டும் மற்றும் தாமதத்திற்கு அபராதம் விதிக்கப்படும். மேலும், வாகன மற்றும் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்பவர்கள், வாகன ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒழுங்குபடுத்துவதற்காக வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்படும்.

### அறநெறிப் பாடசாலை...

பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு முதல், 5,000 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு, 2,500 ரூபா சீருடைக் கொடுப்பனவு என்ற வகையில் வருடாந்தம் 7,500 ரூபா கொடுப்பனவு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் சேவையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் முகமாக 5,000 ரூபா வருடாந்த ஆசிரியர் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

இக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2022 ஆண்டு வரை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. எனினும் தற்போது சீருடை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப் படவில்லை.

இந்நிலையிலேயே அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குதல் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவாக 7,500 ரூபாவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தேசிய மக்கள் சக்தி கட்சியினால்...

செல்வந்த நாடாக மாற்றுவதற்கும் மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதற்கும் முயற்சிக்க முடியும் எனவும், இந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார்.

இதனை செய்யக்கூடிய வலுவானவர்கள் தமது கட்சியில் இருப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

### வடக்கு ரயில் சேவைகள்...

கொண்ட ரயில் பாதை புனரமைக்கப்பட்டதன் பின்னர், கொழும்பிலிருந்து காங்கேசந்துறைக்கு செல்வதற்கு ஏழரை மணிநேரம் தேவைப்பட்டது. பாதை புனரமைப்பின் பின்னர் ஐந்தரை மணிநேரமாக குறைக்கப்படுமெனவும் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் ரயில் பயணிக்குமெனவும் சிந்தக ஜயசேகர மேலும் தெரிவித்தார்.

### தரம் 5 புலமைப்பரிசில்...

தோற்றுகின்றனர். அதன்படி, இப் பரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது. இதேவேளை, பரீட்சைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தேர்தல் கடமைகளை மேற்கொள்ளக் கூடாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் மற்றும் பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் அரசியல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மேலும், இன்றைய தினம் அவசர அனர்த்த சூழல் ஏற்படுமாயின் மாணவர்களை இடையூறின்றி பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. ஏதேனும் அனர்த்த நிலை காரணமாக பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் மாணவர்களுக்கு சிரமம் ஏற்படுமாயின், 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. பாதிக்கப்படும் மாணவர்களுக்குத் தேவையான உடன் நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைந்து மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

### நாட்டின் வறுமை நிலையை நீக்க...

எனவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற சமூர்த்தி உத்தியோகத்தர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் இதனை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிடுகையில், வறுமையை 24 மாதங்களுக்குள் ஒழிப்பதற்காக, மாதம் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்குவதோடு, அதற்கு மேலதிகமாக மூலதனங்களையும் வழங்கி புதிய வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம். இந்த சந்தர்ப்பத்தில் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் வழங்குகின்ற சேவையை கௌரவமாக கருதுவோம். இந்த திட்டத்தை பலமாக முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். சமூர்த்தி வேலைத்திட்டத்தை எவரேனும் வீழ்த்துவதற்கு முயற்சி செய்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கு குறைபாடுகள் காணப்படுகின்றன. அவர்களின் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வை பெற்றுக்கொடுத்திருக்கின்றோம்.

பதவி உயர்வு குறைபாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்போம். சமூர்த்தி கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டவர்களுக்கும் நியாயத்தை பெற்றுக்கொடுப்போம். அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தியின் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் பணம் வழங்கும் வேலைத்திட்டம் அல்ல. இதனூடாக வரியவர்களை வறுமையிலிருந்து மீட்கும் வேலைத்திட்டமாகும்.

அதற்காக சமூர்த்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியமானது என சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

### தமிழரசு கட்சியின் UK கிளை...

அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது "தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக ஐக்கிய இராச்சியத்திலுள்ள, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கிளையானது மாதாந்த கூட்டங்களில் பல தடவை விவாதித்தது. தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில்லை என்ற முடிவை தமிழரசு கட்சியின் மத்திய குழு, எடுத்திருந்தது. எனினும் கட்சியின் மாவட்டக் கிளைகளுக்கு இடையே ஏற்பட்ட பல்வேறு கருத்து முரண்பாடுகளும், ஆதரவும், எதிர்ப்பும் போன்ற காரணங்களினால், தாயகத்திலுள்ள தமிழரசு கட்சியின் மாவட்ட கிளைகள் பெரும்பாலானவை மத்திய குழுவின் முடிவை நிராகரித்து, தமிழ் பொது வேட்பாளர்களுக்கு ஆதரவளிப்பது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். இந்நிலையில், தாயக மக்களின் பெரும்பான்மையினருடைய விருப்பினை கருத்திற் கொண்டும், புலம்பெயர்ந்து வாழ்கின்ற பெரும்பான்மை மக்களுடைய விருப்பினையும் கருத்திற் கொண்டும், இந்த விடயத்தை அறிவியல் பூர்வமாகவும், அரசியல் இராஜதந்திர நடைமுறைகளுக்கூடாகவும். தத்துவார்த்த ரீதியிலும் ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளோம்" என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### எங்கள் கருத்து...

## மக்கள் வழங்கும் ஜனநாயகத் தீர்ப்பு!

மக்கள் மீதான வரிச்சுமையை நீக்கப் போவதாக எதிரணியினர் கூறி வருகின்றனர். ஆனால் பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்றிருக்கும் எமது நாட்டில் வரிகளைக் குறைத்துவிட்டு எவ்வாறு அரசுக்குரிய வருமானத்தை ஈட்டுவது? அரச வருமானமின்றி மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவது?

மக்கள் மத்தியில் தோன்றுகின்ற இவை போன்ற வினாக்களுக்கெல்லாம் எதிரணியினர் விளக்கம் அளிப்பதாக இல்லை. எனவே இவ்வாக்குறுதிகள் யாவும் காற்றில் பறந்துவிடும் என்பதுதான் மக்களின் சந்தேகம்!

தேர்தல் களநிலைமை இவ்வாறிருக்கையில், இம்முறை தேர்தலில் வன்முறை சம்பவங்கள் மிகவும் அரிதாகவே உள்ளமை ஆச்சரியமளிக்கின்றது. இம்முறை தேர்தலில் பலதரப்புகள் மோதிக் கொள்வதால்தான் வன்முறைகள் அரிதாக உள்ளதாகத் தெரிகின்றது. முன்னைய தேர்தல்களில் இருதரப்புக்கு இடையே மாத்திரமே போட்டி இருப்பதுண்டு. ஆனால் இம்முறை நிலவுவது பலமுனைப் போட்டி!

ஒருபுறம் தேசிய ஊடகங்கள், சமூக ஊடகங்கள் போன்றனவெல்லாம் களநிலைவரங்களை பலவிதமாக வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மக்கள் இப்போதெல்லாம் மிகுந்த பக்குவம் நிறைந்தவர்களாக உள்ளனர். உண்மையையும் போலிகளையும் பிரித்தறிகின்ற ஞானம் கொண்டவர்களாக மக்கள் உள்ளனர். கடந்தகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளையும் அவற்றிலிருந்து மீண்டு வந்த பாதையையும் நன்கு அறிந்து கொண்டவர்களாக மக்கள் உள்ளனர். வீராவேசப் பேச்சுக்களில் ஏமாந்து வாக்களிக்கும் நிலைமையில் மக்கள் இல்லையென்பதுதான் உண்மை!

### கையடக்கத் தொலைபேசி...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இவ்வாறான தடை அமுலில் இருக்கும்போதே, தபால் மூல வாக்களிப்பின்போது, வாக்குச்சீட்டை படமெடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிய சம்பவம் தொடர்பாகவும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில், வாக்களிப்பு நிலையங்களுக்குக் கையடக்கத் தொலைபேசியை எடுத்துச்செல்லக்கூடாதென ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த தடையை, மேலும் கடுமையாக அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

### 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை...

உறுதிப்படுத்தி தமது வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ள முடியுமென சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாகவும் இதுவரை, 84 வீத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 03 ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தல் முடிவடைவதற்கிடையில் பொதுத்தேர்தலுக்கு இலக்கு வைக்கும் நகர்வுகள்!

**எதிர்வரும் 21 ஆம் திகதிக்குப் பின்னர் பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படுமா?**






ஜனாதிபதித் தேர்தல் இறுதிக் கட்டத்தை நெருங்கியிருப்பதால், அரசியல்வாதிகள் மற்றுமொரு தேர்தலுக்கான தயார்படுத்தல்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். அடுத்தடுத்து இரண்டு தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. தற்போது ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்றதும், அடுத்ததாக பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கின்றது. எனவே அரசியல்வாதிகள் மத்தியில் பொதுத்தேர்தலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 2025ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் முடிவடையவிருக்கின்ற போதும், முன்கூட்டியே பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளரைப் பொறுத்து பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது. வெற்றிபெறும் வேட்பாளர் தமக்கு சாதகமான அரசாங்கத்தைப் பாராளுமன்றத்தில் அமைக்க வேண்டுமாயின் மக்களின் ஆணையைப் புதிதாகப் பெற வேண்டியதாகவிருக்கும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவாராயின் பாராளுமன்றம் சிறிது காலம் செயற்பட்ட பின்னர் கலைக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச அல்லது அனுரகுமார திசாநாயக்க ஆகியோரில் ஒருவர் வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாகப் பாராளுமன்றம் கலைக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

தாம் வெற்றிபெற்று மறுநாளே பாராளுமன்றம் கலைக்கப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க பகிரங்கமாகத் தேர்தல் மேடைகளில் கூறி வருகின்றார்.

இதுபோன்ற அரசியல் சூழலில் பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயாராவதில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் எந்தத் தரப்பிற்கு ஆதரவானவர்களாக இருந்தாலும் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு அடுத்த கட்ட சொந்த நகர்வுகளுக்கு அவர்கள் தயாராகி வருகின்றனர்.

இதனால் உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடுகள் மற்றும் மனக்கசப்புக்கள் அதிகரித்திருப்பதாகவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் இது பற்றிய முரண்பாடு வலுத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றிபெற்றால் அவர் தலைமையிலான அரசாங்கத்தில் யார் பிரதமர் என்பது தொடர்பில் உறுப்பினர்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவி வருவதாக உள்ளகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த கூட்டணியின் பொதுச் செயலாளர், குறித்த கட்சியின் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட தலைவர், மஹிந்தவுடன் இருந்து சஜித்துடன் இணைந்த இரு சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிக் கட்சியின் தலைவர் ஒருவர் எனப் பலரும் பிரதமர் பதவியை இலக்கு வைத்திருப்பதாகவும், இதனால் அக்கூட்டணிக்குள் முரண்பாடுகள் ஆரம்பித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.




பிரதமர் பதவி மாத்திரமன்றி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலுக்கான யுத்தமும் அக்கட்சிக்குள் தோன்றியிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன. அண்மையில் கண்டியில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு பேச இடம் ஒதுக்கப்படவில்லையென்றும், அடுத்த பொதுத்தேர்தலில் அவரை ஒதுக்கும் நோக்கில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஊடகங்கள் பல அறிக்கையிட்டிருந்தன.

பிரதமர் கனவில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட தலைவர் ஒருவர் தனது மகளைப் பொதுத் தேர்தலில் களமிறக்கும் நோக்கில் இவ்வாறான காய்நகர்த்தலை மேற்கொண்டிருப்பதாகவும் அந்தச் செய்திகள் மேலும் குறிப்பிடுகின்றன.

இதுபோன்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் பேச்சாளர்களின் பட்டியல்கள் இதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுபோன்ற பாராளுமன்றத் தேர்தலுக்கான முட்டிமோதல்கள் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் கூட்டணிக்குள் மாத்திரமன்றி ஏனைய தரப்புகளுக்குள்ளும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்துசென்று ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்படும் உறுப்பினர்கள் பொதுவான கூட்டணியொன்றை உருவாக்கியமைக்குப் பிரதான காரணமும் அடுத்த பொதுத்தேர்தலேயாகும். அடுத்த பொதுத்தேர்தலில் அவர்கள் மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட முடியாது என்பதாலேயே பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதிய கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளனர்.

இருந்தபோதும், குறித்த கூட்டணிக்குள்ளும் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அது மாத்திரமன்றி, அந்தத் தரப்பிலும் பிரதமர் கனவில் உள்ள பலர் இருப்பதால் கருத்து முரண்பாடுகளுக்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அரசியல் அவதானிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கச் சென்றுள்ள இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டணியமைத்துப் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டாலும், ஐ.தே.கவின் பட்டியில் போட்டியிடுவது சாத்தியமானதாக இருக்காது. ஏனெனில், ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் இருப்பதால் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும்போது அது மேலும் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கலாம்.

அதேபோல, ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து பாரிய பின்னடைவைச் சந்தித்த கட்சியாக பொதுஜன பெரமுன காணப்படுகின்றது. அதன் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ போட்டியிட்டாலும் அடுத்து நடைபெறக்கூடிய பொதுத்தேர்தல் அவர்களுக்கு மிகவும் சவால் மிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இதற்குக் காரணம் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களாக விளங்கிய சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தற்பொழுது ஜனாதிபதியுடன் இருப்பதால் அவர்கள் மீண்டும் பொதுஜன பெரமுனவில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. எனவே பொதுஜன பெரமுன புதுமுகங்களையே அறிமுகப்படுத்த வேண்டியிருக்கும்.

அவ்வாறு அறிமுகப்படுத்தும் புதுமுகங்களுக்கு மக்கள் மத்தியில் எந்தளவுக்கு வரவேற்புக் கிடைக்கும் என்பது தெரியாது.

இதில் மற்றுமொரு பக்கமும் இருக்கின்றது. அதாவது, பொதுஜன பெரமுனவிலிருந்து சென்ற பலர் மீது குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் அக்கட்சியின் அடுத்த கட்டத்தில் உள்ள பலருக்குப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் மாகாணசபை மட்டத்தில் இருந்த பொதுஜன பெருமுன வேட்பாளர்கள் பாராளுமன்றத்திற்கு நுழைய வாய்ப்பும் இருக்கின்றது.

எதுவாக இருந்தாலும், எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் கிடைக்கும் பெறுபேறுகளைப் போறுத்தே அடுத்த பொதுத்தேர்தல் பற்றிய தீர்மானமொன்றுக்கு வரக்கூடியதாகவிருக்கும்.

**பி.ஹர்ஷன்...**

---

# ஒரு வருடகால பாடசாலைக் கல்வியை இழந்த நிலையில் காஸா மாணவர்கள்!

## புதிய கல்வியாண்டில் கால்பதிக்கவும் வழியில்லை!



பலஸ்தீனின் காஸா மாணவர்கள் ஒருவருட காலமாக பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் புதிய கல்வி ஆண்டில் பிரவேசித்திருக்கிறார்கள். காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்துவரும் யுத்தம் காரணமாக இந்நிலைக்கு இம்மாணவர்கள் முகம்கொடுத்திருக்கிறார்கள்.

வருடா வருடம் செப்டெம்பர் மாதம் 09 ஆம் திகதி பலஸ்தீன் உட்பட காஸாவில் புதிய கல்வியாண்டு ஆரம்பமாவது வழமை. ஆனால் கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி முதல் இவ்வருடம் செப்டெம்பர் 09 ஆம் திகதிக்கும் அப்பால் யுத்தம் தொடர்வதன் விளைவாக கடந்த வருடம் முழுவதும் பாடசாலைக்கல்வி இன்றி புதிய கல்வி ஆண்டில் பிரவேசிக்கும் துர்ப்பாக்கிய நிலை இம்மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது,

இப்போரின் விளைவாக காஸாவில் ஏற்பட்டுள்ள அழிவுகளும், சேதங்களும் கொஞ்சநஞ்சமல்ல. காஸா சுகாதார அமைச்சின் தகவல்களின்படி, இற்றைவரை 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 95 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். மக்களின் வாழ்வை சிதைத்து சின்னாபின்னப்படுத்தியுள்ள இப்போரினால் அவயவங்களை இழந்துள்ளவர்களையும் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளவர்களையும் காஸாவில் பரவலாகக் காண முடிவதாக தெரிவித்துள்ள சர்வதேச மருத்துவர்கள், பெரும்பாலான பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் செலுத்த முடியாத அளவுக்கு உளத்தாக்கங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்றுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மனநல நிபுணர் ஜீசஸ் மிகுவல் பெரெஸ் காசோர்லா குறிப்பிடுகையில், 'பாடசாலைக் கல்வி இன்மையின் விளைவாக உளவியல் ரீதியான பாதிப்புக்கு இளம் பராயத்தினரில் அநேகர் முகம்கொடுத்துள்ளனர். இது அவர்களது அன்றாட வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடியதாகும். இப்போரினால் அநேக சிறுவர்கள் அதிக கவலை மற்றும் பதற்றத்திற்கு உள்ளாகியுள்ளனர்' எனத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இடம்பெயர்தல் காஸா மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது. இஸ்ரேலியப் படையினர் விடுக்கும் வெளியேற்ற அறிவுறுத்தல்கள் இதற்கு காரணமாகும். இதனால் காஸா மக்களில் பெரும்பகுதியினர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெயரச் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்களவிலானோர் ஐந்து முதல் எட்டு தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இப்போர் காஸாவின் உட்கட்டமைப்பு அடிப்படை வசதிகளை அழித்து சேதப்படுத்தியுள்ளது. குடிநீர் வசதி, கழிவகற்றும் கட்டமைப்புகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், குடியிருப்புக்கள் என அனைத்தும் அழிவுற்றும் சேதமடைந்துமுள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் தற்காலிக கூடாரங்களிலும் முகாம்களிலும் தங்கியுள்ளனர். அவர்களில் மாணவர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

365 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட காஸா இப்போருக்கு முன்னர் 23 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்தது. அவர்களில் 6 இலட்சத்து 25 ஆயிரம் பேர் பாடசாலை மாணவர்களாவர். 40 ஆயிரம் பேர் உயர்கல்வி பெறுபவர்களாவர். காஸா மாணவர்களுக்கு கல்வி புகட்டும் பணியில் 20 ஆயிரம் ஆசிரியர்கள் கடமையாற்றினர் என்று பலஸ்தீன கல்வி அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இம்மாணவர்களுக்கென 564 பாடசாலைக் கட்டடங்கள் காணப்பட்டுள்ளன. அவற்றில் 309 பாடசாலைக் கட்டடங்கள் பலஸ்தீன அரசின் நிர்வாகத்தில் உள்ளவையாகும். அதேநேரம் ஐ. நா பலஸ்தீன நிவாரண முகரவகத்தின் (யூ.என்.ஆர்.டப்ளியூ.ஏ) நிர்வாகத்தின் கீழ் 187 பாடசாலைக் கட்டடங்களும் தனியார் துறையினரின் நிர்வாகத்தின் கீழ் 68 பாடசாலைக் கட்டடங்களும் இருந்துள்ளன.





இப்போரினால் காஸா மாணவர்களில் அநேகர் தங்கள் பாடசாலை உபகரணங்களையும் மாத்திரமல்லாமல் பாடசாலை சீருடையையும் கூட இழந்துள்ளனர். அவர்களில் உடுத்த உடையுடன் இடம்பெயர்ந்தவர்களும் உள்ளனர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாணவர்கள் தம் பெற்றோரில் இருவரையும், சிலர் இருவரில் ஒருவரையும் இழந்திருக்கிறார்கள்.

பல மாணவர்கள் உளரீதியிலான தாக்கங்களுக்கும் முகம்கொடுத்துள்ளனர். அவர்களது பாடசாலை வகுப்பறைகள் வகுப்பறைகளாக இல்லை. அவை அழிவுற்றும் சேதமடைந்தும் காணப்படுகின்றன. அதேநேரம் இடம்பெயர்ந்துள்ள காஸா மக்களின் தங்குமிடங்களாக பாடசாலைக் கட்டடங்களும் உள்ளன.

அப்படியிருந்தும் கூட பாடசாலைக் கட்டடங்கள் மீதும் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் 15 இற்கும் மேற்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் தாக்கப்பட்டுள்ளதாக காஸா சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் துணை அமைப்பாக விளங்கும் உலகளாவிய கல்வி கொத்தணி அமைப்பின் தரவுகளின்படி, இப்போரினால் காஸாவில் 477 பாடசாலைக் கட்டடங்கள் நேரடியாகத் தாக்கப்பட்டுள்ளன.

இப்போரினால் 110 பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன. 321 பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. காஸா மாணவர்கள் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் கல்வியை மாத்திரமல்லாமல் அவர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களையும் பள்ளித்தோழர்களையும் கூட இழந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலத்தின் தகவல்களின்படி, காஸாவில் யுத்தம் ஆரம்பமானது முதல் செப்டெம்பர் மாதம் வரையும் 10,490 மாணவர்களும் 411 ஆசிரியர்களும், 150 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். 16,700 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். அத்தோடு இவ்வருடம் உயர்கல்வி நிலையங்களில் சேர வேண்டிய 450 மாணவர்களும் கூட இப்போரினால் காவு கொல்லப்பட்டுள்ளனர். 58 ஆயிரம் மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

முதலாம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரையான மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு அமர முடியாத நிலைக்கும் முகம்கொடுத்துள்ளனர். அதனால் இம்மாணவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்லூரிகளிலும் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பையும் இழந்துள்ளனர்.

இப்போர் காஸா மாணவர்களின் கல்வி உரிமையைப் பெரிதும் பாதித்துள்ளது. இவ்வாறான சூழலில் தெற்கு ஹேப்ரோன் பிராந்தியத்தில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையைப் பார்வையிடச் சென்ற பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் முஸ்தபா, "ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதற்கும் சுதந்திரத்தை அடைவதற்கும் கல்வியே நமது முதன்மை ஆயுதம். கல்விக்கான நமது அர்ப்பணிப்பு ஒரு உயிர்நாடியாகும். இதன் மூலம் நாம் அனைத்து சவால்களையும் சமாளிக்க முடியும்" என்றுள்ளார்.

> 10,490 மாணவர்களையும், 411 ஆசிரியர்களையும் காவு கொண்டுள்ள யுத்தம்; முதலாம் வகுப்பு கல்வியை இழந்துள்ள 58 ஆயிரம் மாணவர்கள்!

இப்பின்புலத்தில் காஸாவில் ஈ கற்பித்தலை முன்னெடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதேவேளை புதிய கல்வியாண்டு ஆரம்பமானதைத் தொடர்ந்து அங்குள்ள ஆசிரியர்களில் சிலர் சேதமடைந்துள்ள வீடுகளிலும் கட்டடங்களிலும் கூடாரப் பாடசாலைகளை அமைத்து மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்த வகையில், தெற்கு காஸாவின் கான் யூனிஸில் உள்ள தனது வீட்டின் இடிபாடுகளில் அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரப் பாடசாலையில் எஸ்ரா எபு முஸ்தபா என்ற ஆசிரியை கற்பித்தல் நடவடிக்கையை தொடங்கியுள்ளார். இங்கு பாலர் பாடசாலை முதல் ஆறாம் வகுப்பு வரை கற்பித்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

'பலஸ்தீனிய கல்வித் திட்டத்தின்படி கற்பிக்கவும், மகிழ்ச்சிக்கான செயற்பாடுகள் மூலம் உளவியல் ஆதரவை வழங்கவும் நாங்கள் முயற்சிக்கிறோம். காஸாவிலுள்ள பிள்ளைகள் கடினமானதும் சோகமானதுமான சூழ்நிலையில் வாழ்கின்றனர். மேலும் பாடங்கள் மற்றும் மகிழ்ச்சியான செயற்பாடுகள் மூலம் அவர்களின் துன்பங்களை போக்க நாங்கள் எதிர்பார்க்கிறோம்' என்றுள்ளார் ஆசிரியர் எஸ்ரா எபு முஸ்தபா.

கல்வி பெறுவது ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமையாகும். அதற்கேற்ப காஸா பிள்ளைகளும் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். யுத்தம் தொடர்வது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. அதனால் யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியமென ஐ.நா நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதனால் இக்கோர யுத்தம் நிறுத்தப்பட்டு அனைத்து மக்களும் நிம்மதியாக வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் காஸா பிள்ளைகள் பீதியின்றி மீண்டும் சுதந்திரமாகப் பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவர்.



**மர்லின் மரிக்கார்...**

# வாக்காளர்களை தம்பக்கம் கவர்ந்திழுக்கும் இறுதிநேர தீவிர பிரசாரத்தில் வேட்பாளர்கள்!




# இலங்கை வரலாற்றில் என்றும் காணாத பரபரப்பான தேர்தல்!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு இன்னமும் ஒரு வாரமே உள்ள நிலையில், வேட்பாளர்களின் பிரசாரங்கள் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளன.

நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாக இது அமைந்தாலும், மூன்று பிரதான வேட்பாளர்கள் மத்தியிலேயே கடும் போட்டி நிலவுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோரே இந்தப் போட்டியில் முன்னணி வகிக்கின்றனர்.

இவர்களில் யார் அடுத்த ஜனாதிபதி என்பதே மக்கள் மத்தியில் பரபரப்பான பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட பொதுஜன பெரமுன தனது கட்சியின் தனியான வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவைக் களமிறக்கியிருந்தது. அவர் இந்தப் போட்டியில் வெல்வதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருந்தாலும், அவருக்கு அளிக்கப்படக் கூடிய வாக்குகள் ஏனைய வேட்பாளர்களின் வெற்றியில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர், நாட்டில் பயங்கரவாத யுத்தத்தை வெற்றிகொண்ட தலைவரின் புதல்வர் என மக்களின் செல்வாக்குப் பெற்ற மஹிந்த ராஜபக்ஷ என்ற அரசியல் முக்கியஸ்தருக்கான ஆதரவு வாக்குகள் கணிசமானளவு கிராம மட்டங்களில் இருப்பதால், நாமலுக்கு அளிக்கப்படக் கூடிய வாக்குகளும் உள்ளன. இந்நிலையில் வாக்குகள் சிதறுண்டு போயுள்ளதால் யார் வெற்றிபெறுவார்கள் என்பதைக் கூறுவது சிக்கலானதாகும்.

இருந்தபோதும், இதுவரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, ஒவ்வொருவரும் தமக்கான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏதாவது ஒரு பிரதான தொனிப்பொருளைக் கையில் வைத்துக் கொண்டு செயற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

நாட்டை சவால்மிக்க பாதையிலிருந்து மீட்டெடுத்தமையால் முன்னேற்றத்தை நோக்கி மேலும் கொண்டுசெல்ல தனக்கு வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார்.

அதேநேரம், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் பிரசாரம் ஊழல் மோசடியை இல்லாமல் செய்வது, அரசியல்வாதிகளுக்கான வீண்விரயங்களைக் கட்டுப்படுத்துவது என்பதை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளது.

அதேநேரம், நாட்டில் வறுமையை ஒழித்து அனைவரையும் வலுப்படுத்துவது என்ற தொனிப்பொருளில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பிரசாரங்கள் அமைந்துள்ளன.

இந்த நிலையில், சஜித் பிரேமதாசவுக்கு அளிக்கப்படும் வாக்குகள் வீணானவை என்பதால் தனக்கு வாக்களிக்குமாறும், அநுரவுக்கு எதிரானவர்களும் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் பல்வேறு தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இது பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் அதிகம் பேசப்படும் ஒரு விடயமாக அமைந்துள்ளது.

அது மாத்திரமன்றி, பல்வேறு பிரசார மேடைகளில் அநுரவை நண்பன் என ஜனாதிபதி விளித்துப் பேசியிருப்பதும் சமூக ஊடகங்களில் அதிகம் பேசப்படும் விடயமாக உள்ளது. இந்தக் கூற்றை சாதகமாக்கி ஜனாதிபதிக்கும் அநுரவுக்கும் இடையில் டீல் அரசியல் இருப்பதன் வெளிப்பாடே இந்த நண்பன் என்ற கருத்தின் அர்த்தம் என சஜித் தரப்பினர் பிரசார மேடைகளில் கூறி வருகின்றனர்.

எனினும், தன்னை நண்பன் என விளித்துப் பேசவேண்டாம் என அநுர அரசியல் மேடைகளில் கூறி வருகின்றார். ரணில் தனது நண்பன் இல்லையென்றும், அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் குறித்தும் தமது அரசாங்கத்தின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ள கருத்து சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றது.



மறுபக்கத்தில், ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் இணைந்து கொள்வதன் ஊடாகவே அனுரவைத் தோற்கடிக்க முடியும் என ஐ.தே.க மற்றும் ஐ.ம.சக்தியின் இரண்டாம் நிலை உறுப்பினர்கள் பலர் கருதுவதாகவும் பல இடங்களில் பேசப்பட்டது. தமது அனைவரினதும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இரு தரப்பினரும் இணைந்துகொள்வது அவசியமானது என அவர்கள் கூறுகின்றபோதும், தலைமைத்துவங்கள் இரண்டும் ஒருவரை ஒருவர் சாடிவருவதையே தேர்தல் மேடைகளில் காணக் கூடியதாகவுள்ளது.




இருவரும் இணைய வேண்டும் என்ற விடயத்தை முதலில் பகிரங்கமாக அறிவித்தவராக தலதா அத்துகோரள காணப்படுகின்றார். இருவரும் இணைய வேண்டும் எனக் கூறி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையே அவர் இராஜினாமாச் செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாந்து இதே விடயத்தை வலியுறுத்தி தான் சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளராக இருந்த அவர், ஜனாதிபதியும் சஜித்தும் இணைய வேண்டும் என வலியுறுத்தியே இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

இவ்வாறு ஒருவருக்கு ஒருவர் போட்டியான முறையில் கூறிவரும் தேர்தல் பிரசாரம் இந்த வாரத்தில் இறுதிக்கட்டத்தை அடைகின்றது. எதிர்வரும் சனிக்கிழமை 21ஆம் திகதி வாக்களிப்பு தினம் என்பதால் 18ஆம் திகதி நள்ளிரவுடன் அனைத்துத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் நிறுத்தப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த காலத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலில் பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு அப்பால் சமூக ஊடகங்களின்



## ஊடகநெறிமுறைகளை மீறி சமூகவலைத் தளங்களில் சேறு பூசும் பிரசாரங்கள்!



செயற்பாடுகள் மோசமானதாகவே இருக்கின்றன. தேர்தல் பிரசார மேடைகளில்தான் வேட்பாளர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள் என்றால், சமூக ஊடகங்களில் சேறு அள்ளி வீசப்படுகின்றது.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஆதரவாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி விசேடமாகப் போலியான கணக்குகள் திறக்கப்பட்டு சேறு பூசும் காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் குறிப்பாக கருத்துக் கணிப்புக்கள் என சமூக ஊடகங்களில் காண்பிக்கப்படும் விடயங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பெரும் தலையிடியாக மாறியுள்ளன.

கடந்த காலங்களில் சமூக ஊடகங்களின் பயன்பாடுகள் ஒப்பீட்டளவில் குறைந்த நிலையில் இருந்தபோதும் இம்முறை அதனைப் பயன்படுத்தி தமது செல்வாக்குத்தான் மக்கள் மத்தியில் அதிகமாக உள்ளது எனக் காண்பிப்பதற்குப் பல்வேறு வேட்பாளர்களும் முட்டிமோதுகின்றனர்.

கருத்துக் கணிப்புக்கள் என்ற போர்வையில் மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக ஒலிவாங்கியைப் பிடித்துக்கொண்டும், கமராவை இயக்கிக்கொண்டும் கேள்விகளைக் கேட்டுச் செல்கின்றனர். இவ்வாறு கூறப்படும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பகுதியில் இந்த வேட்பாளருக்கான ஆதரவுதான் அதிகம் எனக் காண்பிக்கும் முயற்சிகளே அதிகம் காணப்படுகின்றன.

இவற்றின் பின்னணியை சரியாக உற்று நோக்கும்போது ஏதாவது குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு ஆதரவாக செயற்படும் சமூக ஊடகப் போராளிகளே இந்தக் கருத்துக்கணிப்புக்களை வெளியிடுகின்றனர் என்பது தெரிகின்றது. இதில் எந்தவித சுயாதீனத் தன்மையையும் காணக்கூடியதாக இல்லை.

மறுபக்கத்தில் பாரம்பரிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டால் அவை யாராவது ஒரு வேட்பாளரை ஆதரிக்கும் வகையிலேயே பெரும்பாலும் செயற்படுகின்றன.

தொடரும் கட்சித் தாவல்கள்:

சூடுபிடித்துள்ள ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பாரம்பரிய மற்றும் சமூக ஊடகங்களின் செயற்பாடுகள் இவ்வாறானதாக இருக்கும் நேரத்தில், கட்சித்தாவல்கள் இன்னமும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகிய இரு தரப்புக்கும் இடையிலேயே இந்தக் கட்சித் தாவல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான கட்சித் தாவல்கள் பதிவாகியிருந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தலதா அத்துகோரள தனது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டார். அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவியொன்று வழங்கப்படவிருப்பதாகவும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இதனைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சராக இருந்த கீதா குமாரசிங்க அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பக்கம் தாவினார். ஜனாதிபதியின் ஆதரவுத் தளத்தில் இருந்த அவர் திடீரென சஜித் பக்கம் தாவினார்.

இவ்வாறு கட்சி தாவியவர்கள் மற்றும் தனக்கு ஆதரவாக இல்லாது வேறு வேட்பாளருக்கு ஆதரவாக இருக்கும் இராஜாங்க அமைச்சர்களின் பதவிகளை ஜனாதிபதி பறித்துக் கொண்டார். இதற்கமைய கீதா குமாரசிங்கவின் இராஜாங்க அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதுடன், நாமல் ராஜபக்ஷ வுக்கு ஆதரவாக உள்ள இராஜாங்க அமைச்சர்கள் சிலரின் பதவிகளும் பறிக்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் என்ற பதவிக்காக வழங்கப்படும் வாகனம் உள்ளிட்ட அரச சொத்துக்களைப் பயன்படுத்தி மற்றொரு வேட்பாளருக்குப் பணியாற்றுவது நியாயம் இல்லையெனக் கூறியே இந்தப் பதவிகள் பறிக்கப்பட்டதாக அரசியல் தரப்பில் கூறப்படுகின்றது. தேர்தல் இறுதிக்கட்டத்தை நெருங்கியிருப்பதால் இதுபோன்ற கட்சித் தாவல்கள், குதிரைப் பேரங்கள் எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**எவருக்கும் சவாலாக இருக்கப் போவது!**

கடும் போட்டிக்கு மத்தியில் எந்த வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்ய வேண்டிய பாரியதொரு சவாலை எதிர்கொண்டே ஆக வேண்டும். பொருளாதார நெருக்கடியால் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள நாடு பல்வேறு துறைகளில் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

இந்த சவால்களை நடைமுறைச் சாத்தியமான வகையில் அணுகுவதன் ஊடாகவே சாதகமான தீர்வைக் காணமுடியும் என்பதை அனைத்து வேட்பாளர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதுதான் பொதுவான கருத்தாக இருக்கின்றது.

வெறுமனே பதவியை அல்லது ஆட்சியைப் பிடித்துவிடுவது என்ற குறிக்கோளுடன் நடந்துகொள்வது நாட்டுக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ நன்மையைத் தராது என்பதையும் பிரதான வேட்பாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது.

# இலங்கையின் அபிவிருத்தி பங்காளியான சவூதி நிதியம்

## 50 ஆவது ஆண்டு விழாவில் தூதுவர் அமீர் அஜ்வத் பங்கேற்பு

இலங்கையின் நீண்ட கால அபிவிருத்தி பங்காளிகளில் ஒன்றான அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் (SFD) 50ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த முதலாம் திகதி (01.09.2024) ரியாதிலுள்ள ரிட்ஸ் கார்ல்டன் ஹோட்டலில் நடைபெற்றது. அதில் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் பங்கேற்றார். இந்நிகழ்வில் கிங் பைஸல் நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபகரும் நம்பிக்கையாளருமான இளவரசர் துர்கி பின் பைசல் அல் சௌத் சிறப்புரை நிகழ்த்தினார்.

SFD நிறுவனம் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, சவூதி அரேபியாவின் முக்கிய சர்வதேச மேம்பாட்டுக்கான பிரிவாகும். மேலும் இந்த ஆண்டு "ஐந்து தசாப்த கால பூகோள மாற்றத்தின் வெற்றிப்பாதை" எனும் கருப்பொருளின் கீழ் அதன் ஐந்து தசாப்த கால நிலையான சர்வதேச அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தை கொண்டாடுகிறது. பின்தங்கிய சமூகங்கள் மற்றும் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், வளர்ந்து வரும் நாடுகளில் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் நோக்கில் SFD கடன்கள் மற்றும் மானியங்களை வழங்குகிறது.

அபிவிருத்திக்கான சவூதி நிதியம் பல தசாப்தங்களாக அபிவிருத்தி உதவியாக இலங்கைக்கு 1.5 பில்லியன் சவூதி ரியால் ($ 438 மில்லியன் அமெரிக்க டொலர்) பெறுமதியான சலுகைக் கடன் உதவிகளை வழங்கியுள்ளது. கொழும்பு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்த் திட்டம் (1981), கிண்ணியா பாலம் (இலங்கையின் மிக நீளமான பாலம்), கொழும்பு தேசிய வைத்தியசாலையில் Neuro Trauma பிரிவு (Nero Trauma unit), களுகங்கை அபிவிருத்தித் திட்டம், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கான மருத்துவ பீடம், வயம்ப பல்கலைக்கழக டவுன்ஷிப், பேராதனை – பதுளை – செங்கலடி வீதிகள் நிர்மாணம் உள்ளிட்ட பதினைந்துக்கு மேற்பட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு SFD உலகளாவிய அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் நிதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

SFD இன் இந்த வரலாற்று நிகழ்வில் பங்கேற்ற தூதுவர் அமீர் அஜ்வத், இரு புனித ஸ்தலங்களின் பாதுகாவலர் மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் அவரது முடிக்குரிய இளவரசரும் சவூதி அரேபியாவின் பிரதமருமான மொஹமட் பின் ஸல்மான் ஆகியோருக்கு, இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கிவரும் உதவிகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் நன்றியைத் தெரிவித்தார்.

SFD இன் தலைவர் மற்றும் சவூதி அரேபியாவின் சுற்றுலா அமைச்சர் அஹ்மத் அகீல் அல்கதீப், SFD இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அப்துல் ரஹ்மான் அல்மர்ஷாத் மற்றும் SFD இன் முன்னாள் துணைத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான பொறியாளர் யூசுப் பின் இப்ராஹிம் அல்பஸ்ஸாம் ஆகியோர் கடந்த காலங்களில் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கிய உதவிகளுக்காகவும் தூதுவர் அமீர் அஜ்வத் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் இலங்கை அரசாங்கத்திற்கும் SFD நிறுவனத்துக்கும் இடையிலான இணைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான பங்களிப்பை நல்குவதாக தூதுவர் உறுதியளித்தார்.

மாபெரும் Gala Dinner உடன் கூடிய 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு SFD நிறுவனம் ஒழுங்கு செய்த இந்நிகழ்வில் அமைச்சர்கள், பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள், தூதர்கள், ஐக்கிய நாடுகள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து சிறப்பித்தனர்.



இலங்கை தூதரகம்
ரியாத் ...

# Senthooram
# செந்தூரம்

2024 செப்டெம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை




பாரிஸில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட இலங்கை அணிக்கு ஆடை அனுசரணை வழங்கிய MAS

# சாயும் பீசா கோபுரம்

இத்தாலியின் பீசா நகரில் இருக்கும் சாய்ந்த கோபும் உலகப் பிரபலம் பெற்றது, அது ஓர் அபாரமான கட்டடம் என்பதால் அல்ல. கட்டத் தெரியாமல் கட்டி இன்னும் விழாமல் சாய்ந்து கொண்டிருப்பதால் தான். ஆனால் அது விழாமல் இருப்பது சும்மாவல்ல. அதற்கான முயற்சி பல நூற்றாண்டு காலம் நீண்டது.



முதலில் பீசா கோபுரம் கட்டப்பட்டதே உறுதியான மண் இல்லாத தவறான இடத்தில். 850 ஆண்டுகளுக்கு முன்னர் 1173 ஆம் ஆண்டு பீசாவில் உள்ள பேராலய வளாகத்திற்காகவே வெள்ளைப் பளிங்கு மணி கோபுரம் ஒன்றை கட்டும் திட்டத்துடன் பீசா கோபுரம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் மூன்று மாடிகள் தான் உயர்த்தப்பட்டிருக்கும் அதற்குள் அண்டை நாட்டுடன் போர் வெடிக்க அது ஒரு நூற்றாண்டு வரை நீடித்தது. போர் ஆரம்பித்ததோடு கோபுரமும் சரிய ஆரம்பித்துவிட்டது. சரியாக 99 ஆண்டுகளின் பின்னர் 1272 ஆம் ஆண்டு கோபுரத்தை கட்டும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் கட்டுமானப் பணியாளர்களின் சோம்பலுக்கு அளவே இல்லை. முதலில் கோபுரத்தில் சாய்வை சரி செய்து நேராக நிமிர்த்தியே அதனை தொடர்ந்து கட்டி இருக்க வேண்டும். ஆனால் சாய்வுக்கு மேலால் கோபுரம் எழுப்பப்பட்டது.

கிட்டத்தட்ட 1278 ஆம் ஆண்டாகும்போது கோபுரம் ஏழாவது மாடி வரை உயர்த்தப்பட்டது. மீண்டும் போர் வெடிக்க மீண்டும் ஒரு நூற்றாண்டு கட்டுமான பணிகளில் தாமதம் ஏற்பட்டது. கோபுரத்தை கட்டுவதற்கு ஆரம்பித்து சுமார் 200 ஆண்டுகளின் பின் 1372 ஆம் ஆண்டு கடைசியான பீசா சாய்ந்த கோபுரம் முழுயாக கட்டி முடிக்கப்பட்டது.

ஏற்கனவே சாய்ந்திருந்த கோபுரத்தின் சாய்வை சரிக்கட்டும் வகையில் மணி கோபுரத்தின் தெற்குப் பக்கமான ஆறு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டதோடு அதன் வடக்குப் பக்கத்தில் நான்கு படிக்கட்டுகளே கட்டப்பட்டது.

கோபுரம் சாய்ந்திருந்ததற்கு என்ன, பல ஆண்டுகளாக அது பற்றி யாரும் கவலைப்படவில்லை. 1817இல் சாய்ந்த கோபுரத்தின் சாய்வு முதல் முறை அளக்கப்பட்டது. அது திகைக்க வைக்கும் அளவு 4.9 பாகை சாய்ந்து காணப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து சாய்ந்து கொண்டே வந்தது.

இத்தாலி சர்வாதிகாரி பெனிடோ முசோலினி சரிந்துகொண்டே போகும் கோபுரத்தை நேராக நிமிர்த்த முயற்சித்தார். 1934 ஆம் ஆண்டு அந்த முயற்சி தோல்வி அடைய கோபுரம் இன்னும் வேகமாக சரிய ஆரம்பித்தது.

1990இல் நிலைமை படுமோசமானது. கோபுரம் விழும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதாவது கோபுரம் 5 பாகைக்கு மேல் சாய்ந்து இருந்ததோடு உடன் அதனை சரிக்கட்ட வேண்டி ஏற்பட்டது. 1989 ஆம் ஆண்டு இத்தாலியின் மற்றொரு கோபுரம் இடிந்து விழுந்ததைப் பார்த்த அதிகாரிகள் கோபுரம் பொது மக்களுக்கு மூடப்பட்டு அதனை நிமிர்த்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு தசாப்த முயற்சிக்குப் பின்னர் கோபுரத்தின் சாய்வு 40 செ.மீற்றரினால் குறைக்கப்பட்டது. 30 மில்லியன் டொலர் செலவில் மேற்கொண்ட பணிகள் வெற்றி தந்தது. 200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த அளவுக்கு கோபுரத்தின் சாய்வை குறைக்க முடிந்தது. அபாய நிலையை தாண்டி கோபுரம் மீண்டும் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டது.



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# கறுப்புப் போர்

அவுஸ்திரேலியாவின் டெஸ்மேனியா மாநிலத்தில் 1820கள் மற்றும் 1832 இற்கு இடையே பிரிட்டிஷ் குடியேறிகள் மற்றும் பழங்குடி மக்களுக்கு இடையிலான மோதலை கறுப்புப் போர் என்று அழைப்பார்கள். அப்போது பிடிக்கப்படும் ஒவ்வொரு பழங்குடியினரதும் தலைக்கு 5 பௌண்ட் சன்மானம் வழங்கப்பட்டது. அதுவே சிறுவராக இருந்தால் 2 பௌண்ட்கள் வழங்கப்படும். ஆடு மாடு போன்று அவர்கள் வேட்டையாடப்பட்டார்கள். கடைசியில் டெஸ்மேனிய தீவில் இருந்து அபோரிஜினல் பழங்குடி மக்கள் முற்றாக அழிந்த பின்னரே இந்தப் போர் முடிவுக்கு வந்தது.



# கடிதங்களை கொடுக்காத தபால்காரருக்கு இத்தனை தண்டனையா?

உலகில் அதிகபட்சமாக 384,912 ஆண்டுகள் சிறைத் தண்டனை கோரப்பட்டவர் என்று உலக சாதனைக்கு சொந்தம் கொண்டாடுபவர் ஸ்பெயினின் கப்ரியேல் மார்ச் கிரனடோஸ் என்பவர். தபால்காரரான அவர் இத்தனைக்கும் செய்த தப்பு தபால்களை உரியவருக்கு கொடுக்கத் தவறியது தான். ஆனால் அந்தத் தப்பை அவர் பெரிதாகவே செய்துவிட்டார்.




1968 இல் தனது 18 வயதில் தபால்காரராக வேலைக்குச் சேர்ந்த கப்ரியேல் சாதாரணமாகத் தான் வேலை பார்த்து வந்தார். ஆனால் அங்கிருக்கும் மக்கள் தமக்கு கடிதங்கள் கிடைப்பதில்லையே என்று முறையிட ஆரம்பித்தார்கள். அந்தக் கடிதங்களை விநியோகிப்பவராக கப்ரியேல் இருந்தார். நிர்வாகத்திற்கு சந்தேகம் வர விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அப்போதே எல்லாம் வெளிச்சத்திற்கு வந்தது.

பல்மா டி மல்லோர்கா மாகாண நீதிமன்றத்தில் 1972 மார்ச்சில் கப்ரியேல் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. அதாவது கப்ரியேல் உரியவர்களுக்கு கடிதத்தை கொடுக்காமல் இருந்த கடிதங்களின் எண்ணிக்கை 42,768. அதில் 35,718 கடிதங்களை பிரித்து உள்ளே இருந்த பொருட்களைத் திருடி இருக்கிறார். அதன் பெறுமதி கிட்டத்தட்ட 50,000 யூரோ அளவு.

இதனால் அவருக்கு ஆயிரக்கணக்கான மோசடி, ஆவணங்களை தவறாகக் கையாண்டது மற்றும் திருடியது தொடர்பில் குற்றச்சாட்டு பதிவு செய்த வழக்குத்தொடுநர் 384,912 ஆண்டுகள் சிறைத் தண்டனை கோரினார். எனினும் அவருக்கு 14 ஆண்டுகள் மற்றும் 2 மாத சிறைத் தண்டனையே வழங்கப்பட்டது.

**மாமியார் : நான் இப்பவும் நல்லா இருக்கேன்னு என் ஃபிரண்ட் சொல்றா. ஆனா அகோரமா இருக் கேன்னு உன் மாமனார் சொல்றாரு...**
**மருமகள் : 2 பேர் சொன்னதும் சரிதானே அத்தை...**
**மாமியார் : எப்படி?**
**மருமகள் : நல்லா அகோரமாதான் இருக்கீங்க!**





**பக்கத்து வீட்டுகாரன் :** தம்பி அயர்ன் பாக்ஸ் இருக்கா?
அடுத்த வீட்டுகாரன் ; இருக்கு அண்ணா... ஆனா, இங்கேயே வைத்து அயர்ன் பண்ணிட்டு போங்க..
**பக்கத்துவீட்டுகாரன் ;** அடுத்த வீட்டுகாரனிடம் போய்.. அண்ணா வீடு கூட்டுறதுக்கு துடைப்பம் இருக்கா..?
அடுத்த வீட்டுகாரன்.. இருக்கு தம்பி ஆனா.. இங்கேயே கூட்டிட்டு போயிடு..



**டீச்சர்:** அந்த பொண்ணு 98 மார்க் எடுத்துட்டு 2 மார்க் எப்படி போச்சுன்னு அழுதுகிட்டு இருக்கு.. நீ 12 மார்க் எடுத்துட்டு எப்படி டா சிரிச்சுகிட்டு இருக்க?
**மாணவன்:** எப்படி அந்த 12 மார்க் வந்ததுன்னு பார்த்து கிட்டு இருக்கேன் மிஸ்...

**தோழி 1:** என் கணவர் எங்கிட்ட சண்டை போட்டா அன்னைக்கு கோவிச்சிக்கிட்டு நா சமைக்க மாட்டேன்...!
**தோழி 2:** அதனாலதான் உன் கணவர் உன்னோட அடிக்கடி சண்டை போடுறாரா?



**மனைவி :** ஏங்க! நீங்களாவது உங்க ப்ரண்ட் கிட்ட சொல்லக் கூடாதா? அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்லங்க!
**கணவன் :** நா ஏன் சொல்லணும்! படுபாவி எனக்கு அவன் சொன்னானா?





**மாமியார்:** நேத்து நான் போன சினி மாவைப் பாத்து, சிரிச்சு, சிரிச்சு பாதி உசுரே போயிடுச்சு!
**மருமகள்:** அப்படியா அத்த... அப்போ அந்த படத்தை இன்னைக் குப் போய் ஒரு தடவை பாத்துட்டு வாங்க!

**மனைவி :** மாறுவேஷ போட்டியில் கலந்து கொண்டு மேக்கப் போட்டதெல்லாம் வீணா போச்சு...பரிசு கிடைக்கல...
**கணவன் :** ஏன் என்ன ஆச்சு? என்ன வேஷம் போட்ட?
**மனைவி :** பத்ரகாளி வேஷம்...
**கணவன் :** மேக்கப் போடாம போயிருந்தா நிச்சயம் பரிசு கிடைத்திருக்கும்...



**பையன் : அம்மா! எதிர் வீட்டு ஆன்டி பேர் என்னம்மா?**
**அம்மா : விமலா டா...**
**பையன் : அப்பாவுக்கு இது கூட தெரிய மாட் டேன்குதும்மா. அந்த ஆன்டிய "டார்லிங்"னு கூப்புடுறார்....**



**காதலி :** டேய்.. நெஞ்சை தொடுற மாதிரி ஒரு வார்த்தை சொல்லுடா..!
**காதலன் :** ம்... பனியன்!





**மனைவி : என்னங்க செத்துட்டா சொர்க்கத்துல கணவன் மனைவி தனியாத்தான் இருக்கணுமா?**
**கணவன் : அதனால தாண்டி அது பேரு சொர்க்கம்..!**
**மனைவி :. . . . ????**

**டாக்டர்: எப்படி புட்பாய்சன் ஆச்சு?**
**நோயாளி: நானும் நண்பனும் சாப்பிட போனோம், நாங்க கேட்டதை சர்வர் தப்பா புரிஞ்சுட்டான்!**
**டாக்டர்: அப்படி என்ன கேட்டீங்க?**
**நோயாளி: நாலுநாலு இட்லி வைங்கனு சொன்னோம், நான்கு நாளுக்கு முன்னாடி இட்லியை வெச்சிட்டான்.**



# இர. சிவலிங்கத்தின் நினைவுப் பேருரையும் பாராட்டும்
















அமரர் இர. சிவலிங்கத்தின் இருபத்தைந்தாவது ஞாபகார்த்த நினைவுப் பேருரையும் சாதனையாளர் பாராட்டு நிகழ்வும் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. அதன் நிழற்பதிவுகள் சில..

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல்







கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. ஆய்வாளர் கலாநிதி என். கே.எஸ் . திருச்செல்வம் இங்கு சிறப்புரையாற்றினார்.



Baby : Raavan Jonas
Father : Athistan Devaraja
Mother : Jonita Fernando



பொன்மனச் செம்மல்
தாஜமஹான்

# முன்னா பியூட்டி அகடமியின் பட்டமளிப்பு விழாவும் கண்காட்சியும்

















முன்னா பியூட்டி அகடமியின் பட்டமளிப்பு விழாவும் கண்காட்சியும் முன்னா பியூட்டி அகடமியின் பட்டமளிப்பு விழாவும் கண்காட்சியும் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (09.09.2024) விமரிசையாக நடைபெற்றது.

முன்னா பியூட்டி அகடமியின் நிறுவனத்தின் தலைவி முனாபிரா றிஸ்வான் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், 150 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

மேலும், 10 ஆசிரியர்கள் அவர்கள் ஆற்றிய சாதனைகளுக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். 30 பேர் 'பேஸ்ட் பர்ஃபோர்மர்' (Best Performer) விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கையின் தேசிய பத்திரிகையான தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரியும் சிரேஷ்ட எழுத்தாளருமான கலா பூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் கௌரவ அதிதியாகவும் ஸ்கை தமிழ் ஊடகம், துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜே எம் பாஸித் ,

துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளருமான ஷிஹானா நௌஃபர் , துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் ஷாமேன் நிசாம்தீன், விஸ்டம் பெரடைஸ் முகாமையாளரும் பணிப்பாளருமான சாரா சிராஜ், யுனிக் பியூட்டி சலூன் பணிப்பாளர் சித்தி மர்மர்ஷூகா, மோட்டிவேஷனல் ஸ்பீக்கர் voice of raaz, அருந்ததி பணிப்பாளர் மாற்று மோதிரம், திருமதி மேகலா, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு முகமையாளர் திருமதி ரிப்கா, N. R bridal பணிப்பாளர் ரிஸ்மினா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

இலங்கையில் உள்ள முக்கியஸ்தர்கள், அழகுசாதனத் துறையின் முன்னணி நிபுணர்கள், ஊடகவியலாளர்கள், மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பல்வேறு துறைசார் சிறந்தவர்கள் இதில் கலந்து சிறப்பித்தனர்.

# இலக்கிய உலகில் ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம் என உலா வரும் தலைசிறந்த கல்விமான்

நான் திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று எனும் அழகிய கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன்.

அதனால் ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம் என்றே இலக்கிய உலகில் அறியப்பட்டவன். நான் உயர்தரம் கற்கும் காலத்தில் 1983 தொடக்கம் சிறிது சிறிதாக எழுதத்தொடங்கினேன், குறிப்பாக இலங்கை வானொலி, சிந்தாமணிப் பத்திரிகை போன்றவற்றைக் களமாகப் பயன்படுத்தினேன்.




1988 ஆம் ஆண்டில் ஆசிரியராக நியமனம் பெற்று ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி தற்பொழுது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதால் எழுதுவதிலும், வாசிப்பதிலும் எனது நேரத்தைப் பயன்படுத்தி வருகின்றேன். சமூக நோக்கம் கருதியே எனது படைப்புகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தற்பொழுதும்

வானொலி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வருவதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

நான் 1988 ஆம் ஆண்டில் ஆசிரியராக நியமனம் பெற்று எனது சொந்த ஊரில்தான் பணிபுரிந்தேன்.

பின்பு அதிபராகவும், கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் 35 வருடங்கள் சேவையாற்றி தற்பொழுது ஓய்வு

பெற்றுள்ளேன். எனக்கு கிடைத்த ஆசிரியத் தொழிலின் ஊடாக எனது சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் இன்று பெரும் பதவி நிலைகளில் இருப்பதைக்

காணும் போதினில் பெருமகிழ்வடைகின்றேன்.

நான் எந்தவிதமான அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி எனது நியமனத்தைப் பெறவில்லை மாறாக 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டிப் பரீட்சை ஊடாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்று இந்த நியமனத்தைப் பெற்றுக் கொண்டேன். எனது பெற்றோரும் இத்தொழிலை விரும்பியதால் இன்னும் இது சிறப்பைத் தந்தது.

நான் பல நிலைகளில் நின்று இப்பதவியை வகித்தவன் என்பதால் இதனூடாகக் கற்றுக் கொண்டவை ஏராளம்.



நான் ஆசானாக இருந்தேன் என்பதை விட சமூகமும். மாணவர்களுமே சிறந்த அனுபவத்தையும் ஆற்றலையும் எனக்கு வழங்கியமையால் நான் மனிதனாக வாழ்கின்றேன்.

எனது எழுத்துத் துறையில் நான் தடையின்றிப் பயணிப்பதற்கு எனது வாசிப்பும், சுய தேடலுமே உந்துதல் தந்தது எனலாம். அது மட்டுமல்லாது வானொலி நிகழ்ச்சிகளை (இலக்கிய நிகழ்ச்சிகள்) கேட்டு வந்ததாலும் என்னுள் கலையார்வமும், எழுத வேண்டுமென்ற உணர்வும் ஏற்பட்டது. குறிப்பாக வாலிப வட்டம், நாளைய சந்ததி, ஒலிமஞ்சரி, இசையும் கதையும், பாவளம், கிராமசஞ்சிகை இது போன்று இன்னும் பல நிகழ்சிசகளைக் குறிப்பிடலாம்.

இரசனை உணர்வு மிகுந்த வானொலி நிகழ்ச்சிகள் என்னை ஈர்ந்தமைதான் எனக்கு சிறந்த ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தது. அத்தோடு வாலிபவட்டம் நிகழ்ச்சியில்தான் எனது முதலாவது கவிதை ஒலிபரப்பானதையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

இதன் பின்பு தொடர்ந்து எழுதி எனக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டேன். அவ்வாறாக அன்று தொடங்கிய வானொலி எழுத்துப் பயணம் இன்றும் தொடர்வது மகிழ்வே. அத்தோடு இன்று முகநூல் வழியாகவும் எனது படைப்புகளைத் தினமும் அரங்கேற்றி வருகின்றேன் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

எனது முதல் வெளியீடாக 'வெருகலம்பதி வேலவன் கீதங்கள்' எனும் பக்திப் பாடல்கள் அடங்கிய இறுவட்டை வெளியீடு செய்திருந்தேன். அப்பாடல்கள் இன்று ஆலயங்களிலும் உலக வானொலிகளிலும்

ஒலித்துக் கொண்டிருப்பது அதன் வெற்றி எனலாம். அது மட்டுமல்லாது அண்மையில் 'எனக்கொரு வரம் வேண்டும்' என்ற கவிதை நூலையும் வெளியிட்டிருந்தேன்.



வருடந்தோறும் கவிதை நூல் மட்டுமல்லாமல் வேறு விடயங்கள் தொடர்பான நூல்களையும் வெளியிடுவதற்கான முயற்சிகளில் நகர்ந்து கொண்டிருக்கின்றேன்.

தங்களின் ஈழத்துப் பாடல்கள் பற்றி இலங்கை வானொலி தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் ஈழத்துப் பாடல்கள் அல்லது மெல்லிசைப் பாடல்கள் என்ற நிகழ்ச்சி அக்காலத்தில் மட்டுமல்லாது இன்றும் கேட்டு விருப்போடு மகிழும்நிகழ்ச்சியாகும். இப் பாடல்களை நான் சிறு பராயம் முதல் கேட்டு வந்ததால் இதற்கான பாடல்களை நானும் எழுதினால் என்ன? என்ற வினா என்னுள் எழுந்ததனால் நானும் பாடலுக்கான பிரதிகளை எழுதிய போது அவை

**இலங்கை வானொலி தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில், ஈழத்துப் பாடல்கள் அல்லது மெல்லிசைப் பாடல்கள் என்ற நிகழ்ச்சி அக்காலத்தில் மட்டுமல்லாது இன்றும் விருப்பத்தோடு கேட்டு மகிழும் நிகழ்ச்சியாகும்.**

ஒலிப்பதிவுக்குத் தேர்வு செய்யப்பட்டு பாடலாக்கி ஒலிபரப்பினார்கள். இது எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியை தந்தது. 1990 முதல் 2002 ஆம் ஆண்டுவரை அதிகமான பாடல்களை எழுதினேன். அவற்றில் தரமான பாடல்கள் பல நம்மவர் இசையில் நம்மவர் குரலில் பாடலாக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றது.

குறிப்பாக சந்தன மேடை நிகழ்ச்சியூடாக பல பாடல்கள் அறிமுகம் செய்யப்பட்டது.

அவ்வகையான என்னால் எழுதப்பட்ட பல பாடல்கள் இன்றும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வருவதைக் கேட்கும் போது உள்ளம் பூரிப்பில் மூழ்கிவிடுகின்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி அனுப்பியிருந்தாலும் ஏறத்தாழ 25 பாடல்கள் வரையில் வானலைகளில் தவழ்கின்றன. பல பாடல்கள் அறிமுக ஒலிபரப்போடு அமிழ்ந்தும் போயுள்ளன. கணணி மயப்படுத்தப்பட்ட பாடல்கள் மட்டுமே இன்று ஒலிபரப்பாகி வருவது குறிப்பிடத்தக்கதாகும். துறை சார்ந்த அறிவும் மெல்லிசைப் பாடல்களைத் தொடர்ந்து கேட்டு வருவதாலும் புதிய தூண்டலைத் தந்தது.

நான் கேட்டு இரசிக்கின்ற வானொலிகளில் இலங்கை வானொலி தேசிய சேவையும் ஒன்றாகும். இதில் இரவு 07.30 மணிக்கு தினமும் மெல்லிசைப் பாடல்கள் ஒலிபரப்பாகும், இந்நேரம் மட்டுமல்லாது வேறு இடைவெளிகளிலும் பாடல்களை ஒலிபரப்பி வருகின்றார்கள்.

**13 ஆம் பக்கம் பார்க்க...**


கவிஞர் திருமதி வாசுகி பி வாசு

# கொழும்பில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வு








கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்ற மாபெரும் விருது வழங்கும் நிகழ்வில் இந்திய முன்னணி நடிகை மீனா சாஹர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் இலங்கை கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஒப்பனை கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் என சுமார் 200 பேர் கௌரவிக்கப்பட்டனர்.






# நான்கு பெண்கள் Deabodyயுடன் படாதபாடுபடும் பிரபுதேவா



பிரபுதேவாவின் நடனம் என்பதை தாண்டி அவருடைய நடிப்புக்கு என்று தனியாக ரசிகர் பட்டாளமே இருக்கிறது. அவர்களுக்கு தீனி போடும் அளவுக்கு ரிலீஸ் ஆக இருக்கும் படம் தான் ஜாலியோ ஜிம்கானா.

மகளிர் மட்டும் என்னும் படத்தில் நடிகர் நாகேஷ் ஒரு சீனுக்கு மட்டும் செத்த பிணமாக நடித்திருப்பார்.

பிணத்தை வைத்துக்கொண்டு ரேவதி, ஊர்வசி, ரோகினி செய்யும் அலப்பறை வயிறு குலுங்க சிரிக்க வைத்திருக்கும். அதே கான்செப்டை ஒரு முழு படமாக பார்த்தால் எப்படி இருக்கும். அதைத்தான் ஜாலியோ ஜிம் கானா நம் கண் முன் காட்ட இருக்கிறது.

இதில் பிணமாக நடித்திருப்பவர் நடிகர் பிரபுதேவா. வில்லாக வளைந்து ஆடக்கூடிய ஆட்டக்காரர் ஒரு படம் முழுக்க எப்படி பிணமாக வருவார் என்பதே பெரிய எதிர்பார்ப்பாக இருக்கிறது.என்னம்மா கண்ணு', 'சார்லி சாப்ளின்', 'காதல் கிறுக்கன்', 'இங்கிலீஷ்காரன்', 'கோவை பிரதர்ஸ்', 'வியாபாரி' போன்ற படங்களை இயக்கிய சக்தி சிதம்பரம் தான் இந்த படத்தையும் இயக்கி இருக்கிறார்.ஒரு பாடி, 4 லேடி, படம் முழுக்க பிணமாய் பிரபு தேவா..இந்தப் படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி இருக்கிறது. ட்ரெய்லரின் ஆரம்பத்திலேயே யோகி பாபு சர்ச் ஃபாதர் கெட்டப்பில் வந்து, என்னது கொலையா என ஆரம்பிக்கிறார்.

ஒரு டெட் பாடி நம்ம கூட இருக்கிறது நம்ம பாடில எந்த விதத்திலும் வெளியே தெரியக்கூடாது என வில்லத்தனமான வசனம் பேசி இருக்கிறார் நடிகை அபிராமி.

பிரபுதேவாவை கொலை செய்து விட்டதாக பயந்து நான்கு பெண்கள் டெட் பாடியை தங்களுடனே வைத்துக் கொண்டு கொலையை மறைக்க படாத பாடு படுகிறார்கள் பிரபுதேவா இறந்துவிட்டது தெரியாமல் அவரை கொலை செய்ய ஒரு கூட்டம் என இந்த ட்ரெய்லர் இருக்கிறது.

பின்னணியில் ஒரு பாடி 4 லேடி பாடல் அசத்தலாக இருக்கிறது. ட்ரெய்லரில் ஒரு சீனில் பிரபுதேவா அதிரடியாக சண்டை போடுவது போல் காட்டப்பட்டு இருக்கிறது.

ஒரு வேளை இறந்து விட்டது போல் இந்த பெண்களை பிரபுதேவா ஏமாற்றுவது தான் இந்த படத்தின் கதையாக கூட இருக்கலாம். ஜாலியோ ஜிம்கானா படத்தில்மடோனா, அபிராமி, யோகிபாபு, எம்எஸ் பாஸ்கர் ஆகியோர் முக்கியமான கேரக்டரில் நடித்திருக்கிறார்கள்.

# ரஜினியின் பொண்டாட்டி, பொண்ணுங்க கிட்ட கேளுங்க

**விசித்ரா**



நடிகை விசித்ரா சமீபத்தில் கொடுத்திருக்கும் பேட்டி சினிமா வட்டாரத்தில் பரபரப்பை கிளப்பி இருக்கிறது. 90களில் காலகட்டத்தில் கிளாமர் டான்ஸ் மற்றும் கவுண்டமணி செந்தில் காமெடிகளின் மூலம் மக்களுக்கு பரிச்சயமானவர் விசித்ரா.

திருமணத்திற்கு பிறகு சினிமாவை விட்டு ஒதுங்கி இருந்த இவர் பிக் பாஸ் சீசன் 7 நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பிக் பாஸ் வரலாற்றிலேயே அதிக வயதுடையவர் சீசன் முடியும் வரை இருந்தார் என்றால் அது விசித்ரா மட்டும் தான்.

விசித்ராவின் நடவடிக்கைகள், தைரியமான பேச்சு போன்றவற்றிற்காக அவருக்கு ஏகப்பட்ட ரசிகர்கள் குவிந்தனர். பிக் பாஸ் டாஸ்க் ஒன்றின் போது போட்டியாளர்கள் தங்கள் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்களை பற்றி பேசி இருந்தார்கள். ரஜினி பொண்டாட்டி, பொண்ணுங்க கிட்ட போய் இத பத்தி கேளுங்க.. கொந்தளித்த நடிகை விசித்ரா .



அப்போது விசித்ரா தான் நடித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் நடிகர் ஒருவர் தன்னிடம் அத்து மீறியதை பற்றி ரொம்ப தைரியமாக பேசியிருந்தார். இதனாலேயே அவருடைய தைரியம் பெரிய அளவில் பாராட்டப்பட்டது.

சமீபத்தில் மலையாள சினிமா உலகை ஹேமா கமிட்டி அறிக்கை புரட்டி போட்டு இருக்கிறது. அதை பற்றி விசித்ராவிடம் சமீபத்திய பேட்டி ஒன்றில் கேட்டிருந்தார்கள். அந்தப் பேட்டியில் ஹேமா கமிட்டி அறிக்கை பற்றி ரஜினியிடம் கேட்டபோது தனக்கு அதை பற்றி தெரியாது என்று சொன்னாரே, அதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என கேட்டிருந்தார்கள்.

இதற்கு பதில் அளித்த விசித்ரா இதை ஏன் நீங்க ரஜினி கிட்ட போய் கேக்குறீங்க, அவருடைய பொண்டாட்டி மற்றும் பொண்ணுங்க கிட்ட கேளுங்க. அவங்களுக்கு தான் இந்த விஷயத்தை பற்றி தெரியும் என பளிச்சென்று பதில் சொல்லி இருக்கிறார்.

அது மட்டும் இல்லாமல் பாதிக்கப்படும் போதே இந்த நடிகைகள் புகார் கொடுத்திருக்க வேண்டும். இவ்வளவு நாள் என்ன செய்தார்கள் என்று கேட்கிறார்கள். எனக்கு எதிராக ஒரு பெரிய ஹீரோ இப்படி செய்யும் பொழுது நான் நடிகர் சங்கத்திடமும், காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன். ஆனால் அந்த நடிகர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஆதங்கத்துடன் பேசி இருக்கிறார் விசித்ரா.

# ஜெயம் ரவி விவாகரத்து



சினிமாவில் மிகவும் பிரபல நடிகராக வளம் வருபவர் நாயகன் ஜெயம் ரவி. தமிழ் பிரபல தயாரிப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், எடிட்டர் மோகனின் மகனான நிதின் ஜெயம் ரவி, அவரது அண்ணன் மோகன் ராஜா இயக்கிய 'ஜெயம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவின் நாயகனாக அறிமுகமானார். தொடர்ந்து தாஸ், எம்.குமரன், தீபாவளி, சம்திங் சம்திங், சந்தோஷ் சுப்பிரமணியம், பேராண்மை, போகன், கோமாளி, பொன்னியின் செல்வன் ஹிட் படங்களில் நடித்துள்ளார். இவரது நடிப்பில் அடுத்து பிரதர் திரைப்படம் வெளியீட்டிற்காக காத்திருக்கிறது.

இந்த நிலையில், நடிகர் ஜெயம் ரவி தனது மனைவி ஆர்த்தியை பிரிவதாக தனது சமூக வலைதள பக்கங்களில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உறுதி செய்துள்ளார். ஆர்த்தி, ஜெயம்ரவி இருவரும் 2009 ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது. சில மாதங்களுக்கு முன்பு ஜெயம் ரவி மனைவி தனது இன்ஸ்டாகிராம் கணவர் ஜெயம்ரவியுடன் புகைப்படங்களும் டெலீட் செய்தது சர்ச்சையை கிளப்பியது. மேலும், ஜெயம் ரவி, ஆர்த்தி இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்வதாகவும் விவாகரத்து செய்யப்போவதாகவும் செய்திகள் வெளியாகி வைரலானது.

ஆனால் ஜெயம் ரவி மற்றும் அவரது மனைவி ஆர்த்தி தரப்பில் இருந்து எந்த விதமான அதிகாரபூர்வ தகவல் வெளியாகாததால் அந்த செய்திகள் வதந்திதான் என்று கூறப்பட்டு வந்தது. இந்த நிலையில் ஜெயம் ரவி இன்று தந்து விவாகரத்து செய்தியை உறுதி செய்தது ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இது தொடர்பாக ஜெயம் ரவி வெளியிட்டுள்ள அறிக்கையில், ''வாழ்க்கை என்பது பல்வேறு அத்தியாயங்களைக் கொண்ட ஒரு பயணம், ஒவ்வொன்றும் அதன் சொந்த சவால்கள் மற்றும் வாய்ப்புகளுடன் வருகிறது. என்னுடைய பயணத்தை திரைப்படங்கள் வாயிலாகவும், திரையல்லாத இடங்களிலும் தொடர்ந்து பார்த்து வருபவர்களுக்கும், திரை துறை நண்பர்கள், பத்திரிக்கை, ஊடக துறை மற்றும் சமூக ஊடக நண்பர்கள், என் ரசிகர்கள் என அனைவரிடமும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்க முயற்சி செய்து வருகிறேன். எனவே மிகவும் நெஞ்சம் கசந்த ஒரு தனிப்பட்ட செய்தியை உங்களுடன் பகிர வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன்.

# விஜயின் குத்து பாடலுக்கு திரிஷா வாங்கிய சம்பளம்?



விஜயின் குத்து பாடலுக்கு திரிஷா வாங்கிய சம்பளம்.? மற்றும் திரிஷாவின் கெமிஸ்ட்ரியை பற்றி சொல்லவா வேண்டும். பல சூப்பர் ஹிட் படங்களை கொடுத்த இந்த ஜோடி கடைசியாக லியோ படத்தில் இணைந்து நடித்திருந்தனர். திரிஷாவுக்கு நடுவில் தமிழ் சினிமாவில் மார்க்கெட் குறைந்தது.

ஆனாலும் பொன்னியின் செல்வன் மூலம் கம்பேக் கொடுத்து டாப் ஹீரோக்களுடன் ஜோடி போட்டு நடித்து வருகிறார். அந்த வகையில் அஜித்தின் விடாமுயற்சி படத்தில் நடிக்கிறார். அடுத்ததாக குட் பேட் அக்லி படத்திலும் திரிஷா தான் கதாநாயகி என்ற பேச்சுவார்த்தை போய்க்கொண்டிருக்கிறது.



இப்படி இருக்கும் சூழலில் பொதுவாக படங்களில் கேமியா தோற்றத்தில் நடிக்க கதாநாயகிகள் தயங்குவார்கள். அதுவும் ஒரு பாடலுக்கு நடனம் என்றால் கண்டிப்பாக சம்மதிப்பது கடினம். ஆனால் சமந்தா புஷ்பா படத்தில் ஓ சொல்றியா மாமா பாடலுக்கு ஆடி ட்ரெண்டானார்.கோட் படத்தில் திரிஷா வாங்கிய சம்பளம்

அதேபோல் தான் ரஜினியின் ஜெயிலர் படத்தில் தமன்னா ஆடிய காவலா பாடல் பட்டி தொட்டி எங்கும் பட்டையை கிளப்பியது. இப்போது கோட் படத்தில் விஜய்யுடன் இணைந்து திரிஷா மட்ட பாடலில் நடனமாடி இருக்கிறார். இப்போது எங்கு பார்த்தாலும் இந்த பாடல் தான் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அதோடு இந்த பாடலில் மஞ்சள் நிற உடையில் வந்திருந்த த்ரிஷா சிகப்பு நிற கர்சிப்பையும் அணிந்திருந்தார். இது விஜய்யின் கட்சிக்கொடியின் நிறம் என்றும் சர்ச்சையாகி இருக்கிறது. இந்நிலையில் இந்த பாடலுக்கு த்ரிஷா வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகி இருக்கிறது.

அதாவது சமந்தா ஓ சொல்றியா பாடலுக்கு 3 கோடி சம்பளம் வாங்கி இருந்தார். அந்தப் பாடல் முழுக்க சமந்தா ஆடி இருந்தார். ஆனால் மட்ட பாடலில் சில நிமிடங்கள் மட்டுமே நடனம் ஆடின த்ரிஷாவுக்கு 80 லட்சத்திலிருந்து ஒரு கோடி வரை சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# இயக்குனராக விஜய்யின் மகனான ஜேசன் சஞ்சய்

விஜய்யின் மகனான ஜேசன் சஞ்சய் இயக்குனராக களமிறங்க இருக்கின்றார். அவரின் முதல் திரைப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இதனை தொடர்ந்து அவர் இயக்கப்போகும் முதல் படத்தில் ஹீரோவாக சந்தீப் கிஷன் நடிக்க இருப்பதாக தகவல்கள் வருகின்றன.

தமிழ் சினிமாவில் தளபதியாக ரசிகர்கள் மனதில் நிலையான இடத்தை பிடித்துள்ளார் விஜய். கடந்த 30 ஆண்டுகளாக பல போராட்டங்களையும் அவமானங்களையும் சந்தித்து இன்று இந்திய திரையுலகிலேயே உச்ச பட்ச நடிகராக இருக்கின்றார். அவரது தந்தை எஸ்.ஏ சந்திரசேகர் மிகப்பெரிய இயக்குனர் என்பதால் விஜய்க்கும் சிறு வயது முதல் சினிமாவின் மீது ஆர்வம் வந்தது.



# கோட் படத்தில் குட்டி ஜீவனாக நடித்த சிறுவன் யார்?

AGS தயாரிப்பில் வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் செப்டம்பர் 5ஆம் திகதி வெளியான திரைப்படம் 'கோட்'. விஜயுடன் பிரசாந்த், பிரபுதேவா, அஜ்மல், மைக் மோகன், ஜெயராம், சினேகா, லைலா, வைபவ், பிரேம்ஜி என நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர். படம் வெளியாகி விஜய் ரசிகர்களின் மாபெரும் வரவேற்பை பெற்று வருகிறது. நடிகர் விஜய் விரைவில் சினிமாவை விட்டு விலகி முழு நேர மக்கள் பணியில் ஈடுபடுவுள்ள நிலையில், அவரின் கடைசிக்கு முந்தைய படமான 'கோட்' ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

DeAgeing, AI, பிரபல நட்சத்திரங்களின் கேமியோ என படத்தில் பல ஸ்பெஷல் எலிமென்ட்டுகளை வெங்கட் பிரபு சேர்ந்துள்ளது படத்திற்கு பிளஸ் பாயின்டாக அமைந்துள்ளது. யுவன் ஷங்கர் ராஜா இசையில் பாடல்களும் ரசிகர்களை ஆட வைத்து வருகிறது. படத்தில் பேசப்பட்ட முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்று குட்டி ஜீவன் (சிறுவயது விஜய்) கதாபாத்திரம். படத்தில் விஜய், சினேகாவின் குட்டி மகனாக கியூட் நடிப்பை வெளிப்படுத்தி ரசிகர்களின் கவனத்தை தன் வசம் ஈர்த்துள்ளார் அந்த சிறுவன் அகிலன். விஜயின் மகனாக 'கோட்' படத்தில் நடித்த அகிலன் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.யார் அந்த அகிலன் என்று ரசிகர்கள் பலரும் தேடிவரும் நிலையில், அவர் யார் என்ற விவரம் வெளியாகி தற்போது வைரலாகி வருகிறது. குட்டி ஜீவனாக நடித்த சிறுவன் அகிலன் வேறு யாரும் இல்லை, 'ரவுடி பேபி' என்ற யூடியூப் சேனல் மூலம் ட்ரெண்டில் இருக்கும் குழந்தை நட்சத்திரம் ஆலியாவுடைய தம்பிதான் அவர். ஆலியாவின் சேட்டை வீடியோக்களில் தம்பி அகிலனும் சேர்ந்து நடித்த வீடியோக்கள் பலரின் கவனத்தை பெற்ற நிலையில், அக்கா தம்பி இருவருக்கும் சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கும் வாய்ப்பு குவிந்து வருகிறது.அகிலன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 'கோட்' படத்திற்காக விஜய் அங்கிள் மற்றும் குழுவுடன் வெளிநாட்டிற்கு செல்வதாக தான் பேசிய வீடியோவை வெளியிட்டுள்ளார். மேலும், வெளிநாட்டில் நடிகை சினேகாவுடன் ஷாப்பிங் செய்த வீடியோவையும் வெளியிட்டுள்ளார் குட்டி ஜீவனாக நடித்த அகிலன். இந்த வீடியோக்கள் தற்போது விஜய் ரசிகர்களின் கவனத்தை பெற்று வைரலாகி வருகிறது. யோகி பாபு, வாணி போஜன் நடிப்பில் வெளியான 'சத்னி சாம்பார்' வெப் தொடரிலும் அகிலன் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# நெருங்கிய உறவுகளுக்குள் விரிசல் ஏனோ!

**கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும்.**
குறள் 525

**தாழ்வு மனப்பான்மை**

இந்த தாழ்வு மனப்பான்மையே பல பிரபல்யமானவர்களின் வாழ்வில் கூட விளையாடி உலகம் சிரிக்க வைத்துள்ளது. ஆம்! உதாரணமாக இலண்டன் மறைந்த இளவரசி டயானாவுக்கும் இளவரசர் சார்ல்ஸ் இருவருக்குமான வாழ்க்கையில் இளவரசரின் தாழ்வு மனப்பான்மையே பிரச்சினைக்கு புள்ளி வைத்ததை பத்திரிக்கைகளில் வரும் போது அதை வாசிக்கவே பெரும் கூட்டம் இருந்தன. அது போலவே நம் வாழ்விலும் குடும்பம் நபர்களுக்கிடையில் தாழ்வு மனப்பான்மை வந்து விட்டால் நம் குடும்பமும் உறவும் பேசும் பொருளாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.



இந்தக் குணம் எந்த நேரத்தில் மனிதனுக்குள் எட்டிப்பார்க்கும் என்பது தெரியாது. ஆனால் ஏதாவது ஒரு விடயத்தை செய்ய முடியாமல் போய், அதற்காக வீட்டில் உள்ளவர்கள் சாதாரணமாக கிண்டல் செய்தால் கூட, அது சிலருக்கு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிவிடும். அதுவே நாளடைவில் மனதிற்குள் குடைச்சலை ஏற்படுத்தி தாழ்வு மனப்பான்மை அதிகமாகிவிடும்.

தாழ்மை மனப்பான்மை ஏற்படும் நபர் தங்களுக்குள் ஒரு வட்டத்தைப் போட்டு இருக்கத்துடன் இருப்பார்கள். வெளிப்பார்வைக்கு தெரியாமலே அந்த வட்டம் விரிசலாக மாறி சமையல், படிப்பு என்று ஒப்பிட்டு பார்த்து பிரச்சினைகளை உருவாக்கும். இந்த தாழ்வு மனப்பான்மை எதற்காக வேண்டுமானாலும் வந்து பிரச்சினையை உருவாக்க காரணியாக அமையும். அதனால் தாழ்வு மனப்பான்மை விட்டு ஒழியுங்கள்.

**தவறான புரிதல் வேண்டாம்**

நாம் வாழும் வாழ்க்கையை அழகாக மாற்றும் தன்மை இந்த புரிதலுக்கேயுண்டு. அது கணவன் மனைவியாக இருந்தாலும் வேறு எந்த உறவாக இருந்தாலும் சரி புரிதல் என்பது மிகவும் அவசியம். புரிதல் மட்டும் இருந்தால் வாழ்க்கை அந்த வாழ்க்கை சொர்க்கமே. புரிதல் மட்டும் இல்லாமல் போய்விட்டால், தொட்டதற்கெல்லாம் பிரச்சினை எழ ஆரம்பித்துவிடும்.

'நான் சொல்வதை யாரும் கேட்பதில்லை" என எல்லோரிடமும் எரிந்து விழ ஆரம்பிப்பார்கள். அப்படி புலம்புவது பிழையே! மற்றவர்கள் உங்களை எப்படி புரிந்து கொள்ள வேண்டுமென நினைக்கிறீர்களோ அதேபோலவே நீங்களும் மற்றவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள மதித்து நடக்க ஆரம்பித்தால் பிரச்சினை மறையும்.

**சுயநலம்**

'தனக்கு மட்டுமே வேண்டும், எனக்கு மட்டுமே சொந்தம் என்கிற எண்ணமே சுயநலம். அளவு கடந்த அன்பின் வெளிப்பாடு இதுவென்றாலும் பல நேரங்களில் தொல்லையாக இருப்பதால் உறவுக்குள் இந்த சுயநலத்தை தவிர்ப்பது நல்லது.

தனக்கு பிடித்த உறவு வேறு நபர்களிடம் சாதாரணமாக பேசினால் கூட அல்லது தனக்கென உள்ளப் பொருட்களை வீட்டிலுள்ள வேறு நபர்கள் பயன்படுத்தினால் கூட அதைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையை இந்த சுயநல குணம் கொடுக்கும்.

இந்த குணத்தை வளரவிட்டால் உறவுகளுக்குள் எப்போதும் பிரச்சினை மட்டுமே மிஞ்சும். அப்படியே அதை வளரவிட்டால், ஆபத்துதான். எனவே சுயநலம் கொள்வதை தவிர்க்கவும்.

**வேண்டாம் சந்தேகம்**

**சந்தேகக் கோடு அது சந்தோசத்திற்கு கேடு.**

ஆம்! அன்பானவர்கள் மீது வரும் சந்தேகம் பல இன்னல்களையும் மன உளைச்சலையும் கொடுக்கும் செயற்பாடாகும்.

வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் வீட்டுக்குள்ளோ, உறவுகள் மீதோ சந்தேகம் வரவேக்கூடாத ஒன்றாகும். வாழ்க்கையை நரகமாக மாற்றி நிம்மதியைக் கெடுக்கும் சக்தி சந்தேகத்துக்கு உண்டு.

எம் எண்ணங்களில் உருவாகும் சந்தேகப் பேய், வீட்டையே புரட்டிப்போட்டு, சிலவேளைகளில் சில இடங்களில் உயிரையும் கொல்லும் தன்மைக் கொண்டது. அதனால் சந்தேகம் என்ற நோயை மனதிற்குள் விட்டு விடாதீர்கள். ஏதாவது சந்தேகம் தோன்றினால் சம்பந்தபட்டவரிடம் நேரிடையாகப் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

மனதிற்குள் வைத்து நீங்களும் நிம்மதி இழந்து மற்றவர்கள் நிம்மதியையும் கெடுக்கும் வேலை வேண்டாம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

---

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



காலனி ஆதிக்கம் குறித்தும் ஆபிரிக்க மதிப்பீடுகள் குறித்தும் மக்களுக்கு விளங்கப்படுத்தினார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி உருவாக்கியிருந்த அடிப்படைக் கொள்கையை இளைஞர் அணி மாற்றவில்லை. ஆனால் அந்தக் கொள்கைகளுக்கு வலு சேர்க்கும் வகையில் சில அம்சங்களை சேர்த்துக்கொண்டது. ஆபிரிக்க தேசியம்தான் எங்கள் கோரிக்கை. பல்வேறு இனக்குழுக்களைக் கொண்டு ஒரு தேசம் அமைக்க வேண்டும். ஆபிரிக்கர்களுக்கான சுதந்திரத்தை ஆபிரிக்கர்கள்தான் போராடி வெல்ல வேண்டும் என்ற கொள்கையை வெளியிட்டனர்.

ஆபிரிக்கர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆட்சியாளர்களின் சட்டம் குறித்து அதாவது ஆங்கில காலணித்துவ ஆதிக்கம் முன்வைத்த சட்டத்தின் மூலம் கறுப்பினர்களுக்கு விளைந்திருக்கும் பாதிப்புகளை சுட்டிக்காட்டியது. இந்த சட்டத்தின் மூலம் கறுப்பர்கள் தங்கள் வாழ்வாதார நிலங்களை இழந்தனர். 87 சதவீத நிலம் ஆபிரிக்கர்களிடமிருந்து பிரித்துவைக்கப்பட்டது. பூர்வீக குடியிருப்புகள் எனும் பெயரில் ஆபிரிக்கர்களுக்கான இருப்பிடம் தனியே ஒதுக்கப்பட்டது. நகர்ப்புறங்களில் இருந்து ஒதுங்கி இருந்த இந்த பூர்வீக குடியிருப்பு பகுதிகள் சேரிகளாக உருவெடுத்தன. வெள்ளைக்கார முதலாளிகளுக்கு ஊழியம் செய்ய, இப்பகுதியில் இருந்த தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டனர். வெள்ளையர்கள் மேற்கொள்ளும் தேர்ச்சி பெற்ற திறன்கொண்ட தொழில்களை கறுப்பர்கள் நடாத்தக் கூடாது என்றே இச்சட்டம் தடை செய்தது. உள்ளூர் பழங்குடியின தலைவர்களிடம் இருந்து அதிகாரம் பறிக்கப்பட்டு முழு அதிகாரமும் பிரித்தானிய அரசிடமே சென்றது. வாக்காளர் பட்டியலில் இருந்தே இவர்களின் பெயர்கள் அழிக்கப்பட்டன. இனி ஆபிரிக்க அரசாங்கம் மலர்வதற்கு சாத்தியமில்லை என்றே ஆங்கில காலனியாதிக்கத்தின் சட்டங்கள் அமைந்திருந்தன என்பதை இளைஞர் அணி மக்களுக்கு எடுத்துரைத்தது.

இளைஞர் அணியின் சாசனம் கம்யூனிஸ்ட் சித்தாந்தந்தை ஏற்க மறுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியை இளைஞர் அணி நிராகரித்தது. கம்யூனிஸ்ட் கட்சியில் பெரும்பான்மையான வெள்ளையர்கள் இடம்பெற்றதாலும் அவர்கள் புரட்சிகர கருத்துக்கள் கொண்டவர்களாக இருந்ததாலும் வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களை எதற்கு இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கேள்வி இளைஞர் அணியிடம் இருந்தது. கம்யூனிஸ்ட்டுகளை ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அணியிலிருந்த சிலர் கருதினார்கள். நம் கருத்தோடு, கொள்கையோடு, உணர்வோடு ஒத்துப்போகும் வெள்ளையர்கள் சிலரையும் இணைத்துக்கொள்ளலாம். இப்படி ஒவ்வொருவரையும் ஒதுக்கிக் கொண்டே போனால் கட்சியின் பலம் குறைந்துவிடும் என்று அணியில் சிலர் கருதினார்கள்.

அவர்களது இளைஞர் அணிக்குள்ளேயே இதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. கம்யூனிஸ்ட்டுகளையும் வெள்ளையர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டாம் என்பதுதான் மண்டேலாவின் கருத்தாக இருந்தது. வெள்ளையர்களுடன் பணிபுரியும் போது கறுப்பர்கள் இயல்பாக இருக்க மாட்டார்கள் என்று மண்டேலா உணர்ந்து இது கறுப்பர்களின் போராட்டம், இதற்கு நாம் போதும், நாம் மட்டுமே போதும் என்று மண்டேலா தன் கருத்தை வெளியிட்டான். இவ்வாறாக மண்டேலாவின் அரசியல் தாகம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே சென்றது.

காலமெனும் செடியில் மாதமெனும் மலர்கள் சில மலர்ந்து உதிர்ந்தன. ஒருநாள் மண்டேலா கட்சி விஷயமாக சிசுலுவை சந்திக்க சிசுலுவின் வீட்டிற்கு சென்றான். அங்கே என்றுமில்லாதவாறு அவ்வீடு கலகலப்பாக இருந்தது.

நண்பனை கண்ட சிசுலு அவனை இன்முகத்தோடு வரவேற்று 'நண்பா நான் உனக்கு என் வீட்டின் குலவிளக்கையே இப்போது அறிமுகப்படுத்த போகிறேன்'' என்றான். மண்டேலாவோ ஒன்றும் புரியாதவனாக திகைத்தான். சிசுலுவோ ஓர் அழகான இளம்பெண்ணை கையில் பிடித்துக் கொண்டு மண்டேலாவின் அருகில் வந்து 'நண்பனே இவள்தான் என் தங்கை எவிலின். என் வீட்டின் குலவிளக்கே இவள்தான். படிப்பை முடித்துவிட்டு இப்போதுதான் வீட்டிற்கு வந்துள்ளாள்' என்று தன் அழகுப் பதுமைத் தங்கையை தன் நண்பனுக்கு அறிமுகம் செய்துவைத்தான். எவிலினின் அழகு மண்டேலாவை கவர்ந்தது.

அவளின் அழகில் மண்டேலா மயங்கினான். பின்னர் தன்னை சுதாகரித்துக்கொண்டு 'உனக்கொரு தங்கை இருக்கிறாள் என்று தெரியும் ஆனால் இப்படி ஒரு பேரழகி என்று சொல்லவில்லையே' என்று நண்பனை பார்த்து கிண்டலடிக்க எவிலின் நாணத்தால் கூனிக்குறுகி தன் செவ்விதழ்களால் புன்னகையை உதிரவிட்டாள்.

மண்டேலாவும் அண்ணனும் தங்கையுமாக நிறைய நேரம் பேசிப் பொழுதைக் கழித்தனர். எவிலினைப் பார்த்த மயக்கத்தில் மண்டேலா வந்த வேலையை மறந்தான். அன்றைய தினம் அவனுக்கு அவளின் இனிய நினைவுகளுடனேயே கழிந்தது.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# அலை பாயும் கடலை நம்பிய பெண்களின் வாழ்வியல்



## வலிகளும் வடுக்களும் சுமந்து வாழும் காரைநகர் 'ஊரி' கிராம மக்கள்

உலகிலுள்ள தொழில்களிலே மிகவும் ஆபத்தான தொழிலாக மீன்பிடித்தொழில் அடையாளப்படுத்தப்படுகிறது. இது எந்த நேரத்திலும், எந்தவிதத்திலும் உயிராபத்தினை ஏற்படுத்தக்கூடிய, வாழ்தல் நிச்சயமற்ற தொழிலாகும். அத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரமே அதன் வலிகளும், வடுக்களும் தெரிந்திருக்கின்றன.

அந்தவகையில் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமையப்பெற்ற சப்த தீவுகளில் ஒன்றான காரைநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள “ஊரி” கிராமம் மீன்பிடி தொழிலுக்கு பெயர்போன கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமத்தின் சிறப்பு யாதெனில் ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் சரிநிகராக மீன்பிடியில் ஈடுபடும் வழக்கம் இங்கு காணப்படுகிறமையாகும்.



நாடளாவிய ரீதியில் பல்வேறு வகையான கடற்றொழில் முறைமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் களங்கண்டி, கூடு போன்ற இருவேறுபட்ட மீன்பிடிமுறைகள் மாத்திரம் இக்கிராமத்தில் காலங்காலமாக வழக்கிலிருக்கின்றது. இவற்றுள், எந்தக் காலத்திலும் மேற்கொள்வதற்கு பொருத்தமாயிருப்பதாலும், இன்னொரு நபரது துணை தேவைப்படாமையினாலும், மீனவப்பெண்கள் பெரும்பாலும் கூடு முறையிலேயே மீன்பிடியை மேற்கொள்ள ஆர்வங்காட்டுகின்றனர். குறிப்பாக இம்முறையைப் பயன்படுத்தி இறால் பிடித்தல், நண்டு மற்றும் மீன்களைப் பிடித்தல் மூலமாக தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.



தினமும் அதிகாலையில் 4 மணிக்கே எழுந்து தமது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு உணவைத் தயார் செய்துவிட்டு, தமது கடமைகளை முடித்துக் கொண்டு இவர்கள் குழுவாகவும், ஒரு சிலர் தனியாகவும் கடலை நோக்கிப் புறப்படுகிறார்கள்.

இவர்களது கனவுகளெல்லாம் தமது குடும்பத்தினதும், பிள்ளைகளினதும் நலன்களை ஈடு செய்வது மாத்திரமேயாகும். தமக்கென்று கனவுகளோ, ஆசைகளோ இருந்தாலும் அவற்றையெல்லாம் உப்புக் கடலோடே கரைத்துவிட்டு தம்மை சார்ந்திருப்போரின் நலன்களையே இப்பெண்கள் விரும்பிநிற்கின்றனர்.

மார்கழி முதல் தை வரையான காலப்பகுதியில் குறித்த கடற்பரப்பில் நல்ல வருமானம் தரக்கூடிய தொழில்கள் நடைபெறுகின்றன. ஆனால் கோடை காலத்தின் போது இப்பிரதேசத்தின் கடற்பரப்பில் நீரானது முற்றிலும் வற்றிப்போகிறது.



இவ்வாறு நீர் வற்றிப்போகும் காலத்தில் கரையை அண்மித்த சேற்றுப் பகுதிகளிலேயே மீன்பிடியை மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவாகிறது.

இதன் காரணத்தினால் அக்காலப்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஏற்படும் ததும்பல் நிலையானது மீனவப் பெண்களின் வாழ்வியலையும் கேள்விக்குட்படுத்துகிறது.

இம்மீனவப் பெண்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு பிரதான காரணம் குடும்பச்சூழலேயாகும். தமது கணவனை இழந்த பெண்கள், வயது முதிர்ந்த/ கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட கணவனையுடைய பெண்கள், போதைக்கு அடிமையாகிய பொறுப்பற்ற ஆணை திருமணம் செய்து கொண்ட பெண்கள், தமது பிள்ளைகளினுடைய கல்வியைக் கொண்டு நடாத்தவும், தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் வறுமையின் கோரத்தாண்டவத்திலிருந்து மீட்டெடுக்கவும், அடுத்தவர் கைகளை எதிர்பார்த்து நிற்காமல் தம்மை சூழ்ந்துள்ள கடல்களில் மீன்பிடியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இளைய பெண்கள் உட்பட ஐம்பது வயதைக் கடந்தவர்களும்கூட கடலையே கடவுளாக நம்பி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறாக உப்புக்காற்றை சுவாசித்துக்கொண்டு அனுதினமும் உப்பிலே ஊறிக்கொண்டும் இந்த பெண் மீனவத் தொழிலாளர்களுடைய வாழ்தலுக்கும் சாதலுக்குமான போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

தாம் அனுபவிக்கின்ற வலிகளை எதிர்காலத்தில் தமது அடுத்த தலைமுறையினரும் அனுபவிக்கக் கூடாது என்றும், அவர்கள் நல்ல கல்வியைப் பெறுவதன் மூலமாக சமுதாயத்தில் உயர்ந்து நிற்க வேண்டும் என்றும் தமது வாழ்வைக் கடலில் கரைக்கின்ற இந்த மீனவப் பெண்களின் எதிர்பார்ப்புக்கள் இன்றும் நீண்டு செல்கின்றன தொலைதூர கரையைத்தேடி...





கிரிஜா அருள்பிரகாசம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# ஐயாத்துரை ரவிச்சந்திரனின் மணிவிழா

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையின் அதிபர் அலுவலக சேவை உதவியாளர் ஐயாத்துரை ரவிச்சந்திரனின் மணிவிழா கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. கலாசாலையின் கற்பித்தல் சாரா அலுவலர்கள் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து மங்கள இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது. தொடர்ந்து மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதனை கற்பித்தல் சாரா அலுவலர் கணநாதன் சஜிவ் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் வாழத்துரைகள் இடம் பெற்றன. இதனை கலாசாலையின் பிரதி அதிபர்களான க. செந்தில்குமரன், த. கோபாலகிருஷ்ணன், உப அதிபர் சத்தியா ரஞ்ஜிற், முன்னாள் அதிபர்களான வே. கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம், தலைமை முகாமைத்துவ உத்தியோகத்தர் நிசந்தி பிரதீபன், விரிவுரையாளர் சி. மனோகரன், விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம், ஆசிரிய மாணவி அஸ்மிலா பேகம் ஆகியோர் வழங்கினர். கவிஞர், விரிவுரையாளர் வேல் நந்தகுமார் கவி வாழ்த்தை மேற்கொண்டார்.

தொடர்ந்து கலாதீபம் செப்டம்பர் மாதத்திற்கான இதழ் வெளியீடு செய்யப்பட்டது. இதில் ஐ. ரவிச்சந்திரன் பற்றிய வாழ்த்துச்செய்திகள் சிறப்பாக இடம்பெறறுள்ளன. இதன் வெளியீட்டுரையை கலாதீபம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தர்ஷினி முத்துராஜா மேற்கொண்டார். ரவிச்சந்திரன்பற்றிய வாழ்க்கை வரலாற்று ஆவணப் படம் ஆசிரிய மாணவர்களால் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டது.









# கிழக்கு மக்களின் வாழ்க்கை நிலையை எடுத்துச் சொல்லும் புகைப்பட கண்காட்சி

## ஊடவியலாளர் முருகப்பிள்ளை சிவக்குமாரின் கை வண்ணம்









**ரீ. எல் ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்ட புகைப் படங்களைக் கொண்ட புகைப்பட கண்காட்சி மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகிய கற்கைகள் நிறுவன மண்டபத்தில் கடந்த 10 நாட்களாக நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 18 ஆம் திகதி குறித்த கண்காட்சி நிறைவு பெறுகிறது.

புகைப்பட ஊடவியலாளரும், பிரபல புகைப்பட கலைஞருமான முருகப்பிள்ளை சிவகுமாரின் சிந்தனையில் உருவான சுமார் 60க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.தனது சொந்த நிதியிலிருந்து குறித்த புகைப்பட கண்காட்சியை அவர் நடாத்தி வருகின்றார். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

தனிமனித அவலங்கள் உழைப்பாளியின் சோகங்கள், மீனவர் வாழ்வியல், வயல் வெளிகளில் விவசாய மக்களின் அவலங்கள், இயற்கை, செயற்கை அனர்த்தங்கள், அனர்த்தங்களின் பாதிப்புகள், தொண்ணூறுகளுக்கு முதல் உள்ள வாழ்வியல் முறைகள், பக்தி, கிராமிய விளையாட்டு உட்பட பல்வேறு விதமான கிழக்கு மாகாணத்தோடு சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன .

இலங்கையின் 9 மாகாணங்களில் கிழக்கு மாகாணம் எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு மாகாணமாக கருதப்படுகிறது. ஒரு பக்கம் நிலமும் இன்னொரு பக்கம் நீருமாக கடலாலும், வாவியாலும்,நிலத்தாலும் சூழப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் இயற்கைக்கு பஞ்சமில்லை எனலாம். அத்தகைய இயற்கையோடு பின்னிப்பிணைந்த அதிகளவிலான புகைப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 25 வருடங்களாக புகைப்பட துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள முருகப்பிள்ளை சிவக்குமார் கடந்த 10 வருடங்களாக புகைப்பட கலைஞராகவும், புகைப்பட ஊடகவியலாளராகவும் பணிபுரிந்து வருகிறார். பெற்றி மீடியா என்கின்ற ஒரு இணையதளத்தையும் நடத்தி வருகின்ற இவர் ஒரு மனிதாபிமானமிக்க ஊடவியலாளராவார்.

தனது கண் முன்னால் நடைபெறுகின்ற சமூக அவலங்களையும் சமூகத்துக்கு எதிரான கொடூரங்களையும் வாழ்வியல் பிரச்சினைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் வறுமை நிலையினால் வாடும் கிராமங்களின் அவலங்களையும் தனது கமராவுக்குள் புகைப்படங்களாக பரிணமிக்க செய்கின்ற இவரின் ஒவ்வொரு புகைப்படமும் ஒவ்வொரு விதமான கதைகளை சொல்லி நிற்கின்றன

10 நாட்களாக நடைபெறுகின்ற குறித்த புகைப்பட கண்காட்சியை கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் முதல் பல்வேறு தரப்பினரும் பார்வையிட்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மண் செதுக்கி தமிழ் உலகிற்கு வழங்கிய தங்கமகள் சம்மாந்துறை மஸூறாவின் "நதிகளின் தேசிய கீதம்

"காலம் கிழித்துப் போட்டதை மறவாமல் குறித்து வைத்துக் கொள்கிறது கவிதை! பதுக்கி வைக்காது செதுக்கி வைத்ததை எல்லாம் செவிகளுக்குள் இறக்கி வைக்கவும் சாத்தியமாகிறது இந்த சக்தி மிகுந்த கவிதைகளுக்கே! அப்படியொரு சாத்தியமான கவிதைகளை மிகுந்த ஆர்வத்துடன் நல்ல நூலாக்கி அழகுடன் நமது இலக்கிய உலகிற்கு வழங்கி இருக்கிறார் கவிஞர் சம்மாந்துறை மஸூறா ஏ.மஜீத் !

" நதிகளின் தேசிய கீதம்" எனும் அவரது இந்த நூலில் இதயத்தின் கதவுகளை மொத்தமாக மூடி விடாது எத்தகைய சந்தர்ப்பங்களில் திறந்து ஆள முடியுமோ அப்படியெல்லாம் துடிப்புடன் ஆட்சி செய்திருக்கிறது கவிதை! "மனதை பாதிக்கிற எந்த விடயத்தையும் எழுதி விடுகிறேன் எனினும் கலாசார மீறல்கள் நிகழாதபடி பார்த்துக் கொள்கிறேன். மீறல்களில் கட்டுடைப்புகளில் எனக்கு அதிகமான பிரியம்தான் சமூகப் பொருத்தப்பாடுடைய விடயங்களை நான் அத்துமீறியதில்லை, உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி காட்டுவதில் தயங்குவதுமில்லை மறைக்க வேண்டியதை மறைத்துவிடுகிறேன். அவற்றிக்கு மைதீட்டி பொட்டிட்டு பூச்சூடி பேஷியல் செய்து பெண் பார்க்கவிட இஷ்டமில்லை" எனும் வாக்கு மூலம் தரும் இவர் நாற்பது வருட எழுத்துலக அனுபவமிகுந்த ஆளுமையும் ஆவார்! இவர் தினகரன், சிந்தாமணி, வீரகேசரி, விடிவெள்ளி போன்று இன்னும் ஏராளமான சஞ்சிகைகளிலும் எழுதிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளில் தரமிகுந்த சில கவிதைகளை மட்டுமே தொகுத்து நூலாக மணக்க கனத்த தொகுதியாகவே தந்திருக்கிறார்! சிறந்த ஒரு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய இந்நூலை வெறும் விமர்சனங்களால் வீழ்த்திவிட முடியாது என்பதே எனது தன்மையான கருத்தாகும்!

உலக இயக்கத்தின்உந்து சக்தியான நீரும் சங்கீத வித்துவான் தான்!

நீரும் பெண்ணும் ஒரு ஜாதி நீர்தான் உலகின் பெரும் ஆட்சி என்று தொடங்கும் இவர் மரணம் எனும் கவிதையில்....உன்னால் எதிர்க்க முடியாத நிர்ப்பந்தம் அதுமீள் மனு ஏற்கப்படாத தீர்ப்பு அது, எதிர் கொள்ள எப்போதும் தயாராகவே இருஅதற்கு முன் உன்னைமனிதனாக மீட்டுக் கொள்! கொரோனாவைப் பறறி இப்படி எழுதுகிறார் காக்காய் கத்தும் சத்தம் தவிர காதில் வேறெதும் விழவில்லை, ஸ்தம்பிதமான மனநிலை உயிரினங்கள் படைக்கப் படுமுன் உலகம் இப்படிதான் இருந்திருக்குமோ! எனும் வியப்புடன்! கோடாரிக் காம்புகள் கவிதையில்... நிழலும் காய் கனிகளும் காற்றும் விறகுமென்றும் தரும் மரங்களை தியாகிகளாகவே வைத்திருக்கிறது காலம்! தகுதிக்கு மீறிய கிரீடம் தலைக்கு கிடைத்ததால் ஓங்கித் தறிக்கின்றன கோடரிக் காம்புகள்!

செதுக்கிச் செதுக்கி காம்பாக சேரக் கூடாத இடத்தில் சேர்த்துவிட்ட பாவம் அவர்களையே சாரட்டும் என்று மரங்களுக்காக மண்டியிடுவதும்

நகப் பூச்சுகளில் காலத்தை விரயமாக்காதே நகங்களை கூர்மையாக வளர்த்துக் கொள்! கண்களுக்கு மை எதற்கு நாய்களின் பார்வைகளை இனங்கண்டு கொள்ள? மூடியிறுக்கிய டப்




பாக்குள் சிற்றெறும்புகள் ஆட்சி செய்வது சிரமம்உடலழகை மூடி மறைத்துக்கொள் என்று பெண்களுக்கான அறிவுரையும் முகில் வரைந்த ஓவியம் நான் சந்தர்ப்பவாத அழகாண்கள் வந்தெங்கள் மனதுக்குள் நெளிந்தால் தீவைக்கவும் தெரிந்தவள், புயலொன்றுக்கு என் பெயர் வைக்க பிரியமிருந்தால்என் இயல்பான இருத்தலை நீங்களே நகர்த்தலாம்! பெண்ணுக்கு இழைக்கும் அநீதிகளை சாடுவேன் அவலங்களை ஒதுவேன் எழுத்துகளால் கிழிப்பேன் தெரியாது எந்தன் பேனா முனைக்குபெண்ணியம் என்ற லேபலொன்றுடன் பக்கச் சார்பாக பேச! இன்னும் பல்வேறு தலைப்புகளில் ஆழமிகுந்த வரிகளில் நூலெங்கும் தடம் பதித்து தன்னை அழகாகவும் அடர்த்தியாக வும் அடையாளப்படுத்தி இருக்கிறார் கவிஞர் மஸூறா!இவரது காத்திரமான இந்நூலுக்கு தென்கிழக்குப் பல்கலைக் கழக பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அப்துல்லாஹ், கலாநிதி பரதன் கந்தசாமி, எழுத்தாளர் தீரன் ஆர்.எம். நெளசாத் எழுத்தாளர் வித்யாசாகர் போன்றோர் வரிசை முறையாக முன்னுரை அணிந்துரை பதிப்புரை வழங்கியிருக்கிறார்கள் இவரது இலக்கிய பங்களிப்புக்கு. "தினகரன் வார மஞ்சரி"மனபூர்வமாக வாழ்த்துகிறது!

**நூல் பெறுவதற்கான தொடர்புகளுக்கு திருமதி மஷூறா சுஹார்தீன் மஷூறா, மன்ஸில் மெயின் வீதி சம்மாந்துறை**

*– கவிநேசன் நவாஸ்*

# இலக்கிய உலகில் ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம் என உலா வரும் தலைசிறந்த கல்விமான்

**(6ஆம் பக்க தொடர்)**

இவ்வேளைகளில் நான் எழுதிய பாடல்களும் ஒலி பரப்பாகத் தவறுவதில்லை. அவ்வேளை உறவுகளையும் அழைத்துக் கேட்கச் செய்வேன். அந்த மகிழ்ச்சியை எப்படிக் கூறுவதென்று எனக்கே தெரியாது. நான் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பழம் பெரும் பதியான மல்லிகைத்தீவினை வாழ்விடமாக கொண்டுள்ளேன். குளக்கோட்டு மன்னன் ஆட்சிக் காலத்தில் கோணேசர் ஆலயத்திற்கான மல்லிகைப்பூவை வழங்கிய வரலாற்றுக் கிராமமாகும்.

வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தின் மத்தியில் இவ்வூர் அமைந்துள்ளது.

பச்சைப் பசேலென நெற்கதிர்கள் தாலாட்டும் ஓசையில் மகிழ்ந்து காணப்படுகின்றது. இயற்கையின் வனப்பில் எழில் மிகு ஊராய் நிமிர்ந்து நிற்கின்றது.

மாசற்ற மண்ணில் வாழ்வதையிட்டு ஆனந்தமே. தற்கால மாணவ தலைமுறையை நோக்கும் போது மாறிவரும் உலகைப் புரிந்து மாற்றமடைந்து வருகின்றார்கள்.

கல்வி கற்க வேண்டுமென்ற பேரார்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அறிவியல் நுட்பங்களைப் பயன்படுத்தி சிறந்த தேடலைக் கொண்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும். பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டதால் தாம் வாழும் கிராமங்களில் உயர் கல்வியைக் கற்று பல்கலைக்கழகம் செல்கின்ற சூழ்நிலையும் அதிகரித்து வருகின்றது. பொதுவாக கல்வியில் எழுச்சி கொண்டவர்களாகக் காணப்படுவதையும் குறிப்பிடலாம். தற்போது நியமனம் பெற்று ஆசிரியத் தொழிலுக்கு வருபவர்கள் இளம் பராயத்தினராக இருப்பதால் சிறந்த அறிவாற்றல் கொண்டவர்களாக உள்ளதோடு எதையும் அறிந்து கொள்ளும் விருப்பிலும் உள்ளனர். மற்றும் நவீன நுட்பங்கள் ஊடாக மாறிவரும் உலகுக்கேற்ப தமது கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு பாடசாலை நிர்வாகத்திற்கும் தமது ஒத்துழைப்பை சிறப்பாக வழங்கி வருகின்றனர். பொதுவாக முரண்பாடற்ற

முறையில் தமது பணியினை மேற்கொண்டு வருகின்றமை பாராட்டதற்குரியதாகும்.

**விருதுகள் பற்றி....**

01.2017 ஆம் ஆண்டு எனது சமூக சேவையை மதித்து தேசகீர்த்தி விருது கிடைத்தது.

2. இலக்கிய பணிக்காக தமிழ்க் கவிச்சாரல், சாரல் கவிஞர், முத்தமிழ் குரல், கவிச்சுடர், ஆசுகவி, முத்தமிழ்ச் சிகரம், கவிதைப் புயல், கவித்திலகம், கவியருவி போன்ற விருதுகளைத் தந்து கொரவப்படுத்தியுள்ளனர்.

நான் பிரதேச மட்டத்திலான கலாசார பேரவையின் உப தலைவராக இருக்கின்றேன். இதன் மூலம் பிரதேச செயலக ரீதியில் இலக்கிய விழாக்களை நடாத்தி வருகின்றோம். அத்தோடு பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான எழுத்தாக்கம் தொடர்பான பயிற்சி முகாம்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றேன். மாவட்டத்தில் நடைபெறும் இலக்கிய வெளியீடுகளில் அதிகமாகப் பங்கு கொண்டும் வருகின்றேன். உலகளாவிய ரீதியில் நடைபெறும் கவிதைப் போட்டிகளில் நடுவராகவும் பயணிக்கின்றேன். கடந்த இரண்டு வருடங்களாக கனடா தமிழாழித் தொலைக் காட்சியில் பங்குகொண்டு வருகின்றேன். எனது திறமைக்குக் கிடைத்த சிறப்பான ஒரு களமாக அதை நான் கருதுகின்றேன். அதனால் தொடர்ந்து பயணிக்கும் விருப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில் கவிக்களம், கருத்துக் களம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வருகின்றேன். இதன் நிறுவனர் பாட்டருவி உயிரவனின் சிறப்பான நெறிப் படுத்தலில் இது ஒளிபரப்பாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் நானும் பங்கு கொள்வதால் எனது படைப்பாற்றல் உயர்வதோடு பெரும் ஆறுதலும் அளிக்கின்றதெனலாம்.

அது மட்டுமல்லாது மனதிற்குப் புத்துணர்வை தருவதைக் குறிப்பிடலாம். இதற்கும் மேலாக உலகளாவிய ரீதியில் வாழும் படைப்பாளிகளின் தொடர்பையும் தமிழாழி ஏற்படுத்தித் தந்துள்ளமையை நன்றியோடு நோக்குகின்றேன்.

நாம் இலக்கியத்துறை சார்ந்த கலைஞர்கள்தானே. எமது உள்ளமானது எப்போதும் இனிமையான உணர்வுகளோடு காணப்படுகின்றது. குடும்ப நிலையில் காணப்படும் புரிந்துணர்வு இலக்கியத்துறையில் நான்

ஈடுபடுவதை எனது மனைவியும் பிள்ளையும் மகிழ்வாக ஏற்றுக்கொள்வதால் நானும் மகிழ்வோடு பயணிக்கின்றேன். அது மட்டுமல்லாது துன்ப துயரங்கள் வந்தாலும் அல்லது மனதைப் பாதிக்கும் ஏதாவது நடந்தாலும் அதை நல்லதாக நினைத்து நகர்ந்து செல்வேன்.

எதையும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்வதால் நான் எப்போதும் சிரித்த முகத்துடன் ஆனந்தம் நிறைந்து வாழ்கின்றேன். இன்றைய இளைஞர்கள்தான் நாளைய உலகின் தலைவர்கள் இவர்கள் இன்று உருவாக்கப் படல் வேண்டும். இலக்கியத் துறையை நாட விரும்பினால் அதற்காகத் தங்களைத் தாங்களே இன்று தயார்படுத்திக் கொள்ளல் கட்டாயமானதாகும்.

எனவே வாசிப்பதன் மூலம் சுய தேடலையும் சுய கற்றலையும் நாம் வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். நோக்கம் கொண்டு விடாமுயற்சியோடு பயணிக்க வேண்டும்.

தடைகளைக் கண்டு தளராது, விமர்சனங்களுக்கு அஞ்சாது பணியைத் தொடர்தல் வேண்டும். நாம் சார்ந்த துறையில் விருப்போடு பயணித்தால் வெற்றி பெறலாம். மாறி வரும் உலகை வென்றிட முயல்வதே சிறப்பாகும்.

# வெலிகமயில் வாழ்ந்த முஸ்லிம் புத்திஜீவி ஆசிரியர், மர்ஹூம் ஏ.எச்.எம். யூஸூப்

ஏ.எச்.எம். யூஸுப் ,தென்மாகாணம், காலி மாநகரின் உமர்தீன் அப்துல் ஹாதி, நஸ்ருதீன் ஷம்ஸூன் நகார் தம்பதிகளின் ஏக புதல்வராக 1936.12. 09 ஆந்திகதி கந்தவத்தயில் பிறந்தார். களுவல்ல கந்தவத்தை அல் மீரான் பாடசாலை மற்றும் ஆங்கில பாடசாலை என்பவற்றில் ஆரம்ப கல்வியைப் பெற்றார்.



1953 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தி அடைந்தார். தனது கல்வித் தகைமைக்கு ஏற்ற தொழில் ஒன்றை பெற அன்று காலியில் வாழ்ந்த நாட்டின் பிரதமரை சந்திக்கச் சென்றார். முன்னாள் பிரதமர் தஹனாயக அவர்களின் காலத்தில் ஆசிரியர் சேவையில் இணைவதற்கு சென்ற போது நடந்த ஒரு கதையை நகைச்சுவையாக அடிக்கடி சொல்வார். அவர் தனது முதல் நியமனத்தைப் பெறுவதற்காக பிரதமரைச் சந்திக்க சென்றுள்ளார்கள். என்.ஸீ.ஜி. பரீட்சை பெறுபேறுடன் அங்கு சென்ற போது நாட்டின் மிகவும் எளிமையாகக் காணப்பட்டுள்ளார்கள் பிரதமர் தஹநாயக.

இன்று காலி ரிஷ்மண்ட் பாடசாலை அமையப் பெற்றிருக்கும் இடத்திற்கு மறுபுறமாக சிறிய ஒரு தேநீர் பெட்டிக் கடை காணப்பட்டுள்ளது. அந்தக் கடைக்கு மிகவும் எளிமையான உடையோடு, தேநீர் குடிக்க பிரதமர் தஹநாயக வந்துள்ளார்கள். பிரதமரை அங்கு தான் இவர் சந்தித்துள்ளார். அவருக்கான நியமனக் கடிதம் அங்கு தான் வழங்கப்பட்டது. ஒருவரின் முதுகு புறமாக அக்கடிதத்தை வைத்துத் தான் பிரதமர் ஒப்பமிட்டுள்ளார்.அந்த நியமனத்தை வழங்குவதற்கு சட்டம் தடையாக இருப்பதைக் கண்ட பிரதமர் விசேட அரச வர்த்தமானி அறிவிப்பு நாளை விசேடமாக வெளியிடப்படும் எனக்கூறி அந்த நியமனத்தை அவ்வாறே வழங்க, ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டிருக்கிறார்.

மர்ஹூம் யூஸூப் ஆசிரியர் சிறு பிராயம் முதல் எழுத்துத் துறையில் ஆர்வமுடையவராகக் காணப்பட்டார். அவர் கற்ற பாடசாலையில் கலா மன்ற செயலாளராகவும் " கலைமதி" என்ற கையெழுத்து சஞ்சிகையின் ஆசிரியராகவும் திகழ்ந்துள்ளார்கள் என்பது இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள் ஆகும்.

கல்வி மறுமலர்ச்சிக்காக உழைத்த அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் கொண்டு நடாத்திய முஸ்லிம் கல்வி புலமை நிதியத்தால் இஸ்லாமிய அறிவுப் போட்டிகளில் இரு முறை முதலிடங்களைப் பெற்றுள்ளதோடு, அறிஞரின் கையொப்பம் இடப்பட்ட சான்றிதழ்கள் இன்றும் சான்று பகர்கின்றன.

1957,1958 காலங்களில் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் கற்ற காலப்பகுதியில் ஆக்கபூர்வமான பல அறிவு ஆராய்ச்சி மற்றும் பயிலுனர் பணிகளில் மும்முரம் காட்டியுள்ளார் . அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகையான "கலை அமுதம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக பதவி வகித்துள்ளார்.இந்திய பெங்களூர் தபால் மையத்தால் நடாத்தப்பட்ட தபால் சேவை பயிற்சியை பூரணப்படுத்தி 1957 இல் சான்றிதழ் பெற்றுள்ளார்.அதேபோல் 1958 இல் ஸென். ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவி பயிற்சிக்கான சான்றிதழையும் பெற்றுள்ளார்.

அன்று கலைகட்டிக் காணப்பட்ட சாரணியர் இயக்கத்தில் பயிற்சி பெற்றுள்ளார்.1960 களில் ஆசிரியர் பயிற்சியை முடித்து ஊர் வந்ததும் " அகில இலங்கை முற்போக்கு முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் " காலி இஸ்லாமிய கலாசார மன்றத்தின் தலைவராகவும் பதவிவகித்து துடிப்புள்ள இளமைக் காலத்தில் பயனுள்ள விதமாக பல அரிய அறிவியல் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

ஈழத்து இலக்கியம் படைப்போரில் தென்மாகாண முஸ்லிம்களும் சளைத்தோர்கள் அல்லர் என்பதை நிறுபிக்கும் விதமாக 1966 இல் "நகைமலர்" எனும் நகைச்சுவை நாவலை எழுதி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் தினசரி பத்திரிகைகளான தினபதி, தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளுக்கு சமய, சமூக, இலக்கியம் தொடர்பான பல படைப்புக்களை எழுதிவந்துள்ளார்.

வெலிகம கல்பொக்கை அரசியல் பிரமுகராகக் காணப்பட்ட ஐ.எல். முஹம்மது அவர்களின் மகள் பௌசுல் ஹனா அவர்களை தனது வாழ்க்கைத் துணையாக அமைத்துக் கொண்டார் . இவர் எதிலும் நகைச்சுவையாக கதைப்பதை அதிகம் விரும்புவார்.

1983 இல் இந்தியா மதுரை நகரில் இருந்து வெளிவரும் "குர்ஆனின் குரல் " எனும் மலருக்கு இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வெள்ளி விழாவினை ஒட்டி உலக ரீதியில் தமிழ் மொழியில் நடாத்தப்பட்ட " பிரிவினைக்கெதிரான பெருமார்க்கம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வித் துறையிலே தேசிய ரீதியிலான பங்களிப்புகளை வழங்கிய எழுத்தாளராகவும் யூஸூப் ஆசிரியர் காணப்பட்டார் . இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆரம்பப் பிரிவு மற்றும் இடைநிலைப் பிரிவுகளுக்கு பாடத் திட்டத்தை வடிவமைக்கும் நூலாக்க குழுவில் 1985 ஆண்டுகளில் பணியாற்றி உள்ளார். இதுவும் ஒரு முஸ்லிம் இந்த நாட்டுக்குப் புரிந்த தேசிய மட்ட கல்விச் சேவையாக நோக் கப்படுகிறது. ஓய்வின் பின்னரும் அவர் ஓயாமல் பல இடங்களில் சேவைபுரிந்துள்ளார்.

முதலில் கடமை உணர்வில் மிகுந்த சிரத்தை காட்டக்கூடியவர். ஒவ்வொரு நாளையும் நேரசூசி அமைத்து தொழிற்படக் கூடியவர்.தினசரி பத்திரிகை வாங்கி வாசிக்கக் கூடியவர். சிறப்பு பத்திரிகையையும் வாங்கி அதனை நேரம் ஒதுக்கி வாசிக்கக் கூடியவர். அதில் வரக்கூடிய குறுக்கெழுத்து போட்டிகளை தொடராக நிரப்பி ஒவ்வொரு வீட்டு உறுப்பினர் பெயரிலும் விடை எழுதி அனுப்புவார். தொழுகை, குர்ஆன் ஓதுதல் போன்ற வணக்க வழிபாடுகளில் அக்கறை காட்டிய அவர் இரவு 9.00 மணி செய்தி, பீ.பீ.ஸி. தமிழோசை செய்தி தவறாமல் செவிமடுக்கக் கூடியவர்.

2007 ஆம் ஆண்டு கலாபூசணம் விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2008 ஆம் ஆண்டு அகில இலங்கை இஸ்லாமிய கலை இலக்கிய சம்மேளனமும் வெலிகம முஸ்லிம் கல்வி ஸ்தாபனமும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய " கருத்து சுதந்திர விமர்சன போட்டியில் முதலிடம் பெற்றார்.

"மனிதப் புனிதர் முஹம்மது ரசூலுல் லாஹ்" என்ற நூல் அவரது எழுத்துத் துறைக்கு மகுடம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. நபி ஸல் அவர்களின் புனித வரலாற்றை மிகவும் ஆதாரபூர்வமாக முன்வைக்கும் தமிழ் மொழியில் தரும் சிறந்த நூலாக விளங்குகிறது.

நோய்வாய்ப்பட்டு மாத்தறை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, 2024.08.20 ஆம் திகதி நம்மை விட்டும் பிரிந்தார்.




**அஷ்ஷெய்க்**
**எம்.எம். முன்திர்**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# அரங்கை அசத்திய வீணை அரங்கேற்றம்

கடந்த ஆவணி மாதம் 24ம் திகதியன்று, Watersmeet Theatre, Rickmansworth, UK ல் செல்வி துர்க்கா குமணனின் வீணை அரங்கேற்றம் மிகவும் விமரிசையாக அரங்கேறியது. அன்று மிகப் பிரபலமான கலைஞர்கள் உட்பட பலவிதமான ரசிகர்கள் துர்க்கா குமணனையும், குருவாகிய சங்கீத ஆச்சாரிய, சங்கீத வித்துவான் திருமதி சிவதாரணி சகாதேவனையும், அரங்கேற்றத்தின் நுணுக்கங்களையும் மெச்சி புகழ்ந்து வாழ்த்தினார்கள். துர்க்காவின் அரங்கேற்றத்தின் முதல் பகுதியை அவர் தன்னம்பிக்கையுடன், மிகவும் ரசித்து எந்த விதமான பதட்டமும் இல்லாமல் சிறப்பாக ஆரம்பித்தார். அவர் வீணையில் மீட்டிய அத்தனை உருப்படிகளையும் ஒரு முதிரச்சி பெற்றவொரு கலைஞரின் நிதானத்துடன் வாசித்த விதம் எல்லோரையும் கவர்ந்தது. ராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் இசையமைத்த கானடா ராகத்தில், கண்ட ஜாதி அட தாளத்தில் அமைந்த பாரம்பரிய வர்ணமான "நேர நம்மிதி" யுடன் கச்சேரி ஆரம்பித்து அதனைத் தொடந்து பேகடா ராகத்தில், ரூபக தாளத்தில் "வல்லப நாயக்க", என்ற முத்துசுவாமி தீட்சதரின் கிருதியை மிகவும் அருமையாக பிள்ளையாருக்கு சமர்ப்பித்தார்.



இவரின் அரங்கேற்றத்தின் மகுடமாக சொல்லப்படக்கூடிய "இன்னமும் சந்தேக படலாமோ" என்ற கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய கீரவாணி ராகத்தில் அமைந்த கீர்த்தனத்தின் ராக ஆலாபனையை மிகவும் விஸ்தாரமாகவும் வாசித்து பாட்டின் பாவம் குறையாமலும் சாகித்தியம் விளங்கும் விதமாகவும் கையாண்ட விதம் கலைஞர்களின் பாராட்டைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து வந்த கல்பனா ஸ்வரம் மிக நேர்த்தியாவும் பக்கவாத்தியத்திற்கு சவாலாக ஆவர்த்தனக் குறைப்புடன் அருமையாக வாசித்து அவரின் குருவுக்கும் பெருமை சேர்த்து தனது உயர்வான இசைத் திறனை வெளிப்படுத்தினார். அடுத்ததாக ராகம் தானம் பல்லவி. துர்க்காவின் குருவான சங்கீத வித்வான் ஸ்ரீமதி சிவதாராணி சகாதேவன் அவர்கள் இயற்றிய திவி ராகப் பல்லவி. மோகனம், கல்யாண வசந்தம் ஆகிய இரண்டு ராகங்களையும், ராக பாவம் கலையாமல் விஸ்தாரமாக வாசித்து, இரண்டு ராகத்திலும் தாளம் வாசித்த விதமும் அதனைத்தொடர்ந்து வந்த பல்லவியில் நிரவல் வாசித்து, திரிக்காலப்படுத்தி இரண்டு ராகத்திலும் மிஸ்ர குறைப்புடன் கூடிய தீர்மானத்துடன் மிகவும் துல்லியமாக வீணை வாசித்து சபையோரை மகிழ்வித்தார். இதனை அடுத்து வந்தது தனி ஆவர்த்தனம். இசை வல்லுநர்களான டாக்டர் அபிராம் சகாதேவன் (மிருதங்கம்), ஸ்ரீபிரகாஷ் (கஞ்சிரா) ஸ்ரீபிரதீப் (கடம்) தமது இசை வித்துவத்தையும் தனித்துவத்தையும் துல்லியமாக வெளிப்படுத்தினர்.



கச்சேரியின் இரண்டாம் பகுதியில், துர்க்கா தனது அரங்கேற்றம் கண்ட மூத்த சகோதரிகளான டாக்டர் தீபிகா குமணன் மற்றும் சுபிக்கா குமணன் ஆகிய சகோதரிகளோடு ஒருங்கிணைந்து வெளிப்படுத்திய வீணை இசைத் திறமை கண்கொள்ளாக் காட்சி. இச் சகோதரிகள் இரண்டாம் பகுதியை ஒரு தனித்துவமானதும் ஈர்க்கக்கூடியதுமான இசை நிகழ்ச்சியாக மாற்றியது, ஒரு அற்புதமான இசை அனுபவத்தை உருவாக்கியது. சுப்ரமணிய பாரதியாரதியாரின் ராகமாலிகா, "சின்னஞ்சிறு கிளியே" யை சகோதரிகள் இணைந்து ராகப் பாவத்தோடு சிறப்பாக வழங்கி பார்வையாளர்களை வசீகரித்தார்கள். இறுதிப் பாடலானது ஸ்ரீ வீணை சேஷண்ணாவின் செஞ்சுருட்டி ராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்த விறுவிறுப்பான தில்லானா பாடலாகும். மூன்று சகோதரிகளும் இசைத்த இந்த தில்லானா உண்மையிலேயே பார்வையாளர்களின் இதயங்களைக் கவர்ந்தது ஒட்டுமொத்தமாக, வித்வானின் உன்னிப்பான கண்காணிப்பின் கீழ் துர்க்காவின் வீணை இசை பரந்த அளவிலான தாளங்கள் மற்றும் ராகங்களை உள்ளடக்கி, உயிரோட்டத்துடன் இசை அறிஞர்களையும் ரசிகர்களையும் மெய்மறக்க செய்தமை அவர்களின் கூற்றிலேயே வெளிப்பட்டது.



இந்த இளம் வயதில் அவரின் இசை அறிவும் தாள லய சுத்தமும் வியக்கத்தக்கதாகவுள்ளது.



**கலைச்செல்வி**

# "சங்கீத ஜாதி முல்லை" எஸ்பிபியின் இசை வாழ்வில் ஒரு மணிமகுடம்

அழகான மனைவி, அன்பான துணைவி அமைந்தாலே பேரின்பமே என்று ஒவ்வொரு இளைஞனும் ஒவ்வொரு பொழுதும் மனதோடு ரீங்காரமிட அமைந்த "கல்யாணமாலை கொண்டாடும் பெண்ணே" இசைஞானியின் இசையை தட்டி எழுப்பும் அந்த சந்தங்கள் அடடா!!! ராஜாவா எஸ்பிபி? யார் சிறந்தவர் என்று எண்ணாமல், இந்தக் கூட்டணி ஒன்று சேர்ந்து பிறர்க்கு போட்டி தரும் கூட்டணி ஆகவே அமைந்தது!

தமிழக அளவில் அல்ல இந்திய அளவில் நவரசத் கலைஞன் தான், வாழ்ந்த வாழ்க்கைக்கும் படித்த படிப்புக்கும் சம்பந்தம் இல்லாத வகையில் பாடிய பாடல் , "ஆடி மாச காத்தடிக்க வாடி புள்ள" போன்ற பாடல்கள் கிராமத்தில் பிறந்து கிராமத்திலேயே வாழும் கிராமியக் கலைஞர்களின் இசைக்கு மிகுந்த போட்டி தரும் பாடல். பிறர் குரல் மாற்றிப் பேசுவர், இவர் குரல் மாற்றிப் பாடுவதிலும் வல்லவராய் இசையின் மன்னவராய் ஆகியிருப்பது மிக சுலபமன்று அதீத பயிற்சியால் மட்டுமே முடியும்.

கிரமத்து பாடல்கள் பாடுவதிலும் வல்லவர், கிராமத்தில் "மாங்குயிலே பூங்குயிலே" சேதி ஒன்று என்று தாரை தப்பட்டை கிழிய நகரத்திலே "அண்ணாத்த ஆடுறார் ஒத்திக்கோ தென்னாட்டு வேங்கை தான் ஒத்துக்கோ" என்று கால் நடனமாட செய்பவரும் இந்த இன்னிசை கலைஞன் தான். பட்டிதொட்டியெங்கும் பாடல்கள் சேர்ந்தால் தான் படத்தின் வெற்றி. இந்தக் கூட்டணியின் மகத்துவம் இதிலும் தனித்தன்மை வாய்ந்தது.

கர்நாடக இசை முறையாய் சிறுவயதில் பயிலவில்லை என்றாலும், பின் நாட்களில் பயின்றார். "சங்கீத ஜாதி முல்லை" எஸ்பிபியின் இசை வாழ்வில் ஒரு மணிமகுடம்.

இந்தப் பாடல் தரும் சோகம், தேடல், பரிதவிப்பு, எப்படி புனைவது எழுத்தில். "நெஞ்சில் எங்கும் உந்தன் பிம்பம்" என்ற வரிகளின் போது எஸ்பிபி குரலுக்கும் மேலத்திற்கும் கடும் போட்டி நடக்கும். பாடல் முடியும் தருணம் "ஆஸ்கர் அவார்ட்" புண்ணியம் செய்யவில்லை என்றுதான் தோன்றும்.

"மணியோசை கேட்டு எழுந்து" இருமிக்கொண்டே பாடவேண்டும்! இருப்பினும் பாடல் அழகான தான் இருக்க வேண்டும்!! இது சாத்தியமா? சாத்தியம்! பாடினார், பாடி முடித்தார் இசையை அடுத்த நிலைக்கு அழைத்து தொடுத்தார்.

" மண்ணில் இந்த காதல்" என்ற பாடலில், இசைஞானியின் இசையில், எஸ்பிபி இன் கந்தர்வக் குரலில், அதிலும் மூச்சுவிடாமல் பாடல் அழகுக்கு அழகு சேர்த்து திரைத்துறைக்கே அழகு சேர்த்தனர் இளையராஜா எஸ்பிபி!!!

அமுதும் தேனும் போல், தமிழருக்கு மெல்லிசையில் அற்புத பாமாலைகள் பல தந்து இந்நாள்வரை இசையால் வசமாகா இதயம் எது என்று நாம் உணரும்படி நம்மை பல சந்தர்ப்பங்களிலும் மன ஓட்டத்திற்கு இணங்க இந்தப் பாடல்கள் நம் நெஞ்சை அள்ளி அணைத்து அரவணைக்கும் தன்மை உடையது.

மீண்டும் இப்படிப்பட்ட ஒரு அற்புதம் தமிழ் திரையில் அமைவது சாத்தியம் இல்லை என்றே கூற வேண்டும்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# Champion Kids Pre-school பாலர் பாடசாலையின் வினோத உடைப் போட்டி








கொழும்பு 15இல் வெற்றிகரமாக இயங்கி வரும் *Champion Kids Preschool* பாலர் பாடசாலை கடந்த செவ்வாய்கிழமை தனது பாடசாலையில் வினோத உடைப் போட்டி நிகழ்வை சிறப்பாக நடத்தி முடித்தனர். அனைத்து மாணவர்களும் அழகான பல வேடங்களை அணிந்து தங்கள் திறமைகளை அன்றைய தினம் வெளிகாட்டினார்கள்







வானொலி, ரூபவாஹினி, கலைஞரும் நாடக நடிகரும் இலங்கையின் முன்னோடிக் கலைஞரும் மெல்லிசைப் பாடகரும் மற்றும் மேடைப்பாடகருமான ஏ.எம். யேசுரட்ணத்தின் புதல்வரும் *Cyclone Musical Solution* இன் பணிப்பாளரும் *Cyclone Musical* இசைக் குழுவின் தலைவரும் இசையமைப்பாளருமான ஏ.எம்.ஜே. கிளமென்ஸ் ரொகான், சிறந்த இசையமைப்புக்கும் திறமைக்கும் அண்மையில் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வைபவம் கொழும்பு ஜானகி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

# கலாநிதி அருள்நாகநாதன் அறக்கட்டளையின் பரிசளிப்பு விழா









கலாநிதி அருள்நாகநாதனின் அறக்கட்டளையின் அனுசரணையில் உடப்பு இளந்தாரகை வட்டம் இணைந்து வழங்கிய பரிசளிப்பு விழா உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் திங்கட்கிழமை(9)நடைபெற்றது.

இதில் உடப்பு பிரதேசத்தில் கல்வி கற்று பல் துறைகளில் பிரகாசித்து பல்கலைக் கழகங்களில்பொருளியல், மருத்துவம், கலைப்பீடம், வணிகம் , நுண்கலைப்பீடம் போன்ற துறை களில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் 27 மாணவர்களை ஊைக்குவிக்கும் முகமாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாணவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ், கேடயம், பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்து ஆலய பரிபாலன சபைத்தலைவர் க.சின்னராசா மற்றும் ஐக்கிய மக்கள் சக்திமுன்னேஸ்வரம் அமைப்பாளர் திரு.கோகிலநாத் சிங், ஐக்கிய மக்கள் சக்தி உடப்பு அமைப்பாளர் ந.கமலேஸ்வரன் எழுத்தாளர் சித்தி பரீனா மற்றும் மூத்த ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கலாபூஷணம் வீரசொக்கன் அத்துடன் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அத்துடன் அறக்கட்டளையின் பொறுப்பாளர் அருள்நாகநாதனுக்கு பொன்னாடையும் போர்த்தி நினைவுக் கேடயமும் வழங்கப்பட்டது.

**உடப்பு குறூப் நிருபர்**









இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.